௨ Oct 1983

தமிழரசு

# தமிழரசு

௧

JL
211 ㎝ N83
N83.10
344



இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு எம். எஸ். செல்லச்சாமி, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை 23.9.83ல் தலைமைச் செயலகத்தில் சந்தித்தார்.

இலங்கைத் தமிழர் விடுதலை முன்னணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை, 23.9.83ல் தலைமைச் செயலகத்தில் சந்தித்தார்.



# அண்ணாவின் தத்துவங்களை ஆய்வு செய்ய சென்னைப் பல்கலைக் கழகத்தில் தனிப்பிரிவு



"மூன்று ஆராய்ச்சிப் பிரிவுகளைத் துவக்கி வைக்கும் பணியை எனக்கு அளித்துள்ளார்கள். அதைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் கூறும் முன், இதற்கு முன்பாக எனக்கு டாக்டர் பட்டம் கொடுக்க வந்த பெரியவர்களின் மனத்தைப் புண்படுத்தும் வகையில் நான் மறுத்ததை அவர்கள் பெரிதுபடுத்தாமல் மறந்துவிடும்படி கேட்டுக் கொள்கிறேன். இப்போது இதை ஏற்றுக் கொள்வதற்குக் காரணங்கள் உண்டா என்று கேட்டால் இல்லை!

"என்னைப் போன்றவர்களுக்குக் கிடைக்கும் வாய்ப்பு, இந்த 125-வது ஆண்டு விழாவில் இவ்வளவு அறிஞர்களும் கூடி, டாக்டர் பட்டம் வருவதை ஏற்காவிட்டால் அவர்கள் மனம் பெரிதும் வருத்தப்படும் என்பதுதான்.

"என்னையும் தேர்ந்தெடுத்து இந்தப் பட்டத்தைத் தந்ததற்காகக் கைகூப்பி நன்றியைக் காணிக்கையாக்கிக் கொள்கிறேன். என்னை இந்த நிலைக்கு ஆளாக்கிய அண்ணா இல்லையே என்று நினைக்கிறேன்.

"மூன்று துறைகளைப் பற்றியும் சொல்ல நான் படித்த அளவில் 3 நாட்கள் போதாது. ஜைன, இஸ்லாமிய, சைவ சமய சித்தாந்தங்களைப் பற்றி அறிந்து கொள்வதற்காக நிதி உதவி தந்தவர்களுக்கு நன்றி கூறிப் பாராட்டுகிறேன்.

"மதம் மனிதனை மனிதனாக்க வேண்டுமே தவிர-மதம் என்ற பெயரில் மனிதனைத் தவறான செயல்களுக்கும், தேவை இல்லாத சச்சரவுகளை உண்டாக்குவதற்கும் வழிசெய்யும் வகையில் மதம் இருக்கக்கூடாது என்று குறிப்பிட விரும்புகிறேன்.

"ஜைன மதம் யாரையும் துன்புறுத்தாமல், நீதி தவறாமல் எல்லோரையும் சமமாகக் கருத வேண்டும் என்று கூறுகிறது. தனக்கெனச் சொத்து சேர்த்துக் கொள்ளாமல் அது எல்லோருக்கும் பயன்பட வேண்டும் என்று கூறுகிறது.

"இஸ்லாமிய மதம், மனிதர்களில் உயர்வு தாழ்வற்ற நிலை இருக்க வேண்டும் என்று கூறுகிறது. பிச்சை கேட்கும் நிலையும் கூடாது என்று கூறுகிறது. ஒரு மனிதன் அவனுடைய வருமானத்தில் இத்தனை சதவீதத்தைப் பொதுக் காரியங்களுக்கு ஒதுக்கி வைக்க வேண்டும் என்று சொல்கிறது. இதைப்பற்றித் தெரிந்திருந்தால் மட்டும் போதாது. அவைகளை ஏற்றுக் கொண்டு ஆராய்ச்சி செய்ய இந்தத் துறை உதவும்.

"சைவ சித்தாந்தம் சாந்தம், தியாகம், ஒழுக்கம், இவைகளை அடிப்படையாகக் கொண்டு தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. யார் இவற்றைத் தோற்றுவித்தார்கள் என்று சொல்ல முடியாமல் பரவி, விரவி இருப்பதை எண்ணிப் பார்த்தால் அவற்றை மக்களுக்குத் தெரிந்து சொல்ல இந்த ஆராய்ச்சிப் பிரிவு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கும்.

"மனிதனுக்கு மறதி தேவை. சிலவற்றை மறக்க வேண்டும். சிலவற்றை மறக்கக் கூடாது.

"இதே பல்கலைக் கழகத்தில் அண்ணாவின் தத்துவத்தை அண்ணாயிசத்தை, கொள்கையை, எது மக்களுக்குத் தேவை, எது எதிர் காலத்தில் மக்களுக்கு ஏற்புடையவை என்று ஆராய்வதற்காக அனைத்திந்திய அண்ணா தி.மு.கழகம் ரூ. 15 இலட்சம் தரும். அதை வேந்தரும், துணைவேந்தரும் ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

"எது மக்களுக்குத் தேவை என்பதைவிட அண்ணாவின் கட்டுரைகளை, கதைகளை, இலக்கிய சர்ச்சைகளை எடுத்து வைத்துப் பார்த்தால், நமக்குத் தேவையானவை இந்தப் பல்கலைக் கழகத்தில் இருக்கிறது என்று கூறும் வகையில் இருக்கவேண்டும். கோட்பாடுகளை, மதத்தை வளர்ப்பதற்காக இந்த மூன்று பிரிவுகளும் உதவும் என்று நம்புகிறேன்."

(20.9.83 அன்று சென்னைப் பல்கலைக் கழகத்தின் 125-வது ஆண்டு விழாவினை ஒட்டிப் புதிதாகத் தொடங்கப்படும் ஜைன, இஸ்லாமிய, சைவ சமய சித்தாந்தத்துறைகளை மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் தொடங்கி வைத்து ஆற்றிய உரையிலிருந்து)

— மாண்புமிகு முதல்வர்

தமிழரசு
மலர் : 14 இதழ் : 7
1-10-1983
திருவள்ளுவர் ஆண்டு 2014
ருத்ரோத்காரி — புரட்டாசி 15




இந்தியாவின் மிகப் பழமை வாய்ந்த பல்கலைக் கழகமான சென்னைப் பல்கலைக்கழகத்தின் நூற்றாண்டின் மேல் வெள்ளி விழா (125-வது ஆண்டு விழா) பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் மிகச் சீரும் சிறப்புமாக நடந்தது.

விழாவையொட்டி, பல்கலைக் கழக மண்டபம், வண்ண விளக்குகளாலும், மலர்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

விழாத் துவக்கத்தில் அரசுக் கலைஞர் திரு சீர்காழி எஸ். கோவிந்தராஜன் அவர்கள் தமிழ்த் தாய் வாழ்த்து பாடினார்.

விழாக்குழுத் தலைவர் மாண்புமிகு நீதிபதி திரு பு. ரா. கோகுலகிருஷ்ணன் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

மேதகு தமிழக ஆளுநர் திரு எஸ். எல். குரானா அவர்கள் விழாவுக்குத் தலைமை வகித்தார். அவர் பேசுகையில், "சென்னைப் பல்கலைக் கழகம் கல்வித் துறையில் சிறப்பாகப் பணியாற்றி வருகிறது. பல்வேறு பல்கலைக் கழகங்கள் உருவாவதற்கு வழிகாட்டியாகவும், தாய்ப் பல்கலைக் கழகமாகவும் விளங்கி வருகிறது. இராணுவம் மற்றும் விண்வெளித்துறை உட்பட பல்வேறு பிரிவுகளைச் சென்னைப் பல்கலைக் கழகம் கொண்டுள்ளது" என்றார்.

இவ்விழாவையொட்டி நடைபெற்ற சிறப்புப் பட்டமளிப்பு நிகழ்ச்சியில் மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்களுக்கும், பல்வேறு துறைகளில் சிறப்பாகத் தொண்டு புரிந்த பத்து பிரமுகர்களுக்கும் கௌரவ டாக்டர் பட்டம் அளிக்கப்பட்டது.



இந்தக் கௌரவ டாக்டர் பட்டங்களை, சென்னைப் பல்கலைக் கழக வேந்தர் மேதகு ஆளுநர் திரு எஸ். எல். குரானா அவர்களிடமிருந்து பதினொரு பேர்களும் பெற்றுக்கொண்டனர்.

பல்கலைக் கழகத்தில் 125-வது ஆண்டு விழாவினை ஒட்டி புதிதாகத் தொடங்கப்படும் ஜைன, இஸ்லாமிய சைவ சமயத் துறைகளை மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் தொடங்கி வைத்தார்.

விழாவை முன்னிட்டு சென்னைப் பல்கலைக் கழகம் வெளியிடவிருக்கும் பல்வேறு வெளியீடுகளின் 50 நூல்களை மாண்புமிகு மத்தியப் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ஆர். வெங்கட்டராமன் அவர்கள் வெளியிட்டு பல்கலைக் கழக வெளியீடுகளை, வெகுவாகப் பாராட்டினார். இந்தப் பணியைப் பல்கலைக் கழகம் சிறப்பாக நிறைவேற்றத் தமது சொந்தப் பொறுப்பில் 10 ஆயிரம் ரூபாய் நன்கொடையை அவர் வழங்கினார்.

பல்கலைக் கழகத்தின் இணை வேந்தர் மாண்புமிகு கல்வியமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் விழாச் சிறப்பு மலரை வெளியிட்டு, பல்கலைக் கழக நினைவகத் தந்தச் சிலை ஒன்றை மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களுக்கு வழங்கினார்.

சென்னைப் பல்கலைக் கழக 125-வது ஆண்டு விழா நிகழ்ச்சிகளைத் துவக்கி வைத்து, மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு கியானி ஜெயில்சிங் அவர்கள் சிறப்புரையாற்றினார். அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"தமிழகத்திலுள்ள மக்கள் எளிமையானவர்கள், அமைதியை நேசிப்பவர்கள். தமிழகம் ராஜாஜி சத்தியமூர்த்தி, காமராஜர், அண்ணா போன்ற தலைவர்களைத் தந்திருக்கிறது.

"சென்னைப் பல்கலைக் கழகம் நவீன இந்தியாவை உருவாக்குவதில் பெரும்பங்காற்றியுள்ளது. இந்தப் பல்கலைக் கழகம் சர். சி.வி. ராமன், கே. எஸ். கிருஷ்ணன் போன்ற விஞ்ஞான மேதைகளையும், கல்வி மேதைகளையும் அல்லாடி கிருஷ்ணசாமி, சி.பி. ராமசாமி அய்யர் போன்ற சட்ட மேதைகளையும், சத்தியமூர்த்தி சீனிவாச சாஸ்திரி, ராஜாஜி போன்ற அறிஞர்களையும் டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன், ஆர்க்காடு ராமசாமி முதலியார், ஆர்க்காடு லட்சுமணசாமி முதலியார் போன்ற அறிஞர்களையும் தந்துள்ளது.

"இந்தப் பல்கலைக் கழகம் தென் இந்தியாவில் உள்ள மற்ற பல்கலைக் கழகங்களின் தாயானது. நாடு சுதந்திரம் அடைந்த பின் நாம் கல்வித்துறையில் அடைந்துள்ள முன்னேற்றத்திற்குச் சான்றாக நாட்டில் தற்போது 120 பல்கலைக் கழகங்கள் உள்ளன.

"சுதந்திரம் பெற்ற நேரத்தில் 27 பல்கலைக் கழகங்கள்தான் இருந்தன. அவற்றில் 3 இலட்சத்து 6 ஆயிரம் பேர் படித்தனர். தற்போது 32 இலட்சம் பேர் படித்துக் கொண்டிருக்கிறார்கள். இது பெருமையைத் தருகிறது. சென்னைப் பல்கலைக் கழகத்தில் மதத்திற்கும், தத்துவத்திற்கும் புதிய துறைகள் ஏற்படுத்தி இருப்பதைப் பாராட்டுகிறேன். பல்கலைக் கழகங்கள் ஒரு சில கட்டுப்பாடுகளை வைத்துக் கொள்ள வேண்டும். மாணவர்களையும், ஆசிரியர்களையும் குறை சொல்வதற்கில்லை.

"ஆசிரியர்கள் அரசியலில் ஈடுபடுவதைத் தவிர்க்க வேண்டும். அரசியல்வாதிகள் கல்வியாளர்கள் சமுதாயப் பணிகளில் ஈடுபடுபவர்கள் கல்விக் கூடங்களில் அரசியல் கட்சிகள் தங்களின் தனிப் பிரிவுகளை அமைத்துக் கொள்வதை எதிர்க்க வேண்டும். கல்விக் கூடங்கள், கல்வியைப் பொறுத்தவரை சுய அதிகாரம் கொண்டவைகளாக இயங்க வேண்டும் என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

"இந்தச் சுயாட்சி பெரும் நிதி உதவியுடன் இருக்க வேண்டும். நிதி உதவி தனியார் உதவி மூலம் அமைய வேண்டும். சென்னைப் பல்கலைக் கழகம் இத்தகைய முயற்சியில் ஈடுபடுவதைப் பாராட்டுகிறேன். மேலும், இந்தப் பல்கலைக் கழகத்தில் பல புதிய பிரிவுகள் துவங்கப்பட வேண்டும். அவை நாட்டு நலனுக்கு உகந்ததாக இருக்கவேண்டும். இந்தப் பல்கலைக் கழகத்தின் 125-வது ஆண்டு விழாவைத் துவக்கி வைப்பதில் நான் பெருமை அடைகிறேன்."

விழா இறுதியில், பல்கலைக் கழகப் பதிவாளர் திரு சி. கே. குமாரசாமி நன்றி நவின்றார்.

## முதல்வருக்கு டாக்டர் பட்டம்

சென்னைப் பல்கலைக் கழக 125-வது ஆண்டு விழாவினையொட்டி 20.9.83 அன்று நடைபெற்ற சிறப்புப் பட்டமளிப்பு விழா நிகழ்ச்சியில், மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்களுக்கு டாக்டர் பட்டம் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது.

"மருதூர் கோபாலன் ராமச்சந்திரனின் மனித குலத் தொண்டு, அநீதியை எதிர்த்து இடையறாது நடத்திய போராட்டம், கலைத் துறைத் தொண்டு, கொடைவள்ளல் தன்மை ஆகியவற்றுக்காக இந்த டாக்டர் பட்டம் — 'டாக்டர் ஆஃப் லாஸ்' வழங்கப்படுகிறது"

—என்று சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் டாக்டர் எம். சாந்தப்பா குறிப்பிட்டார்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் பல ஆண்டுக்காலம் சிறப்பாகப் பணியாற்றியவர்களுக்கு விழாவில் பரிசுகள் வழங்கப்பட்டன.



பல்கலைக் கழக வரவேற்புப் பிரிவில் பணியாற்றும் திரு உசேன் பல்கலைக் கழகத்துணைவேந்தர் டாக்டர் எம். சாந்தப்பா, பேராசிரியர்கள் திரு சி. ஏ. பெருமாள், பி. கே. சுந்தரம், மூத்த துணைப் பதிவாளர் திரு ஜி. நடராசன் ஆகியோருக்குப் பரிசுகளையும், பாராட்டிதழ்களையும் மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு கியானி ஜெயில் சிங் அவர்கள் வழங்கினார்.

சிறப்பாகப் பணிபுரிந்தவர்கள் பற்றிய விவரங்களை, அண்ணாமலைப் பல்கலைக் கழக இணை வேந்தர் டாக்டர் ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்கள் அறிவித்தார்.

அன்று மாலை, பல்கலைக் கழக 125-வது ஆண்டு விழாவையொட்டி, நடத்தப்பட்ட சிறப்புப் பட்டமளிப்பு விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, அணுசக்திக் குழு தலைவர் டாக்டர் ராஜா ராமண்ணா அவர்கள் பட்டமளிப்பு உரை நிகழ்த்தினார். அவர் பேசுகையில் குறிப்பிட்டார்:

"மற்ற கிரகங்களிலும் மனிதர்கள் வாழ முடியும் என்ற நிலை உருவாக்கப்பட்டால்தான் உலகின் வாழ்க்கை முறையிலே பெரிய மாற்றம் ஏற்பட வழி உண்டு. சில விண்வெளி கிரகங்களில் வாழ்வதற்குத் தேவையான சூழ்நிலைகள் கண்டுபிடிக்க வாய்ப்புகள் உள்ளன".

## அறிவியல் கண்காட்சித் துவக்க விழா

சென்னைப் பல்கலைக் கழகத்தின் 125-வது ஆண்டு நிறைவு விழாவினை ஒட்டி இரண்டாவது நாளாக 21-9-83 அன்று நடைபெற்ற அறிவியல் கண்காட்சித் துவக்க விழா, சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த விழாவுக்கு மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்கள் தலைமை தாங்கினார். அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

சென்னைப் பல்கலைக் கழகம் ஏற்பாடு செய்திருந்த இந்த அறிவியல் கண்காட்சி சென்னை மாநிலக் கல்லூரியிலும், விவேகானந்தா கல்லூரியிலும், சென்னை மருத்துவக் கல்லூரியிலும் நடைபெறும்.

சென்னை மருத்துவக் கல்லூரியில் நடைபெறும் கண்காட்சி, மருத்துவத்துறை பற்றி பொது மக்களும், இளைஞர்களும் அறிந்து கொள்ள வேண்டிய பல விஷயங்களைக் கொண்டதாக அமைந்துள்ளது.

சென்னை விவேகானந்தர் கல்லூரியில் அமைக்கப்பட்டு உள்ள கண்காட்சி, மாணவர்களிடையே போட்டி மனப்பான்மையை உருவாக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. மாநிலக் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி, அடிப்படை விஞ்ஞானத்தைப் பற்றி விளக்குவதாக அமைந்துள்ளது.

இந்த அறிவியல் கண்காட்சித் துவக்க விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் கண்காட்சிக்குழுவின் தலைவர் பேராசிரியர் திரு எஸ். சாமிநாதன் வரவேற்றார்.

பேராசிரியர் டி. எஸ். சதாசிவம் அறிவியல் கண்காட்சியைத் துவக்கி வைத்துப் பேசினார்.

இந்த அறிவியல் கண்காட்சித் துவக்க விழாவில், சென்னை மருத்துவக் கல்லூரியின் முதல்வர் டாக்டர் எஸ். ஆறுமுகம், விவேகானந்தா கல்லூரி முதல்வர் டாக்டர் கே. கணேசன், மாநிலக்கல்லூரியின் முதல்வர் பொறுப்பு வகிக்கும் பேராசிரியர் திரு. என். இராமலிங்கம் ஆகியோர் தங்களது கல்லூரிகளில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சியைப் பற்றியும், நோக்கங்களைப் பற்றியும் எடுத்துக் கூறினர்.

கண்காட்சித் துவக்க விழா மலரை சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் டாக்டர் எம். சாந்தப்பா வெளியிட்டார்.

அட்டை சொல்லும் செய்தி

# பதினோரு பேருக்குக் கௌரவ டாக்டர் பட்டம்

சென்னைப் பல்கலைக் கழக 125-வது ஆண்டு விழாவில், கல்வி மற்றும் பல்வேறு துறைகளில் சிறப்பாகப் பணிபுரிந்த பதினோரு பேருக்குக் கௌரவ டாக்டர் பட்டம் வழங்க, பல்கலைக்கழகச் செனட்டும், சிண்டிகேட்டும் ஒருமனதாக முடிவெடுத்தபடி டாக்டர் பட்டம் வழங்கப்படுகிறது என்று துணைவேந்தர் டாக்டர் எம். சாந்தப்பா அவர்கள் தெரிவித்தார். அவர்கள் விவரம் வருமாறு:

1. மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள்.
2. மாண்புமிகு இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் திரு ஆர்.வெங்கட்டராமன் அவர்கள்.
3. அண்ணாமலைப் பல்கலைக் கழக இணைவேந்தர் செட்டிநாடு அரசர் திரு முத்தையா செட்டியார் அவர்கள்.
4. முன்னாள் மத்திய அமைச்சர் திரு சி. சுப்பிரமணியம் அவர்கள்.
5. அணுசக்தி விஞ்ஞானி திரு ராஜா ராமண்ணா அவர்கள்.
6. விஞ்ஞானி திரு எஸ். சந்திரசேகரன் அவர்கள்.
7. சென்னைப் பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தர் திரு. நெ. து. சுந்தர வடிவேலு அவர்கள்.
8. தொழிலதிபர் திரு டி. சி. கோத்தாரி அவர்கள்.
9. பன்மொழிப் புலவர் திரு கா. அப்பாத் துரையார் அவர்கள்.
10. மருத்துவ நிபுணர் டாக்டர் ஏ. எஸ். தம்பையா அவர்கள்.
11. கர்நாடக இசைக் கலைஞர் சீர்காழி திரு எஸ்.கோவிந்தராஜன் அவர்கள்.

## காலத்திற்கேற்ற மாறுபாடு !

கல்லூரிகளில் மாணவர்கள் பாடங்களைக் கற்றுக் கொள்வதிலும் ஆசிரியர்கள்பாடங்களைப் போதிப்பதிலும் காலத்திகேற்றவாறு நவீன மாறுதல்கள் வரவேற்கப்படுகின்றன என்று சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் டாக்டர் எம். சாந்தப்பா கூறினார்.



'கல்லூரிக் கல்வியில் சமகாலப் பாட போதனைகளும், தொழில் நுட்பமும்' என்ற தலைப்பில் 21-9-83 அன்று பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் தலைமை வகித்துப் பேசுகையில் துணைவேந்தர் மேற்கண்டவாறு கூறினார்.



இக்கருத்தரங்கத்தை, பஞ்சாப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் திரு ஆர். சி. பால் துவக்கி வைத்தார். இந்தியப் பல்கலைக் கழகச் சங்கத்தின் செயலாளர் டாக்டர் ஜகதீஷ் நாராயணன், 'பாடபோதனையிலும் தொழில் நுட்பத்திலும் இந்தியாவின் இடம்' என்றதலைப்பில் பேசினார்.

## தமிழகத்தில் பாதுகாப்புப் படை

சென்னைப் பல்கலைக் கழகத்தின் 125-வது ஆண்டு நிறைவு விழாவினை ஒட்டி, 21-9-83 அன்று, பல்கலைக் கழகங்களுக்கு இடையே நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்ற இருபால் விளையாட்டு வீரர்களுக்கும் பரிசுகளையும் கேடயங்களையும் மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் வழங்கினார்.

சென்னை ராஜரத்தினம்விளையாட்டு அரங்கத்தில் நடைபெற்ற இந்த விளையாட்டு விழாவில் அவர் பேசுகையில் தெரிவித்ததாவது:

''ஓய்வு பெற்ற இராணுவ வீரர்களைக் கொண்டு, தமிழகத்தில் பாதுகாப்புப்படை ஒன்று அமைக்கப்பட உள்ளது.



''வன்முறை, கொள்ளை, தேவையற்றபோராட்டங்களைத்தூண்டி விடுவதால் ஏற்படும் வன்முறைகளைத் தடுக்க இப்படை தயார் நிலையில் வைக்கப்படும். ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் மகாதேவனிடமும், மற்ற இராணுவ அதிகாரிகளிடமும் இதுபற்றிப் பேசி முடிவெடுக்கப்பட்டு உள்ளது.



''நாடு அமைதியாக இருந்தால்தான் நல்ல முறையில் சிந்தித்து அனைவரும் செயல்பட முடியும். இராணுவ வீரர்கள் நாட்டின் எல்லைகளைப் பாதுகாப்பது போல, உள்நாட்டு அமைதியைப் பாதுகாக்க ஓய்வு பெற்ற இராணுவ வீரர்களுக்கு ஒரு வாய்ப்புத் தரப்பட உள்ளது''

பின்பு, மாலையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் அனைவரையும் வரவேற்றுப் பேசிய மேஜர் ஜெனரல் எஸ். பி. மகாதேவன் இளைஞர்களுக்கு உடற்பயிற்சி கொடுக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திப் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் விளையாட்டுச் சிறப்பு மலரை மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் வெளியிட்டார்.

## அறிவியலும் முன்னேற்றமும் !

இளைஞர்கள் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொண்டு, நமக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறது என்ற நம்பிக்கையோடு செயல்பட வேண்டும் என்று இளைஞர்களை முன்னாள் மத்திய அமைச்சர் திரு சி. சுப்பிரமணியம் அவர்கள்கேட்டுக் கொண்டார்.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் 125-வது ஆண்டு விழாவினை முன்னிட்டு 22-9-83 அன்று நடந்த 'அறிவியலும் முன்னேற்றமும்' என்ற கருத்தரங்கத்தைத் துவக்கி வைத்துப். பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

தலைமை வகித்துப் பேசிய பேராசிரியர் அல்லாடி ராமகிருஷ்ணன், விஞ்ஞானிகள் அச்சமின்றி அமைதியாக வாழவும், அவர்கள் தங்களது கருத்துக்களைத் தெரிவிக்கவும் உரிமை கொடுக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

'அணுசக்தியும் நாட்டு முன்னேற்றமும்' என்ற தலைப்பில் கட்டுரையொன்றை, கல்பாக்கத்தில் உள்ள ரியேக்டர் ஆராய்ச்சி நிலையத்தின் இயக்குநர் டாக்டர் சி. வி. சுந்தரம் படித்தார். பேராசிரியர் பி. எம். மாத்யூஸ் வரவேற்றார்.

## 'நாட்டுப்புறப் பாடல்' கருத்தரங்கு

"காற்றில் தவழ்ந்து வந்த கிராமியப் பாடல்களை நாட்டுப்புறப் பாடல்கள் என்று கூற வேண்டும். நாடோடிப் பாடல்கள் என்று கூறுவது தவறு'' என்று மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ. சிவஞானம் அவர்கள் கூறினார்.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் 125-வது ஆண்டு விழாவில் பல்கலைக் கழகத்தின் பாரம்பரியக் கலாச்சார நிறுவனத்தின் வெள்ளி விழாவும் 22-9-83 அன்று கொண்டாடப்பட்டது.

இதனை ஒட்டி 'தமிழகத்தில் நாட்டுப்புறப் பாடல்களும் இசை நிகழ்ச்சிகளும்' என்ற கருத்தரங்கு ஒன்றும் நடத்தப்பட்டது.

தலைமை வகித்துப் பேசிய தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு கே. சொக்கலிங்கம் இ. ஆ. ப. அவர்கள், நாட்டுப்புறக்கலைகள் பாதுகாக்கப்பட வேண்டும் எனக் கூறினார்.

கருத்தரங்கத்தைத் துவக்கி வைத்து, தமிழக இயல், இசை, நாடக மன்றச் செயலாளர் திரு டி. வி. நாராயணசாமி அவர்கள் பேசுகையில் காவடி ஆட்டம், வில்லுப்பாட்டு போன்றவற்றைப் பள்ளிகளில் மாணவர்களுக்குக் கற்றுத் தரவேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

சென்னைப் பல்கலைக் கழகத்துக்கு ஏறத்தாழ ரூ. 7 கோடி செலவில் பல்வேறு துறைகள் கட்டப்பட இருக்கின்றன. இதற்கான அடிக்கல் நாட்டு விழா, சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு மண்டபத்தில் 23-9-83 அன்று காலை நடந்தது. விழாவில் முன்னாள் மத்திய நிதி அமைச்சர் திரு சி. சுப்பிரமணியம் அவர்கள் கலந்து கொண்டு பல்வேறு துறைகளுக்கான அடிக்கல்லை நாட்டினார்.

இந்த விழாவுக்கு மாண்புமிகு டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் தலைமை தாங்கினார்.

## நிறைவு விழா!


சென்னைப் பல்கலைக் கழக 125-வது ஆண்டு விழா சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் கடந்த 4 நாட்களாக நடந்தது. 23-9-83 அன்று மாலை நிறைவு விழா நடந்தது.

மாண்புமிகு பாராளுமன்ற விவகாரம் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் திரு பூட்டா சிங் அவர்கள் கலந்து கொண்டு பேசியதாவது :

'சென்னைப் பல்கலைக் கழகம் 125-ஆவது ஆண்டு விழாவைக் காணுகிற இந்த நேரத்தில் பாரதியார், பாரதிதாசன் பெயரில் 2 பல்கலைக் கழகங்களைத் தந்து உள்ளது மகிழ்ச்சிக்குஉரியதாகும். நம்நாட்டில் உள்ள பல்கலைக் கழகங்களில், சென்னைப் பல்கலைக் கழகம் பெருமைக்குரிய இடத்தை வகிக்கிறது.

விழாவுக்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ.அரங்கநாயகம் அவர்கள் தலைமை தாங்கினார். நூற்றாண்டு வெள்ளி விழாக் குழுத் தலைவரும், சென்னை உயர்நீதி மன்ற நீதிபதியுமான திரு பி. ஆர். கோகுலகிருஷ்ணன், அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் சிட்டிபாபு, சென்னைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் திரு சி. ஆர். பெருமாள், கல்லூரிக் கல்வி இயக்குநர் திரு திருஞானசம்பந்தம், சென்னைப் பல்கலைக் கழகப் பதிவாளர் திரு சி. கே. குமாரசாமி ஆகியோர் பேசினார்கள்.

'எம். பி. பி. எஸ்.' இறுதித் தேர்வில் அதிக மதிப்பெண் பெறும் ஆதிதிராவிட மாணவருக்கு 'சத்தியவாணிமுத்து பெயரில் தங்கப்பதக்கம்' வழங்குவதற்காக, சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் எம். சாந்தப்பாவிடம் ரூ. 10 ஆயிரம் வழங்கப்பட்டது





# மக்கள் வாழ்விற்கு மனநிறைவு தரும் திட்டங்கள்

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்

## திரு. ப. குழந்தைவேலு

வளரும் தமிழகம்

மக்கள் தங்கள் வாழ்வில் அன்றாடம் சந்திக்க வேண்டிய பல இன்னல்களைக் களைந்து, வாழ்வை இனிமையாக்கவே அரசின் திட்டங்கள் தீட்டப்படுகின்றன. மக்களின் இன்றையத் தேவையை அறிந்து, நாளையத் தேவையைக் கணக்கிட்டு தீட்டப்படும் திட்டங்களே 'திட்டம்' என்ற சொல்லுக்கு உண்மையான பொருளைக் கூறுவதாக அமைகின்றது என்பது காலம் காட்டும் உண்மை. இத்தகைய திட்டங்களே, வரலாறு படைத்த திட்டங்களாகவும், மக்கள் வாழ்விற்கு மன நிறைவு தரும் திட்டங்களாகவும் அமைகின்றன.

மாண்புமிகு புரட்சித் தலைவரவர்கள் தமிழகத்து ஆட்சிப் பொறுப்பை ஏற்றது முதல், தமிழக மக்களின் வாழ்வில் மன நிறைவு ஏற்படும் வகையில் எண்ணற்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதை இந்த நாடு அறியும். அந்த வண்ண வண்ண திட்டங்களுள்—நான் பொறுப்பேற்றுள்ள ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறையால், நிறைவேற்றப்பட்டுள்ள, நிறைவேற்றப்பட்டு வரும் ஒரு சில திட்டங்களைப் பற்றி இங்கே கூறுவது என் கடமையாகும்.

தேவைகளும், பிரச்சனைகளும் தீர்க்கப்படும் பொழுதுதான் மக்கள் மனங்களிலே மனநிறைவு ஏற்படும். தேவைகள் என்கின்றபோது இன்றைய தேவைகளை, 'சமுதாயத்தின் தேவைகள்', தனி மனிதனின் தேவைகள்' என இருவகைப்படுத்தலாம். தனி மனிதர்கள் பலர் ஒன்று சேர்ந்துதான் சமுதாயம் உருவாகிறது என்றாலும், தனி மனிதனின் தேவைகளும், சமுதாயத்தின் தேவைகளும் தனித் தன்மை கொண்டவை.

சமுதாயத் தேவைகள் என்பவை வீட்டுக்கு வெளியே மனிதனுக்குத் தேவைப்படுபவை. எடுத்துக்காட்டாக, நல்ல சாலை வசதி ஒவ்வொரு ஊருக்கும் தேவையான ஒன்று. அதுபோல், பள்ளி வசதி, மருத்துவ வசதி போன்ற எண்ணற்ற வசதிகள் சமுதாயத்திற்குக் கண்டிப்பாகத் தேவைப்படுகின்றன. எனவேதான், தனிமனிதன் வாழ்வில் மட்டுமின்றி, சமுதாயத்தின் நலத்திலும் அக்கறை கொண்ட மாண்புமிகு புரட்சித் தலைவரவர்கள் தமிழகமெங்கும் தன்னிறைவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்கள். வேறு எந்த மாநிலமும் இது வரை நிறைவேற்றியிராத இந்தத் திட்டத்தை மூன்றாண்டு கால அளவிற்குள் தமிழகத்தின் 378 ஊராட்சி ஒன்றியங்களிலும் நிறைவேற்றிய பெருமை இன்றைய தமிழக அரசுக்கு உண்டு. குடிநீர் வசதி, சாலை அமைத்தல், பள்ளிக்கூடங்கள் கட்டுதல், பாசன, மருத்துவ, மகப்பேறு வசதிகள் ஆதிதிராவிட மக்களுக்கு காலனியிலிருந்து மயான பாதைகள் போன்ற எண்ணற்ற வசதிகளை குறுகிய காலத்திற்குள் தமிழகம் முழுவதும் ஏற்படுத்தித் தந்தது தன்னிறைவுத் திட்டம்.

மூன்று கட்டங்களாக 1980-லிருந்து 1983 முடிய செலவிட்ட தொகை ரூ. 225 கோடி-இதில் பொதுச் சொத்துக்களாக கட்டிடங்களாக உருவாக்கப்பட்ட சொத்தின் மதிப்பு 207 கோடி ரூபாய்.

தமிழகத்தின் வரலாற்றிலேயே இது போன்ற மாபெரும் அளவில் மகத்தான திட்டங்கள் நிறைவேற்றப்பட்டதாக வரலாறு இல்லை. வரலாறு காணாத இந்தத் திட்டம் இன்று சமுதாயத்தின் அடிப்படைத் தேவைகளைத் தீர்த்து, மக்களின் மனங்களில் மனநிறைவை ஏற்படுத்தி உள்ளது என்பதை எவரும் மறுக்க முடியாது. தற்போது இத்திட்டம் பேரூராட்சிகளுக்கும் பல நகராட்சிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

1982-83-ஆம் ஆண்டில் பேரூராட்சிகளுக்குத் தன்னிறைவுத் திட்டத்தின் முதல் கட்டமாக 146 பேரூராட்சிகளில் ரூ. 5கோடி முழுமான்யத்தில் விரிவாக்கப்பட்டுள்ளது. அத்தியாவசியத் தேவைகள் பலவாக இருப்பினும் குடிநீர் வழங்குதல், இணைப்புச் சாலைகள், சிறு பாலங்கள், வடிகால்கள், ஆதிதிராவிடக் குடியிருப்புகளிலிருந்து இடுகாட்டிற்குப்பாதை அமைப்பு, தெரு விளக்குகள் மற்றும் சலவைத் துறை ஆகிய பணிகளிலேயே அரசு இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுத்துள்ளது. 620 பேரூராட்சிகளுக்கும் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்படவிருக்கும் திட்டங்களுக்குத் தேவைப்படும் நிதி ரூ. 98.64கோடி என அரசுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1983-84ஆம் ஆண்டிற்கு இரண்டாவது கட்டமாக இத்திட்டத்தை 200 பேரூராட்சிகளில் செயல்படுத்துவதற்கு அரசு ரூ.5 கோடி அனுமதித்துள்ளது.

தமிழகத்திலுள்ள நலிவுற்ற நகராட்சிகளில் முதல் கட்டமாக 20 நகராட்சிகளில், 1982-83-லிருந்து தன்னிறைவுத் திட்டம் செம்மையாக நிறைவேற்றப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு நகராட்சிக்கும், தமிழ்நாடு அரசு 25 இலட்சம் அளித்துள்ளது. இதேபோல 1983-84ம் ஆண்டிலும் இத்திட்டம் 30 நகராட்சிகளில் செயற்படுத்தப்பட்டுள்ளது.

அடுத்து குறிப்பிடப்பட வேண்டிய திட்டம், தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம்.

கிராமப்புற மக்களிடையே வேலையே இல்லாத நிலைமை ஒருபுறம்; போதிய வேலை கிடைக்கவில்லையே என்ற கவலை சூழ்ந்த நிலை இன்னொருபுறம். இவற்றினைக் களைந்து, மக்களிடையே கூடுதலான வேலை வாய்ப்பை உருவாக்க வேண்டுமென்ற நோக்கத்தில்தான் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் கொணரப்பட்டது. கிராமத்திற்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுத்து, பொருளாதார நிலையைப் படிப்படியாக உயர்த்துவதும், மக்களின் வருவாயை அதிகரிப்பதும், சத்துள்ள உணவைப் பெறுவதற்கு வகை செய்வதும் இத்திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். இத்திட்டம் தமிழ்நாட்டிலுள்ள 378 வட்டாரங்களிலும் நிறைவேற்றப்படுகின்றது.

இத்திட்டத்தில் இதுவரை 1623 பள்ளிக் கட்டடங்களும், 1801 சமுதாயக் கூடங்களும் கட்டப்பட்டுள்ளன. தவிர, கடந்த ஆண்டுகளில் முடிவுறாத வேலைகளில் 5065பணிகள் இவ்வாண்டில் இதுவரை முடிக்கப்பட்டுள்ளன. நடப்பாண்டிற்கென 7089 பணிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

நடப்பு ஆண்டில் இத்திட்டத்தைச் செயல்படுத்த ரூ. 400 இலட்சம் ஒதுக்கப்பட்டது. அதற்கும் மேலாக அண்மையில் பத்து கோடியே 89 இலட்சம் ரூபாய் மாவட்டங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது. 1983-84ம் ஆண்டிற்கு மட்டும் ஒதுக்கப்பட்ட அரிசியின் அளவு 13,124 மெட்ரிக் டன் ஆகும்.

தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியைச் சார்ந்தவர்களில், நடப்பாண்டில் மட்டும் 2.30 இலட்சம் பேர்கள் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர். இவ்வேலைவாய்ப்பினால் பயனடைந்த இம்மக்களின் எண்ணிக்கை மட்டும் 4.82 இலட்சமாகும்.

ஒரு குடும்பம் என்றால் அந்தக் குடும்பத்தின் தலைவன் மட்டும் உழைக்க, மற்றவர்கள் அவருக்குச் சுமையாக இல்லாமல், ஆதோ தங்களால் இயன்ற வகையில் பொருள் ஈட்டி, மொத்தத்தில் குடும்பத்தின் வருவாயை உயர்த்த வழி வகுத்த திட்டம்தான் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்.

இத்திட்டத்தின் ஓர் அங்கம் இளைஞர்களுக்கான சுயவேலைவாய்ப்புப் பயிற்சி; 'ட்ரைசெம்' என ஆங்கிலத்தில் அழைக்கப்படும் இந்தப் பயிற்சித் திட்டம், கிராமப்புற இளைஞர்கள் மற்றும் இளம் பெண்கள் வாழ்வில் நம்பிக்கை ஒளியைத் தோற்றுவித்துள்ளது. இந்தப் பயிற்சித் திட்டத்தின் கீழ், கிராம வாழ் இளைஞர்களுக்குப் பல்வேறு தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சியின்போது உதவித் தொகை பயிற்சி முடிந்தபோது, சொந்தமாகத் தொழில் தொடங்க வங்கிகள் மூலம் கடன் உதவி போன்றவை ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் உன்னத அம்சங்கள்.

1978-ல் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டபோது ஒரு சில ஒன்றியங்களில்தான் நிறைவேற்றப்பட்டது. ஆனால் 2-10-1980 முதல் இத்திட்டம் தமிழகத்தின் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம் முதன் முதலில் தொடங்கப்பட்டபோது, ஒவ்வோர் ஒன்றியத்திற்கும் அளிக்கப்பட்ட உதவித் தொகையான ரூ. 5 இலட்சம், ஓராண்டிற்குப் பிறகு ரூ. 6 இலட்சமாக உயர்த்தப்பட்டு தற்போது ஒவ்வோர் ஒன்றியத்திற்கும் ரூ. 8 இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது. மான்யமாக அளிக்க இந்த ஆண்டு மட்டும் வழங்கப்பட்ட தொகை ஏறத்தாழ ரூ. 30 கோடி. இந்த மான்யத் தொகையில் பாதியை மத்திய அரசும், மீதியை மாநில அரசும் ஏற்றுக் கொள்கின்றன.



வறுமைக் கோட்டிற்குக் கீழே உழலும் மக்கள் வாழ்வில் வளம் பல சேர்க்கும் இத் திட்டத்தின் கீழ் பயன் பெறும் சிறு விவசாயி களுக்கு 25 சதவிகிதம் மானியமாகவும் குறு நில விவசாயிகள் மற்றும் வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு 33 1/3 சதவிகிதம் மானியமாகவும் வழங்கப்படுகிறது. இத் திட்டத்தின் கீழ் ஒவ்வோரு வட்டாரத்திற்கும் 600 குடும்பங்கள் வீதம், ஒவ்வோர் ஆண்டும் 2.56 இலட்சம் குடும்பங்கள் பயனடைந்து வருகின்றன. ஐந்தாண்டுகளில் மட்டும் 11.2 இலட்சம் குடும்பங்கள் பயன்பெறும். தாழ்த் தப்பட்ட மற்றும் பழங்குடியினர், ஷெட் யூல்டு வகுப்பினர் ஆகியோருக்கும், இத் திட்டத்தின் கீழ் பயன்பெற முன்னுரிமை அளிக்கப்படுகின்றது.

அடுத்து இன்னொரு திட்டத்தினையும் பற்றி நான் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். அதுதான் சாண எரி வாயுத் திட்டம்.

நம்நாட்டில் கிடைக்கும் நிலக்கரி, நிலக்கரி வாயு, மண்ணெண்ணெய், பெட் ரோல் போன்ற எரிபொருள்கள் மிகுந்த முத லீட்டில் கிடைக்கும் அரிதான எரிபொருள் களாகும். அவற்றினைக் கொண்டு தொழில் களைப் பெருக்கப் பயன்படுத்திக் கொள்வதே சிறந்த செயலாகும். மழைவளம் தரும் காடு களையும், கிராமப் புறங்களிலுள்ள மரங் களையும் அழித்து சமையலுக்காகப் பயன் படுத்திக் கொண்டே சென்றோமானால், நாட்டில் மழை அளவு குறைந்த வறட்சிநிலை உருவாகும். இவற்றினைக் களைய ஒரு மாற்று எரிபொருள் தேவையாகிறது. அதுவே தான் சாண எரி வாயுத் திட்டமாகும்.

தமிழக அரசு இத்திட்டத்தை முனைந்து [illegible] வேகத்துடன் கடந்த ஆண்டுகளில் நிறை வேற்றி பாராட்டுக்களைப் பெற்றுள்ளது. நடப்பாண்டில் 5,000 சாண எரிவாயுக் கலன் களைத் தமிழக அரசு நிறுவ முன்வந்துள்ளது. இதுவரை 1323 கலன்கள் ஏற்படுத்தப்பட்டு, செம்மையாகச் செயல்படுகின்றன என்பது மகிழ்ச்சியைத் தருவதாகும்.

தமிழகக் கிராமங்களிலே தன்னிறைவுத் திட்டம் சமுதாயத்தின் அடிப்படைத் தேவை களைத் தீர்த்து வைத்த பின்னர், பேரூராட்சி களிலும் நகராட்சிகளிலும் தன்னிறைவை ஏற்படுத்த முனைந்து வருகிறது. தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் தனிப்பட்ட தொழிலாளர்களின் வாழ்வில் ஒளி பாய்ச்சி உழைப்பிற்கான ஊதியத்தையும் உணவுப் பொருளையும் அளிக்கிறது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் ஒவ்வொரு குடும் பத்திலும் விளக்கேற்றி வருகிறது. மொத்தத் தில், இத்திட்டங்கள் அனைத்தும் மக்கள் வாழ்விற்கு மனநிறைவு தரும் மகத்தான திட்டங்களாக அமைந்துள்ளன. தமிழகத்தில் நடைபெறும் வளர்ச்சிப் பணிகளைப்போல் வேறு எந்த மாநிலத்திலும் இவ்வளவு திட் டங்கள் ஒரு சேர நடைபெறவில்லை. பொன் மனச்செம்மல் புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சிக் காலம்தான் தமிழக வரலாற்றில் பொன் எழுத்துக்களால் வைர வரிகளில் எழுதக் கூடிய ஒரு சரித்திரமாக இருக்கப் போகிறது என்பதை தெரிவித்து விடைபெறு கிறேன்.

நன்றி வணக்கம்.

**[சென்னை வானொலியில் 4-9-'83 அன்று ஆற்றிய உரை].**

## மரமடக்கியில் கிராமிய மருந்தகம்

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம் மரமடக்கி கிராமத்தில் சுமார் ரூ. 98 ஆயிரம் செலவில் கட்டப்பட்ட கிராமிய மருந்தகக் கட்டடத்தை மாண்புமிகு சுதர்த்துறை அமைச்சர் திருமதி ப. விஜய லட்சுமி அவர்கள் 10-9-83 அன்று திறந்து வைத்தார். விழாவிற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. இரா. கற்பூரசுந்தரபாண்டி யன், இ.ஆ.ப. தலைமையேற்றார். இதே விழாவில் மாண்புமிகு சுற்றுப்புறச் சுகா தார அமைச்சர் திரு எஸ். ஆர். இராதா அவர்கள் சுமார் ரூ. 59 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ள ஊராட்சி ஒன்றிய பள்ளிக் கட்டடத்தினைத் திறந்து வைத்தார். மாண்புமிகு தொழில் அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்கள் அரசினர் மாணவர் விடுதியினைத் திறந்து வைத்து சிறப்புரையாற் றினார். விழாவில் சட்டமன்ற உறுப்பினர் திரு. பெ. திருமாறன் சிறப்புரையாற்றினார். முன்னதாகக் கோட்ட வளர்ச்சி அலுவலர் திரு எம். நடேசன் வரவேற்புரையாற்றினார்.

## இராமநாதபுர மாவட்டத்தில் மாவட்டக் கலை மன்றம் அமைப்பு

இராமநாதபுர மாவட்டத்தில் மாவட்டக் கலை மன்றம் அமைக்க அரசு ஆணையிட் டுள்ளது. இராமநாதபுர மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர் செயலாளராகவும், முதன்மைக் கல்வி அலுவலர் பொருளாளராக வும் பணியாற்ற இருக்கின்றனர்.

## முத்துனேந்தல் சர்க்கரை ஆலை

இராமநாதபுரம் மாவட்டத்தில் மானா மதுரை தாலுகாவிலுள்ள முத்துனேந்தல் கிராமத்தில் திரு. எஸ். பெரியண்ணன் என்பவ ரால் (1250 டி. சி. டி.) ஒரு சர்க்கரை ஆலை நிறுவப்படவுள்ளது.


இத்தப் புதிய ஆலை 2,25,000 மெட்ரிக் டன் கரும்பைப் பிழியும் சக்தியும் ரூ. [illegible] கோடி மதிப்புள்ள சர்க்கரையை உற்பத்தி செய்யும் திறனும் கொண்டது. இத னால் 500 பேர் வேலைவாய்ப்புப் பெறு [illegible] ரூ. 676 [illegible] படும்.

# திருவேற்காடு தங்கரதத் திருவிழா

சென்னை மாநகருக்கு அருகிலுள்ள திரு வேற்காடு அருள்திரு தேவி கருமாரியம்மன் திருக்கோயில் பிரசித்தி பெற்றதாகும். இக் கோயிலுக்கு, அம்மன் உலாவுக்கான தங்கத் தேர் இல்லாத குறை அண்மையில் நீக்கப்பட் டது.

9.9.83 வெள்ளிக் கிழமையன்று அருள் மிகு தேவி கருமாரியம்மன் கோயிலில், மாண்புமிகுசெய்தி-அறநிலையத்துறைஅமைச் சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் 14 இலட் சம் ரூபாய் செலவில் தயாரிக்கப்பட்ட தங்க ரத உலாவைத் துவக்கி வைத்தார். இவ்விழா விற்கு மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் திரு.சி.பொன்னையன் அவர்கள் தலைமை தாங்கினார்.

நாள்தோறும் வழிபட வந்தோர் அளித்த காணிக்கை ,தங்கரதத்திற்கான சிறப்பு உண்டி



யல் வருவாய் ஆகியவற்றைக் கொண்டு- சுவாமி இராமதாசர் அவர்களின் அருளாசி யோடு துவக்கப்பட்டதாகும் இந்தத் தேர்த் திருப்பணி.

மயிலாடுதுறை ஏ.ரத்தினம் செட்டியார் அண்ட் சன்ஸ் நிறுவனத்தாரால் அழகுற உருவாக்கப்பட்டதே 11½ அடி உயரமுள்ள இந்தத் தங்கரதம். 6.3.82 அன்று, இதற்கென ரூ. 12,75,000க்கு மதிப்பீடு பெறப்பட்டு, இந்த ஆலயத்தின் அறங்காவலர் குழு ஒப்புத லோடு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் அனுமதியுடன் அவர்களிடம் ஒப் படைக்கப்பட்டதே இந்தத் திருப்பணி.

**பயன்பட்ட பொருட்கள்**

வழிபடவந்தோர் அளித்த பொன்னினங் கள், தங்க ரதத் தனி உண்டியல் மூலம் கிடைத்த பொன்னினங்கள் ஆகியவற்றில் 9736 கிராம் எடையுள்ள பல மாற்றுப் பொன்னினங்கள் முதலியவை மட்டும் பம்பா யிலுள்ள இந்திய அரசு தங்க உருக்காலையில் 12.10.81ல் உருக்கிப் பார்க்கப்பட்டது.அதன் மூலம் 6765.600 கிராம் எடையுள்ள சுத்தத் தங்கம் கிடைக்கப்பெற்றது.

**அருள்திரு தேவி கருமாரியம்மன் உலாவிற் கென உருவாக்கப்பட்ட ரதத்திற்காகப் பயன் படுத்தப்பட்ட 5 கிலோ தங்கத்தின் மதிப்பு ரூ. 9,56,000 ஆகும். அதற்குப் பயன்படுத்தப்பட்ட 80 கிலோ சுத்த வெள்ளியின் மதிப்பு ரூ.3,06,000. செப்புத் தகடுகள் 231 கிலோ, பித்தளைத் தகடு கள் 20 கிலோ ஆகியவற்றின் மதிப்பு ரூ.18,000. ரதத்திற்குப் பயன்பட்ட தேக்கு முதலான மரங் களின் மதிப்பு ரூ.32,000. ரதத்தை அரும்பாடு பட்டு உருவாக்கியோருக்குத் தரப்பட்ட கூலி முதலியவை ரூ. 88,000 ஆகும்.**

ரதம் செய்திடத் தேவைப்பட்ட தங்கம் மட்டும் சென்னையிலுள்ள இந்து சமய அற நிலைய ஆட்சித்துறை துணைஆணையர் திரு. பி.எம் முத்துவேல், தலைமையிட நகை சரி பார்க்கும் அதிகாரி திரு கே.எஸ்.சோமசுந் தரம், திருக்கோயிலின் தக்கார் திரு எம்.பி. நாராயணன், திருக்கோயிலின் உதவி ஆணை யர்-செயல் அலுவலர் திரு சு.பாலசுப்பிரமணி யன், நகை மதிப்பீட்டு வல்லுநர் திரு ஆர். இராசன், தொழில்நுட்ப உதவியாளர் திரு செ.அருணாசலம் ஆகியோரின் முன்னிலையி லும் கண்காணிப்பிலும்-திருக்கோயில் கண் காணிப்பாளர்கள், மேலாளர்கள், எழுத்தர் கள், கடைநிலை ஊழியர்கள் ஆகியோரின் ஒத்துழைப்போடு மயிலாடுதுறை ஏ.ஆர்.சி. நிறுவனத்திலிருந்து வந்திருந்த 35 தொழில் வல்லுநர்களால் 'ரேக்' அடிக்கப்பட்டு செப் புத் தகடுகளின் மீது ஒட்டி மரத்தேரில் தைக்கப்பட்டுள்ளது.

தேர் செய்யும் பணிக்காலத்தில்-ஆயுதம்

**—இல. இராசேந்திரன்**

தாங்கிய காவலர் நால்வரும், கூர்க்காக்கள் இருவரும், பொருட்பாதுகாப்புக்கென அமர்த் தப்பட்டிருந்தனர்.

**விழாச் சிறப்பு**

இத்தனை அரும்பாடுபட்டு அழகோடு உருவாக்கப்பட்ட தங்கரத உலாத் தொடக்க விழா திருவேற்காட்டில் சீரும் சிறப்புமாக நடாத்தப்பட்ட கடைசிஆவணி வெள்ளியன்று பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தந் திருந்தார்கள். தங்கரத ஓட்டம் கண்டு தாங் கொணாத மகிழ்ச்சியில் திளைத்தார்கள்.

பல்லாயிரக்கணக்கான பக்தர்களோடு, மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறைஅமைச் சரும், மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்ச ரும் அருள்மிகு தேவிகருமாரியம்மன் அணி செய்த தங்கத் தேரை வடம்பிடித்து இழுத் தார்கள்.

மழை பொழிந்து மண் குளிர்ந்திருந்த நாளில், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையர் திரு ஆர். சண்முகசிகாமணி, இ.ஆ.ப. அவர்கள் முன்னிலையில் இதனை யொட்டிய விழா நடைபெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் திரு.டி.நாக ரத்தினம், தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு ஜே.சி.டி.பிரபாகரன் மற்றும் கலவை அ.கோபாலகிருஷ்ணன், எஸ்.ஜெகன்னாதன், குருஜி சுந்தர்ராமன், வை.சுந்தரம், சைதை துரைசாமி, இரா.சர்வேசுவரராவ், சுற்றுலா வாரியத் தலைவர் திரு சீர்காழி பாலசுப்பிர மணியம், திரு வி.என்.சிதம்பரம், புலவர் வேதா ஆகியோரும் பங்கேற்றுச் சிறப்பித்த இவ்விழாவுக்கு வருகை தந்தோரை வரவேற்று தக்கார் திரு எம்.பி. நாராயணன் உரையாற்றி னார்.

**அமைச்சர்கள் உரை**

விழாத் தலைமையேற்றுப் பேசிய மாண்பு மிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் திரு.சி. பொன்னையன் அவர்கள் தமது உரையில்—


**“ஆலயங்களின் அறங்காவலர் குழுவிலும் இப்படிப்பட்ட திருப்பணிக் குழுவிலும் கைசுத்த மானவர்களையே மிக்க கவனமாகத் தமிழக**



**அரசு நியமித்து வருகிறது. ஒழுக்கமும் பண் பாடும் உயர்வதற்கு ஆன்மிக உணர்வும் ஈடு பாடும் அவசியமாகும். ஆன்மீக உணர்வுள்ள வர்களே திருப்பணிக் குழுவில் இருப்பதால் தான் இவ்வாறான ஆன்மீகப் பணிகள் சிறப் புற இந்நாளில் நடைபெறுகின்றன” என்று குறிப்பிட்டார்.**

தங்கரத வெள்ளோட்டத்தைத் துவக்கி







வைத்தும், வசந்த மண்டபத்திற்கு அடிக்கல் நாட்டியும் மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு.இராம. வீரப்பன் அவர் கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

**“தமிழகத்தின் அறநிலையத்துறை வர லாற்றில், பழனி முருகன் கோயிலிலும், திருச் செந்தூர் முருகன் கோயிலிலும்தான் முன்பு தங்க ரதங்கள் இருந்தன. 1976ல் திருத்தணி முருகன் கோயிலுக்கும் தங்கரதம் செய்யப் பட்டது”.**

**“புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு-சுவாமிமலை முருகன் கோயில், சமயபுரம் மாரியம்மன் கோயில், மதுரை மீனாட்சியம்மன் கோயில் ஆகியவற் றுக்குத் தங்க ரதங்கள் செய்யப்பட்டன. இப் போது திருவேற்காடு கோயிலுக்குத் தங்கரதம் செய்து வெள்ளோட்டம் விடப்பட்டிருக்கிறது. வடபழனி முருகன் கோயிலுக்கும், கந்த கோட்டம் முருகன் கோயிலுக்கும் தங்கரதம் செய்து கொண்டிருக்கிறோம். இராமேஸ்வரம் கோயிலுக்குத் தங்கரதம் செய்யவிருக்கிறோம்”.**

இவ்வாறு மாண்புமிகுசெய்தி-அறநிலை யத்துறை அமைச்சர் உரையாற்றினார்.

விழா முடிவில் – வருகை தந்தோருக்கு நன்றி தெரிவித்து, அருள்திரு தேவி கருமாரி யம்மன் திருக்கோயில் உதவி ஆணையரும், செயல் அலுவலருமான திரு.சு. பாலசுப்பிர மணியன் நன்றி கூறினார்.



**மேலூர் ஜேசீஸ் சங்கமும், பாரத ஸ்டேட் பாங்க் மேலூர் கிளையும் இணைந்து 21.8.83 அன்று 11 ஏழை மணமக்களுக்கு இலவசத் திருமணம் நடத்தியது.**

## ஏழைகளுக்கு இலவசத் திருமணம்

**திருமண விழாவிற்கு வந்திருந்தவர்களை மேலூர் ஜேசீஸ் சங்கத் தலைவர் ஜேசீ.சி. பாபு ராஜேந்திரன் வரவேற்றார். திருமண விழா மதுரை மீனாட்சியம்மன் கோவில் அறங்காவலர் குழுத் தலைவர் திரு வி. என். சிதம்பரம் தலைமையிலும், திரு கே.வி. வீரணன் அம்பலம், எம்.எல்.ஏ, திரு இராம. அருணகிரி, எம்.எல்.ஏ, ஜேசீ ஏ. ராஜேந்திரன் ராஜா, மாநில ஜேசீஸ் சங்கத் தலைவர் ஆகியோர் முன்னிலையிலும் நடந்தது.**

**மணமக்களுக்கு இலவசமாகத் தாலி, புத்தாடை, பாய், தலையணை, டிரங்க் பெட்டி, துண்டு ஆகியவை வழங்கப்பட்டன.**

**எல்லாத் திருமணங்களும், இந்துத் திருமணச் சட்டப்படி சார்-பதிவாளரால் பதிவு செய்யப்பட்டன.**

அனைத்து சாலைகளும் அஞ்சலகத்தை நோக்கியே!

**உங்கள் பணத்தை 6 ஆண்டுகளில் இரட்டிப்பாக்குங்கள்**

**தேசீய சேமிப்புப் பத்திரம்**

6-வது வெளியீட்டில் முதலீடு செய்யுங்கள்



ஒவ்வொரு ரூ.100/-ம் ரூ.201-50 ஆக பெருகுகிறது

உங்கள் பணத்திற்கு நல்ல வட்டியும் பாதுகாப்பும் அளிக்கிறது. இப்பத்திரம் ரூ-10, 50, 100, 500, 1000, 5000 மதிப்பில் கிடைக்கும். முதலுக்கும், வட்டிக்கும் வருமான வரி சலுகை உண்டு!

அயல் நாட்டில் வாழும் இந்தியர்களுக்கு 13% வட்டி அளிக்கிறோம்!

தொடர்பு கொள்க :
இயக்குநர்,
**சிறு சேமிப்புத் துறை,**
143, அண்ணா சாலை, சென்னை-600 002
**அல்லது அருகிலுள்ள அஞ்சலகங்கள்.**

DIPR-509/83-EP



# விவசாய இடுபொருள் தேவையை நோக்கி...

"இந்த நூற்றாண்டின் இறுதியில் இந்தியாவின் மக்கள்தொகை 93½ கோடியாக உயர்ந்துவிடும். இந்த அளவு மக்கள் தொகைப் பெருக்கம் ஏற்படும்போது அதற்கேற்ப உணவுப்பொருள்உற்பத்தி ஆண்டிற்கு 2 கோடியே 2.5 லட்சம் டன்னாக இருக்க வேண்டும்.

1983ம் ஆண்டு உணவு உற்பத்தியின் அளவு ஒரு கோடியே 42 லட்சம் டன்னாக இருக்க வேண்டும் என்று திட்டமிடப்பட்டது.

இந்தியாவின் தனிநபர் விளைச்சல் நிலத்தின் அளவைக் கணக்கிட்டால் 1973-ல் 0.29 எக்டேராகும். இந்த நூற்றாண்டு இறுதியில் உயரும் மக்கள்தொகை அடிப்படையில் கணக்கிட்டால் தனிநபர் நிலம் 0.17 எக்டேராகக் குறையும். எனவே அவசியம் நம்நாட்டின் விளைநிலத்தின் அளவை விரிவுபடுத்தியாக வேண்டும்.

அரிசி உற்பத்தி ஆய்வு செய்ததில் 1981-82ல் ஒரு எக்டேரில் 1.3 டன் உற்பத்தி செய்யப்பட்டது. இது நூற்றாண்டு இறுதியின் தேவைப்படி கணக்கிட்டால் ஒரு எக்டேரில் 2.5 டன் அரிசி உற்பத்தி செய்யப்பட வேண்டும்.

உணவு உற்பத்தி அதிகரிக்கப்பட வேண்டுமானால் உரியகாலத்தில் தேவைப்படும் விவசாய இடுபொருட்களைப் போதிய அளவு கொடுக்க வகை செய்ய வேண்டும். ஏழு வகை உதவிகள் தேவையாக இருக்கின்றன. விவசாயம் பற்றிய தொழில் நுட்பம், தரமுள்ள விதைகள், உரவகைகள், பூச்சிக் கொல்லி மருந்துகள், செயலாக்கும் வசதிகள், நீர்ப் பாசனம், கடன் உதவி போன்ற உதவிகள் விவசாயத்துறையில் ஏழு தூண்களாகும்.

இவைகள் எல்லாம் உரிய காலத்தில் துரிதமாக, எளிதாகப் போதிய அளவு கிடைப்பது முழுக்க முழுக்க அவசியமானதாகும். அப்படியானால் தான் உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும்.

விளைச்சல் அதிகம் தரும் உயர்தர நெல், கோதுமை விதைகள் இந்தியாவின் பசுமைப்புரட்சிக்கு முன்னோடிகளாகும். 1953-54 லிருந்து 1982-83 வரை தரத்தில் உயர்ந்த சான்றிதழ்கள் பெற்ற விதைகளின் அளவு உயர்ந்து கொண்டே வந்திருக்கிறது.

1953-54ல் 0.18 லட்சம் டன் விதைகளும், 1978-79ல் 0.90 லட்சம் டன்களும், 1979-80ல் 1.40 லட்சம் டன்னும், 1980-81ல் 2.50 லட்சம் டன்னும், 1981-82ல் 2.98 லட்சம் டன்னும், 1982-83ல் 4.21 லட்சம் டன்னும் நல்ல விதைகள் வழங்கப்பட்டுள்ளன.

1983-84ம் ஆண்டிற்கான இலக்கு 5.15லட்சம் டன்னாகும். இதில் கரீப் காலத்தில் 2.13 லட்சம் டன் தேவைப்படும். 1984-85ம் ஆண்டுக் காலத்தில் 6-வது ஐந்தாண்டு திட்டத்தின் இறுதிக் கட்டத்தில் 5.40 லட்சம் டன் விதைகள் விநியோகிப்பது என்பது முடிவு செய்யப்பட்ட இலக்காகும். தேசிய விவசாயக் கமிஷன் கணிப்புப்படி இந்த நூற்றாண்டின் இறுதியில் தரமான விதைகளின் தேவை 30 லட்சம் டன்னாக இருக்கும்.

தற்போது விதைகள் உற்பத்தியிலும், விநியோகத்திலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இருந்து வருவதால் கி.பி.2000 ஆண்டில் அந்த அளவிற்குத் தேவையான விதைகள் உற்பத்தி பெருக வாய்ப்பு உண்டு. விதைகள் உற்பத்தி விநியோகம் இவைகள் பெருக இந்திய அரசாங்கம் உலக

வங்கியின் கூட்டோடு 1976-ல் தேசிய விதைகள் பண்ணை திட்டத்தை மேற்கொண்டது. இந்த விதைப் பண்ணை ரூ.89கோடியே 42 லட்சம் முதலீட்டுத் திட்டத்தில் துவக்கப்பட்டது.

அதிக விளைச்சலைத் தரக் கூடியதும், நோய்கள் தாக்காதவாறு பாதுகாத்துக் கொள்ளும் சக்தியைப் பெற்றதும், ஆகிய புதிய தரமுள்ள விதைகள் உற்பத்தி செய்யும் ஆராய்ச்சிப் பணிகள் இங்கு தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.



உரங்களைப் பொறுத்த மட்டில் 1950-51ல் 69 ஆயிரம் டன்னாக வாங்கப்பட்டது. 1982-83ல் 64.20 லட்சம் டன்னாக உயர்ந்திருக்கிறது. 1983-84ம் ஆண்டின் இலக்கு 72 லட்சம் டன்னாகும். 1989-90ல் இதன் அளவு 140 லட்சம் டன்னாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஓராண்டிற்கு சராசரி 16 சதவீதம் இதன் அளவு கூடிவருகிறது.

விவசாய உற்பத்திப் பெருக்கத்திற்குக் கடன் உதவி என்பது மிக முக்கியமானதாகும். இது உரிய காலத்தில் கிடைக்க வேண்டும். இல்லையென்றால் விவசாயிகளுக்கு உரம், பூச்சி மருந்து, விதைகள் ஆகியவற்றை உரிய காலத்தில் வாங்கமுடியாது.

மற்றொரு முக்கிய அம்சம் ஒதுக்குப்புறமாக உள்ள கிராமப்புற விவசாயிகளுக்கு உரம் அப்பகுதிகளின் அருகிலேயே கிடைக்க வேண்டியதாகும். இதற்காக நடமாடும் உர விநியோக விரிவுகள் மூலம் கிராமப்புறங்களுக்குத் துரிதமாகக் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

உரமிடுவதால் விளைச்சல் அதிகரிக்கிறது. விளைநிலத்தில் ஒரு டன் உரம் உபயோகப்படுத்தினால் வழக்கமாக அந்த நிலத்தில் விளையும் மகசூலை விட சுமார் 7 முதல் 8 டன்கள் வரை அதிக உற்பத்தி கிடைக்கும்.

இந்தியாவில் பொதுவாக ஒரு எக்டேர் நிலத்தில் 35 கிலோ கிராம் உரமிடுகிறோம். ஆனால் ஜப்பான், ஹாலந்து போன்ற நாடுகளில் 300 முதல் 350 கிலோ கிராம் வரை ஒரு எக்டேர் நிலத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது. வளரும் நாடுகளான பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளைக் காட்டிலும் இந்தியாவில் உர உபயோகம் குறைவாக இருக்கிறது. எனவே இன்னும் அதிக அளவில் உர உற்பத்தியை இந்தியாவில் அதிகரிக்க வேண்டும்.

நம்நாட்டில் சுமார் 3 கோடி எக்டேர் அளவுப் பயிர்கள் ஒவ்வொரு ஆண்டும் பல்வேறு அழிவுகள் மற்றும் வியாதிகளால் பாதிக்கப்பட்டு வருகின்றன. இதனால் 5 முதல் 25 சதவிகிதம் வரை விவசாய உற்பத்தி குறைகிறது. இதற்கு பூச்சி மருந்துகளை மட்டும் பயன்படுத்துவதோடு நின்றுவிடாமல் ஆரம்பத்திலேயே முறையாக முன்னேற்பாடு பாதுகாப்புகளைச் செய்ய வேண்டும்.

இதற்காகப் பல்வேறு திட்டங்களை அரசு எடுத்து வருகிறது. அதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

நிலத்தை உழுவதற்கும், பக்குவப்படுத்துவதற்கும் இயந்திர உபயோகம் அவசியமாகும். விதைகள், உரங்களை நிலத்திலேயே உபயோகிக்கும் கருவிகள் 1982-83ல் 63,000த்திற்கு மேல் வழங்கப்பட்டுள்ளன.

இந்தியாவில் தற்போது டிராக்டர் உற்பத்தி அபிவிருத்தி செய்யப்பட்டு, ஆண்டிற்கு 1,10,000 டிராக்டர்களை உற்பத்தி செய்யும் நிலை உருவாகியிருக்கிறது.



# கி.பி. 2,000த்தின் இலக்கை எட்டிய சாதனை

சென்னை கோடம்பாக்கம், ஆர்க்காடு சாலையில், மாநகராட்சி குடும்பநலச் சிகிச்சை மருத்துவமனைக்கு 1.9.83 அன்று லேப்ராஸ் கோப் கருவி, வண்ணத்தொலைக் காட்சிப் பெட்டி வழங்கும் விழா நடைபெற்றது.

சென்னை மாநகராட்சித் தனி அலுவலர் திரு.கே. சந்திரசூடன், இ.ஆ.ப. அவர்கள் தலைமை தாங்கினார். சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.டி. எஸ். சிவப்பிரகாசம் இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். தமிழக அரசின் இரண்டாவது செயலர் திரு. டி.வி. அந்தோணி, இ.ஆ.ப. அவர்களும், திரு டாக்டர் ஆர் சவுரிராஜன் (தி.நகர் சட்டமன்ற உறுப்பினர்) அவர்களும் சிறப்புரையாற்றினார்கள்.

திரு.டி.டி.வாசு அவர்கள் லேப்ராஸ் கோப் கருவியையும், திரு.டி.கோத்தாரி அவர்கள் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியையும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச்.வி. ஹண்டே அவர்களிடம் வழங்கினார்கள். மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:





"மக்கள் நலன் காக்க பெரும் அளவில் மருத்துவ வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன. வந்த நோயைத் தடுத்து குணப்படுத்தவும், வரும் நோயைத் தடுத்து நிறுத்தவும் அரசு முனைப்பாகச் செயல்பட்டு வருகின்றது. இந்த நிலைமையால் சென்னை நகரில் மக்கள் இறப்பு விகிதம் பெரும் அளவில் குறைந்துள்ளது.

"1975ஆம் ஆண்டில் சென்னை நகரில் இறப்பு விகிதம் 13.8 சதவிகிதமாக இருந்தது. நோய்த்தடுப்புச் சிகிச்சை, நல்வாழ்வுத் திட்டங்களின் பயனாகக் குறைந்து வருகிறது. 1982ஆம் ஆண்டு இறுதியில் சென்னை நகரில் இறப்பு விகிதம் 9.2 சதவிகிதமாகக் குறைந்தது. கி.பி. இரண்டாயிரத்திற்குள்ளாக இந்தியத் துணைக் கண்டத்தின் இறப்பு விகிதம் 9 சதவிகிதமாகக் குறைக்கப்பட வேண்டும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

"கி.பி. 2000த்தில் எட்ட வேண்டிய அந்த இலக்கை சென்னை நகரம் இப்போதே எட்டிவிட்டது. முதல்வர் அவர்களின் தீவிர நடவடிக்கையின் பயனாக இந்தச் சாதனை ஏற்பட்டுள்ளது."

விழா இறுதியில் சென்னை மாநகராட்சியின் உதவி ஆணையாளர் திரு. எம். ரகுபதி நன்றி கூறினார்.

அ. மருது

# ஆதிதிராவிட மாணவர்கள் வெளிநாட்டில் படிக்க உதவி

ஆதிதிராவிடர் வகுப்பு மற்றும் பழங்குடி மாணவர்கள் வெளிநாடு சென்று முதுகலைப் பட்டப்படிப்பு படிக்க உதவித் தொகை ஒவ்வொரு ஆண்டும் தேசிய வெளிநாடு உதவித்தொகைத் திட்டத்தின்கீழ் வழங்கப்படுகிறது.

1983-ஆம் ஆண்டு 21 மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படும். இதில் ஆதிதிராவிடர் வகுப்பினருக்கு 10, பழங்குடி வகுப்பினருக்கு 6, புத்த மதத்தவருக்கு 1, மற்றும் மேலே குறிப்பிடாத நிலமில்லாத விவசாயத் தொழிலாளிகள் மற்றும் பாரம்பரிய கைவினைஞர் வகுப்பிற்கு 2, ஆகிய வெவ்வேறு வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படும்.

கப்பல் கட்டுமானத்தில் முதுகலைப் படிப்பு மற்றும் மருத்துவர், விவசாயம் சம்பந்தப்பட்ட கல்வி ஆகியவற்றைத் தவிர்த்து, இதர துறைகளில் ,ஆராய்ச்சி மற்றும் ஆராய்ச்சிப் படிப்புக்கு மேற்பட்ட விசேடப் பயிற்சி ஆகியவற்றுக்கு உதவித் தொகைகள் வழங்கப்படும்.

மனுதாரர் 1.10.83 தேதியின்படி 35 வயதைத் தாண்டாதவர்களாக இருக்கவேண்டும். விண்ணப்பப் படிவம் மற்றும் இதர விரிவான விவரங்களுக்கு பி.சி.ஆர்.பிரிவு, எஸ்சிபிசிடி டிவிசன், மத்திய உள்துறை அமைச்சகம், அறை எண். 624, சாஸ்திரி பவன், 'ஏ' விங், புதுடில்லி என்ற முகவரிக்கு எழுதி அஞ்சலில் பெறலாம்.

விண்ணப்பம் வேண்டுவோர் 28×12செ.மீ அளவுள்ள வெற்று உறை மற்றும் ஒரு ரூபாய் மதிப்புள்ள கிராஸ் செய்த இந்திய போஸ்டல் ஆர்டரை, செயலாளர், உள்நாட்டு அமைச்சகம், புதுதில்லி, என்ற பெயரில் அனுப்ப வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 1983 நவம்பர் 30ந்தேதிக்குள் வந்து சேர வேண்டும்.

## திருத்தணிகையில் குடும்ப நல முகாம்




1983-ஜூன் 16, 17 தேதிகளில் திருத்தணிகை அரசு மருத்துவ மனையில் லெப்ராஸ்கோப் குடும்பநல அறுவைச் சிகிச்சை முகாம் நடைபெற்றது. செங்கற்பட்டு மாவட்டம் திருவள்ளூர் கோட்டம் திருத்தணிகை மற்றும் பள்ளிப்பட்டு வட்டங்களைச் சேர்ந்த 432 தாய்மார்கள் இந்த அறுவைச் சிகிச்சையை மகிழ்ச்சியுடன் செய்து கொண்டனர்.

மொத்தம் 502 தாய்மார்கள் முன்வந்த போதிலும் அவர்களில் 432 பேர் தகுதியுடையவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அறுவைச் சிகிச்சை செய்யப்பெற்றனர். இவர்கள் ஒவ்வொருவருக்கும் ரு 160/- ஈட்டுத்தொகையாக வழங்கப்பட்டது.

கைக்குழந்தைகளுடன் தாய்மார்கள் லெப்ராஸ்கோப் முகாமில் மிகுந்த ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். அவர்களுக்குத் தங்கும் வசதி, மருத்துவ உதவி முதலியவையனைத்தும் நல்ல முறையில் செய்து தரப்பெற்றன.



# சொந்தக் காலில் நிற்கலாம்



இளைஞர்களுக்குச் சுயவேலை வாய்ப்புத் திட்டம் ஒன்றினை அரசு உருவாக்கி செயல்படுத்தி வருகிறது. இது ஆங்கிலத்தில் 'TRYSEM' என அழைக்கப்படுகிறது. கிராமத்திலுள்ள இளைய சமுதாயத்தைச் சார்ந்த ஆண்களும், பெண்களும் சொந்தத்தில் தொழில் தொடங்கி தங்கள் குடும்பத்தில் வருமானத்தை அதிகரிக்கும் வகையில் இத்திட்டத்தில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. பயிற்சி பெற்றபிறகு சொந்தத்தில் தொழில் தொடங்குவதற்கு வேண்டிய உதவிகளைப் பயிற்சிபெற்றவர்களுக்கு அரசும், வங்கிகளும் வழங்குகின்றன. 1979 ஆகஸ்ட் திங்களில் தேசிய அளவில் தொடங்கப்பட்ட இந்தத் திட்டம் 1980 அக்டோபரில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்துடன் இணைக்கப்பட்டது.

கிராமப்புறங்களில் வறுமையை அகற்றி ஒருங்கிணைந்த ஓர் வளர்ச்சியைத் தோற்றுவிக்க ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. வேளாண்மை, வேளாண்மை சம்பந்தப்பட்ட தொழில்கள், பிற தொழில்கள், வர்த்தகம் மற்றும் பழுதுபார்ப்பு நிலையங்கள், இளைஞர் வேலைவாய்ப்பு என பல கூறுகளைக் கொண்டது ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்.

கிராமப் புறங்களில் வாழும், 18 முதல் 35 வயது வரையிலான ஆண்களும், பெண்களும் மட்டுமே இத்திட்டத்தின்கீழ் பலன் பெறத் தகுதி படைத்தவர்கள். இவர்கள் சிறு விவசாயிகள், வேளாண்மைத் தொழிலாளர்கள், மற்றும் ஏழைக் குடும்பங்களைச் சார்ந்தவர்களாக இருக்க வேண்டும். இக்குடும்பங்களின் தனி நபர் வருமானம் மாதம் ஒன்றுக்கு ரூ.62-க்கு அதிகமாக இருக்கக் கூடாது. பயிற்சி பெற தேர்ந்தெடுக்கப்படுவோரில் ஆதிதிராவிட வகுப்பினர், மலை சாதியினர் மற்றும் பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.


கிராமப் புறங்களில் வாழும் பின்தங்கியோர் வாழ்க்கையில் முன்னேறி தங்களுக்கென நல்லதொரு வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும் என்ற குறிக்கோளின் அடிப்படையில்தான் இவ்வித நிபந்தனைகள் விதிக்கப்பட்டு உள்ளன. பயிற்சி பெறுவதற்கென வெகு தொலைவு சென்று தங்கியிருக்க வேண்டிய அவசியமில்லை, கூடுமானவரையில் உள்ளூரிலேயே தொழில் நடக்கும் நிலையங்களிலேயே பயிற்சி அளிக்கப்படுகின்றது. இவ்வாறு அளிக்கப்படும் பயிற்சி செய்முறை பயிற்சியேயாகும். இது வெறும் புத்தகப்படிப்பு மூலம் அளிக்கப்படும் பயிற்சியாக இல்லாமல், செய்முறை மூலம் அளிக்கப்படும் பயிற்சியாகவே அமையும்.

**படித்துத் தெரிந்து கொள்வதை விட, செய்து கற்றுக் கொள்ள வேண்டுமென்பதே பயிற்சியின் முக்கியக் குறிக்கோள் என்பது குறிப்பிடத்தக்கது.** ஒரு குறிப்பிட்ட பாடத்திட்டமோ தேர்வுகளோ இதற்குக் கிடையாது. பயிற்சியின் முடிவில், ஏதேனும் ஒரு தொழிலையோ, திறமையோ பெற்று சுயமாகப் பொருள் ஈட்ட பயிற்சிபெற்றவர்களால் இயலும். எனவே, பயிற்சி பெறுவதில் இளைஞர்களும், இளம் பெண்களும் நாட்டம் கொண்டவர்களாக இருக்கிறார்களா என்பதுதான் மிகவும் அவசியம். இதற்கென குறைந்தபட்சம் கல்வித் தகுதி எதுவும் நிர்ணயிக்கப்படவில்லை.

கிராமப்புறத் தொழில்களான தச்சு, கருமார், கட்டடத் தொழில்களைத் தவிர, புதிதாகத் தோன்றியுள்ள வீட்டு மின் சாதனங்கள் இணைப்பு, பழுதுபார்ப்பு, பராமரிப்பு, நீர் இறவை எந்திரங்கள், டிராக்டர்கள், ஜீப்கள், விவசாயத் தொழில் கருவிகள் போன்றவற்றைப்பழுதுபார்த்தல் ஆகியவற்றிற்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இவை தவிர, சோப்பு செய்தல், மரம், இரும்பு, களிமண் ஆகியவற்றைக் கொண்டு விளையாட்டுப் பொருட்கள் செய்தல், தையல், பூவேலை,

தீப்பெட்டி செய்தல், ஊதுவத்தி, எண்ணெய், செக்குகள் மற்றும் தோல் பொருட்களைச் செய்தல் போன்றவற்றில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

மத்திய, மாநில அல்லது சேவை நிலையங்களால் நடத்தப்படும் பயிற்சி நிலையங்களில் இத்தகைய பயிற்சிகள் அளிக்கப்படும். தொழிற்பயிற்சி நிலையங்கள், வேளாண்மைத் தொழில் பயிற்சி நிலையங்கள், ஊர்நல அலுவலர்கள் பயிற்சி நிலையங்கள், வேளாண்மைப் பல்கலைக் கழகங்கள், கதர்-கிராமத் தொழில்



கமிஷனின் பயிற்சி நிலையங்கள் ஆகியவற்றில் இத்தகைய பயிற்சிகள் பெரும்பாலும் அளிக்கப்படுகின்றன.

இப்பயிற்சிகளின்போது உதவித் தொகையும் வழங்கப்படுகிறது. பயிற்சியின்போது தங்குமிடம், இலவசமாக அளிக்கப்படாவிட்டால், ஒரு பயிற்சியாளருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 125 உதவித் தொகையாக அளிக்கப்படுகிறது. தங்குமிடம் இலவசமாக அளிக்கப்பட்டால் மாதம் ஒன்றுக்கு ரூ. 100 உதவித் தொகையாக அளிக்கப்படுகிறது. தன் சொந்தக் கிராமத்திலேயே பயிற்சி பெறுபவர்களுக்கு மாதம் ரூ.50 உதவித் தொகை அளிக்கப்படுகிறது. ரூ. 250 பெறுமான தொழில் கருவிகள் பயிற்சியின் போதே இலவசமாக வழங்கப்படுகின்றன.

பயிற்சி அளிப்பவர்களைப் பொறுத்தவரையில், பயிற்சி செலவாக ஒரு பயிற்சி பெறுபவருக்கு மாதம் ரூ. 50 வரை வழங்கப்படுகிறது. கச்சா பொருட்களை வாங்குவதற்கு ஒரு பயிற்சி பெறுபவருக்கு ரூ. 25க்குமேற்படாமலும் அல்லது ஒரு பயிற்சி வகுப்பிற்கு 200 ரூபாய்க்கு மேற்படாமலும் வழங்கப்படுகிறது. பயிற்சி அளிப்பவர்கள் அத்துறையில் தேர்ந்தவர்களாக இருக்கும் பட்சத்தில் ஒரு பயிற்சி வகுப்பிற்கு ஒரு பயிற்சி பெறுபவருக்கு ரூ. 50 வீதம் கணக்கிட்டு கூடுதல் தொகை வழங்கப்படுகிறது.

ஒன்றிய அளவில் அமைக்கப்பட்டுள்ள ஒரு குழு பயிற்சிபெறத் தகுதியானவர்களைத் தேர்ந்தெடுக்கிறது. இக்குழுவில் அப்பகுதியைச் சார்ந்த வங்கியின் பிரதிநிதியும் பங்கேற்கிறார். பயிற்சி நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே பயிற்சி பெறுபவர்களுக்கு உதவுவதற்காகப் பயிற்சி பெறுபவர், ஊராட்சி ஒன்றிய ஆணையாளர், வங்கி மேலாளர் ஆகியோர் ஒன்று சேர்ந்து ஒரு திட்ட அறிக்கை தயாரிப்பார்கள். பயிற்சி பெற்றவர்களுக்கு நிதி உதவி அளிக்கப்படுவது பயிற்சி முடிவதற்கு முன்பே முடிவு செய்யப்பட்டு விடும். பயிற்சி முடிந்த அன்றே சொந்தத்தில் தொழில் தொடங்க இதனால் பயிற்சி பெற்றவருக்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தரப்பட்டு விடுகிறது.

தொழில் தொடங்க: வழங்கப்படும் தொகையில் மானியம் ஏதாவது உண்டா? உண்டு. பயிற்சி பெற்றவர் சிறு விவசாயக் குடும்பத்தைச் சார்ந்தவராக இருந்தால் கடன் தொகையில் 25 சதவிகிதம் மானியமாக வழங்கப்படும். மற்றவர்களுக்கு 33 1/3 சதவிகிதம் மானியமாக வழங்கப்படும். அதே வேளையில் அதிகப்பட்சமாக வழங்கப்படும் மானியத் தொகை ரூ. 3000. பயிற்சி பெறும் மலை சாதியினரைப் பொறுத்தவரையில், ரூ.5000 க்கு மேற்படாமல் 50 சதவிகிதம் மானியமாக வழங்கப்படுகிறது.

இப்பயிற்சித் திட்டத்தில் இது வரை பெற்ற வெற்றி விவரங்களை சிறிது பார்ப்போம். 1980-81ம் ஆண்டில் 29,488 ஆண், பெண்களுக்குப் பயிற்சி அளிக்க ரூ.197.25 இலட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது. இதில் பெண்கள் மட்டும் 12,325. 1981-82-இல் இத்தொகை ரூ.520 இலட்சமாக உயர்ந்தது. பயிற்சி பெற்றவர்களின் மொத்த எண்ணிக்கை 59,802. இதில் 28,493 பேர் பெண்கள். நடப்பாண்டில் 50,000க்கு மேற்பட்ட இளைஞர்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள்.

பயிற்சி முடிந்த பிறகு பயிற்சி பெற்றவர்களின் முன்னேற்றம் பற்றியும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. இதற்காகப் பயிற்சி பெற்ற ஒவ்வொருவருக்கும் அடையாள அட்டைகள் தரப்பட்டுள்ளன. தொழிலில் பயிற்சி பெற்றவர் முன்னேறும் வகையில் 2 ஆண்டுகள் அவர் கண்காணிக்கப்படுகிறார். இந்தக் கால அளவிற்குள் அவர் வறுமையின் பிடியிலிருந்து விடுபட்டுவிடுவார்.

எனவே, கிராமப்புறங்களில் தக்க வேலை வாய்ப்பு இன்றி திண்டாடும் இளைஞர்கள், இளம் பெண்கள் உடனே ஊர்நல அலுவலர், ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் அல்லது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட அலுவலர் ஆகியோரைச் சந்தித்தால் இத்திட்டத்தில் அவர்கள் விரும்பும் தொழிலில் பயிற்சிபெற அவர்கள் உதவுவார்கள்.

## சாண எரிவாயுத் திட்டம் விரிவுபடுத்த...

சாண எரிவாயு ஆலைகள் அமைப்பதை விரிவுபடுத்தத் தொண்டு நிறுவனங்களைப் பெரிய அளவில் ஈடுபடுத்தி 1983-84-ஆம் ஆண்டில் 75,000 ஆலைகளை அமைக்கத் திட்டம் வரையப்பட்டுள்ளது.

1982-83ஆம் ஆண்டில் 57,500 குடும்ப சாண எரிவாயு ஆலைகள் இத்திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்டன. 1983 ஜூன் வரை நிறுவப்பட்ட ஆலைகளின் எண்ணிக்கை 14,000.






## காய்கறி சாகுபடி

ஆசிரியர் : டாக்டர் கோ. ரா. முத்துகிருஷ்ணன்,

வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட். சென்னை-600 089.

விலை ரூ. 15 பக்கங்கள்: 259

மனித உணவில் காய்கறிகளின் பங்குமிக இன்றியமையாதது என்பதை நாம் அறிவோம். அன்றாட வாழ்க்கையானது காய்கறி இல்லாமல் இல்லை என்றே சொல்ல வேண்டும்.

இந்த நூலில் வீட்டுக் காய்கறித் தோட்டம், காய்கறிகள் பயிரிடும் முறைகள், சாகுபடி முறைகள் பற்றிய விளக்கங்கள் எல்லாம் பட்டியலுடனும் படங்களுடனும் கூறப்பட்டுள்ளன.

காய்கறிகள், பயறு வகைகள், கீரை வகைகள், கிழங்குகள் ஆகியவை பற்றிய எல்லா விவரங்களுடன், அவற்றால் நமக்குக் கிடைக்கும் அளப்பரிய பயன்கள் பற்றியும் மிக அழகாக, தெளிவாக எடுத்துக் கூறப்பட்டிருக்கிறது இந்நூலில்.

கீரைகள் என்று எடுத்துக் கொண்டால் அதில் 24 வகை, கிழங்குகள் என்று எடுத்துக் கொண்டால் அதில் 14 வகை இப்படிப் பலப்பல விளக்கங்கள். குளிர்காலக் காய்கறிகள், வெங்காய வகைக் காய்கறிகள், சீமைக் காய்கறிகள், இந்தியக் காய்கறிகள்-இப்படி பலப்பல செய்முறைகள்.

நூலைப் படித்து முடித்ததும் நாமும் ஒரு வீட்டுக் காய்கறித் தோட்டம் போட வேண்டும் என்ற ஆவல் மனத்தில் எழுகிறது.

— பி.வி. கிரி

## ஒரே நிமிடத்தில் 45 புத்தகங்கள்!

அண்மையில் மாஸ்கோவில் நடைபெற்ற "இன்போலிகிரா:ப்-83" என்ற அனைத்து நாட்டு அச்சியந்திரக் கண்காட்சியில், உலகத்தில் வேறு எங்கும் காணமுடியாத பல அரிய சோவியத் அச்சியந்திரங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. 20 நாடுகளைச் சேர்ந்த 200 நிறுவனங்கள் இந்தக் கண்காட்சியில் கலந்து கொண்டன.

காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த சோவியத் அச்சியந்திரங்களில் ஒன்று, "க்னிகா –270" என்ற தானியங்கி இயந்திரமாகும். இது, நிமிடத்திற்கு 45 புத்தகப் பிரதிகளை அச்சிட்டு, புத்தக வடிவில் வெளியே தள்ளுகிறது! மற்றொன்று "காஸ்காட் :போட்டோ பிரிண்ட்" இயந்திரம். எந்த விஷயத்தையும் இது பிழையின்றித் தானாகவே அச்சுக் கோக்கக் கூடியது!

தினசரிப் பத்திரிகைகள், இதழ்கள், சுவரொட்டிகள், அஞ்சல் தலைகள் முதலியவை அச்சிடுவதற்கான பலதரப்பட்ட இயந்திரங்கள் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தன.

சோவியத் அச்சியந்திரங்கள், இத்தாலி, கிரீஸ், கனடா, இந்தியா, லெபனான் முதலிய 50 நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன.

## தையல்கலை வழிகாட்டி

ஆசிரியர் : ஆர்.எஸ். பாலகுமார்,

வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், சென்னை-600 089.

விலை ரூ. 7 பக்கம்: 96

தையல் கலைஞர் திரு. ஆர். எஸ். பாலகுமார் அவர்கள் எழுதிய ''தையல் கலை வழிகாட்டி (ஆண்கள் இரண்டாம் பாகம்) என்னும் நூல் வெளிவந்துள்ளது. ஏற்கெனவே வெளிவந்துள்ள இந்த நூலின் முதல்பாகத்திற்கு நல்ல வரவேற்பு கிட்டியது என்பதனால் வெளியீட்டாளர் இரண்டாம் பாகத்தை வெளியிட்டு இருக்கிறார்கள்.


தையல் கலையை முறையாகக் கற்காதவர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் தையல்கலை வழிகாட்டி நூலைப் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டியவை நிறைய இருக்கின்றன. தையல் தொழிலில் 'டிப்ளமா' பெறவிரும்பும் மாணவர்களுக்குத் தேவையான குறிப்புகள் பலவற்றை ஆசிரியர் சிரமப்பட்டு இணைத்துள்ளார். தொழில் கல்வியின்அவசியத்தைஒவ்வொருவரும் உணரத் தலைப்பட்டுவிட்டதனால் எப்படியும் படிக்கத் தவறமாட்டார்கள்.

''கைத்தொழில் ஒன்றைக் கற்றுக் கொள்'' என்ற உயர்ந்த கருத்தினை மேற்கொண்டால் எதிர்காலம் பிரகாசமாக இருக்கும். ''தையல் கலை வழிகாட்டி'' நூல் எளியமுறையில் மனத்தில் நிறுத்திக் கொள்ள முடியவேண்டிய நோக்கத்தில் விளக்கமாக வரிவடிவப் படங்களுடன் நூல் வந்துள்ளது. நல்ல வரவேற்பு கிடைக்கும்.

— ஜீ. ஆனந்தன்

இப்பகுதிக்கு இரண்டு படிகள் அனுப்புதல் வேண்டும். அரசியல் தொடர்பான நூல்கள் மதிப்புரை செய்யப்படுவதில்லை.

—ஆசிரியர்



# ரொட்டியின் கதை!

சென்னை தரமணியிலுள்ள மாடர்ன் ரொட்டித் தொழிற் கூடத்துக்குள் நுழைகிறோம்.

வானம் போல் பரந்து விரிந்த அந்த இடத்தில், வகைவகையான ரொட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

எல்லாத் திறத்தாரும் எளிதில் வாங்கி, சுவைத்து உண்பதற்கு ஏற்ற வகையில், சத்துக்கள் நிறைந்த ரொட்டிகளைச் சுட்டுத் தள்ளிக் கொண்டே இருக்கிறது, இந்தத் தொழிற்கூடம்!

ரொட்டி தயாரிப்பது என்பது இந்தத் தொழிற்கூடத்தைப் பொறுத்தவரை மனிதன் ஃகைப் படாமலேயே, எல்லாம் நவீன இயந்திரத்தின் உதவியாலேயே நடக்கின்றது.

தொழிற்கூடம்-ரொட்டி தயாரிக்கும் இடம்-ரொட்டிகள் 'பேக்' செய்யப்படும் பகுதி எல்லாமே துப்புரவாக, தூய்மையாக இருக்கின்றது. மிகவும் சுத்தமாக, சுகாதார முறைப்படி ரொட்டிகள் தயாரிக்கப்படுவதை இங்குக் குறிப்பிட வேண்டும்.

மாடர்ன் ரொட்டி ''மாடர்ன் பேக்கரீஸ் இந்தியா லிமிடெட்'' நிறுவனத்திலிருந்து நமக்கு வருகிறது. இது ஒரு இந்திய அரசாங்க நிறுவனம். இதன்படி, இந்தியாவில் 9 பெரிய நகரங்களில் ரொட்டி தயாரிக்கும் நிறுவனங்களை அமைக்கத் திட்டமிட்டுள்ளது. நோக்கம்; உணவுப் பழக்கங்களை மாற்றி, தரத்தை உயர்த்தி, சத்துப் பொருள் கொண்ட உணவை அளிப்பது; மற்றும் பலதரப்பட்ட உணவு வகைகளை வழங்கி சத்துணவை மக்களிடம் பரப்புவது. தரமான சுவையுள்ள, சத்துப்பொருட்கள் கொண்டு ஊட்டம் செய்யப்பட்ட ரொட்டிகளை மாடர்ன் பேக்கரீஸ் தயார் செய்கின்றது. இவற்றை எந்த நேரத்திலும், எந்த உணவுடனும் எளிதாகக் கலந்து உட்கொள்ளலாம்.

மாடர்ன் பேக்கரீஸ் நிறுவனங்கள் 1968 ஜனவரி மாதத்தில் பம்பாயிலும், சென்னையிலும் திறக்கப்பட்டன. அதே ஆண்டு ஜூன் மாதத்திற்குள் அகமதாபாத், கொச்சின், டில்லி முதலிய இடங்களில் மேலும் மூன்று புதிய நிறுவனங்கள் உற்பத்தியைத் துவங்கின. இங்கெல்லாம் மாடர்ன் ரொட்டி மக்களின் பாராட்டுதலைப் பெற்றுள்ளது. இப்பொழுது ஒரு மாடர்ன் பேக்கரித் தொழிற்சாலை ஐதராபாத்தில் திறக்கப்பட்டுள்ளது. விரைவிலேயே கான்பூர், பெங்களூர், கல்கத்தா முதலிய இடங்களிலும் இந்த ரொட்டி மக்களை மகிழ்விக்கும்.

இந்திய மக்களுக்குச் சத்துணவு கிடைக்க வைப்பது இந்திய அரசின் ஒரு தீவிரமான நோக்கம். உணவின் சத்துப்பொருள் பற்றாக் குறையினால் இலட்சக்கணக்கான இந்திய மக்கள் நோய்வாய்ப்பட்டு அல்லலுறுகின்றனர். அவர்கள் உணவில் மேலும் வைட்டமின்களும், புரதச் சத்தும், தாது பொருட்களும் அதிகரிக்க வேண்டும். இச்சத்துப் பொருட்களை எல்லாம் ரொட்டி போன்ற ஒரு அன்றாட உணவில் சேர்த்து மக்களுக்கு வழங்குவது ஒரு சிறந்த முறையாகும்.

மாடர்ன் ரொட்டியில் வைட்டமின் ஏ.பி1, பி2, இரும்புச்சத்து, மற்றும் 'லைசின்' இவை எல்லாம் சேர்த்து செழிப்பூட்டப் பட்டிருக்கிறது. இந்த அளவுக்கு ரொட்டியில் ஆதிகமாகச் சத்துப் பொருட்களைச் சேர்த்து ஊட்டம் செய்து பொதுத்துறையில் தயாரிப்பது உலகிலேயே இது தான் முதன் முறையாகும்.

இதுபோன்று 9 தானாகவே இயங்கும் ரொட்டித் தொழிற்சாலைகள் எல்லாம் சேர்ந்து உற்பத்தி செய்யும்பொழுது மாடர்ன் பேக்கரீஸ் நிறுவனம் ஆண்டொன்றுக்கு 400 கிராம் எடையுள்ள ரொட்டிகளில் 10 கோடி ரொட்டிகள் செய்யத் திறன் பெற்றிருக்கும். அதாவது, ஒரு ரொட்டியை மூவர் பகிர்ந்து கொள்வதானால், ஒவ்வொரு நாளும் மேலும் 10 இலட்சம் மக்களுக்கு உணவைக் கொடுக்கும். பம்பாய், கல்கத்தாவில் உள்ள தொழிற்சாலைகள் நாளொன்றுக்கு 400 கிராம் எடையுள்ள ரொட்டிகளில் 72,000 ரொட்டிகள் தயாரிக்கும். மற்ற இடங்களில் உள்ளவைகள் நாளொன்றுக்கு 36,000 ரொட்டிகள் தயாரிக்கக் கூடியவை. தேவை ஏற்படும்பொழுது ஒவ்வொரு தொழிற்சாலையையும் மேலும் விரிவுபடுத்தி உற்பத்தியை அதிகரிக்க வசதிகள் உண்டு.

மிகவும் சுகாதாரமான சூழ்நிலையில் நவீனமான இயந்திரங்களைக் கொண்டு மாடர்ன் ரொட்டி தயாரிக்கப்படுகிறது. இயந்திரங்கள், மாவைச் சலித்துக் கொடுக்கின்றன. மாவைக் கலந்து கொடுப்பதும் தானே இயங்கும் கலவைகள். பிறகு இயந்திரங்களே கலந்த மாவை அளவுடன் துண்டுகளாக்கி ரொட்டிக் கிண்ணங்களில் அழகாக அடுக்கிக் கொடுக்கும். பெரியதொரு அடுப்பிற்குள் இவை சென்று வெளி வரும் பொழுது ஒரே மாதிரியான மணங்கமழும் ரொட்டிகளாகக் காணப்படும். இவற்றை அளவுடன் துண்டுகளாக்கி உறையிட்டுக் கொடுப்பதும் இயந்திரமே. ரொட்டிகளைச் சுற்றியுள்ள வண்ணக் காகிதங்கள் தனிப்பட்ட வகையில் தயாரிக்கப்பட்டுள்ளன. இவை ரொட்டியை அதிக நேரம் புதிய மணம் மாறாமல் காத்துவரும்.



இந்திய மக்களின் உணவின் தரத்தை உயர்த்த மாடர்ன் பேக்கரீஸ் நிறுவனம் எடுத்துக் கொண்டிருக்கும் முயற்சி வெளிநாளிகளின் கவனத்தைவெகுவாக கவர்ந்திருக்கிறது. பல நாடுகள் இதைப் போற்றியுமுள்ளன. நம்மைப் போன்ற உணவுத் திட்டப் பிரச்சினையுள்ள லத்தீன் அமெரிக்க நாடுகள் இம் முயற்சியை ஆர்வத்துடன் கவனித்து வருகின்றன.

பிரேசில் நாட்டிலிருந்தும், இது சம்பந்தமான விசாரணைகள் வந்துள்ளன. அவர்களும் மாடர்ன் பேக்கரி முறையைத் தானும் கடைப்பிடிக்க விரும்புகின்றனர். அமெரிக்காவில், சத்துணவுத் திட்டத்திற்காக அமைக்கப்பட்ட அரசாங்கக் குழு ஒன்று மாடர்ன் ரொட்டியின் உதாரணத்தை அமெரிக்காவிலும் கடைப்பிடிக்கலாம் என்ற கருத்தைத் தெரிவித்துள்ளது.

உடல் உறுப்புக்கள் நன்கு இயங்குவதற்கு வேண்டிய அளவு வெப்ப நிலையையும், சக்தியையும் எது கொடுக்கிறதோ, அதுவே குறிப்பிடத்தக்க ஒரு உணவாகும். வயது வந்தவர்களைவிட குழந்தைகளுக்கு இந்தச் சக்தி அதிகமாகத் தேவைப்படுகிறது. சக்தியுடன் கலந்த நல்வாழ்வைக் கொடுக்கிறது இந்த ரொட்டி,

வைட்டமின்'ஏ' சேர்ந்த உணவை ஒவ்வொரு நாளும் உட்கொள்ள வேண்டும். ஒரு பெரிய ரொட்டி, ஒருவருக்கு நாளொன்றுக்கு வேண்டிய வைட்டமின் 'ஏ' முழுத் தேவையையும் பூர்த்தி செய்கிறது

இரத்தத்தில் உள்ள சிவப்பு அணுக்களின் உற்பத்திக்கு இரும்புச்சத்து தேவைப்படுகிறது. இந்த முக்கியமான தாதுப் பொருளின் பற்றாக் குறையினால் இரத்தச் சோகை உண்டாகிறது. இந்த நோய் நம்நாட்டில் பொதுவாகக் காணப்படுகிறது. பெண்கள், குறிப்பாக இளம் வயதினர், இந்த நோய்க்கு இலக்காகின்றனர். இவர்கள் இரும்புச் சத்து மிகுந்த உணவை அதிகம் உட்கொள்ள வேண்டும். ஒவ்வொரு பெரிய ரொட்டியும், நாளொன்றுக்கு ஒருவருக்கு வேண்டிய இரும்புச் சத்தில்75% கொடுக்கிறது.

வேண்டிய அளவு பசியைக் கொடுப்பதற்கும், குடல்கள் நன்கு இயங்குவதற்கும், நரம்புகள் வலுப்பெறவும், வைட்டமின் பி1 மிகவும் அவசியம். உடல் வளர்ச்சிக்கும் ஆரோக்கியமான கண்களுக்கும் வைட்டமின் பி2 தேவைப்படுகிறது. சதைக் கூறுகள் வலுவுற நயாசின் வேண்டும். நமக்குத் தினசரி தேவைப்படும் மேற்கூறிய வைட்டமின்களை, மிகுந்த அளவு இந்த ரொட்டியின் மூலம் சுலபமாகப் பெறலாம்.

பி. வி. ஜி.

## சென்னைக்குப் பரிசு!

சென்னை, பம்பாய், கல்கத்தா, டெல்லி, ஆகிய இடங்களில் குளிர்பானங்கள், பழச்சாறுகளைப் புட்டியில் அடைத்து விற்பனை செய்யத் தொழிற் பிரிவுகள் விரைவில் ஏற்படுத்தப்படவிருக்கின்றன. டெல்லியில் தற்போது ''ரசிகர்'' என்ற பெயரில் விற்பனை செய்யப்படும் பழச்சாறு புட்டிகள் மிகவும் நல்ல முறையில் விற்பனை ஆகின்றன.

வடகிழக்குப் பகுதியில் சில்சார் என்ற இடத்தில் அன்னாசிப் பழச் சாறு தயாரிக்கும் தொழிற்சாலை, பீகார் மாநிலத்தில் பழக் கூழ் தயாரிப்புப்பிரிவு, மற்றும்பார்லியில் இருந்து ஆல்கஹால் கலப்பில்லாத பீர் தயாரிப்புப் பிரிவு ஆகியவைகளும் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளன.

'மாடர்ன் பிரட் நிறுவனம்' நாடு முழுவதும் நடத்திவரும் 13 ரொட்டி தயாரிப்புப் பிரிவுகளில், சிறந்த பிரிவுக்கான பரிசு இந்த ஆண்டு 1983 சென்னைப் பிரிவுக்குக் கிடைத்துள்ளது. இதற்கான பரிசாக ஒரு கேடயமும், 10 ஆயிரம் ரூபாய் ரொக்கமும் வழங்கப்பட்டது. சென்னைப்பிரிவு இதுவரை 4 முறை இப்பரிசைப் பெற்றுள்ளது.

சென்னைப் பிரிவு தற்போது நாளொன்றுக்கு 50 ஆயிரம் ரொட்டி உற்பத்தி செய்கிறது. இது சென்னை நகர மக்களின் தேவையை முழு அளவில் பூர்த்தி செய்யவில்லை. சென்னைப் பிரிவில் இதே அளவு உற்பத்தித்திறன் கொண்ட மற்றொரு உற்பத்திப் பகுதியை அமைக்க மத்திய அரசின் அனுமதி கோரப்படுகிறது. தற்போதுசெயல்பட்டுவரும் இயந்திரங்கள் பழுதானால் உடனடியாகத் தொடர்ந்து செயல்படப் புதிய பகுதி உதவும் விதத்தில் இந்த அனுமதி கோரப்படுகிறது.

தமிழ்நாடு அரசு சமுகநலத்துறை மூலம், சில சமூக சேவை நிறுவனங்களைத் துணை ரொட்டித் தயாரிப்பு நிலையங்களாகப் பயன்படுத்திக் கொள்ளவும் தங்கள் நிறுவனம் முயற்சிகளை மேற்கொள்ளவிருக்கிறது.

சமீபத்தில் இலங்கையில் நடந்துள்ள நிகழ்ச்சிகள் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள தமிழ்மக்களுக்கு வழங்க மாடர்ன் நிறுவனம் 20 ஆயிரம் ரொட்டிகளை அனுப்பிவைத்துள்ளது.

—'மாடர்ன் புட் இண்டஸ்ட்ரீஸ் இந்தியா லிமிடெட்'டின் தலைவர் திரு கே.என். சிங் அவர்கள் 12.8.83 அன்று நடந்த செய்தியாளர்கள் கூட்டத்தில் கூறிய தகவல்களிலிருந்து....

# சமையல் அறையில் சூரியன்



**கா**டு, மேடு, கழனி எங்கும் தன் வெப்பத்தை வீசும் கதிரவன் தற்போது, அடுப்பங்கரையிலும் புக ஆரம்பித்துவிட்டான்! ஆட்களை வாட்டி வதைப்பதற்காக அல்ல, அருமையானசமையலுக்கு உதவி செய்வதற்காக!

மகாராட்டிர மாநிலச் சிறு தொழில் வளர்ச்சிக் கழகம், தற்போது வீடுகளுக்குச் சமையல் செய்ய உதவும் சூரிய அடுப்புகளைத் தயாரித்து விற்பனை செய்யத் தொடங்கிவிட்டது.

இந்தச் சூரிய அடுப்பின் ஒரு யூனிட் விலை மதிப்பு ரூ.560 ஆகிறது. ஆனால் மகாராட்டிரத்தைச் சேர்ந்தவர்கள் இதை ரூ. 310 லிருந்து ரூ.410 வரை விலை கொடுத்து வாங்குகிறார்கள். உற்பத்திச் செலவைவிட குறைந்த விலை கொடுத்து வாங்கப்படுவதற்குக் காரணம் மத்திய அரசும், மாநில அரசும் இதற்காகக் கொடுக்கும் உதவித் தொகைதான். ஒரு அடுப்புக்கு ரூ.150 உதவித் தொகையாகக் கொடுக்கப்படுகின்றது. அத்துடன் இந்தச் சூரிய அடுப்புக்கு உற்பத்தி வரி, நுழைவு வரி, கலால் வரி ஆகிய வரியிலிருந்தும் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

ஒரு சூரிய அடுப்பு 10 ஆண்டுகள் வரை நன்றாக இயங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் செலவை 12 மாதங்களிலேயே திரும்பப் பெற்றுவிட முடியும்.

சூரிய அடுப்பு மற்ற அடுப்புகளை விட நல்ல முறையில் பயன்படும். சாதம், காய்கறிகள், மாமிசம் சமைக்கவும், கடலை வகைகளை வதக்கவும் வெந்நீர் வைக்கவும், பால் காய்ச்சவும் இப்படிப் பல்வேறு சமையல் வேலைகளுக்கு இந்த அடுப்பைப் பயன்படுத்தலாம்.

சூரிய வெளிச்சத்தின் சக்தியால் இயங்கும் இந்த அடுப்பிற்கு மின்சாரம் எண்ணெய் போன்ற செலவுகள் இல்லை. எளிதாகவும் இயக்கலாம். பிரத்தியேகமான கருப்பு வண்ணம் பூசப்பட்ட அலுமினியப்பெட்டி அடிப்பாகத்தில் இருக்கும். இதன் மேல் விழும் சூரிய ஒளியிலிருந்து அதிகபட்சம் வெப்பத்தை இது கிரகித்துக் கொள்கிறது. மேல் பகுதி மூடி இரண்டு பளபளப்பான கண்ணாடிகளால் அமைக்கப்பட்டிருக்கும் இதைத் திறந்து, வேண்டிய சமையல் பாத்திரத்தை உள்ளேவைக்க முடியும்.

மின்சாரத்திற்கு மாற்றாகப் பயன்படுத்த 20-அம்சத் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டிருக்கும் இந்தச் சூரிய அடுப்பு, மகாராட்டிரம், குஜராத், ராஜஸ்தான் மாநிலங்களில் பெருமளவிற்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

### சுடுமல்லியைச் சுடுவோம்

**சோ**ளப் பயிரைத் தாக்கி வளரும் சுடுமல்லி என்ற களை, இப்போது கரும்பு, சூரியகாந்தி, நிலக்கடலை ஆகிய பயிர்களையும் தாக்கத் தொடங்கியுள்ளது. இது சோளத்தில் 15-75 சதம் வரை விளைச்சலைப் பாதிக்கிறது. சில சமயம் சோளப் பயிர் கதிர் விடாமலே போகிறது. சோளத்தில் கோ. 20, சி. எஸ்.எச். 5, சி.எஸ். 3541 ஆகிய ரகங்கள் இந்தச் சுடுமல்லியின் தாக்குதலை எதிர்த்து வளரும் திறன் கொண்டவை. மேலும், 2, 4-டி, எம்:சி.பி.ஏ., அட்ரசின் ஆகிய களைக்கொல்லிகளில் ஒன்றை எக்டருக்கு 1 கிலோ தெளித்தும் கட்டுப்படுத்தலாம்.







# சின்கோனாத்துறை ஆற்றும் சீரிய பணிகள்

**சி**ன்கோனாத்துறை ,பல்வேறு திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகின்றது.

இந்த நிதியாண்டில், 100 எக்டேர்களில் புதிதாக நடுகைத் திட்டமும், 20 எக்டேர்களில் பதியன் முறைத் திட்டமும் செயல்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

மேலும் இத்திட்டத்தின் கீழ் 700 சின்கோனா மாதிரிப் பட்டைகள் வெவ்வேறு இடங்களில் சேகரித்து, இதுவரை 50 மாதிரிப் பட்டைகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன.

மருந்து மற்றும் நறுமணத் தைலங்கள் தரும் பயிர்வகைகளை விரிவு படுத்தும் திட்டம் நல்ல முறையில் நடந்து வருகின்றது.

மருந்து மற்றும் நறுமணத் தைலங்கள தரும் செடிகள் பற்றிய தீவிர ஆராய்ச்சியை மேற்கொண்டு சாகுபடியினை விரிவுபடுத்தும் திட்டத்தின் கீழ், 1983 ஜூன் மாதம் 0.50 எக்டேர் பைரத்திரம் நடவு செய்யப்பட்டது. மீதமுள்ள பரப்புகளில் நடவு செய்ய முன்னேற்பாடு வேலைகள் செய்யப்பட்டு வருகின்றன. இத்துறை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்துடன், இணைந்து. சின்கோனா மற்றும் நறுமணத் தைலங்கள் தரும் செடிகள் பற்றி ஆராய்ச்சி நடத்தி வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் குனைனிலிருந்து குனைடின் தயாரிக்க வேண்டிய வழிமுறைகள கண்டுபிடிக்க மத்திய மருந்து ஆராய்ச்சி ஆய்வகம், லக்னோவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தின் கீழ் 500 மண் மாதிரிகள் மற்றும் செடி வகைகளையும் வெவ்வேறு இடங்களில் சேகரித்து பகுப்பாய்வு செய்யவும் இந்த ஆண்டு திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை 22 மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

ஆனைமலை கொய்னா தொழிற்சாலையில் உள்ளுறை இயக்கப் பிரிவு முறையில் கொய்னா தயாரிக்க வேண்டிய இயந்திரங்கள் பொருத்த ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

1983ஆம் ஆண்டு 50 தோட்டத் தொழிலாளர்களுக்குக் குடியிருப்பு கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. ஏற்கெனவே கட்டி முடிக்காத வீடுகள் கட்டி முடிக்கவும், தொழிலாளர்கள் குடியிருப்புக்கு மின் இணைப்பு அளிக்கவும் தேவையான வேலைகள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத்திட்டத்திற்கு இந்த ஆண்டு நிதி ஒதுக்கீடு ரூ. 17 இலட்சம் ஆகும். இதுவரை ரூ. 66,000 செலவு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதியாண்டு தேயிலைக் கழிவிலிருந்து 2500 கிலோ கபீன் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இதுவரை 225 கிலோ கபீன் தயாரிக்கப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு ரூ. 2.63 இலட்சம் . இதுவரை ரூ. 35,000 செலவு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு 20 எக்டேர் டயஸ்கோரியா பயிரிடத் திட்டமிடப்பட்டு, இதுவரை 10.90 எக்டேர் நடவு செய்து மீதமுள்ள பகுதியில் நடவு செய்ய முன்னேற்பாடு வேலைகள் நடந்து வருகின்றன. 13.39 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுவரை ரூ. 2.98 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

பழனிமலை மேல் களக்குன்றுகளில் 62.25 எக்டேர் ஜெரெனியம் பயிரிடப்பட்டுள்ளது. அதில் 25 எக்டேர் பகுதியினை வனத்துறைக்கு அரசு உத்தரவுப்படி மாற்றப் பட்டு மீதமுள்ள 40.25 எக்டேர் பராமரிக்கப் பட்டு வருகிறது. இதற்காக நிதி ஒதுக்கீடு ரூ. 8.23 இலட்சம் இதுவரை 0.60 இலட்சம் செலவு செய்யப்பட்டுளளது.

பழனி மலை மேல் களக்குன்றுகளில் பெரும்பள்ளம் பகுதியில் 200 எக்டேர் ஜெரேனியம் பயிரிடப்பட்டது.

மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், கூடலூர் பகுதியில் 1983ஆம் ஆண்டு 40 எக்டேர் பரப்பில் ஜாவா சிட்ரோனெல்லா புல் பயிரிடத் திட்டமிடப்பட்டு முன் ஏற்பாடு வேலைகள நடந்து வருகின்றன.

நிதி ஒதுக்கீடு ரூ. 5.21 இலட்சம். 1983 ஜூன் மாதம் ரூ. 0.83 இலட்சம் செலவு செய்யப்பட்டது.

# தமிழ்நாட்டில்...
# சமத்துவ சமுதாயம் படைத்திட
# நலிந்தோர் நிலை உயர
# நிதி நிறுவனங்கள் மூலமாக
# சிறப்பான கடனுதவித் திட்டம்





ஏழை, எளிய மக்களின் நல்வாழ்வுக்கு உத்தரவாதம் அளிப்பதே உண்மையான சுதந்திரம் என்ற உன்னதக் கொள்கையைக் கொண்டவர் பேரறிஞர் அண்ணா அவர் அடைய விரும்பிய இலக்கினை நோக்கி நல்வாழ்வுத் திட்டங்களை நாளும் செயல்படுத்தி வருகிறது தமிழ்நாடு அரசு.

நிதி நிறுவனங்கள் அளிக்கும் கடனுதவியே நலிந்தோர் துயர் துடைக்கும் நல்வழி என்பதைக் கருத்தில் கொண்டு, தனியே இதற்கென நிதி நிறுவனங்கள் துறையைத் தமிழ்நாடு அரசு தொடங்கியது ஒரு மாபெரும் நடவடிக்கை ஆகும்.






## இத்திட்டத்தில் பங்குபெறும் வங்கிகளின் இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள்!



- ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா
- இந்தியன் பாங்க்
- இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்க்
- கனரா பாங்க்
- சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா
- யுனைடட் கமர்சியல் பாங்க்
- பாங்க் ஆஃப் இந்தியா
- ஸிண்டிகேட் பாங்க்
- பாங்க் ஆஃப் பரோடா
- பஞ்சாப் நேஷனல் பாங்க்
- ஆந்திரா பாங்க்
- யூனியன் பாங்க் ஆஃப் இந்தியா
- விஜயா பாங்க்
- தேனா பாங்க்
- பாங்க் ஆஃப் மதுரா லிமிடெட்
- லக்ஷ்மி விலாஸ் பாங்க் லிமிடெட்
- ஸ்டேட் பாங்க் ஆஃப் மைசூர்
- ஸ்டேட் பாங்க் ஆஃப் திருவாங்கூர்
- கார்பொரேஷன் பாங்க்
- அலஹாபாத் பாங்க்
- கர்நாடகா பாங்க் லிமிடெட்
- சௌத் இந்தியன் பாங்க் லிமிடெட்
- கரூர் வைஸ்யா பாங்க் லிமிடெட்
- நியூ பாங்க் ஆஃப் இந்தியா
- வைஸ்யா பாங்க் லிமிடெட்
- ஸ்டேட் பாங்க் ஆஃப் ஹைதராபாத்
- பாங்க் ஆஃப் மஹாராஷ்ட்ரா
- பாங்க் ஆஃப் தமிழ்நாடு லிமிடெட்
- பாங்க் ஆஃப் தஞ்சாவூர் லிமிடெட்
- கும்பகோணம் சிட்டி யூனியன் பாங்க் லிமிடெட்
- நெடுங்காடி பாங்க் லிமிடெட்
- யுனைடெட் இண்டஸ்ட்ரியல் பாங்க் லிமிடெட்
- யுனைடெட் பாங்க் ஆஃப் இந்தியா
- ஃபெடரல் பாங்க் லிமிடெட்
- தமிழ்நாடு மெர்கன்டைல் பாங்க் லிமிடெட்
- பஞ்சாப் & ஸிந்த் பாங்க்
- பாரத் ஓவர்ஸீஸ் பாங்க் லிமிடெட்
- கத்தோலிக் சிரியன் பாங்க் லிமிடெட்
- தனலக்ஷ்மி பாங்க் லிமிடெட்
- ஸ்டேட் பாங்க் ஆஃப் பிகானெர் அண்டு ஜெய்பூர்
- ஸ்டேட் பாங்க் ஆஃப் பாட்டியாலா
- ஓரியன்டல் பாங்க் ஆஃப் காமெர்ஸ்
- பாங்க் ஆஃப் கொச்சின் லிமிடெட்
- பாங்க் ஆஃப் ராஜஸ்தான் லிமிடெட்
- இந்துஸ்தான் கமர்ஸியல் பாங்க் லிமிடெட்
- ஜம்மு & காஷ்மீர் பாங்க்
- லக்ஷ்மி கமர்ஸியல் பாங்க் லிமிடெட்
- ஸ்டேட் பாங்க் ஆஃப் சௌராஷ்டிரா

## வசதி படைத்தவர்க்கும், இல்லாதவர்க்கும், இடையே உள்ள வேறுபாட்டை நீக்கும் சிறப்பான திட்டம்!

சமுதாயத்தின் அடித்தளத்தில் அழுந்திக் கிடப்போரும், அலட்சியப் படுத்தப் பட்டதால் அல்லல்பட்டு ஆற்றாது தவிப்போரும், வளமான வாழ்வு பெற, அவர்களது பொருளாதாரம் மேம்பட வேண்டும். இதற்கு நிதிநிறுவனங்கள் மூலமாக கடன் வழங்க இத்துறை பொறுப்பேற்கும்.

இதன் கண்ணான இருபெரும் கடமைகள் :

- வளர்ச்சிப் பணிகளுக்கு பல்வேறு அமைப்புகளிலிருந்து நிதியுதவியும் கடன் தொகையும் பெறச் செய்வது.
- திட்டமிட்டு கடன் உதவி செய்வது.

கிடைக்கின்ற கடன் உதவி முறையாக கிடைக்கச் செய்தால் நலிந்தோரிடையே நல்வாழ்வு மலரும். அவர் தம் பொருளாதாரம் சிறக்கும். அடித்தளத்திலிருப்போரை கை தூக்கி விடவே இக் கடன் உதவி பயன்படுத்தப்படும்.'


சென்னை நகரில் நலிவுற்ற பிரிவு களைச் சார்ந்த 15,000 ஏழைகளுக்கு கடன் வழங்கப்படுவது ஒரு சிறிய தொடக்கமே ஆகும். சிறப்பான இத்திட்டத்தின் மூலம் தமிழ்நாடு முழுவதும் பயன் பெறுவோர் எண்ணிக்கை ஒரு லட்சத்துக்கும் மேல்...

நல்வாழ்வு நிலவும் மாநிலமாக தமிழ் நாட்டை அமைக்கும் முயற்சியில் இத்திட்டம் ஒரு முக்கியமான நடவடிக்கையாகத் திகழும்.

**ஆணையர் மற்றும் செயலர்,**
**நிதி நிறுவனங்கள் துறை**
தமிழ்நாடு அரசு, தலைமைச் செயலகம்
சென்னை-600 009.

**இயக்குநர், ஊரக வளர்ச்சித்துறை**
தமிழ்நாடு அரசு, குறளகம்,
சென்னை-600 001.

**இயக்குநர், செய்தி மற்றும்**
**மக்கள் தொடர்புத்துறை**
தமிழ்நாடு அரசு, தலைமைச் செயலகம்,
சென்னை-600 009.



**ம**துரை மாவட்டம், ஊர்மெச்சிக் குளத்தில் ரூ. 2.5 இலட்சம் செலவில்அண்மையில் கட்டப்பட்ட காவல்நிலையத்தைத் திறந்து வைத்து மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் டாக்டர் கா.காளிமுத்து அவர்கள் சிறப்புரையாற்றினார்.

அவர் தமது சிறப்புரையில் கூறியதாவது :

# ஊர் மெச்சும்

# ஊர்மெச்சி குளம்

"குற்றங்களே நிகழாவகையில் தடுப்பதும், குற்றங்கள் ஏற்படின் அதைக் கண்டுபிடிப்பதும் சட்டம் ஒழுங்கைக் காப்பதும், சமுதாயத்தின் நலன்களைக் காப்பதும்தான் காவல் துறையின் கடமையாகும். கட்டடித்திற்கு இடிதாங்கி பயன்படுவதுபோல் சமுதாயத்திற்கு ஏற்படக்கூடிய அதிர்ச்சியைத் தடுத்து, தாங்கிக் கொள்கிறது காவல்துறை. ஊர் மெச்சிக்குளம் எப்படி ஊமச்சிக் குளம் என்று மறுவி வந்துவிட்டதோ அதைப்போல் வாக்குகளைக் கற்றவன் வாத்தியார் என்பதும், சமுதாயத்தின் போக்குகளைக் கற்றவன் போலீஸ் என்பதும் மறுவி வக்கற்றவன் வாத்தியார் என்றும், போக்கற்றவன் போலீஸ் என்றும் கூறுவதுண்டு.

"ஆங்கிலேயர் காலத்தில் போலீஸ் என்றாலேநாடி,நரம்பே நின்றுவிடும்போல் இருந்தது. ஆனால் தற்போது போலீஸ் என்றால் காவலர்கள், நமக்கு நேரும் ஆபத்துக்களிலிருந்து காப்பாற்றுகிறவர்கள் என்ற வகையில் காவல்துறை அமைந்துவிட்டது.

இந்தியத் துணைக்கண்டத்திலே தமிழகக் காவல்துறை சிறந்து விளங்குகிறது. உலகிலே ஸ்காட்லாந்து நாட்டின் காவல் துறை சிறப்புடையது என்பார்கள். ஆனால் அந்நாட்டுக் காவலர்களுக்குக் கொடுக்கப்படும் வசதி வாய்ப்புகள் நமது காவலருக்கும் கிடைக்குமேயானால் தமிழகக் காவல்துறைக்கு ஈடு இணையே கிடையாது.

"எனவேதான் காவல் துறையினருக்குத்தமிழகஅரசு பல்வேறு உதவிகளையும், சலுகைகளையும் காவலர்களுக்குக்குடியிருக்க இடமும், சலுகை விலையில் உணவுப் பண்டங்களும், சீருடைக்குப் படியும் அளித்து வருகிறது.

**கே. பி. நல்லதம்பி**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர், மதுரை.**

"மதுரை மாவட்டக் காவல் துறைக்கு 17 காவல் நிலையங்கள் ரூ.40 இலட்சம் செலவிலும், 700 காவலர் குடியிருப்புகள் ரூ. 235இலட்சம் செலவிலும்கட்டப்பட்டு வருகின்றன. இதனுடைய தொடக்கம் தான் இன்று ஊர் மெச்சிக்குளத்தில் கட்டப்பட்ட காவல் நிலையம்.

"மதுரையில் நடைபெற்ற ஒரு கொள்ளையைக்கண்டுபிடிக்க காவல்துறையினர் அந்தக் கொள்ளைக் கூட்டத்தினர் பயன்படுத்திய பீடியை வைத்தே துப்புத் துலக்கி கொள்ளைக் கூட்டத்தை கண்டுபிடித்தனர், வடஆர்க்காடு மாவட்டத்தில் நடைபெற்ற கொள்ளை, வழிப்பறியை அக்கம் பக்கத்தில் உள்ளவர்களிடம் வாய்மூலம் கூறிய தடயங்களை வைத்தே கண்டுபிடித்த பெருமை தமிழகக் காவல்துறையினரையே சாரும்.

"காவல்துறையில் சில குற்றங்களைக் கண்டுபிடிக்கச் செல்லுகையில் தங்களுக்கு எந்த நிமிடமும் எந்த வடிவிலும் ஆபத்துக்கள் வரலாம் என்று தெரிந்தே மிகப்பெரிய குற்றங்களைக் கூடக் கண்டுபிடிக்கிறார்கள். அதற்குப் பரிகாரமாகத் தமிழக அரசு நல்ல பல சலுகைகளைச் செய்கிறது.

"சட்டத்தைக் காக்க வேண்டிய பொறுப்பு காவல் துறையினருக்கு உண்டு, தாம் பெற்ற பிள்ளையே தவறு செய்தாலும் கண்டிக்கிற கடமை,பொறுப்பு காவல் துறையினருக்கு உண்டு. எனவேதான் தமிழக முதல்வர் அவர்கள், காவல்துறை தன்னிச்சையாகச் செயல்பட வேண்டும் என்ற அடிப்படையில் யாராக இருந்தாலும் காவல்துறையில் குறுக்கீடு இருக்கக்கூடாது என்று கண்டிப்பாகக் கூறியுள்ளார்.

இந்நிகழ்ச்சிக்கு மதுரை மாவட்டக் காவல்துறை துணைத்தலைவர் திரு வீரராகவன் தலைமை தாங்கினார். காவல்துறை தெற்கு மாவட்ட கண்காணிப்பாளர் திரு கு.கணேசன் வரவேற்றுப் பேசினார். மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கு. ஆளுடைய பிள்ளை, பாராளுமன்ற உறுப்பினர் திரு ஏ.ஜி. சுப்புராமன், சட்டமன்ற உறுப்பினர் திரு பாலுச்சாமி, பால்வள ஒன்றிய தலைவர் திரு பாலகுரு ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.





# கண்ணகிக்கோயில்- தமிழ்நாடு அரசு நடவடிக்கை

**த**மிழ்நாடு கேரளா எல்லையிலுள்ள மங்கலதேவி கோட்டம் என்று அழைக்கப்படும் கண்ணகி கோயில் தமிழ்நாட்டைச் சேர்ந்தது என்பதற்குக் கீழ்க்காணும் ஆவணங்கள் அடிப்படையில் சான்றுகள் உள்ளன:

1. 1883-1886ஆம் ஆண்டிற்கான நில அளவை ஆவணங்கள் இக்கோயில் தமிழ்நாட்டிற்குள்ளேயே அமைந்திருப்பதைக் காட்டுகின்றன.

2. இந்த எல்லையைப் பற்றிய 1893ஆம் ஆண்டு இந்திய நில அளவை வன வரைபடம் இக்கோயிலானது தமிழ்நாட்டிற்குள்ளேயே அமைந்துள்ளதைத் தெளிவாகக் காட்டுகிறது.

3. 1927, 1952, 1957 மற்றும் 1959ஆம் ஆண்டுகளில் இம்மாநில அரசால் வெளியிடப்பட்ட வட்ட வரைபடங்களும் இந்தக் கோயில் தமிழ்நாட்டு எல்லைக்குள்ளேயே இருப்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன.

4. 15.11.1883ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட புனித ஜார்ஜ் கெசட்டில்719-712 உள்ள பக்கங்களில் பிரசுரமான வெளியீடு பிரிவு 25ல் வண்ணாத்திப்பாறை ஒதுக்கப்பட்ட காடுகள் என்று அழைக்கப்பட்டதாகவும் மற்றும் அக்காட்டில் உள்ள மங்கலதேவி கோயில் அல்லது சின்னமுல்லை அருமலைக்குச் செல்லுவதற்குக் கிராம மக்களுக்கு வழித்தடத்திற்கு உரிமை அளிக்கப்பட்டதையும் காட்டுகிறது.

5. 1934ல் வெளியிடப்பட்ட மதுரை மாவட்ட கெசட்டில் உள்ள வன வெளியீடு மேலே குறிப்பிட்ட கோயிலானது தமிழ்நாட்டின் எல்லைக்குள்ளேயே அமைந்திருப்பதைக் காட்டுகிறது. மேலே குறித்த வெளியீடு இக்கோயில் மதுரை மாவட்டம், பெரியகுளம் வட்டம், வண்ணாத்திப்பாறை ஒதுக்கப்பட்ட காட்டில் உள்ளது என்பதையும், மற்றும் பெரியகுளம் வட்டத்தைச் சார்ந்த கூடலூர் கிராமவாசிகளுக்கு மங்கலதேவி கோயிலுக்குச் சென்று வழிபடுவதற்கு 12 அடி அகலமுள்ள வழித்தடத்திற்கு உரிமை அளிக்கப்பட்டது என்பதையும் காட்டுகிறது. வனத் துறையின் வரைபடம் இக்கோயில் வழித்தடம் மற்றும் தூரம் ஆகியவை தமிழ்நாடு அரசு ஆளுகைக்குள் உள்ளதைக் காட்டுகிறது.

6. அரசாணை எண். 183பொது (அரசியல்) நாள் 1.5.1918-ன் படி சென்னை மற்றும் திருவிதாங்கூர் அரசுகள் இவ்விருமாநிலங்களுக்கும் மதுரை திருவாங்கூர் இடைப்பட்ட மாநில எல்லையானது ஆற்றுப்பள்ளத் தாக்குக்கு ( water Shed Line ) ஏற்ப அமைவதை ஏற்றுக்கொள்கின்றன.

7. 30.8.1976ல் எழுதப்பட்ட இந்திய அரசின் கடிதத்தின்படியும், ஆற்றுப்பள்ளத் தாக்கானது இப்பகுதியில் இவ்விரு மாநிலங்களுக்குமுள்ள எல்லையாகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் குறிப்பிடப்பட்டுள்ள இந்நில அமைப்பின் அடிப்படையில் இக்கோயில் தமிழ்நாட்டிற்குள்ளேயே உள்ளது. மற்றும் இப்பகுதியானது தமிழ்நாட்டிற்குள்ளேயே படிப்படியாகச் சரிந்து சமவெளியாகிறது. ஆனால், கேரள மாநிலத்தில் செங்குத்தாகக் கீழ் அமைந்த பள்ளத்தாக்காக உள்ளது. ஆகையால் இக்கோயில் எப்போதும் கேரள மாநிலத்தின் ஒரு பகுதியாக இருந்ததில்லை.

8. தொல்பொருள் ஆய்வுத் துறை இயக்குநர் இக்கோயிலில் உள்ள சிலைகளைப் பற்றிய கல்வெட்டுகளின் நகல்களையும் மற்றும் இந்தியக்கல்வெட்டு 1965-1966ஆம் ஆண்டு அறிக்கையில் சுருக்கத்தையும்அனுப்பியுள்ளார். உடைந்த கல்வெட்டு 283ல் 'மாசாத்துவன்' (கண்ணகியின் மாமனார் அதாவது கோவலனின் தகப்பனார்) என்பவரின் பெயர் காணப்படுகிறது.

எனவே, மங்கல தேவி கோயிலின் உரிமை குறித்து மத்திய அரசுக்கும், கேரள அரசுக்கும் கடிதப் போக்குவரத்து நடந்து வந்தது. 1981 அக்டோபரில் மத்திய அரசின் அப்போதைய உள்துறை அமைச்சர் திரு ஜெயில் சிங் தமிழக முதல்வருக்கு எழுதிய கடிதத்தில் அப்போதைய கேரள அரசின் முதல்வர் பரிந்துரை செய்தவாறு இரு மாநில முதல்வர்களும் கூடிப்பேசி இந்தப் பிரச்சினைக்கு ஒரு சுமுகமான தீர்வு காண வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்தார்கள். முதல்வர் அவர்களுக்கு மத்திய உள்துறை அமைச்சர் திரு.பி.சி. சேத்தி அவர்கள் எழுதிய கடிதத்தில் அவர் கேரள மாநில முதலமைச்சர் திரு.கே.கருணாகரன் அவர்களுக்கு 11.3.83ஆம் தேதியிட்ட கடிதத்தின் படிவத்தை அனுப்பியுள்ளார். இக்கடிதத்தின்படி இரு மாநிலங்களுக்கு இடையே முதலில் உயர் மட்ட அதிகாரிகள் அளவில் பேச்சு வார்த்தை நடத்தி அதற்குப் பின்னர் தேவைப்பட்டால் அரசு அளவில் பேச்சுவார்த்தை நடத்தி தமிழ்நாடு கேரள எல்லை குறித்த பிரச்சினையில் தீர்வு காணலாம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிடையில் கேரள மாநிலத்தைச் சேர்ந்த குமுளியின் கணபதி பத்ரகாளி ஆலயக்குழு கண்ணகி கோயிலில் 15.3.1983 அன்று ஊர்வலமாகச் சென்று துர்க்கை சிலையை வைத்தனர். எனவே, மங்கலதேவி கோட்டத்தில் கண்ணகி கோயிலில் முன்பிருந்த நிலையே இருக்குமாறும், அக்கோயிலில் துர்க்கை சிலை வைக்கப்பட்டதனால் தமிழக மக்கள் உணர்ச்சி வசப்பட்டு கொந்தளிப்பு அடைந்து இருப்பதால், இப்பகுதியில் கொந்தளிப்பை நீக்கி அமைதியை நிலைநாட்டவும், இப்பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்ப்பதற்கு எளிதாகும் வகையிலும் அந்தத் துர்கை சிலையைக் கண்ணகிக் கோயிலிலிருந்து அகற்றுவதற்குக் கேரள மாநில முதல்வருக்கு அறிவுரை வழங்கும்படி கோரி, மத்திய உள்துறை அமைச்சருக்கு நம் மாநில முதல் அமைச்சர் அவர்கள் 24.5.83ல் 'டெலக்ஸ்' அனுப்பியுள்ளார்கள். அதே போன்று ஒரு கோரிக்கையினைக் கேரள முதலமைச்சருக்கும் நம் மாநில முதலமைச்சர் ஒரு டெலக்ஸ் அனுப்பியுள்ளார்கள்.

மறுபடியும் முதலமைச்சர் 24.5.1983ல் மத்திய உள்துறை அமைச்சருக்கு ஓர் நேர்முகக் கடிதம் அனுப்பியுள்ளார்கள். அதில் கேரள அரசு கண்ணகி கோயிலில் 15.3.83ல் சில கேரள மக்களால் மீறி வைக்கப்பட்ட துர்க்கை சிலையைச் சுற்றி இரும்புக் கதவுகளும் சிற்சில அபிவிருத்தி வேலைகளையும் நடத்தியுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. மேற்சொன்ன முன்பிருந்த நிலையைப் பாதுகாக்க வேண்டும் என்பதை மீறப்பட்ட கேரள அரசின் செய்கை மத்திய அரசு யோசனை கூறிய சுமுகமான முடிவுக்கு வர விடாமல் செய்யக் கூடியதென்றும் மத்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டது. கேரள அரசு மேற்கொண்டு எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்தி முன்பிருந்த நிலையினை நிலைநாட்ட ஏற்பாடு செய்ய வேண்டுமென்று மத்திய உள்துறை அமைச்சரை முதலமைச்சர் கேட்டுக் கொண்டுள்ளார்கள். மத்திய அரசின் பதில் எதிர் பார்க்கப்படுகிறது.



மதுரை செல்லத்தம்மன் கோயிலில் உள்ள கண்ணகி சிலை.

இச்சமயத்தில் கேரள முதலமைச்சர் நமது முதலமைச்சர் அவர்களுக்கு 17.5.83 அன்று அனுப்பிய கடிதத்தில் இக்கோயில் கேரள மாநில எல்லைக்குள்ளேயே உள்ளது என்றும், இதில் எல்லைப் பிரச்சினை பற்றி கலந்துரையாட ஏதும் இல்லை என்றும் அலுவலர்கள் மட்டத்தில் கலந்து, பேசி இங்கு வரும் யாத்ரீகர்களுக்கு இப்பொழுதுள்ள வசதிகளைப் பெருக்குவதற்கு இன்னும் எந்தவிதமான நடவடிக்கைகள் எடுக்கலாம் என்று வேண்டுமானால் முடிவு செய்யலாமென்றும் கூறியுள்ளார். நமது முதலமைச்சர் மத்திய உள்துறை அமைச்சருக்கு 5.7.83ல் எழுதிய கடிதத்தில் கண்ணகி கோயில் எல்லைப் பிரச்சினைப் பற்றி கலந்துரையாட ஏதும் இல்லை என்று கேரள முதலமைச்சர் கூறியது மத்திய அரசு இவ்விஷயத்தில் கூறிய அறிவுரைக்கு முரணாக உள்ளது என்றும், அதிகாரிகள் அளவில் இந்த எல்லைப் பிரச்சினை பற்றி கலந்து பேச கேரள முதல்வரை மத்திய உள்துறை அமைச்சர் இணங்கச் செய்ய வேண்டுமென்றும் கோரியுள்ளார்.

இவ்வாறு கண்ணகி கோயிலின் மீது தமிழ்நாட்டிற்குள்ள உரிமையை நிலைநாட்டவும், பாதுகாக்கவும் தமிழக அரசு வேண்டிய துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

## பார்த்தோம்—படித்தோம்



ஆகஸ்ட் 16ஆம்நாள் தமிழரசு இதழ் அட்டைப்படம் கண்டேன். இலங்கைத் தமிழர் துயரத்தையும், தமிழ்த்தாயின் கண்ணீரையும், சித்திரித்திருந்தது பாராட்டத்தக்கது! என் கண்களில் நீர் வழிந்தது! இதைக் கண்டு கலங்காத உள்ளமும் கலங்கும்.

—என். சுப்பிரமணியன்
கீழப்பழுவூர்.

ஆகஸ்ட்-16 இதழில் வெளியிட்ட அட்டைப்படம் மிகவும் ஜோர்! இலங்கைத் தமிழர் பற்றிய சிந்தனையைத் தூண்டும் வகையில், முகப்போவியம் அமைந்து இருந்தது.

—எம். நாகராஜன்,
வன்னியம்பாளையம்

தமிழரசு 1.9.83 திரு.வி.க. மலர் புதுமையும் இனிமையும் நிறைந்து மணம் கமழ்கிறது. அனைவரும் பொன்னாகப் போற்ற வேண்டிய நினைவுப் பெட்டகம்.

—புலவர் தணிகை உலகநாதன்
சென்னை-1.





# திருக்குறள் ஆய்வு மதிப்பீட்டுக் கருத்தரங்கு

"எல்லார்க்கும் எல்லாம்' என்ற நிலை ஏற்பட்டு, காணும் இடமெல்லாம் அன்பும்அருளும் பூத்துக் குலுங்கும் காலமே உலக மனித இனத்தின் பொற்காலம் ஆகும். இப்பொற்காலம் காண வழிகாட்டும் வாழ்க்கைப் பெருநெறிகளில் ஒன்றே குறள் நெறி-வள்ளுவர் தந்த அருள் நெறி-உலகப் பொதுநெறி!

இப் பொது நெறியில் மிகுந்த ஈடுபாடு கொண்ட பேரறிஞர் அண்ணா அவர்கள், இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டின்போது செய்த அரிய பெரிய பணிகளுள் ஒன்று சென்னை, அண்ணாமலை, மதுரைப் பல்கலைக் கழகங்களில் திருக்குறள் அறக் கட்டளைகளை நிறுவித் திருக்குறள் ஆய்வுகளை மேற்கொள்ள வழிவகுத்துத் தந்ததாகும்.

இம்மூன்று திருக்குறள் ஆய்வு மையங்களின் கூட்டுக் கூட்டம் 17.12.1981 அன்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. செ.அரங்கநாயகம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில், இதுவரை நடைபெற்றுள்ள திருக்குறள் ஆய்வுகளை மதிப்பீடு செய்யும் வகையிலும், இனி எதிர்காலத்தில் எவ்வெவ்வகைகளில் எல்லாம் ஆய்வுகளை மேற்கொள்ளலாம் என்பதை ஆராய்ந்து உரைக்கும் வகையிலும் அமையுமாறு ஒரு கருத்தரங்கினை நடத்தலாமென முடிவெடுக்கப்பட்டது.

அதன் விளைவுதான் ஆகஸ்டு திங்கள் 24, 25, 26 ஆகிய மூன்று நாள்களிலும் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் இலக்கியத் துறையைச் சார்ந்த திருக்குறள் ஆய்வு மையம் நடத்திய 'திருக்குறள் ஆய்வு மதிப்பீட்டுக் கருத்தரங்கு'. இக்கருத்தரங்குக்குப் பல்கலைக் கழக நிதி உதவிக்குழு நிதி உதவி வழங்கியது.

திருக்குறள் தொடர்பாக இதுவரை வெளிவந்துள்ள பதிப்புகள், உரைகள், ஆய்வு நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், விளக்க உரைகள், கதைகள் ஆகிய அனைத்தையும் மதிப்பீடு செய்து, இனிமேல் என்னென்ன நோக்குகளிலும், போக்குகளிலும் சமுதாயத்திற்குப் பயன்படும் வகையில் ஆய்வுகளை மேற்கொள்ளலாம் என்பதைக் கண்டறிவதற்காகக் கூடிய இந்த ஆய்வுக் கருத்தரங்கில் ஐதராபாத், காஞ்சி, சிதம்பரம், சென்னை, தஞ்சை, திருப்பதி, மதுரை ஆகிய பல்வேறு இடங்களில் இருந்தும் திருக்குறளை ஆராய்ந்து அறிந்த அறிஞர் பெருமக்கள் பலர் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

முதியோரும், இளையோரும், சமய மறையோரும், பொதுவுடைமை நெறியோரும், ஆடவரும், பெண்டிரும், தமிழறிந்த நல்லோரும், பிறதுறை வல்லோரும் என எல்லோரும் இக்கருத்தரங்கில் பங்கேற்றது இதன் தனிப் பெரும் சிறப்பாகும்.

திருக்குறள் ஆய்வு மதிப்பீட்டுக் கருத்தரங்கின் தொடக்க விழா, 24.8.'83 அன்று காலைசென்னை மெரினா வளாகத்திலுள்ள, தமிழ் இலக்கியத் துறைக் கருத்தரங்க அறையில் தொடங்கியது.

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் இலக்கியத்துறைத் தலைவர் டாக்டர் ந.சஞ்சீவி அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில், திருக்குறளுக்கு விளக்க நிலை ஆய்வடங்கல் (Annotated bibliography). ஒன்று மிகவும் அவசியம் என்றும் அதனைச் சென்னைப் பல்கலைக் கழகத் திருக்குறள் ஆய்வு மையம் ஓராயிரம் பக்க அளவில் ஓராண்டளவில் செய்து முடிக்குமென்றும் உறுதி அளித்தார்.

சீன மக்கள் குடியரசைச் சேர்ந்த தமிழறிந்த சீன அறிஞர் திரு வாங் பெள ஸி அவர்கள் தாமறிந்த தமிழில், கேட்போர் நெஞ்சம் நெகிழும் வகையில்-மகிழும் வகையில் வாழ்த்துரை வழங்கினார்.

அறிஞர் வாங் பெள ஸ் அவர்கள் வாழ்த்துரை வழங்குவதற்கு முன், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு சிலம்புச் செல்வர் அவர்களுக்கும், தமிழிலக்கியத் துறைக்கும் அன்பளிப்புகள் வழங்கினார்.

சென்னைப் பல்கலைக் கழகத் திருக்குறள் ஆய்வு மையம் செய்துள்ள பணிகளையும், இனிமேல் செய்ய உள்ள பணிகளையும் பற்றிய ஓர் அறிக்கையினை அத்துறையின் விரிவுரையாளர் டாக்டர் கு. மோகனராசு அவர்கள் படித்து வழங்கினார்.

மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு.செ.அரங்கநாயகம் அவர்கள் விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசினார். அவர் பேசுகையில்—

> ''திருக்குறள் ஆராய்ச்சியின் மூலம் மக்கள் வாழ்க்கையின் உயர்வுக்கு நாம் என்னென்ன செய்யப் போகிறோம், நாம் என்னென்ன செய்ய முடியும், அவ்வடிப்படையில் எதையெதை நாம் ஆராய்ந்து சொல்ல முடியும் என்னும் தெளிவான சிந்தனைகள் நமக்கு இருக்க வேண்டியது அவசியம்.
>
> ''ஆராய்ச்சி என்பது ஆராய்ச்சிக்காக மட்டுமன்று, அது மக்களுக்காக என்பதை ஒவ்வொரு கட்டத்திலேயும் நினைவுகொள்ளவேண்டும்''

பின்னர், சென்னைப் பல்கலைக் கழகத் திருக்குறள் ஆய்வு மையத்தின் எட்டாவது வெளியீடான 'திருவள்ளுவரின் குறிக்கோளியலும் உலகப் பொதுமையியலும்' என்னும் 400 பக்க அளவிலான ஆய்வு நூலும், திருக்குறள் ஆய்வு அடங்கலின் ஒரு பகுதியும் வெளியிடப்பட்டன. திருக்குறள் ஆய்வு மைய விரிவுரையாளர் டாக்டர் கு.மோகனராசு அவர்கள் எழுதிய இவ்விரண்டு நூலையும், மாண்புமிகு சட்ட மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ. சிவஞானம் அவர்கள் வெளியிட்டார். மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. செ.அரங்கநாயகம் அவர்கள் அவற்றைப் பெற்றுக் கொண்டார்.


மாண்புமிகு சட்டமேலவைத் தலைவர் அவர்கள் பேசுகையில் திருக்குறள் இந்த நாட்டில் தோன்றிப் பற்பல அற்புதங்களைச் செய்துள்ளது எனக் கூறி, திருக்குறள் மனித சமுதாயத்தின் வாழ்க்கைச் சட்டம் என்பதைப் பல்வேறு கோணங்களிலும் கோலங்களிலும் விளங்கும் வகையில் விரிவாக எடுத்துரைத்தார்.

இறுதியாக, தமிழ் இலக்கியத் துறையின் இளநிலைப் பேராசிரியர் டாக்டர் பொன். கோதண்டராமன் அவர்கள் நன்றி நவின்றார்.

அன்று பிற்பகல், ஆய்வரங்கு தொடங்கியது. மூன்று நாள்களிலும் ஐந்து அமர்வுகளாக அறிஞர்கள் அமர்ந்து தம் ஆய்வுக் கட்டுரைகளை வழங்கினார்கள். அவ்வகையில், பதினான்கு அரிய ஆய்வு மதிப்பீட்டு ஆய்வுரைகள் படிக்கப்பட்டன. ஒவ்வொரு ஆய்வுரையையும் அடுத்து வினாக்கள் தொடுக்கப்பட்டன. விடைகள் விடுக்கப்பட்டன. விளக்கங்களும் கொடுக்கப்பட்டன.

ஐந்து அமர்வுகளிலும் முறையே சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் மொழித்துறைத் தலைவர் பேராசிரியர் டாக்டர் சி.பாலசுப்பிரமணியம், தமிழ் வளர்ச்சி இயக்கக இயக்குநர் திரு சிலம்பொலி செல்லப்பன், தமிழக அரசின் மொழி பெயர்ப்புத் துறையின் இயக்குநர் டாக்டர் ஔவை து. நடராசன், திருக்குறளார் வீ. முனுசாமி, பேராசிரியர் டாக்டர் ந.சுப்புரெட்டியார் ஆகியோர் தலைமை தாங்கி ஆய்வரங்கை அணி செய்தனர்.

இம்மூன்று நாள்களிலும், முத்தமிழ்க் காவலர் டாக்டர் கி.ஆ.பெ. விசுவநாதம், திருக்குறள் உரைவளம் தந்து நிறை நலம் பெற்ற மகா வித்துவான் ச.தண்டபாணி தேசிகர், தஞ்சைப் பல்கலைக் கழக சேவை சித்தாந்த



சிறப்பு ஆராய்ச்சியாளர், மகாவித்துவான் சி.அருணை வடிவேலு முதலியார், தஞ்சைப் பல்கலைக் கழகச் சுவடிப் புலத்தின் சிறப்பு நிலைப் பேராசிரியர் புலவர்மணி மு.சண்முகம் பிள்ளை, திருக்குறளுக்குப் பொருளகராதி தந்த பெருந்தகையாளர் டாக்டர் மு. கோவிந்தசாமி, திருக்குறள் நீதி இலக்கியம் என்னும் அரியபெரிய நூலுக்கு சாகித்திய அகாடமி பரிசு பெற்ற திருக்குறள் மணி, டாக்டர் க. த. திருநாவுக்கரசு, திருக்குறளில் வரலாற்று இலக்கண ஆய்வு கண்ட உஸ்மானிய பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் டாக்டர் துரை சிங்காரவேலன், திருவேங்கடவன் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் டாக்டர் பொன். சௌரிராசன், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழக விரிதமிழ் இயக்குநரும், திருக்குறளில் காணும் அரசியல்



'தமிழரசு' வாசகர்களுக்கு என் நல் வாழ்த்துக்கள் /

· வாங் பௌ ஸ

24.8.1983.




*திருக்குறள் ஆய்வு மதிப்பீட்டுக் கருத்தரங்கில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய சீன மக்கள் குடியரசு-பீகிங் வானொலி நிலையத்தைச் சேர்ந்த சீனத் தமிழறிஞர் திரு வாங்பௌஸீ அவர்கள், முழுக்க முழுக்கத் தமிழிலேயே பேசினார். அந்தப் பேச்சை அப்படியே தருகிறோம்.*

— ஆசிரியர்

"தமிழ் இலக்கியத்துறை ஒழுங்கு செய்த திருக்குறள் ஆய்வு மதிப்பீட்டுக் கருத்தரங்கில் கலந்து கொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது பெரும் மகிழ்ச்சி. முதலில், இக்கருத்தரங்கிற்கு என் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். உண்மையிலே சொன்னால் இதில் கலந்து கொள்வதற்கு எனக்கு யோக்கியதை இல்லை. இருந்தும் பேராசிரியர் ந. சஞ்சீவி அவர்கள் இந்தப் பெருமையை அளித்துள்ளார்.

''நான் தமிழ்மொழியைப் படிக்க தமிழ் நாட்டுக்கு வந்துள்ளேன். இன்றைய இக்கருத்தரங்கு, தமிழ் மொழியைப் படிப்பதில் எனக்கு முதலாவது பாடம்; ஒரு சிறப்பான பாடம். வள்ளுவர் ஒரு பெரும் ஞானி, அவர்களுடைய சிந்தனைகள் தமிழ் மக்களின் வாழ்க்கைக்கு வழி காட்டுவது மட்டுமல்ல, உலக மக்களின் கண்ணோட்டத்துக்கும் வழி காட்டி வருகின்றன.

''கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக''

என வள்ளுவர் கூறியிருக்கிறார். சீனத்தில் பெரும் அறிஞர் ஒருவர் கன்பூசியசு. அவர், ஒரு தலைசிறந்த கல்விமான், ''விடா முயற்சியுடன் தொடர்ந்து படித்தல், படித்தனவற்றைத் தொடர்ந்து நினைவு கொள்ளுதல், படித்தனவற்றுக்கு ஏற்றவாறு தொடர்ந்து செயற்படுதல்-இவை பெருமகிழ்ச்சி தரத்தக்கவை'' என்று கன்பூசியசு கூறியுள்ளார்.

கன்பூசியசு, திருவள்ளுவர் இருவருடைய இந்தச் சிந்தனை எல்லா ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பொருத்தமானது. இனி, நான் விடா முயற்சியுடன் தமிழ்மொழி, தமிழ் இலக்கியம் முதலியவற்றைப் படிக்க வேண்டும். படித்து விட்டு சீனத்துக்குத் திரும்பியபின், நான் தமிழ்மொழியின் மூலம் சீன மக்களுக்கும். இந்திய மக்களுக்குமிடையே நட்புறவை வளர்க்கப் பாடுபடுவேன்.

இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, நான் தமிழ்நாட்டில் தமிழ் மொழியைப் படிக்க எனக்கு உதவி புரிந்த தமிழ்நாட்டின் கல்வி அமைச்சருக்கும், தமிழ்ப் பல்கலைக் கழகத்துக்கும், மற்ற நண்பர்களுக்கும் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழ்க தமிழ்!

சீன-இந்திய மக்களின் நட்புறவு நீடூழி வாழ்க!

நன்றி !''

பொருளியல் கருத்துக்களை ஆராய்ந்து ஆய்வுபல நிகழ்த்தியவருமான பேராசிரியர் டாக்டர் தி. முருகரத்தனம், மதுரை காமராசர் பல்கலைக் கழகத் திருக்குறள் ஆய்வக இணைப் பேராசிரியர் திரு. சுப. இராமநாதன், அண்ணாமலைப் பல்கலைக்கழகத் திருக்குறள் மையத்தின் இணைப் பேராசிரியர் திரு.செ. வைத்தியலிங்கம், திருக்குறள் அணிநலம் கண்ட டாக்டர் இ. சுந்தரமூர்த்தி, மதுரை காமராசர் பல்கலைக் கழகத் திருக்குறள் ஆய்வகத்தின் ஆராய்ச்சித்துணைவர் திருமதி சலஜா கோபிநாத், இருபதாம் நூற்றாண்டு திருக்குறள் ஆராய்ச்சிகளை மதிப்பீடு செய்து டாக்டர் பட்டம் பெற்ற திருமதி டாக்டர் தி.சு.சத்தியம், முதற்குறள் தொடர்பாக எழுந்துள்ள ஆய்வு நோக்குகளையும் போக்குகளையும் ஆராய்ந்து கண்ட திரு நா.இளங்கோ, சென்னைப் பல்கலைக் கழகக் கீழ்த்திசைச் சுவடிப் புலத்தில் பணியாற்றும் ஆராய்ச்சியாளர் திரு. ம.இராசேந்திரன் அகிய அறிஞர் பெருமக்கள் பல்வேறு தலைப்புகளில் ஆய்வுக் கட்டுரைகள் வழங்கினர்.

பன்மொழிப் புலவர் திரு.கா. அப்பாத்துரையார், பேராசிரியர் டாக்டர் தி. முத்து-கண்ணப்பர், சென்னைப் பல்கலைக் கழக மொழித்துறையைச் சேர்ந்த டாக்டர் அ.அ. மணவாளன், டாக்டர் மா.செல்வராசன், இராணி மேரிக் கல்லூரிப் பேராசிரியர் திருமதி டாக்டர் தி.லீலாவதி, மாநிலக் கல்லூரிப் பேரா

## நெல் கொள்முதல் விலை நிர்ணயம்

**1983** அக்டோபர் முதல் தேதி முதல் ஏகபோக கொள்முதல் அமலில் உள்ள பகுதிகளில் விவசாயிகளிடமிருந்து வாங்கப்படும் நெல்லுக்கு மத்திய அரசு நிர்ணயித்துள்ள விலைகளை விட ரூ. 35/- அதிகமாகத் தரப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இப்போது அம்முடிவினை மறுபரிசீலனை செய்து 8.9.83 முதல் வாங்கப்படும் நெல்லுக்குச் சாதாரண ரகத்திற்குக் குவிண்டாலுக்கு ரூ. 167/-ம் சன்னரகத்திற்குக் குவிண்டாலுக்கு ரூ. 171/-ம் விலையாகக் கொடுத்து வாங்க முடிவு செய்து அதற்கான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இந்த அதிக விலைகள் 31.1.84 வரை அமலில் இருக்கும்.

விவசாயப் பெருங்குடி மக்கள் இப்போது அரசு அதிக விலைகளை அறிவித்துள்ள வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு நெல்லை அதிக அளவில் அரசிற்கு விற்க வேண்டுமென்று அரசு கேட்டுக்கொள்கிறது.

## நாணயங்கள் உற்பத்தி அதிகரிக்கும்

**நா**ணயங்கள் உற்பத்தியை அதிகரிக்க இந்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. 1983–84ஆம் ஆண்டில் வெவ்வேறு வகையான 95 கோடி காசுகளைத் தயாரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 1982–83 ஆண்டில் 66 கோடி காசுகள் தயாரிக்கப்பட்டன. 1981-82 ஆண்டில் 52½ கோடி காசுகள் தயாரிக்கப்பட்டன.

சிரியர் டாக்டர் இரா. இளவரசு. ஆய்வாளர் வேண்டிய நூல்களை இல்லையெனாது வழங்கும் மறைமலை அடிகள் நூலகத்தின் நூலகர் திரு.இரா. முத்துக் குமாரசாமி, புலவர் பா. வீரமணி, சென்னைப் பல்கலைக் கழக இந்தித் துறையின் இளநிலைப் பேராசிரியர் டாக்டர் தி.சு. குப்புசாமி ஆகியோர் நல் விருந்தினர்களாகப் பங்கேற்று ஆய்வரங்கில் கலந்துரையாடினர்.

மூன்று நாள் அமர்வுகளிலும் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் இலக்கியத் துறைத் தலைவர் டாக்டர் ந.சஞ்சீவி அவர்கள் கலந்துரையாடல்களில் பெரும் பங்கு பெற்று பல்வேறு கருத்துக்களை வழங்கினார்.

திருவள்ளுவரின் காலம் பற்றிய கருத்துகளும், அறம் பொருள் இன்பம் தொடர்பாக எழுந்த வினாக்களும், விளக்கங்களும், திருவள்ளுவரின் சமயம் தொடர்பாக எழுந்த சிந்தனைகளும், ஒரு சில குறள்களுக்கு ஆராய்ச்சி அறிஞர்கள் தந்த புதிய விளக்கங்களும், காமத்துப்பால் தொடர்பான சிந்தனைகளும், திராவிட ஆரிய பண்பாட்டுப்பரிமாற்றம்தொடர்பான சிந்தனைகளும் அறிஞர்களின் கவனத்தைப் பெரிதும் கவர்ந்தன.

தமிழை நன்றாகக் கற்றுத் திருக்குறளில் சில அதிகாரங்களை மலையாளத்தில் மொழிபெயர்த்துள்ள மலையாளச் சான்றோர்- உலகச் சமயங்கள் எல்லாம் ஒன்றே எனக் கண்ட திரு. நாராயண குருவின் பிறந்த நாளில் தொடங்கிய இவ்வாய்வு மதிப்பீட்டுக் கருத்தரங்கு, திருக்குறளுக்கு அரிய உரைவிளக்கங்கள் கண்ட தமிழ்த்தென்றல் திரு.வி.க. அவர்களின் பிறந்த நாள் அன்று நிறைவு பெற்றது.

நிறைவு விழாவில், கல்லூரிக் கல்வி இயக்குநர் 'அறிவியல் தமிழறிஞர் பேராசிரியர் டாக்டர் பொன். திருஞானசம்பந்தம் அவர்கள் நிறைவுரை நிகழ்த்தினார். அவர் பேசுகையில், மொழிபெயர்ப்பில் உள்ள சிக்கல்களையும் திருக்குறளை வாழ்க்கை வழிநூலாகக் கொள்வதால் ஏற்படும் ஏற்றங்களையும் மிகத்தெளிவாக விளக்கினார்.

அடுத்து, சென்னைப்பல்கலைக் கழகப் பதிவாளர் திரு. சி.கே. குமாரசாமி அவர்கள் தமிழ் இலக்கியத்துறை - திருக்குறள் ஆய்வு'மையத்தின் சார்பில் ஆய்வரங்கில் ஆய்வுரை வழங்கிய அறிஞர் பெருமக்கள் அனைவர்க்கும் அன்பளிப்புகளை வழங்கி, திருக்குறள் ஆய்வில் ஈடுபட்டுள்ள அறிஞர் பெருமக்கள் அனைவரையும் வாழ்த்தினார்.

இறுதியில், தமிழ் இலக்கியத் துறை இளநிலைப் பேராசிரியர் டாக்டர் பொன்-கோதண்டராமன் அவர்கள் நன்றி கூற, ஆய்வரங்கு நிறைவு பெற்றது.

ஆய்வரங்கின்போது மறைமலையடிகள் நூலகத்தார் வைத்திருந்த நூற்காட்சியும் இடம் பெற்றிருந்தது.

இந்த திருக்குறள் ஆய்வு மதிப்பீட்டுக் கருத்தரங்கினால் ஏற்பட்ட ஆய்வுப் பயன்கள் பலப்பல. அவற்றுள் சில வருமாறு;

திருக்குறளில் இதுவரை எந்தெந்தக் கோணங்களிலும் கோலங்களிலும் ஆய்வுகள் நடைபெற்றுள்ளன என்பது தெளிவாக்கப்பட்டது.

திருக்குறளில் இனி எந்தெந்த நோக்குகளிலும் போக்குகளிலும் ஆய்வுகளை மேற்கொள்ளலாம் என்பது பெருமளவு வரையறுக்கப்பட்டது.

மனித வாழ்க்கைக்கு வழிகாட்டியாக விளங்கும் திருக்குறளை மனித சமுதாயத்திற்கும் பயன்படும் வகையில் எவ்வெவ்வாறு ஆராயலாம்என்பது ஓரளவுதெளிவு செய்யப்பட்டது.

உலகப் பொதுமறையாகிய இத்திருமறை உலக மொழிகள் அனைத்திலும் மொழிபெயர்க்கத்தக்க முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியது தமிழர்களின் தலைமைக் கடன் என்பது உணர்த்தப்பட்டது.

பழைய புதிர்கள் சில விடைகண்டன. புதிய புதிர்கள் சில முளைத்தெழுந்தன.

மொத்தத்தில் இவ்வாய்வு மதிப்பீட்டுக் கருத்தரங்கு எழுச்சியும் எண்ண ஊட்டமும் மிக்க அரிய பெரிய கருத்தரங்காக அமைந்து, திருக்குறள் ஆய்வுக்குப் புதுவழி காட்டிப்புத்தொளி ஊட்டியது என்பது உறுதி!





# மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

**திரு நா. ஆதிமூலம், இ.ஆ.ப.**
**நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர்**

**இ**யற்கை எழில் கொஞ்சும் மலைகளின் ராணியாம் நீலகிரி மாவட்டத்தில் மலைப்பகுதிமேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் 1975ஆம் ஆண்டிலிருந்து பல்வேறு பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

மைய அரசு மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பல்வேறு மாநிலங்களில் எட்டு மலை மாவட்டங்களைத் தேர்ந்தெடுத்து ஐந்தாண்டுத் திட்ட காலத்திலிருந்து இத்திட்டத்தினைச் செயல்படுத்தி வருகின்கின்றது. தமிழ்நாட்டில் நீலகிரி மாவட்டம் இதில் ஒன்றாகும். இத்திட்டத்தில் இம்மாவட்டம் முழுமையும் அடங்குகிறது.

மலைவாழ் மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காகவும், நாட்டின் பல மண்டலங்களிடையே நிலவும் ஏற்றத்தாழ்வுகளைக் களையும் நோக்குடனும் திட்டங்கள் இதில் மேற்கொள்ளப்படுகின்றன.

இதில் உற்பத்தியைப் பெருக்கும் திட்டங்கள், வளர்ச்சித்திட்டங்கள், நிலையான ஆதாரங்களை ஏற்படுத்துதல் மற்றும் குறைந்த அளவு அலுவலர்களை நியமித்தல் முதலானவை அடங்குகின்றன.

5-வது திட்ட காலத்தில் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ. 7 கோடி நிதி ஒதுக்கீட்டில் ரூ. 6.85 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது.

6-வது திட்டக்காலத்தில் நீலகிரி மாவட்டத்தின் இயற்கைச் சூழ்நிலையைப் பாதுகாக்கும் குறிக்கோளுடன் திட்டங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இம்மாவட்டம் புயலாலும், வெள்ளத்தாலும் நிலச்சரிவுகளாலும் அவ்வப்போது பாதிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். எனவே, இம்மாவட்டத்திலுள்ள பெரிய மற்றும் சிறிய நதிப்பள்ளத்தாக்கின் அடிப்படையில் மண்வளத்தைப் பாதுகாத்தல் ,மண் அரிப்பைத் தடுத்தல், சரிவான மலைப் பகுதிகளில் 33.33% சரிவுக்கு மேலான பகுதியில் ஆண்டுதோறும் பயிரிடப்படும் உருளைக்கிழங்கு பயிர்களுக்குப் பதிலாக நிரந்தரமாக இருக்கக்கூடிய தேயிலை, காப்பி போன்ற தோட்டப் பயிர்களை ஊக்குவித்தல், மரங்களை வளர்த்தல் முதலான திட்டங்கள் வலியுறுத்தப் படுகின்றன.

இம்மாவட்டத்தில் இயங்கி வரும் 11 தொழிற் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகளில் உறுப்பினர்களாக வுள்ள சுமார் 6,680 சிறு விவசாயிகள் தேயிலைத்தோட்டங்களில் நல்லமுறைகளைக் கையாண்டு கூடுதல் மகசூல் பெறுவதற்கான திட்டங்களும் சேர்க்கப் பட்டுள்ளன. பால் உற்பத்தியினைப் பெருக்கவும், நாள் ஒன்றுக்குச் சுமார் 50 ஆயிரம் லிட்டர் வரை பால் பதனிடவும் நவீன பால் பண்ணை ஒன்றும் அமைக்கப்பட்டு வருகின்றது.

சுற்றுலா மாவட்டம் என்னும் சிறப்புப் பெயர் பெற்ற இம் மாவட்டத்தில் சுற்றுலா வளர்ச்சித் திட்டத்தின்கீழ் உதகை ஏரியை அழகுபடுத்துதல், வண்ண விளக்குகள் அமைத்தல், ஏரியைச் சுற்றியுள்ள சாலைகளை மேம்படுத்துதல், குழந்தைகள் விளையாட்டுப் பூங்கா அமைத்தல், சிறுவர்களுக்கான உல்லாச ரயில் அமைத்தல், நவீன படகுகள் ஓட்டுதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஏரியை அடுத்துள்ள சுமார் 22 ஏக்கர் நிலப்பரப்பில் மான் பூங்காவொன்று ரூ 25 இலட்சம் செலவில் அமைக்க திட்டமிடப்பட்டு உள்ளது.

தொட்டபெட்டா சிகரம், கோடநாடு காட்சிமுனை, கல்லட்டிநீர்வீழ்ச்சி, டால்பின் முனை, லாம்ப்ஸ் காட்சி முனை போன்ற இடங்களை வளரச் செய்யவும், பராமரிக்கவும் திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளன. குறைந்த வருமானமுள்ளவர்களுக்கும், உள்நாட்டுப்பயணிகள் வசதிக்காகவும் தங்கும் உறைவிடங்கள் கட்டவும் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

சிறு தொழில்கள் மற்றும் கிராமத்தொழில்கள் வளர்ச்சிக்கான திட்டங்களும் இதில் சேர்க்கப் பட்டுள்ளன. சாலைகள் அமைத்தல் மற்றும் மேம்படுத்துதல், முசுக்கொட்டைச் செடி வளர்த்தல், பட்டுப்புழு வளர்த்தல் முதலான இதர திட்டங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. யுனிசெப் உதவி பெற்று சமுதாய உள்ளீட்டுத் திட்டமொன்று 1982-83 முதல் அமல்படுத்தப்பட்டு வருகிறது.

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 1975-76 ஆம் ஆண்டிலிருந்து 1981-82ஆம் ஆண்டுவரை ரூ. 1403.97 இலட்சத்தில் பல்வேறு திட்டப்பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

1982-83ஆம் ஆண்டில் இத் திட்டத்தின்கீழ் தோட்டக்கலைத் துறை (மண்வளப்பாதுகாப்புத் திட்டங்கள் உட்பட), கால்நடை வளர்ச்சி, பால்வளம், மீன்துறை, சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் (தடுப்பு அணைகள் கட்டுதல்), தொதுவர் நலம், வனங்கள் பாதுகாப்பு,சின்கோனாத்துறை,சாலைகள்,வளர்ச்சி, சுற்றுலா வளர்ச்சி, தேயிலைத் தொழில், பட்டுப்புழு வளர்ப்பு, கதர் மற்றும் கிராமத் தொழில்கள், மருத்துவம் மற்றும் சுகாதாரம், சமூக நலத்திட்டங்கள், மாவட்ட ரீதியில் திட்டக் குழு அமைத்தல், கலந்தறிதலும் ஆராய்ச்சியும் முதலானவற்றிற்காக ரூ. 450.93 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

1983-84ஆம் ஆண்டுக்கான செயல்திட்டம் ரூ. 11.42 கோடி அளவில் மாநில அரசிற்கு அனுப்பப்பட்டுள்ளது.



# சேலத்தில் இருபது அம்சத் திட்டம்

இருபதம்சத் திட்டத்தின் அங்கமான ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டம் மற்றும் தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டம் ஆகியவற்றுக்காக நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளைச் சேலம் மாவட்டம் விஞ்சியுள்ளது.

ஒருங்கிணைந்த கிராமப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 24,500 குடும்பங்கள் (இலக்கு 21,000 குடும்பங்கள்) 1982-83-ல் உதவி பெற்றன. இதுபோலவே தேசிய கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் 26,42,000 மனித வேலை (இலக்கு 13,02000 மனித வேலை நாட்கள்) நாட்கள் உருவாக்கப் பெற்றன.

பொருளாதார ரீதியாக் பலவீனப் பிரிவுகளுக்கு வீட்டுமனை ஒதுக்குவதிலும் சேலம் சாதனை புரிந்துள்ளது. வீடு கட்ட 5,000 மனைகளை ஒதுக்க இலக்கு நிர்ணயிக்கப் பட்டிருந்த போதிலும் 8,890 வீட்டுமனைகளை வழங்கி, சேலம் மாவட்டம் சாதனை புரிந்துள்ளது.

இருபதம்சத் திட்டத்தின் கீழ், இதர குறிப்பிடத்தக்க சாதனைகள் வருமாறு:

மறுவாழ்வு அளிக்கப்பட்ட கொத்தடிமைகளின் எண்ணிக்கை-1043. கிராமப்புற ஏழைகளுக்கு ஒதுக்கீடு செய்ய உபரி நிலக் கையகம் 36.35 ஏக்கர், ஆரம்பச் சுகாதார மையங்கள்—84.

# இரும்பு துருப்பிடிக்காமல் இருக்க...

கான்கிரீட் கட்டுமானங்களில் உள்ள இரும்பு துருப்பிடிப்பதால், ஆண்டுதோறும் 1,200 கோடி ருபாய்க்கு நஷ்டம் ஏற்படுவதாக, தேசிய கட்டடங்கள் நிறுவனம் மதிப்பிட்டுள்ளது. இந்தச் சிக்கலான பிரச்சினைக்குத் தீர்வுகாண தேசிய கட்டடங்கள் நிறுவனம் காரைக்குடியில் உள்ள மத்திய மின்சார இரசாயன ஆய்வுக் கூடத்தில் ஆய்வு ஒன்றிற்கு ஏற்பாடு செய்தது.

இந்த ஆய்வின்போது கான்கிரீட் அரிப்பு, செங்கல் கட்டுமான அரிப்பு, ஏற்கெனவே முன் அழுத்தம் தரப்பட்ட கான்கிரீட்டில் அரிப்பு, பல்வேறு பகுதிகளில் அரிப்பின் அளவு ஆகியவை குறித்துப் பரிசோதனைகள் நடத்தப்பட்டன.

இரும்பு, உருக்கு, துருப்பிடித்து அரிக்கப்படுவதைத் தவிர்க்கப் பொருத்தமான வழிமுறைகளை நிறுவனம் சிபாரிசு செய்துள்ளது. கட்டுமானங்களுக்குள் அமையும் இரும்பு உருக்குக் கம்பிகளுக்குப் பூச வேண்டிய விசேஷ இரசாயனப் பூச்சுகளை ஆராய்ச்சி நிறுவனம் தயாரித்துள்ளது. இந்தப் பூச்சுகள் துருப்பிடித்து அரிக்கப்படுதவதைத் தவிர்க்கின்றன. இதன் மூலம் இரும்பு உருக்கு துருப்பிடித்து அரிக்கப்படுவதைத் தவிர்த்து, கட்டுமானத் தொழிலில் பெரும் சிக்கனத்தைக் கடைப் பிடிக்க முடியும்.







# வட ஆர்க்காடு மாவட்டத்தில் தன்னிறைவுத் திட்டப் பணிகள்

ஆ.பன்னீர் செல்வம்,
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,
வட ஆர்க்காடு மாவட்டம்.

கிராமங்களின் அடிப்படை வசதிகளை ஒரு கால கட்டத்திற்குள் நிறைவேற்றி கிராம மக்களின் பொருளாதாரம் முன்னேற்றம் அடைய தமிழ்நாடு அரசால் ''தன்னிறைவுத் திட்டம்'' என்ற திட்டம் 1980 முதல் 1982-83 ஆண்டுகளில் மூன்று கட்டமாகச் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் கீழ், கீழ்க்கண்ட பணிகள் ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் நேரடியாகச் செயல்படுத்தப்பட்டுள்ளன.


1. இணைப்புச் சாலைகள் இல்லாதகிராமங்களுக்கு இணைப்புச் சாலை அமைத்தல், மண்சாலைகளைக் கப்பிச் சாலைகளாக மாற்றுதல். 2. பாதை போக்குவரத்திற்குத் தேவையான சிறு பாலங்கள் கட்டுதல்3.புதிய பள்ளி கட்டடங்கள் கட்டுதல் 4. தாய் சேய் நலவிடுதிகளுக்குக் கட்டடம் கட்டுதல் 5. ஆதிதிராவிடர் குடியிருப்புகளிலிருந்து மயானம் செல்லும் சாலை வசதி 6. சிறு பாசன மேம்பாடு.

இத்திட்டம் வடஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள 36 ஒன்றியங்களில் 3 கட்டத்தில் செயல்படுத்தி முடிக்கப்பட்டது. 1980-81-ஆம் ஆண்டு 5 ஒன்றியங்களிலும் 1981-82 ஆம் ஆண்டு 15 ஒன்றியங்களிலும், 1982-83 ஆம் ஆண்டு 16 ஒன்றியங்களிலும் செயல்படுத்தப்பட்டு முடிக்கப் பட்டது.

1980-81ஆம் ஆண்டு தன்னிறைவுத் திட்டம்செயல்படுத்தப்பட்ட ஒன்றியங்கள்:
1. திருவண்ணாமலை, 2. துரிஞ்சாபுரம், 3. கீழ்பென்னாத்தூர், 4. போளூர், 5. கலசபாக்கம்.

1981-82ல் தன்னிறைவுத் திட்டம் செயல்படுத்தப்பட்ட ஒன்றியங்கள்: 1.அரக்கோணம், 2. சோளிங்கர், 3, அணைக்கட்டு. 4. திமிரி, 5. மேற்கு ஆரணி, 6, அனக்காவூர், 7. தெள்ளார். 8. வந்தவாசி, 9. புதுப்பாளையம், 10. கந்திலி, 11. நாட்றம்பள்ளி, 12. ஆலங்காயம், 13. பேர்ணாம்பட்டு, 14. குடியாத்தம், 15. கே.வி.குப்பம்.

1982-83 தன்னிறைவுத் திட்டம் செயல்படுத்தப்பட்ட ஒன்றியங்கள்: 1. திருப்பத்தூர், 2.காட்பாடி, 3. வேலூர், 4. வாணியம்பாடி, 5. ஆர்க்காடு 6.மாதனூர், 7. வாலாசா, 8. காவேரிப்பாக்கம் 9. நெமிலி, 10. செய்யார் 11. வெம்பாக்கம், 12. ஆரணி, 13.



பெரணமல்லூர், 14. செங்கம், 15. சேத்துப்பட்டு, 16. தண்ராம் பட்டு.

இத்திட்டத்தின் கீழ் 36 ஒன்றியங்களைச் சேர்த்து 7476 பணிகள்ரூ·15.67கோடிசெலவினத்தில் மேற்கொள்ளப்பட்டுமுடிக்கப்பட்டுள்ளன.

இணைப்புச் சாலைகள் திட்டத்தின் கீழ் 3002 கி.மீ. நீளமுள்ள சாலையினை மேம்படுத்த 2563 பணிகள் எடுத்துச் செய்து முடிக்கப்பட்டுள்ளன. இதற்கென ரூ.5.56 கோடி செலவிடப்பட்டுள்ளது.

பாதைப் போக்குவரத்திற்கு வசதியாக, கிராமச்சாலைகளில் 3419 சிறு பாலம் கட்டும் பணிகள்ரூ·4.56 கோடிசெலவினத்தில் மேற்கொள்ளப்பட்டு கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

**பள்ளிக் கட்டடங்கள்**

ஊராட்சி ஒன்றியங்களின் ஆரம்ப மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் சொந்தக் கட்டடம் ஒன்று கூட இல்லாத பள்ளிகளுக்கும், போதிய கட்டட வசதி இல்லாத பள்ளிகளுக்கும் கூடுதல் கட்டட வசதி செய்துதர எனவும், 609 கிராமங்களில் 609 பள்ளி கட்டடங்கள்ரூ·3.43 கோடி செலவினத்தில் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன, இத்திட்ட செயல்முறைக்குப் பின் சொந்தக் கட்டடம் இல்லாத பள்ளியே இல்லை என்ற நிலை இம்மாவட்டத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஊராட்சி ஒன்றியங்களில் இதுவரை போதிய நல்ல கட்டிட வசதி இல்லாத நிலையில் செயல்பட்டு வந்த 112 மகப் பேறு மையங்களுக்கு கட்டடங்கள் ரூ·73.57 இலட்சம் செலவிடப்பட்டுக் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

ஊராட்சி ஒன்றியங்களின் கீழ் நல்ல வசதியற்ற கட்டடங்களில் நடைபெற்றுவந்த 55 கிராமீய மருந்தகங்களுக்கு வசதியாகக் கட்டடங்கள்ரூ·36.22 இலட்சம்செலவில் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன.



**ஆதிதிராவிடர் குடியிருப்பிலிருந்து மயானம் செல்லும் சாலை வசதி**

இத்திட்டத்தில் 504 அரிசன குடியிருப்புகளில் மயானங்களுக்கு செல்ல வசதியற்ற நிலை இருந்து வந்த நிலை நீக்கி 319.2. கி.மீ. சாலை ரூ.24.72 இலட்சங்களில் முடித்ததின் பேரில் போதிய வசதி செய்து தரப்பட்டுள்ளது.

ஒன்றிய பராமரிப்பில் இருந்து வரும் 214 சிறுபாசன ஆதாரங்களை மேம்படுத்தும்பணிரூ·15.54 இலட்சம் செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளது.








# வன இயல் ஆராய்ச்சி நிலையம் செல்வோம் வாரீர்!


கோத்தகிரி மலையேறும் சாலை—அதில்
குளிர்காற்று மிதந்து வரும் காலை
பூத்து மணங் கமழுகின்ற மேடு—அது
புள்ளினங்கள் வாழுகின்ற வீடு
வனவிலங்கு குடியிருக்கும் காடு—அது
வன இயலைப் படிப்பதற்கு ஏடு
மனத்தினிலே கற்பனைகள் பாயும்—வண்ண
மயில் கூட்டம் காட்சி தந்து மேயும்
உயர்மரங்கள் நேர்வரிசை பாரு—பல
ஒப்பற்ற செடிகொடிகள் வேறு
அயலினிலே வாரணங்கள் நோக்கும்—அவை
அத்தனையும் மேய்ந்து விடப் பார்க்கும்
காட்டாறு பாய்ந்து வரும் காணு—அதில்
கடல் அலையாய் மோதிடுமே தேனு
கூட்டமாய் கலைமான்கள் தோன்றும்—அவை
குதித்தோடும் காண்பதற்கு என்றும்
வராகங்கள் படைபடையாய் நின்று—அங்கே
வளர்பயிரை நாசமிடுந் தின்று
இராக்காலக் காவலர்கள் சென்று—அவை
எட்டாமல் ஓட்டிடுவர் வென்று
மரத்தினிடை பயிர் செய்யும் நோக்கம்—அது
மனமகிழச் சேர்த்துவிடும் ஆக்கம்
சிரத்தையொடு வேலை செய்யும் எண்ணம்-அது
செயலினிலே தெரிந்து விடும் திண்ணம்
பருத்தியுடன் பயறு வகை பாரு—அங்கே
பசி நீக்கும் தானியங்கள் வேறு
விருத்தி தரும் காய்கறிகள் தொங்கும்—அதை
விற்றிடலாம் வீதி வழியெங்கும்
கருத்தான கொள்கையினை யேற்று—பண்ணை
காடு தரும் செல்வமதைப் போற்று
உருத்தோடுழைத்திடுவோம் வாரீர்—நல்ல
ஊதியம் கிடைத்து விடும் பாரீர்!

—டாக்டர் சு. சடையப்பன்



# மாணவர் பக்கம்

மாஸ்கோவில் அமைக்கப் பட்டிருக்கும் தொலைக்காட்சி தொழில் நுட்பக் கோபுரம் இது பாதாள ஒலிபரப்பு, வானொலி, அஞ்சல் துறையின் கோன்கள் ஆகிய அனைத்தின் தகவல் தொடர்பும் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது. உன் நாட்டு, அயல் நாட்டு தொலைக் காட்சி நிலையங்களும் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளன. 1983-ல் சிறந்த தகவல் தொடர்பு நிலைய மாக இது உள்ளது.





## வையம் வாழ்த்த வாழ்ந்திடு!

வளர்ந்திடு தம்பி வளர்ந்திடு
வான் அளாவ வளர்ந்திடு
உயர்ந்திடு தம்பி உயர்ந்திடு
உலகம் போற்ற உயர்ந்திடு!

புகழ்பெறு தம்பி புகழ்பெறு
பூமியே போற்றப் புகழ்பெறு
முன்னேறு தம்பி முன்னேறு
முனைந்து விரைந்து முன்னேறு!

ஓங்கிடு தம்பி ஓங்கிடு
உயர்ந்து தழைத்து ஓங்கிடு
வாழ்ந்திடு தம்பி வாழ்ந்திடு
வையம் வாழ்த்த வாழ்ந்திடு!

—அரக்கோணம் சங்கரபாண்டியன்

## வினாவும் - விடையும்

**வினா:** நாம் நடக்கும்போது, வலது கால் முன் செல்ல இடது கை முன்வருவதும், இடதுகால் முன் செல்ல வலது கைமுன் வருவதும் ஏன்?

**விடை:**

மனித உடலமைப்பு இரு கால் நடைக்கு ஏற்றதாக அமையவில்லை. நிற்கும் போதே நிலைப்பில்லா நிற்பில்தான் நிற்கிறோம். புவியீர்ப்பு மையம் உயர்ந் திருப்பதோடு அதனின்று இறங்கும் நேர் குத்துக்கோடு தளமையத்தில் விழாமல் சற்றுப் பின்னொதுங்கி விழுகிறது. எனவே கருத்தின்றி ஒரு காலைத் தூக்கினால், பின் சாய்வோம். நடக்கும்போது, எண்ணி நடை போடுவதில்லை. அப்படிச் செய்வது உடல் தசைகளை மிகவும் வருத்தும். மலைப்படி ஏறி, இறங்குபவர்கள் இதனை நன்கு உணர்வர். எனவே, எண்ணாமல் நடக்கும் போது, ஒரு காலை ஊன்றி மறு காலை முன்வைக்க எடுக்கும்போது, பின் சாயாமல் நிற்க உதவியாக, ஊன்றிய கால் பக்கத்திலுள்ள, கை தானே முன் செல்லு கிறது. இது நம் அறிவு எட்டாமல் தானே நிகழும் வினை; இது மாற்று நீட்டுத் தன்னெதிரிணக்கம் (Crossed Extension Reflex) என்று உடலியக்கவியலில் கூறப் படும். ஒட்டுக்குக் கீழ் நிலையிலுள்ள பெரு மூளைப் (sub cortical cerebrum) பகுதி களில் இவ்விணக்கம் திரும்பும். மாடு, ஆடு, பூனை, நாய் முதலிய விலங்குகள் குறுக்குக் கால்களை நகர்த்தி ஊர்வதன் அடிப்படையிலேதான் இந்த இயக்கம் நடைபெறுகிறது.

**வினா:** இள நீரைக் குடித்தால் சளி பிடிக்கும் என்பது உண்மையா?

**விடை:**

இளநீரைக் குடித்தால் சளி பிடிக்கும் என்ற கூற்று தவறு. சளிக்குக் காரண மாவது ''வைரஸ்'' எனப்படும் நுண் ணுயிர்கள். இளநீரிலோ, முற்றிய தேங் காய் நீரிலோ அவை இல்லை; அவை பற்றிப்பெருகவும் இந்நீர்கள் உதவுவ தில்லை.

நன்றி: கலைக்கதிர்

# செய்தியின் கதை

## —தெரிந்து கொண்டால் நல்லது!

அநேக ஆண்டுகளுக்கு முன்பு செய்திகளை ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு எளிதில் அனுப்ப முடியாது. ரோமர்கள் இங்கிலாந்தை ஆண்டபொழுது எதிரிகளின் தாக்குதலை அறிந்து கொள்வதற்கு நெருப்பு அல்லது புகை போன்றவை கொண்டு நாட்டு மக்களுக்குக் குறியாகக் காட்டப்பட்டன. இம்முறை பிற் காலத்தில் தோன்றிய நெப் போலியன் போராட்டத்திலும் கையாளப்பட்டது.

மின்சாரம் கண்டுபிடிப்பதற்கு முன்பு மக்கள் ஆங்காங்கு அசை யும் கைகாட்டி மரங்களை அமைத் துச் செய்திகளைச் சுருக்கமாக நாடெங்கும் பரப்பினர். சில இடங்களில் குதிரைகள் மூலமாக வும், ஆட்கள் வாயிலாகவும் முக்கியச் செய்திகளைப் பரப்பி னர். வீட்டைவிட்டு வெளியூர் களுக்குச் செல்லுபவர்கள் தத்தம் வீட்டுப் புறாக்களைக் கொண்டு வீடுகளுக்கு வேண்டியவற்றை அறிவித்தனர். புறாக்கள் வீட்டி லேயே வளர்க்கப்பட்டதால் எவ் விடத்தில் தனிமையாக விட்ட போதிலும் வீடு வந்து சேரும் பழக்கத்தைக் கொண்டிருந்தன. அப்புறாக்களின் கழுத்துக்களில் கட்டப்பட்ட கடிதங்கள் தவறா மல் வீட்டு மக்களுக்குக் கிடைத் திருந்தன. மக்களின் வாழ்க்கை மிகச் சுறுசுறுப்பாகவும் கால தாமதமுமின்றி நடைபெற வேண் டியதாகையால் விஷயங்கள் எளிதில் தெரிந்து கொள்வதற்குப் பல மாறுதல்கள் இன்றியமை யாதிருந்தன. தேவைக்கேற்ற வாறு மின்சாரம் கண்டுபிடிக்கப் பட்டு அதன் மூலமாகத் தந்தி, ஒலிபெருக்கி, வானொலி போன்ற அரிய கருவிகள் தோற்றுவிக்கப் பட்டன. இந்த வசதிகளிருந் தும் செய்திகளைத் திரட்டி யனுப்புவதற்கு ஆட்கள் வேண்டி யிருந்தது. இப்பணியைப் பெரி தும் போற்றிச் செய்திகளைப் பல நாடுகளுக்கும் அனுப்ப முன்வந்த பெரியார் ஜூலியஸ் ராய்ட்டர் அவர்களே.

ராய்ட்டர் ஜெர்மனிய நாட்டி லுள்ள கேஸஸ் என்ற பட்டணத் தில் கி. பி. 1816-ஆம் ஆண்டு பிறந்தார்.

ராய்ட்டர் தனது காரியத்தை நிறைவேற்றுவதற்குச் சில புறாக் களை வாங்கினார். நம்பிக்கை யுள்ள ஒரு நண்பனைத் தனக்குப் பிரதிநிதியாகப் ப்ரஸல் என்ற நகரில் அமர்த்தினார். ஏனெனில் ஐரோப்பாவிற்கு அந்நகரம் ஒரு பெரிய வியாபார இடமாக இருந்தது. பாரிஸ், பெர்லின் முதலிய முக்கிய பட்டணங்களு டன் தொடர்பு கொண்டிருந்தது.



பிரஸ்ஸல் நகரச் செய்திகள், எக்ஸ்லாசேபலுக்குக் கோச்சு வண்டி மூலமாக அனுப்பப்பட்டி ருந்தன. இதை உணர்ந்த ராய்ட் டர் அந்நகரச் செய்திகளைப் புறாக்களின் உதவி கொண்டு மூன்று மணிநேரம் முன்னதாகவே கொண்டு வந்து நகர பத்திரிகை களுக்கு அளித்துப் பெரும் பொருள் கொண்டார். இக்காரி யங்களில் இவருடைய மனைவி யாரும் பெரிதும் உதவிசெய்தார்.

பிரெஞ்சு சர்வாதிகாரியான நெப்போலியன் ஆஸ்திரிய மக்க ளுடன் போர்தொடுக்கவும் அவர் களை இத்தாலியிலிருந்து அப் புறம் ஒட்டவும் தீர்மானித்து அதற்கேற்ற திட்டமொன்றை இரகசியமாக வைத்துக்கொண்டு பிரெஞ்சு அரசு அலுவலகத்தில் வசிக்க விரும்புங் காலையில், உலக மக்கள் யாவரும் போர் உண்டாகும் என்று அஞ்சிக் காலங் கழிக்கும் சமயத்தில், இரகசியத் திட்டத்தை எல்லோருக்கும் முன்பேதான் மக்களுக்குவிடுவிக்க வேண்டும்என்ற ஆசையைராய்ட் டர் கொண்டிருந்தார். இதற்கா கப் பிரெஞ்சு அலுவலகம் கூடும் சமயம் பாரிசுக்கும், இலண்டனுக் குமிருந்த தந்தி வசதியைத் தன் வசப்படுத்திக் கொண்டதுமன்றி நெப்போலியன் திட்டத்தை முத் திரையுடன்பெற்றுக்கொண்டார். அவ்வரசாங்கத்தாருக்குத் தான் பேச்சு ஆரம்பிப்பதற்கு முன் திட்டத்தைப் பல நிருபர்களுக்கு தந்தி வாயிலாக உடனுக்குடனே அனுப்பினார். பத்திரிகைஉலகின் சரித்திரத்திலேயே, உடனடி யாகச் செய்திகளைப் பெற்றது இதுவே முதல் தடவையாகும்.

## எழுதுங்கள்!

மாணவ மணிகளே!

இது உங்கள் பக்கம். இந்தப் பக்கத்தில் நீங்கள் கதை, கட்டுரை-கவிதை - துணுக்குகள் எழுதி அனுப்பலாம். ஆனால் அவையெல்லாம் உங்கள் சொந்தக் கற்பனையாக இருத் தல் வேண்டும்.

உங்களில் யாரேனும் ஏதாவது ஒரு துறையில் (கதை, கட்டுரை, விளையாட்டு, ஓவியம், நடனம்) சிறந்தவர்களாக இருக்கலாம். அவர்கள் தங்கள் புகைப்படத் துடன், தங்களைப் பற்றிய குறிப்பையும் எழுதி, ஆசிரியர் அல்லது தலைமையாசிரியர் கையொப்பத்துடன் அனுப்பி வைக்கலாம்.

—ஆசிரியர்



மதுரை சட்டக் கல்லூரியில் படிக்கும் மாணவர் படமாத்தூர் நூர்முகமது மீரா.

இவர் கதை, கட்டுரை, கவிதை எழுதுவதில் ஆர்வ மிக்கவர். நல்ல எழுத்தாள ராக வரவேண்டும் என விரும் பும் இவர் பலரின் பாராட்டுதல் களைப் பெற்றுள்ளார்.

**நீ**டும் தீக்காயங்களுக்கு ஆளான வர்களுக்கு மருத்துவம் செய்வதில் வலி போக்குவதற்கே முதலிடம் அளிக்க வேண்டும்.

தீக்காயமடைந்தவர் விரைந்து நலம் பெறுவதைத் தடுப்பவை இரண்டு; ஒன்று சீழ் பிடித்து, நோய் பரவுதல், அடுத்தது வலி. நோய் தொத்துவதை 'ஆண்டி பயாட்டிக்' மருந்துகள் கொடுத்துத் தடுத்துவிடலாம். தீப்பட்ட பிணியாளரின் வலியைக் குறைக்கப் பெருமளவு போதை மருந்துகளை மருத்துவர்கள் கொடுக்கிறார்கள்.

போதை மருந்துகளினால் கெடுதல்கள் பல விளைகின்றன. எனவே, வலியைக் குறைக்க மாற்று வழிகள் காண்பதில் அலபாமா பல்கலைக் கழக மருத்துவமனை ஆராய்ச்சியாளர்கள் முனைந்துள்ளனர்.

மின்விசை மூலம் நரம்புகளில் உணர்ச்சி ஏற்படுத்துவது ஒரு முறை. தீப் புண் பட்டவரின் தோலை ஒட்டியுள்ள மேல் நரம்புகளில் வலுவில்லாத மின்விசையைப் பாய்ச்சுகிறார்கள். இந்த நரம்புகள்தாம் இடைவிடாமல் வலி ஏற்படுத்துபவை.

தீப் புண் பட்டவர் உடம்பைத் தொட்டால்கூட அவருக்கு உயிரே போய் விடுவதுபோல வலி உண்டு பண்ணுபவை. இடையறாமல் மின்விசையைப் பாய்ச்சுகையில் வலி மறைந்து, இதமான ஓர் உணர்வு இருக்குமாம்.

வலி போக்குவதில் போதை மருந்துகளுக்கு இணையானது', வலுவில்லாத மின்விசையை உடம்பில் பாய்ச்சுவது என்று ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள். வலி மூளையை எட்டாமல் மின்விசை தடுத்து விடுகிறதென அவர்கள் நம்புகிறார்கள். பத்தாண்டுகளாக, அறுவை மருத்துவத்துக்குப்பின்பு வலியைக் குறைக்கத் தோலில் மின்விசை பாய்ச்சுவது புழக்கத்திலிருந்து வருகிறது. ஆனால் இதுவரையில் தீப் புண் வலி போக்கப் பயன்படுத்திப் பார்த்ததில்லை.

போதை மருந்துகள் பிணியாளரின் பசியைக் குறைக்கின்றன. ஆனால் தீப்புண் பட்டவருக்கு உடல் திசுக்கள் விரைவில் மீண்டும் வளர அதிக 'கலோரிகள்' (ஊட்டம்) உள்ள உணவு தேவை. எனவே, மின்விசை மருத்துவம் சிறப்புடையது.

அறவே போதை மருந்துகள் கூடாது என்பதில்லை. தீயில் வெந்தவுடன் சில நாட்களுக்கு அவை வழக்கம்போலத் தேவை. ஆனால் பின்னர் அவற்றிற்குப் பதில் மின்விசை மருத்துவம் விரும்பத் தக்கது. போதை மருந்துகள்தேவைப்படமாட்டா.

**கடலை எண்ணெய் மூலம் கார் ஓட்டலாம்**

சூரிய காந்தி எண்ணெயும், கடலை எண்ணெயும் பலகாரங்கள் செய்யத்தான் பயன்படும் என்று எண்ண வேண்டாம். அவைகளைக் கொண்டு கார்களையும், பஸ்களையும் ஓட்டமுடியும்!

கச்சா தாவர எண்ணெயைப் பதப்படுத்தினால் அது டீசலை விட அதிகச் சக்தி கொண்டதாக இருக்கும்.

1982-ல் தாவர எண்ணெயைப் பயன்படுத்தி 6 சதவீத டீசல் தேவையைச் சமாளிக்க முடியும் என்றும், 1985-ல் 16 சதவீத டீசல் தேவையைச் சரிகட்ட இயலும் என்றும் பிரேசில் நாடு நம்பிக்கை கொண்டுள்ளது.

அமெரிக்காவிலும் இத்தகைய ஆராய்ச்சிகள் நடந்து வருகின்றன. சூரிய காந்தி எண்ணெய் மூன்று பங்கும், டீசல் ஒரு பங்கும் கலந்து அதனை எரிபொருளாகப் பயன்படுத்தினால், தனி டீசலுக்கு உள்ள சக்தி இருப்பதாக அவர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

ஆலிவ் எண்ணெய் யூகலிப்டஸ் எண்ணெய் ஆகியவையும் எரிபொருளாகப் பயன்படும் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

**அரிய புதிய வைரக்கல் கண்டு பிடிப்பு**

வண்ணங்கள் பலவற்றை உமிழும் ஒரு புதிய வைரக்கல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. வைரக்கல் நிபுணரும், வைரம் மற்றும் நகைகள் ஏற்றுமதி வளர்ச்சிக் குழுவின் வைரச் சோதனை நிலையத்தின் வட்டார அலுவலருமான திரு சேசர் வசிஷ்டா இந்த அரிய வைரத்தைக் கண்டுபிடித்துள்ளதால், அதற்கு 'வசிஷ்தைட்' என்று பெயரிடப்பட்டுள்ளது.



**உ**ண்மையினாலும், அன்பினாலும் நாம் உலகத்தையே வெற்றி கொள்ளமுடியும் என்பது என் உறுதியான நம்பிக்கை.

'**த**வறு செய்வதில் பிழையில்லை; ஆனால், தவறு செய்ததை அறிந்து கொண்ட பின்னர், அதைத் திருத்திக் கொள்ளாமலிருப்பது தவறு ஆகும்.

**ப**ழிவாங்கும் மனப்போக்கு இல்லாமல் நாம் நம்பிக்கை கொண்டுள்ள இலட்சியங்களுக்காக உயிரையும் துறக்கும் தெய்வீகக் கலையை நாம் மறந்து விட்டோம்.

**தி**யாக வாழ்வு ஆனந்தமானதல்லவா? கடமையை ஒரு சுமை என நினைத்து விட்டால் புனிதமான எண்ணத்திற்கே இடமில்லை.

**கோ**டிக் கணக்கான மக்களுடன் பேசும் சக்தி கொண்ட கலையையும் இலக்கியத்தையுமே நான் விரும்புகிறேன்.

# ஆதி திராவிடர் நலம்


**டி. எம். ஆறுமுகம்,**
**இ.ஆ.ப.**
**ஆதிதிராவிடர்-பழங்குடியினர் நல இயக்குநர்.**


**1981** ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கின்படி தமிழ் நாட்டின் மொத்தமக்கள்தொகை 484 இலட்சமாகும். இதில் ஆதி திராவிடர் 88.86 இலட்சம் பேர் ஆவர். இது மொத்த மக்கள் தொகையில் 18.34 விழுக்காடு ஆகும்.

தமிழ்நாட்டிலுள்ள ஆதி திராவிடர் முன்னேற்றத்திற்காகத் தமிழக அரசு கொண்டுவந்து செயற்படுத்திக் கொண்டிருக்கும் கல்வி, தொழில், பொருளாதார மேம்பாடு, கூட்டுறவு வீட்டுவசதி, கடன் வசதி மற்றும் பல்வேறு அரசுத் துறைகளின் திட்டங்களின் கீழ் பல நலன்களையும் இவர்கள் பெறுகின்றனர்.

ஆதி திராவிடர்களின் சமூகப் பொருளாதார முன்னேற்றத்தைத் தீவிரப் படுத்த புதிதாகக் கொண்டு வரப்பட்ட சிறப்பு உட்பகுதித் திட்டம் 1980-81ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப் பட்டு வருகிறது. இத்திட்டத்தின் நோக்கங்களாவன:

1. ஆதி திராவிடர்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களில் ஆறாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் வறுமை நிலையிலிருந்து விடுபட்டு நல்ல நிலைமைக்கு வர உதவுதல்.

2. ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, மின் வசதி, சுகாதார வசதி, பள்ளிக்கூட வசதி, முதலியவற்றைச் செய்துகொடுத்தல்.

ஆதி திராவிடர் - பழங்குடியினர் நலத்துறையின் மூலம் தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ள பணிகள் பின்வரும் மூன்று பெருந்தலைப்புகளின் கீழ் வகைப் படுத்தப்பட்டு செயல் படுத்தப்பட்டு வருகின்றன.

1. கல்வி.
2. வேலை வாய்ப்பு, பொருளாதார மேம்பாடு.
3. பொது சுகாதாரம், வீட்டு வசதி.

**மேலும் தமிழ்நாடு அரசு தீண்**டாமை ஒழிப்பிற்காகவும் பல திட்டங்களைச் செயல்படுத்தி இவர்கள் மற்ற சமூகத்தினரோடு சரி சமமாக வாழ வழி வகை செய்திருக்கிறது.

தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் ஆதி திராவிட குடியிருப்புகளுக்குப்பின்வரும்வசதிகள் முழுவதுமாகச் செய்து கொடுக்க இத்துறை முனைந்து செயல்பட்டுள்ளது.

1. குடிநீர் வசதி செய்தல்.
2. ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கும் - இடுகாடுகளுக்கும் இணைப்புச் சாலைகள் போடுதல் சிறு பாலங்கள் அமைத்தல், இடுகாடுகள் அமைத்தல்.
3. பள்ளிக் கட்டடங்கள் கட்டுதலும், மற்ற பணிகளும்
4. இதர பணிகள்.

1949ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் இத் துறைக்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. ஒரு கோடிக்கும் குறைவு. 1977-78ஆம் ஆண்டில் வரவு செலவுத் திட்டத்தில் இத் துறைக்கு ஒதுக்கப்பட்ட தொகை 15.95 கோடியாக உயர்ந்து நடப்பு ஆண்டில் அதாவது 1983-84ஆம் ஆண்டில் இத்துறை வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு ரூ. 44.61 கோடியாகும். சில முக்கியமான திட்டங்கள் வருமாறு:

**கல்வி:**

கல்லூரி - தொழிற் பயிற்சி-பள்ளி மாணவ மாணவியர்களுக்கு தனி ஒருவருக்கு உணவுக் கட்டணம் கணிசமான அளவுஉயர்த்தப் பட்டு கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகிறது.

| | சென்னை ரூ. | வெளியூர் ரூ. |
|---|---|---|
| கல்லூரி விடுதி | 95 | 80 |
| தொழிற்பயிற்சி விடுதி | | |
| பள்ளி விடுதி | 60 | 60 |

214 விடுதிகளுக்கு கட்டடங்கள் கட்டப்பட அங்கீகரிக்கப்பட்டு 74 விடுதிகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 1983-84ல் 5 உயர் நிலைப்பள்ளிகள் பெண்களுக்குத் தனியாகப் பிரிக்கப்பட்டுள்ளன. 1983-84ம் ஆண்டில் புதிய மாணவரில்லங்களைத் திறப்பதற்கும்




ஏற்கனவேயுள்ள 695 மாணவ இல்லங்களைப் பராமரிப்பதற்கும் ரூ. 491.13 இலட்சம் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

இதர கல்விச் சலுகைகளைப் பொறுத்த மட்டிலும் ஆண்டொன்றுக்கு இரண்டு ஜோடி சீருடைகளும், அரசுப் பள்ளிகள் மற்றும் விடுதிகளில் தங்கிப்படிக்கும் மாணவ மாணவியருக்கு வழங்கப்படுவதோடு, முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்தின் கீழ் இலவச மதிய சத்துணவும் வழங்கப்படுகிறது. 1.74 இலட்சம் மாணவ மாணவியர்கள் இதனால் பயனடைகின்றனர்.

இம்மாணவர்களுக்கு 10-ஆம் வகுப்பு வரை இலவச நோட்டுப் புத்தகங்கள், சிலேட்டுகள், பாடப் புத்தகங்கள் வழங்கப்பட்டு இதனால் 7.80 இலட்சம் மாணவமாணவியர்கள் பயனடைகின்றனர். 1976-77ல் வழங்கப்பட்ட கடன் உபகாரச் சம்பளம் 11.24 இலட்சம். அதிகமான மாணவ மாணவியர்பயனடையும் வகையில் 1982-83ல் 54.18 இலட்சங்கள் வழங்கப்பட்டுள்ளன.1977-78முதல் 82-83 முடிய 35210 மாணவர்களுக்கு கடன் உபகாரச் சம்பளமாக மொத்தம் ரூ.257.83 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

படிப்புக் கட்டணச் சலுகை பெற வருமான வரம்பு நிர்ணயம் 1977-78ம் ஆண்டு முதல் நீக்கப்பட்டுள்ளது. மைய அரசு உபகார சம்பளம் பெறுவதற்கான உச்ச வரம்பு பெற்றோர் - பாதுகாவலர் ஆண்டு வருமானம் தற்போது ரூ. 12,000 ஆகும். மாநில அரசு உபகாரச் சம்பளத்துக்குத் தகுதி பெற பெற்றோரது வருமான வரம்பு ரூ. 3000லிருந்து ரூ.6000 ஆக தற்பொழுது உயர்த்தப்பட்டுள்ளது. உபகாரச் சம்பளத் தொகையை கல்வி நிறுவனத்தின் முதல்வரே வழங்குவதற்கு அதிகாரமளித்து அரசாணைகள் பிறப்பித்து அத்தொகையினை மாணவர்கள் விரைவில் பெறுவதற்கு தமிழக அரசு ஏற்பாடுகள் செய்துள்ளது.

கல்வியில் நல்ல ஆர்வம் காட்டும் மாணவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு (1) ரூ. 300 தனித் தகுதி மானியமாகவும் (2) மாவட்ட அளவில் நல்ல மதிப் பெண்கள் பெறுபவர்களுக்கு ரூ. 800 லிருந்து ரூ. 960 வரையும் (3) காந்தி நினைவுத் தொகையான முதலாண்டுக்கு ரூ.1500ம் தொடர்ந்துமேலும் ஐந்து ஆண்டுகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 1000 வீதமும் சேர்த்து வழங்கப்படுகின்றன. சட்டப் படிப்பு முடித்தமாணவர்களுக்குத்தொழி



லில் ஈடுபட கடன் மானியத் தொகை வழங்கப்படுகிறது. பட்டதாரி மாணவர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளித்து அனைத்திந்திய பணிகளில் சேர வாய்ப்பு ஏற்படுத்தும் நோக்கத்துடன் அவர்களுக்கு முன்னோடிப்பயிற்சி நிலையம் சென்னையில் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இதன் மூலம் அனைத்திந்தியப் பணிகளில் இதுவரை 44 நபர்கள் வேலை வாய்ப்புப் பெற்று பயனடைந்துள்ளார்கள்.

## வேலை வாய்ப்பு:

தமிழக அரசு அலுவலகங்கள் மற்றும் அரசு நிறுவனங்களில் உள்ள வேலை வாய்ப்புகளில் இம்மக்களுக்கு 18 விழுக்காடு இடத்தை ஒதுக்கீடு செய்து அத்திட்டம் செயல்படுவதை ஆய்வு செய்வதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் ஒரு மேல் மட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இதனுடைய உட்குழுவொன்று அரசு இரண்டாவது செயலரின் தலைமையின் கீழ் ஏற்படுத்தப்பட்டு மேற்படி திட்டச் செயல்பாடுகளை அவ்வப்பொழுது கண்காணித்து வருகின்றது.

## பொருளாதார மேம்பாடு

தாழ்த்தப்பட்ட மக்களின் பொருளாதார மேம்பாடுக்காகக் கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

விவசாயத்துக்காகப் பாசனக் கிணறு வெட்டுவதற்கு ரூ.5000 வரையிலும், உழவு மாடுகள், விலங்குகள் வாங்க ரூ. 600ம் வழங்கப்படுகிறது. இவற்றிற்காக 1983-84ம் ஆண்டில் 8.41 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.


தொழிற் பயிற்சி பெற்றவர்களுக்கு, கருமார், தச்சு, தையல், தோல் தைக்கும்தொழில்போன்ற இருபத்தொரு வகையான தொழில்களுக்கு இலவசமாகத் தொழிற் கருவிகள் வழங்குதவற்காக நடப்பு ஆண்டு ரூ. 9.40 இலட்சம் ஒதுக்கப்பட்டு மேற்படி கருவிகளை வாங்கி வழங்க ஆவன செய்யப்பட்டு வருகிறது.

சைக்கிள் கடைகள், உணவு விடுதி, மளிகை, அச்சகம் போன்ற 31வகை சிறு தொழில்கள் நடத்துவதற்குச் சிறுதொழில் கடன் வழங்கும் திட்டம் 1968-69 லிருந்துசெயல்படுத்தப்படுகிறது. நடப்பு ஆண்டில் இதற்காக ரூ. 11.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

கறவை மாடுகள் வாங்குவதற்கு ஆதி திராவிடர் பால் வழங்கும் கூட்டுறவு சங்கங்கள் ஆங்காங்கு அமைக்கப்பட்டு அங்கத்தினர் பங்குக்காக உதவித் தொகை ரூ. 500லிருந்து ரூ.1500 வரை மான்யம் வழங்கப்பட்டுள்ளது. மற்றும் பல்வேறு கூட்டுறவு சங்கங்கள், கூட்டுறவு நூற்பாலைகள் முதலிய கூட்டுறவு நிறுவனங்கள் ஏற்படுத்தி பெருமளவில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைப்பதற்கு வழி வகைகள் செய்யப்பட்டு வருகின்றன. மேலும் அரசு நிலங்களை -உபரி நிலங்களை தகுதி பெற்ற ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மக்களுக்கு ஒப்படை செய்தும் அவர்களுக்கும் மற்றும் இந்த வகுப்புகளைச் சேர்ந்த நிலம் உள்ளவர்களுக்கும் விவசாயக் கிணறுகள் ஆழ் குழாய்க் கிணறுகள் முதலியன அமைத்து விவசாயத் துறையில் முன்னேறுவதற்கும் வழி வகை செய்யப்பட்டுள்ளது. இந்த மாநிலத்தில் செயற்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் ஆதி திராவிட மக்களுக்கு வருமானம் ஏற்படும் வகையில் அமைந்துள்ளன.

## சுகாதாரம்

சமுதாயத்தின் அடிப்படை



வசதுகளான வீட்டுமனை, வீட்டு வசதி, பொதுச் சுகாதாரம், குடிநீர்க் கிணறு, மின் வசதி மற்றும் இணைப்புச் சாலைகள் இவைகளை எல்லா ஆதி திராவிட குடியிருப்புகளுக்கும் தமிழக அரசு அமைத்துக் கொடுத்துள்ளது.

## வீட்டு வசதி

இத்திட்டத்தை விரைவுபடுத்தும் பொருட்டு 1973-74ஆம் ஆண்டு தமிழ்நாடு வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் ஆரம்பிக்கப்பட்டு வீடு கட்டும் பணி இந்தக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதுவரை தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி நிறுவனத்திற்கு 1979-80 முதல் 1982-83க்கான நிதி ஒதுக்கீடான ரூ. 5.70 கோடி வழங்கப்பட்டு(ஜூலை மாதம் 1983 வரை) 323 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும் 4,709 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

சலவைத் துறைகளை கன்னியாகுமரி, செங்கோட்டை வட்டம் (திருநெல்வேலி மாவட்டம்) இவைகளில் ஆண்டு ஒன்றுக்கு இரண்டு வீதம் கட்டும் திட்டம் 1978-79லிருந்து செயல்படுத்தப்படுகிறது.

## தீண்டாமை ஒழிப்பு

குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் 1976ஆம் ஆண்டு முதற்கொண்டு செயல்படுத்தப்படுகிறது. இதைக் கண்டிப்புடனும் தீவிரமாகவும் செயல்படுத்த காவல்துறை துணை இன்ஸ்பெக்டர் ஜெனரல் பதவித் தரத்தில் அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டு இருபது சுற்றுக் காவல் படைகள் அமைக்கப்பட்டுள்ளன. நான்கு தனி நீதி மன்றங்களும் அமைக்கப்பட்டுள்ளன. ஆதிதிராவிட சமுதாயத்தினைச் சார்ந்தவர்களுக்கு இலவசச் சட்ட உதவி கிட்டுவதற்கும் தமிழக அரசு வழி வகைகள் செய்துள்ளது.

கலப்பு மணம் புரிந்துகொண்ட ஆதி திராவிட மக்களை ஊக்குவிப்பதற்காக ரூ. 4000 ரொக்க மானியம், ரூ. 300 திருமணச் செலவுக்கு, பாராட்டு பத்திரம், 8 கிராம் தங்கப் பதக்கம் (14 காரட்) மற்றும் இதர வீட்டு வசதி அத்தம்பதியரின் குழந்தைகளுக்கு மருத்துவக் கல்வியில் முன்னுரிமை முதலிய சலுகைகளும் வழங்கப்படுகின்றன.

## சிறப்பு உட்பகுதித் திட்டம்

1980-81ல் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம் ஆண்டு ஒன்றுக்கு 1.8 லட்சம் குடும்பங்கள் வீதம் 1980 லிருந்து 1985 வரை மொத்தம் 9 லட்சம் குடும்பங்களை பல்வேறு அரசுத்துறை மற்றும் நிறுவனங்களில் செயல்படுத்தி வரும் பல முனைத் திட்டங்களின் மூலம் வறுமைக் கோட்டுக்கு மேலே கொண்டு வரும் இலட்சியத்துடன் இதுவரை 2,88,828 குடும்பங்களுக்கு உதவி செய்யப்பட்டுள்ளது.

## பழங்குடியினர் துணைத் திட்டம்

தமிழ்நாட்டிலுள்ள மொத்த மக்கட் தொகையில் 1.07 சதமாகப் பழங்குடியினர் இருந்தபோதிலும், தமிழக அரசு ஆதி திராவிடர் நலனுக்கெனச் செயற்படுத்தப்படும் சிறப்பு உட்பகுதித் திட்டத்தினைப் போல பழங்குடியினரின் முன்னேற்றத்திற்காகப்பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் சிறப்பு நடவடிக்கைகள் எடுத்துள்ளது. இத்துணைத் திட்டம் 1976-77ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. 1976-77ஆம் ஆண்டில் ரூ. 101.82 இலட்சமாக இருந்தது. 1983-84ஆம் ஆண்டில் ரூ. 600.58 இலட்சமாக உயர்ந்துள்ளது. இத்திட்டத்தின் படி பல்வேறு அரசுத் துறைகள் செயற்படுத்தி வரும் பலமுனைத் திட்டங்கள் அதாவது தோட்டக்கலை, கூட்டுறவு, கால்நடை வளர்ப்பு, வனவளப் பாதுகாப்பு முதலியவற்றின் மூலம் வறுமைக் கோட்டிற்குக்கீழிருக்கும்பழங்குடி மக்களில் 50 விழுக்காடு, அதாவது 15,000 குடும்பங்களை வறுமையிலிருந்து மீட்டு நல்வாழ்வு வாழச் செய்வதற்குத் தமிழக அரசு அரும்பாடுபட்டு வருகிறது.

## சிக்கப்பட்டுச் சிக்கல் தீர்ந்தது

தஞ்சை மாவட்டத்தில் அம்மாப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த சிக்கப்பட்டு என்ற கிராமத்தில் 50 ஆண்டுகளுக்கு மேலாக குளம் வெட்டப்படாமல், அதன்விளைவாக பிரச்சினைகளில் சிக்கல்களில் சிக்கியிருந்த அப்பகுதி மக்களின் குறை நீங்கும் வகையில், அவ்வூரிலுள்ள வெட்டுக்குளம் தற்போது தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் ஆழப்படுத்தப்பட்டு, ஊர் மக்களுக்கு, கால்நடைகளுக்குப் பயன்படுகிறது.

4 ஏக்கர் 60 செண்ட் பரப்பளவு உள்ள குளத்தில் நான்கு கரைகளையும் பலப்படுத்தியதால், கரையில் தென்னங்கன்றுகள் நடவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதுபோன்று இவ்வொன்றியத்தில் 30 குளங்கள் உள்ளன. இவையனைத்தும் ஒரு இலட்சத்து 36 ஆயிரம் ரூபாய் செலவில் ஆழப்படுத்தப்பட்டன. இதன் மூலம் 20 ஆயிரம் மனிதச் சக்தி நாட்கள் பயன்படுத்தப்பட்டன.



# தமிழகத்தில் சமூக நலக்காடுகள்

## நேற்று இன்று நாளை

### நேற்று :

பண்டைத்தமிழர் காடுகளின்பால் கொண்டிருந்த பற்றினால் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என நான்கு வகைப்படுத்தி வைத்தனர்.

''பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடையான் கண் படின்''

என்ற வள்ளுவரின் வாக்கின்படி பயனுள்ள மரங்களை உள்ளூரில் வளர்த்துவரும் பாங்கினை சங்க இலக்கியங்களிலேயே காணலாம். சமூக நலக்காடுகள் தொன்றுதொட்டு நிலவும் ஒரு விரிவான கலாச்சார மரபின் ஒரு எடுத்துக்காட்டு என்று கூறினால் மிகையாகாது.

ஊர் பொது இடங்கள், குளக்கரைகள், கோவில் வளாகங்கள் போன்ற பல்வேறு இடங்களில் பனை மரம், இலுப்பை, மா, அரசு போன்ற பல் வகை மரத் தோப்புகளை வளர்ப்பதினை நம் முன்னோர் நன்கு அறிந்திருந்தனர். இத்தகைய மரங்களின் வாயிலாக தமது அன்றாடத் தேவையை சடு செய்தும் வந்தனர். இத்துடன் அல்லாமல் வானளாவிய புனிய மரங்களைச் சாலை ஓரங்களிலும், நடந்து செல்வோர் மற்றும் பயணிகளின் நிழலுக்காகவும், பறவைகளின் புகலிடத்திற்காகவும் நட்டு வந்தனர். மேலும் வேம்பு, வில்வம், இலுப்பை, அரளி போன்ற மரங்களை வெட்டுவது அவர்களது சமய நம்பிக்கைக்கு முரணானது என்றும் கருதினர். ஆனால் காலப் போக்கில் மக்கள் தொகைப் பெருக்கத்தினாலும் எரிபொருள் பற்றாக்குறையினாலும் ஊர்ப் பொது இடங்களில் இருந்த மரங்களும், தனியார் நிலங்களிலுள்ள மரங்களும், வெட்டப்பட்டன. இதனால் கிராம மக்களின் மேய்ச்சல், பசுந்தாள் உரம் மற்றும் இதர தேவைகளுக்கு உள்ளூரில் சடு செய்ய முடியாத நிலை ஏற்பட்டது.

இத்தகைய சூழ்நிலை கிராமப் பொருளாதாரத்திற்கு ஊறு விளைவித்ததோடு அன்றி, அருகாமையிலுள்ள காப்புக் காடுகளிலிருந்தும் மரங்கள் வெட்டப்பட்டு அழிக்கப்பட்டதால், சுற்றுப்புறச் சூழ்நிலையில் மாறுதலை ஏற்படுத்தியதை நாம் கண்கூடாக அறிவோம்.

இதுபோன்ற சீர்கேடுகளை ஓரளவிற்குச் சீர் செய்யும்பொருட்டு, தமிழக வனத்துறை காப்புக் காடுகளில் மரங்கள் வளர்க்கும் பணியுடன், காப்புக் காடுகளுக்கு வெளியே அதாவது பல்வேறு அரசுத் துறைகளுக்குச் சொந்தமான நிலங்களிலும் ஊராட்சிகளுக்குச்சொந்தமான நிலங்களிலும் மரங்கள் வளர்க்க 1960-ஆம் ஆண்டில் சோதனைத் திட்டமிட்டு நாளடைவில் சிறிது சிறிதாக விரிவுபடுத்தப்பட்டது.

1960-61லிருந்து 1980-81 வரை சுமார் 1.69 இலட்சம் எக்டேர் பரப்பில் மரங்கள் நடப்பட்டு பராமரிக்கப்பட்டன. மேலும், சாலை கால்வாய், ஏரி ஓரங்களிலும் மரங்கள் சும்ார் 3600 கிலோ மீட்டர் நெடுகில் வளர்க்கப்பட்டன. மக்களை மரங்கள் நட ஊக்குவிக்கும் பொருட்டு சுமார் 107 இலட்சம் மரக்கன்றுகள் இலவசமாகவும் மிகச் சொற்பவிலையிலும் மக்களுக்கு அளித்தும், அவர்களது நிலங்களிலும், தோட்டங்களிலும் மரங்களை வளர்க்க ஊக்கமளிக்கப்பட்டது. இந்த இருபது ஆண்டுக்காலத்தில் ரூபாய் 770 இலட்சம் செலவிட்டு மரங்கள். வளர்க்கப்பட்டன. இம்மரங்கள் காலக்கெடுவில் வளர்ந்து, 8 அல்லது 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மரங்களை வெட்டி அதனால் ரூ. 196 இலட்சம் அளவிற்கு அரசுக்கு வருவாய் கிடைத்துள்ளது.

வருகிற ஆண்டுகளில் இதை விட அதிகமாக கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

தி. அச்சையா
வனத்துறைத் தலைவர்

அப்படி கிடைத்த வருவாயில் ஊராட்சி நிலங்களில் தோட்டங்களை வெட்டியதில் கிடைத்த வருவாயில் சரிபாதித் தொகையை ஊராட்சிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது, சுமார் ரூ. 20 இலட்சம் அளவிற்கு மேலாகும்.

### இன்று :

மேற்கூறிய திட்டங்கள் கடந்த 20 ஆண்டுகளாகச் செயல்படுத்தப்பட்டு வந்தாலும், ஒரு சில கிராம மக்களிடமிருந்து மேய்ச்சல் நிலங்கள் இல்லாமல் போகின்றன எனவும் பயிர் செய்யும் ஏழை மக்களை வெளியேற்றி விடுவார்களோ என்ற பயத்தினால் எதிர்ப்புகள் தெரிவித்தார்கள். ஆனால் இன்று அனேக கிராம மக்கள் இத்திட்டத்தினை மேலும் விரிவுபடுத்த ஆர்வம் காட்டுகின்றனர். தவிரவும்மொத்தமாநிலப்பரப்பில் 16.7 விழுக்காடு, அதாவது சுமார் 21 இலட்சம் எக்டேர் நிலப்பரப்பு காடுகளின் கீழ் உள்ளது.

நிலப்பரப்பில் காடுகள் மூன்றில் ஒரு பகுதிக்கு குறைவாகவே உள்ளது என்ற காரணத்தினாலும் மக்களின் எரிபொருள் தேவையையும், சிறு மரங்கள் தேவை மற்றும் காடுகளின் வளத்தைப் பெருக்கிடல் போன்ற பல வகை நோக்கங்களுடன் அடங்கிய ஒரு திட்டம் 1981-82ல் தயாரிக்கப்பட்டு 'சிடா' உதவியுடன் ரூபாய் 45 கோடி மதிப்பில் 5 ஆண்டு காலத்தில் 1,76,480 எக்டேர் பரப்பில் மரங்கள் நடவும், சுமார் 6075 கி.மீ. நெடுகில் சாலை மற்றும் கால்வாய் மற்றும் ஏரி ஓரங்களில் மரங்கள் நடவும், மக்கள் அவரவர்களது நிலங்களிலும் வீட்டு கொல்லைப்புறங்களிலும் விவசாயத்திற்கு ஒவ்வாத நிலங்களிலும் மரங்கள் நடவும் சுமார் 501 இலட்சம் கன்றுகள் விநியோகிக்கவும் திட்டமிடப்பட்டு தற்பொழுது இத்திட்டமானது வெற்றிகரமாக மூன்றாவது ஆண்டில் பீடு நடைபோட்டு வருகிறது.



ஏரியில் தண்ணீர் நிரம்பியிருந்தாலும் கருவேல மரங்கள் அடர்ந்து வளர்கின்றன.

கடந்த இரண்டு ஆண்டுகளில் இத்திட்டங்களின் மூலம் ஏற்பட்ட முன்னேற்றங்கள் கீழ்க்கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன:

| தோட்டங்களின் வகை | எழுப்பப்பட்ட பரப்பளவு 1981-82ஆம் ஆண்டு | 1982-83ஆம் ஆண்டு | 1983-84ஆம் ஆண்டு |
|---|---|---|---|
| 1. ஊரகத் திட்டம் | | | |
| அ. வட்டாரத் தோட்டங்கள் | 7700 எக். | 6369 எக | 8400 எக். |
| ஆ. தொடர் தோட்டங்கள் | 161 கி.மீ. | 132 கி.மீ. | 435 கி.மீ. |
| இ. செடிகள் வழங்குதல் | 6.29 இலட்சம் | 33.55 இலட்சம் | 180 இலட்சம் |
| 2. அர்ண்மரத் தோட்டம் | 378 எக். | 87 எக். | 110 எக். |
| 3. சிடா உதவி சமூகக் காடுகள் திட்டம் | | | |
| அ. புறம்போக்கு | 4304 எக். | 5534 எக். | 5950 எக். |
| ஆ. தீவனத் தழைத் தோட்டங்கள் | 37 எக். | 362 எக். | 660 எக். |
| இ. கால்வாய் ஓரம் | 845 கி.மீ. | 683 கி.மீ. | 655 கி.மீ. |
| ஈ. ரயில்பாதை ஓரம் | 691 கி.மீ. | 355 கி.மீ. | 375 கிமீ. |
| உ. பாதையோர நிழல்தரும் மரங்கள் | 834 கி.மீ. | 816 கி.மீ. | 835 கி.மீ. |
| ஊ. மரம் வளர்ப்பு 'ஊக்குவிப்புத் திட்டம்' (எண் இலட்சத்தில்) | — | 37.67 | 63.00 |
| எ. மரம் வளர்ப்பு 'விரிவாக்கத் திட்டம்' (எண் இலட்சத்தில்) | 31.29 | 74.21 | 185.0 |
| ஏ. குளக்கரையோரம் | 9347 எக். | 22887 எக். | 22800 எக். |
| மொத்தம் எக்டர் | 31766 | 35239 | 37920 |
| கி.மீ, | 2531 | 1986 | 2300 |
| வழங்கிய கன்றுகள் (இலட்சத்தில்) | 37.59 | 145.43 | 428.00 |

கடந்த 20 ஆண்டுகளாகச் செயல்படுத்
தப்பட்ட சமூக நலக்காடுகள் திட்டத்திற்கும்,
தற்பொழுது இரண்டாண்டுகளாக சிடா உதவி
யுடன் செயல்படுத்தப்பட்டு வரும் சமூகக்
காடுகள் திட்டத்திற்கும் சில புதுமையான
வேறுபாடுகளைக் காணலாம். அவையாவன:

1. இப்புதிய திட்டம் ஆரம்பிக்கும்முன்
ஊராட்சி நிலங்களில் எழுப்பிய தோட்டங்
களுக்கு மட்டும் ஊராட்சிகளுக்கு வருவாயில்
50 விழுக்காடு கொடுக்கப்பட்டு வந்தது.
ஆனால் இத்திட்டத்தில் பொதுமக்கள் தீவிர
மாகப் பங்கேற்பதற்காக ஊராட்சி நிலங்
களில் மட்டுமின்றி அரசுத்துறையைச் சார்ந்த
எல்லா நிலங்களிலும் எழுப்பின தோட்டங்
களின் மூலம் கிடைக்கும் வருவாயில் 50 விழுக்
காடு வீதம் பகிர்ந்தளிக்க தற்பொழுது அரசு
முடிவு செய்துள்ளது.

2. பொதுமக்களுக்குச் சலுகை விலையில்
மரக்கன்றுகள் வழங்கியதனை ஓரளவிற்கு
நீக்கி ஒவ்வொரு குடும்பத்திற்கும் சுமார் 500
கன்றுகள் வரை இலவசமாக வழங்கும் திட்
டத்தை மேற்கொண்டதால், 1981-82ல்
6148 குடும்பங்களும் 1982-83ல் 30698 குடும்
பங்களும் இதனால் பயனடைந்துள்ளன. இக்
குடும்பங்களுக்கு கன்றுகள் இலவசமாக வழங்
குவதுடன் தொழில் நுட்ப ஆலோசனைகளும்
இலவசமாக வழங்கி நன்கு பராமரித்து உயிரு
டன் இருக்கும் மரங்களின் எண்ணிக்கைக்குத்
தகுந்தவாறு இக் குடும்பங்களுக்கு ஊக்கத்
தொகையும் வழங்க இத்திட்டம் வகை செய்
கிறது.

3. இத்திட்டத்தின் கீழ் 2 சி பட்டா,
அதாவது மரங்களை அரசு நிலங்களில் வளர்க்
கும் மக்களுக்கு அதன் மூலம் கிடைக்கவிருக்
கும் பலனை அனுபவிப்பதற்கான உரிமைச்
சான்று வழங்கவும் அரசு தீர்மானித்துள்ளது.

4. இத்திட்டத்தில் பொதுமக்கள் பெரு
மளவில் பங்கேற்பதற்கும் இத்திட்டத்தின்
கொள்கைகளை நிர்ணயிப்பதற்கும் மாநில
அளவிலும்,மாவட்டரீதியிலும், கிராம மட்டத்
திலும் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
மாநிலக் குழு வனத்துறை அமைச்சரின் கீழ்
இயங்கும். இக்குழுவில் மக்களின் சார்பில் 8
பேர் அங்கத்தினர்களாக உள்ளனர். மாவட்ட
ரீதியில் ஏற்படுத்திய குழு மாவட்ட ஆட்சி
யாளரின் தலைமையின் கீழ் இயங்கும். இதி
லும் மக்கள் பிரதிநிதிகள் உண்டு. கிராம அள
விலான குழுவில் அவ்வவ்வூர் கிராம மக்கள்
பங்கேற்கின்றனர். இப்பிரதிநிதிகளில் பெண்
களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு
இதுவரை 292 பெண் உறுப்பினர்கள் கிராமக்
குழுக்களில் இடம் பெற்றுள்ளனர்.

5. இத்திட்டத்தைச் செயல் படுத்தும்
போது பல்கலைக் கழகங்கள், கல்வி நிறுவனங்
கள், ஆராய்ச்சி நிறுவனங்கள் போன்ற நிலை
யங்களின் ஒத்துழைப்புடன், நிலையங்களை
இத்திட்டத்தில் ஈடுபடுத்தி திட்டம் செயல்
பட்டு வரும் முறையினை ஆய்வு செய்து
அறிக்கைகள் பெற்று, குறைகள் ஏதேனும்
இருந்தால் அவ்வப்போது களைய நடவடிக்கை
கள் எடுக்கவும் இத்திட்டம் வகை செய்கிறது.
இதுபோன்ற பல புதுமைகள் இத்திட்டத்தின்
கீழ் புகுத்தப்பட்டு வனத்துறை மூலம் ஆர்வத்
துடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வரு
கிறது.

6. இத்திட்டம் மக்களால் மக்களின் நல
னுக்காக மக்கள் ஏற்படுத்திய திட்டமாகும்.
இதனை நிரூபிக்கும் பொருட்டு மக்களைப்



கடவுளை இமயமலைக் குகையில்
காணலாம் என்று எனக்குத் தோன்றி
னால், நான் உடனே அவ்விடத்தை
நோக்கிப் புறப்படுவேன். ஆனால்
அவரை மனித சமூகத்தை விட்டு
வெளியே காண முடியாது என்று
எனக்குத் தெரியும்.



பெருமளவில் பங்கேற்க இத் திட்டம் வகை
செய்துள்ளது.

**தனி நபர் பங்கு :**

இத்திட்டத்தின் கீழ் இரண்டு துணைத்
திட்டங்களான மர வளர்ப்பு விரிவுத் திட்டம்,
மர வளர்ப்பு-ஊக்குவிப்புத் திட்டம் ஆகிய
இரண்டு திட்டங்களின் கீழ் மக்கள் வனத்
துறையில் இருந்து மரக்கன்றுகளைப் பெற்று
இத்திட்டத்தில் பங்கேற்கலாம்.

**மாணவர்களின் பங்கு :**

பொதுவாக நகரங்களிலும், கிராமங்
களிலும் மரங்களை வளர்க்க வேண்டும், காப்
பாற்ற வேண்டும் என்று ஒரு சமூகம் ஒப்பிய
பொறுப்பு எதுவும் இல்லாத காரணத்தினால்
கடந்த காலங்களில் மரங்களை வளர்க்கவும்,
போற்றவுமாகிய பணி பெருமளவில், நடை
பெறாமல் வந்ததை நாம் நன்கு அறிவோம்.
எனவே இன்றைய இளம் சமுதாயத்தினருக்கு
மரங்களினால் ஏற்படும் நன்மைகளை
உணர்த்தி அவர்களையும் இத்திட்டத்தில்
பங்கேற்று மரங்களைப் போற்றி வளர்க்கவும்
ஈடுபடுத்த வேண்டியது அவசியமாகிறது.
இதற்காக சமூக நலப்பிரிவு அலுவலர்கள்
சோதனையாக சில பள்ளிகளைத் தேர்ந்
தெடுத்து அங்கு படித்துவரும் இளம் குழந்தை
களுக்கு மரங்கள் வளர்க்க வேண்டியதன்
அவசியத்தை எடுத்துக் கூறி பள்ளிகளிலேயே
பெண்கள் நாற்றங்கால் வளர்க்க இத்திட்
டத்தின் கீழ் உதவி செய்துள்ளது. அதன்படி
மதுரை மாவட்டத்தில் தீ கல்லுப்பட்டி மேல்
நிலை பள்ளி, செங்கல்பட்டு மாவட்டத்தில்
பச்சாத்தபுரம், பேரங்காகுளம், ஒரக்காடு,
வேம்பேடு, எடக்குப்பம், தாம்பரம் ஊராட்
சிப் பள்ளிகளிலும், கோவை மாவட்டத்தில்
பெரியநாயக்கன் பாளையம், இராமகிருஷ்ணா
மிஷன் வித்யாலயா ஆகிய பள்ளிகளின் மாண
வர்கள் பங்கேற்றது போற்றத்தக்கது. மேலும்
சேலம் சாரதா பெண்கள் கல்லூரி, திருநெல்
வேலி மாவட்ட சங்கரன்கோவில் டி.என்.பி.
கல்லூரி மாணவ மாணவிகளது முயற்சியால்
மரங்கள் நடப்பட்டன என்பதும் மற்று
மொரு முக்கிய அம்சமாகும்.

**பல்வேறு நிறுவனங்களின் பங்கு :**

பாரதியார், பாரதிதாசன் போன்ற பல்
கலைக்கழகங்கள் மற்றும் கோவையிலுள்ள
மனையியல் கல்லூரி, பொறியியல் கல்லூரி,
மருத்துவக் கல்லூரி, வன இயல் கல்லூரி
ஆகியவைகள் இத்திட்டத்தின் கீழ் பங்கேற்க
முன்வந்து பாரதியார் பல்கலைக்கழக முகா
மில் பத்தாயிரம் குழிகள் மாணவர்களைக்
கொண்டு வெட்டி 1982-83ல் செடிகள் நடப்
பட்டன. இதில் கோவை வரதராஜபுரம் பி.
எஸ்.ஜி. கலைக் கல்லூரி மாணவர்களும் பங்
கேற்றனர். நாட்டு நலப்பணித் திட்டத்தைச்
சார்ந்த தேசிய மாணவர் படை-மாணவ மாணவி



சாலையோரத் தோட்டங்கள்

ஆகியோர், ஊக்கம் காட்டி மரங்கள் நடும்
பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர்.
மேலும் வரும் ஆண்டுகளில் இது போன்ற
பல்வேறு நிறுவனங்களும் பெருமளவில் பங்
கேற்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**பெண்களின் பங்கு :**

சமூகக் காடுகள் திட்டத்தை நன்கு
நிறைவேற்ற மாதர்களின் பங்கும் அதிக
அளவில் தேவைப்படுகிறது. இத்திட்டத்தில்
நாற்றங்கால் வளர்ப்புப்பணியும் மற்றும்
தோட்டங்களில் களை எடுத்தல், செடி நடு
தல், நீர் ஊற்றுதல், பை நிறைத்தல், செடி
களை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு
எடுத்துச் செல்லுதல் போன்ற பல்வேறு பணி
களில் பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து
அவர்களுக்கு ஊக்கம் அளிக்கப்படுகிறது. இது
தவிர,கிராமங்களில் அமைக்கப்படும் சமூகக்
காடுகள் குழுக்களிலும் அவர்கள் பிரதிநிதி
களாக நியமிக்கப்படுகிறார்கள். நன்கு படித்த
பெண்கள் மாதச் சம்பளத்தில் கிராமக் காடு
கள் ஊழியர்களாகவும் நியமிக்கப்படுகின்ற
னர். இதுபோன்ற ஊழியர்களுக்கு இலவச
மிதி வண்டியும் வழங்கப்படுகிறது. இது வரை
பல்வேறு இடங்களில் 59 பெண்கள் சமூகக்
காடுகள் ஊழியர்களாகவும், 292 பெண்கள்
கிராம சமூக நலக்காடுகளின் குழுக்களில்
பிரதிநிதிகளாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள
னர்.

மேலும்,இவர்கள் தங்கள் குழந்தைகளை
அவரவர்களது வீட்டுத் தோட்டங்களில் ஒரு
குழந்தைக்கு ஒரு மரம் என நட்டு அவர்கள்
அவற்றை நன்கு பாதுகாக்க அவர்களது
குழந்தைகளை ஊக்குவித்து இத்திட்டம்
வெற்றி பெற உதவி செய்யலாம்.

இத்திட்டத்தின் கீழ் இதுவரை செய்யப்
பட்ட வேலைகள் இதில் ஒவ்வொருவரின்
பங்கு போன்ற அறிவியல் விஷயங்களை மக்க
ளுக்கு எடுத்துரைப்பதற்கென்று ஒரு விளம்
பரப்பிரிவு வனத்துறையில் இயங்கி வருகிறது.
இந்தப் பிரிவு அவ்வப்போது செடிகள் நடும்
முறை, மரங்களை வளர்ப்பதற்கான முறை
கள் போன்றவைகள் அவ்வப்போது துண்டு

வெளியீடு மூலமாகவும் ஒலி, ஒளி காட்சிகள்
மூலமாகவும் பிரசாரம் செய்து வருகிறது.
மக்களின் எதிர்கால நன்மைகளுக்கு மரங்கள்
மிக அவசியமானது என்ற கருத்தினை
மேலும் பெருமளவில் மக்களுக்கு எடுத்துக்
கூற தனியாக ஒரு நிழல் படமும் தயாரிக்க
நமது அரசு உத்தேசித்து நடவடிக்கைகளை
எடுத்து வருகிறது.

## நாளை :

சமூக நலக்காடுகளினால், நம் எதிர்கால
மும் ஒரு பொற்காலமாக விளங்கும் என்பது
திண்ணம். சுவீடன் நாட்டு உதவியுடன் சமூகக்
காடுகள் திட்டத்தின் முதற்பகுதி 1985-ல்
நிறைவுபெறுகின்றது. அது மேலும் 5 ஆண்டு
களுக்கு இரண்டாம் கட்டமாகத் தொடர
வாய்ப்புள்ளது. குறிப்பாகக் கானகத் துறை
யினர் தாமாகத் தோட்டங்களை ஈடுபடுத்தும்
நிலையினை விட்டு மக்களும் பல்வேறு அமைப்
புகளும் தோட்டங்களை எழுப்புவதில் ஈடுபடு
வதற்கு உறுதுணையாக இருந்து அவற்றிற்குத்
தொழில் நுட்ப உதவி போன்றவற்றை நல்கு
வதில் ஈடுபாடு ஏற்படும் என எதிர்பார்க்கப்
படுகிறது.

சமூகக் காடுகள் குறித்து ஆராய்ச்சி
மேலும் விரிவடைந்து பல புதிய வகைகளைக்
கண்டுபிடித்து நடைமுறைக்குக் கொண்டு வர
வாய்ப்பு ஏற்படுமெனவும் நடப்பட்ட மரங்
களைப் பேணிக்காப்பதில் தனிக்கவனம்
செலுத்தி, மரங்களின் விளை பொருட்களை
அறிவியல் சார்ந்த நிலையில் சேகரித்து
அவற்றை விற்பனை செய்வதில் முன்னேற்றம்
ஏற்படுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

காடுகளுக்கும் மழைக்கும் உள்ள சம்
பந்தத்தை அண்மையில் அமேசான் காடுகளில்
ஆய்வுக்குப் பிறகு அறிஞர்கள் வெளியிட்டுள்ள
னர். எனவே சுற்றுப்புறச் சூழ்நிலையின்
மேம்பாட்டிற்காகவும் மக்களின் சுய தேவை
களைப் பூர்த்தி செய்வதற்கும் நாம் அனை
வரும் பெருமளவில் மரங்கள் வளர்த்து நாட்
டின் செழிப்பை வளமாக்கப் பாடுபடுவோம்
என அனைவரும் உறுதி எடுப்போமாக!



# வனவிலங்கு வார விழா - மாண்புமிகு முதல்வரின் வேண்டுகோள்

இவ்வுலகில் நலலவை தீயவை என்று உய்த்துணரும் உணர்வும் அறிவாற்றலும் படைத்த மனிதன், மானிடனைப் போலவே கானுயிர்கட்கும் இத்தரணியில் வாழ உரிமையுண்டென்பதை உணர்வதும், அவ்வுணர்வினால் உந்தப்பட்டு செயல்படுவதும் ஜீவ காருண்ய செயலாகும். அவை நமது கடமையுமாகும்.

மனிதனின் வலிய மேலாதிக்கத்தினால் அடித்தள உயிரினங்கள் வாடி நலிந்து மெலிந்து இயற்கைச் சூழலில் தவிப்புக்குள்ளாக்கப்பட்டுள்ளன. தற்போது ஏற்பட்டுள்ள விழிப்புணர்வு காரணமாக இப்பூமியில் வாழும் உயிரினங்கள் இத்தரணியில் ஒன்றிணைந்து உருவாக்கப்பட்ட இயற்கை இயல்பு என்ற உண்மை உணரப்பட்டுள்ளது. இவ்வுண்மையைத்தான் பழங்காலத்தில் நம் நாட்டு மன்னர்கள், அறிவாற்றல் படைத்த சான்றோர் இலக்கிய மேதைகளும் வலியுறுத்தி வந்தனர். பிற உயிரினங்களுக்கு நாம் பொறுப்பாளிகள் என்ற உண்மையை அச்சான்றோர் தங்கள் செயலில் நிரூபணம் செய்தனர்.

நம்நாட்டில் 350 வகை பாலூட்டிகளும், 1200 வகை பறவையினங்களும் 225 வகை ஊர்வனவும், 15,000 வகை மரம், செடி, கொடிகளும், 20,000 வகை பூச்சி வகைகளும் உள்ளன. வேத காலத்திலிருந்தே மிருகங்களும் பறவைகளும் பல மதக் கோட்பாடுகளால் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளன.

சங்க கால இலக்கியத்திலும் முறம் கொண்டு புலியைத் துரத்திய தமிழ்க்குறத்தி, இராமாயணத்தில் வரும் மாயமானும், அனுமானும், சந்தன மரத்தில் உரலும் யானைத் தந்த உலக்கையும், தாம்பூலத்தில் கடல் பவழம், சுண்ணாம்புக்குப் பதிலாக பயன்பட்டு வந்தவை செய்யுள் வடிவாக படைக்கப்பட்டு, வன உயிரின் பண்டைக் காலத்திய செழிப்பை நமக்கு எடுத்துக் காட்டியது.

காலப்போக்கில் வனவிலங்குகள் பால் கொண்டிருந்த பாசமும், இரக்கமும் சற்று குறையத் தொடங்கியதின் விளைவாக கானுயிர் பாதிக்கப்பட்டது. அணி திரட்டி, பொருளீட்டி வனவிலங்குகளை அழிப்பது அர்த்தமற்ற அறியாமைச் செயலாகும். மனிதனுக்கு இப்பூவுலகில் வாழ எத்தனை உரிமை உண்டோ வனவிலங்குகட்கும் அத்தனை உரிமை உண்டு.

வனங்களும், வன உயிரினங்களும் படைப்பின் அதிசயங்கள். நம் தமிழ் நாட்டில் வண்ணத்தால், வடிவத்தால் காணப்படும் பல வகைப்பட்ட மரம், செடி கொடிகளும் வனவிலங்குகளும் மனித இனத்திற்குப் பயன்பட்டு வருகிறது. காடுகளையும் காடுகளைச் சார்ந்த வனவிலங்குகளையும், மரம், கலாச்சாரம், சுற்றுலா மற்றும் பொருளாதார அடிப்படையில் காப்பாற்ற வேண்டும்.

நம்நாடு சுதந்திரமடைந்த பின்பு ஏற்பட்ட புரட்சிகரமான மாறுதல்களினால் தேசிய வனக்கொள்கையும், 1952ம் ஆண்டு திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. சூழல், சூழலைச் சார்ந்த இயற்கைச் சமநிலை பாதிக்கப்படாத வகையிலும் வனச் செல்வத்திற்குக் குந்தகம் ஏற்படாத வகையிலும், கானுயிர்கட்கு இன்னல்கள் ஏற்படாவகையிலும் சுற்றுலா வருபவர்கட்கும் உல்லாசப் பயணிகளுக்கும் மன மகிழ்ச்சியையும் பொழுது போக்காக விளங்கும் வகையில் வனங்களையும் வன விலங்குகளையும் பயன்படுத்த வழி வகுக்கப்பட்டுள்ளது.


மேலும் மரம் நடுதல் கானுயிர் காத்தல் போன்ற செயல்கள் மூலம் மனவளம், வனவளம் பெருகி சூழல் சுகாதாரம் காக்கப்பட்டு வனப்பயிர், வனவிலங்குகள் யாவும் இணைந்து செயல்பட்டு சூழலில் இயற்கைச் சமநிலையை நிலைநாட்டி மக்களுக்குப் பயன்பட வழி வகைகள் செய்யப்பட்டுள்ளன.

எனவேதான் அழிந்து வரும் வனவிலங்குகளைக் காப்பாற்றுவதற்கும் அவற்றின் எண்ணிக்கையை அதிகப்படுத்தவும் ஆண்டு தோறும் வனவிலங்கு வாரவிழாவாக அக்டோபர் திங்கள் முதல் வாரம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. தமிழகரசால் புலிக்கு முண்டந்துறையிலும், சிங்கவால் குரங்கிற்கு களக்காட்டிலும் வெளிமானுக்குக் கோடிக்கரையிலும், கிண்டியிலும்வரையாட்டிற்கு நீலகிரியிலும் சாம்பல் மலைஅணிலுக்கு அழகர் கோவில் காடுகளிலும், நீர்ப்பறவைகளுக்கு வேடந்தாங்கல், பழவேற்காட்டிலும், கடலாமைக்குக் கிழக்குக் கடலோரப் பகுதிகளிலும் சரணாலயங்களும், புகலிடங்களும் அமைக்கப்பட்டு, பேணி பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

வனங்களின் வண்ணக்காட்சியில் வனவிலங்குகளின் மாட்சி வீழ்ச்சியடையா வண்ணம் கானுயிர் காப்பு விழா கொண்டாடப்படும். இத்தருணத்தில், நாமும் வாழ்ந்து வாயில்லா இவ்வின்னுயிரான வன உயிரையும் வாழ வைத்து இயற்கை அன்னையின் எழிலை வருங்காலச் சந்ததியினருக்குள்ளவும் குறையாது வழங்கச் சூளுரை கொள்வோமாக.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.




தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2014



அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாளில் (2.10.83) சென்னை காமராசர் சாலையில் உள்ள காந்தியடிகள் சிலைக்கு, மேதகு ஆளுநர், மாண்புமிகு முதல்வர், மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர், மாண்புமிகு நிதியமைச்சர் மற்றும் அமைச்சர் பெருமக்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.



திருவாரூர் வருவாய் வட்ட அலுவலகத் திற்குரிய கட்டடத்திற்கு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள், 16.9.83ல் அடிக்கல் நாட்டினார். மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு எம். ஆர். கோவேந்தன் மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு கே. கலைமணி, மாண்புமிகு சுற்றுப்புறச் சுகாதாரத் துறைஅமைச்சர் திரு எஸ். ஆர். இராதா ஆகியோர் இவ்விழாவில் பங்கேற்றனர்.

சென்னை மாநகராட்சிப் பள்ளி மாணவ, மாணவிகளுக்கு நடத்தப்பெறும் பல்வகை நோய்க் கண்டுபிடிப்பு இலவச முகாம்களின் மூன்றாம் ஆண்டு விழாவை, சென்னை நேரு விளையாட்டரங்கக் கூடத்தில் 2.10.83ல் மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே அவர்கள் துவக்கி வைத்தார்.




# காந்தியடிகளின் தத்துவங்களைக் கடைப்பிடிப்போம்!

மேதகு ஆளுநர்
திரு. எஸ். எல். குரானா



இந்திய நாட்டின் தலைசிறந்த தலைமகனுக்கு நமது வணக்கத்தினைச் செலுத்திட இன்று நாம் கூடியுள்ளோம். இங்குப் பேசியவர்கள் அனைவரும் காந்திஜியின் சமுதாயக் கொள்கை, செயல்திட்டம்நாட்டு விடுதலைக்கு ஆற்றிய பணி ஆகியவை பற்றி விரிவாக எடுத்துரைத்தார்கள். எனவே நான் ஒருசில கருத்துக்களை மட்டும் சொல்ல விரும்புகிறேன்.




காந்தியடிகளிடம் ஒரு மந்திர சக்தி இருந்தது. அவர் ''சத்தியசோதனை''யை நடத்தினார். அறவழியில் நின்று அரசியலில் ஈடுபட்டார். கோடிக்கணக்கான மக்களைத் தட்டி எழுப்பினார். அந்நிய ஆட்சியின் கீழ் ஏற்பட்டுள்ள இழிநிலையை - கொடுமைகளை எடுத்துக் கூறினார். ஆயிரக்கணக்கான மக்களை விடுதலைப் போராட்டத்தில் பங்கு பெறத் தயார் படுத்தினார். மக்கள் தங்களது வாழ்க்கையை அர்ப்பணம் செய்து சிறைச்சாலை செல்லவும், குண்டுகளையும், தாக்குதல்களையும் தாங்கவும் அவர்களை அவர் தயார் படுத்தினார்.

சூரியனே அஸ்தமிக்காத சாம்ராஜ்யம் படைத்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நிற்கின்ற வீர உணர்வை மக்கள் மத்தியில் காந்திஜி ஊட்டினார். புதிய வழியில், அறவழியில், ஒத்துழையாமை இயக்க வழியில் அவர் தம் வாழ்க்கையை நடத்திச் சென்றார். இந்த முறையில் எதிரிகளை எதிர்த்து நிற்க அவரால் முடிந்தது. அறவழியிலே நின்று அவரது வாழ்க்கைக் காலத்திலேயே இந்திய நாட்டிற்கு விடுதலையையும் பெற்றுத் தந்தார். காலனி ஆதிக்கத்தின் கீழ் துயருற்ற மக்களுக்கும் அவர் வழிகாட்டினார். காலனி ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெறுவது எப்படி என்பதையும் காட்டினார். இப்படிப்பட்ட மாமனிதரை இன்று நாம் நினைவு கூர்கிறோம் :



சில தினங்களுக்கு முன்னால் நமது இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அம்மையார், அண்ணல் காந்தியடிகளைப் பற்றியும் அவரது உயர்ந்த தத்துவங்கள் பற்றியும் ஐக்கிய நாடுகள் சபையில் குறிப்பிட்டார்கள். ''உலகத்தில் நெருக்கடி இருக்கிற இந்த நேரத்தில்-யுத்த அபாயம் இருக்கிற இந்த நேரத்தில் இந்த மாமனிதர் நமக்கு வழிகாட்டியாய் இருக்கிறார். அழிவுப்பாதையில் இருந்து நம்மை நாமே காப்பாற்றிக் கொள்ள வேண்டுமேயானால் காந்தியின் வழியை நாம் பின்பற்ற வேண்டும்'' என்றார்.



காந்தியடிகள் காட்டிய அறவழி, அன்பு மொழி இவைகளைப் பின்பற்ற வேண்டும். மனிதர்களுக்கிடையேயுள்ள வேறுபாடுகளையெல்லாம் மறந்து சகோதரத்துவத்துடன் நடந்து கொள்ள வேண்டும். நம்முடைய நாட்டில் காந்திஜி மறைவிற்குப் பிறகு ஒரு புதிய தலைமுறையே உருவாகியுள்ளதை நாம் காணலாம். காந்தியடிகள் நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்யும்போது அவரைப் பார்க்கவும், அவரது வீர உரையைக் கேட்கவும், பல்லாயிரக்கணக்கான மக்கள் மிக ஆவலோடு கூடுவதுண்டு. இன்று அவரது கருத்துக்களுக்கு முக்கியத்துவம் தருவது மிக அவசியமாகும். அவருடைய தத்துவங்களைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் போதிக்க வேண்டும்.

தமிழக அரசு இந்தியப் பேரரசுக்கு ஒரு வேண்டுகோளை விடுத்துள்ளது. மகாத்மா காந்திஜியின் வாழ்க்கை வரலாற்றைச் சித்திரிக்கும் திரைப்படத்தினை அனைத்து மொழிகளிலும் எடுத்து வெளியிட வேண்டும் என்பதே அது.

நாம் காந்திஜியின் பிறந்த நாளை நடத்திவிட்டால் மட்டும் அவருக்கு நன்றி செலுத்தியவர்களாகி விட மாட்டோம். அவரது தத்துவங்களையும், கோட்பாடுகளையும் பின்பற்ற வேண்டும். அதுதான் நாம் அவருக்குச் செய்யும் நன்றிக் கடனாகும்.

அனைத்து மக்களிடத்திலும் அன்பினையும்,; ஒற்றுமையையும் உருவாக்க நாம் முயற்சி செய்ய வேண்டும். அவரது அறிவுரைகளைப் பின்பற்றும்போதுதான் அவருக்கு நன்றிக் கடன் செலுத்துகிறவர்களாக முடியும்.

[சென்னை கிண்டியில், காந்தி நினைவு மண்டபத்தில் 2-10-'83 அன்று நடைபெற்ற அண்ணல் காந்தி அடிகளின் பிறந்தநாள் விழாவின்போது ஆற்றிய உரையிலிருந்து]

தமிழரசு
திருவள்ளுவர் ஆண்டு 2014
ருத்ரோத்காரி — புரட்டாசி 30
மலர் : 14 இதழ் : 8
16-10-1983

# அண்ணலுக்கு அரசு எடுத்த அரும் விழா



சென்னை கிண்டியிலுள்ள காந்தி மண்டபத்தில் அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாளான அக்டோபர் 2-ஆம் நாள் சிரோடும் சிறப்போடும் கொண்டாடப்பட்டது. அண்ணலின் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியைக் கவிஞர் சுப்பு ஆறுமுகம் குழுவினர் நடத்தினர்.

செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு சி.என். கிருஷ்ணபாரதி, இ.ஆ.ப. வரவேற்றுப் பேசினார். அவர் பேசுகையில்—

''காந்தியடிகள் வாழ்வில்-பல்வேறு சந்தர்ப்பத்தில் - தமிழக மக்களும், தமிழ்நாடும் இணைந்து வந்திருக்கின்றனர். மகாத்மா காந்தியடிகளின் கொள்கைகளை அன்று மாத்திரம் அல்ல, இன்றும் வழி வழியாகச் சிறந்த முறையிலே செயல்படுத்தி வருகிறோம் என்பதை நாம் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். ஏழை எளியவர்களுக்கும் சமுதாயத்தில் தாழ்ந்து போனவர்களுக்கும், கடையனுக்கும் கடைத்தேற்றம் என்ற பரந்த கொள்கையை நமக்கு அளித்த காந்தியடிகளின் கொள்கையைப் பல முறைகளிலேயும் ஆதிதிராவிட நலனில் எடுத்துக் கொண்டாலும் சரி எல்லோருக்கும் எல்லா வசதிகள் அளிக்கப்படவேண்டும் என்ற கொள்கையானாலும் சரி, ஏழைக் குழந்தைகளானாலும் சரி, எல்லாக் குழந்தைகளுக்கும் உணவு மாத்திரம் அல்ல, சத்துணவையும் கொடுத்து அவர்களை நல்லதொரு மக்களாக உருவாக்குகிற பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருவதில் தமிழகம் தலை நிமிர்ந்து நிற்கிறது. காந்தியடிகளின் கொள்கையை அன்றும் இன்றும் என்றும் பிற்பற்றத் தயாராக இருக்கிறோம் என்ற உறுதியைத் தருகிறோம்'' என்று குறிப்பிட்டார்.



விழாவைத் தொடங்கி வைத்து மாண்புமிகு சட்ட-மேலவைத் தலைவர் டாக்டர் சிலம்புச் செல்வர் திரு ம. பொ. சிவஞானம் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது :

''காந்தியடிகளை இந்தியாவின் தந்தை என்று சொன்னாலும், அவருடைய கொள்கை வழி நோக்குமிடத்து அவருடைய வரலாற்று வழிபார்க்குமிடத்து அவர் புரிந்த சாதனைகளை நினைவு கூருமிடத்து அவர் மனித சமுதாயத்தின் தந்தையாகக் காட்சியளித்தவர், காட்சி அளிப்பவர். எந்த பிரிட்டிஷ்காரரை எதிர்த்துப்போராடினாரோ எந்த பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தை அஸ்தமாக்க வைந்தாரோ அந்தச் சாம்ராஜ்யத்தைப் படைத்த பிரிட்டிஷ்காரரான ஆட்டன்பரோ என்பவர் காந்திஜியின் வரலாற்றைப் படமாக்கி, அதை உலகம் முழுவதும் திரைப் படமாக ஓடவிட்டுப் பார்க்கிற நேரத்தில், நாமும் அதன் சிறப்பைத் தெரிந்து கொள்ள முடிகிறது. அவர் வரலாற்றுச் சாதனைகளைக் காட்சியாகப் பார்த்த அளவிலே உலகம் எவ்வளவு மயங்கிப் போய் இருக்கிறது. இன்னமும் அந்தப் படம் உலகிலே சுற்றுலா வந்து கொண்டிருக்கிறது என்பதைப் பார்க்கிறோம்.

''அவருடைய சாதனைகளை நேரில் பார்த்தோம். நம்மில் சிலபேர் பங்கும் கொண்டோம். அவருடைய குரலையும் கேட்டோம். அவரது கொள்கைகளையும் ஏற்றோம். அவர் நடமாடவும் கண்டோம். அவர் கடைசியாக ஆயுள் முடிந்த கொடுமையையும் பார்த்தோம்.

''இவ்வளவு இருந்தும் ஒரு அமெரிக்க நாட்டிலோ பிரிட்டனிலோ வேறு ஆப்பிரிக்க நாடுகளிலோ அந்தப்படத்தை மக்கள் பார்க்கும் உணர்ச்சியை நாம் பெற்றோமா என்ற ஐயப்பாடு தான்.

நிகழ்ச்சித் தொகுப்பு:

**ஜி. ஆனந்தன்**

''காந்தியடிகள் நம்மோடு வாழ்ந்து நமக்காகப் பாடுபட்டவராதலால் அன்னியர் புரிந்து கொள்கிற அளவுக்கு அவரது தத்துவத்தை - சரித்திரத்தை நாம் புரிந்து கொள்ளாமல் இருக்கிறோமா என்று எண்ணுகிறேன். இந்திய சமுதாயத்திற்குத் தந்தை மட்டுமல்ல - மனித சமுதாயத்திற்கே தந்தையாக அவர் இருந்



தார் என்ற செய்தியை, அவர் கொள்கை மூலம் நாம் அறிவோம்.

''தமிழராகிய நாம் எத்தனையோ விதத்தில் அவருக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறோம்.

''நான் யாரிடமேனும் பண்பாட்டு வழியாக ஒரு இனத்தோடு நெருங்குகிறேன் என்றால் அது தமிழரோடுதான்'' என்று காந்தியடிகள் சொன்னதாக, சென்னை அரசினர் தோட்டத்திலுள்ள காந்தி இல்லத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. தமிழரிடத்தில் எனக்கு நல்ல மதிப்பு உண்டு என்று குறிப்பிட்டு இருக்கிறார்.

''மாஸ்கோவில் முக்கிய இடங்களெல்லாம் லெனின் சிலையும் பொன்மொழியும் இல்லாமல் இல்லை. உலகப்புகழ் பெற்ற உத்தமத் தலைவர் காந்தியின் கொள்கை வழிப்படி நடப்போம்''

அண்ணல் காந்தியடிகள் பற்றிய புகைப்படக் கண்காட்சியை மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்-

''வழக்கம் போல தமிழக அரசு உத்தமர் காந்தியடிகளின் பிறந்த நாளை ஒரு தேசியப் பெரு நாளாகத் தமிழ்நாட்டினுடைய தமிழ் மக்களின் பெருவிழாவாகக் கொண்டாட வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

''தமிழ் மக்கள் காந்தியடிகளை மறந்துவிடவில்லை என்பதை நாம் நினைவு கொள்வதற்குச் சான்றாக அமைந்துள்ளது இந்த விழா.

''தில்லையாடி வள்ளிஅம்மை என்கிற அந்த வீரப் பெண்மணியின் பெயர் தென் ஆப்பிரிக்கப் போராட்டத்தில் காந்தி பெயருக்கு அடுத்தபடியாக நிலைத்து நிற்கிறது என்கிற பெருமை தமிழ்நாட்டிற்கு உண்டு. அந்த அளவுக்குத் தமிழ் மக்கள். காந்தியடிகளின் இலட்சியங்களைத் தங்களது வாழ்நாளில் பெற்றுக் கொண்டு எந்த அளவு நம்மாலே பின்பற்ற முடியும் என்ற அந்த அளவுக்கு நாம் பின்பற்ற உறுதி எடுத்துக்கொள்ளவேண்டும்.

''தமிழகத்தைப் பொறுத்தவரை ஆட்சி பொறுப்பிலே கடந்த 15 ஆண்டுகளாகப் பொறுப்பேற்று இருக்கிற திராவிடர் இயக்கத்தைச் சார்ந்த நாங்கள் உத்தமர் காந்தியடிகளின் இலட்சியங்களைப் பின்பற்றுவதிலே ஏதாவது இடையூறுகள் இருக்குமோ அல்லது வேறுபாடுகள் இருக்குமோ என்றசந்தேகக்கண்கள்சிலருக்குத் தோன்றக்கூடும். ஆனால் தந்தை பெரியார் அவர்களையும் பேரறிஞர் அண்ணா அவர்களையும் நன்றாகத் தெரிந்து கொண்டவர்கள் உணர்வார்கள் உத்தமர் காந்தியடிகள் தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் ஒரு குறிப்பிட்ட கால கட்டத்திலே சில அரசியல் காரணங்களுக்காகக் கருத்து மாறுபாடுகளை எடுத்துக் கையாண்டு இருப்பார்களே தவிர, அவர்கள் இந்த நாட்டு மக்களாலே போற்றப்படுகிறவர்கள் வணங்கப்பட வேண்டிய மாபெரும் தலைவர் என்பதை மறுத்துரைக்கவில்லை என்பதையும் நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

''உத்தமர் காந்தியடிகள் மறைந்த அந்த நாளில் தந்தை பெரியார் அவர்கள் வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு நாட்டிற்கே 'காந்திநாடு' என்று பெயரிடச் சொன்னார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் வானொலியில் பேசிய நேரத்தில் 'உலக உத்தமர்' காந்தியடிகள் என்று வழங்கி அழைத்தார்கள். அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதற்குப் பிறகும் உத்தமர் காந்தியடிகளின்இலட்சியங்களை எந்த அளவுக்குச் சமுதாயத்தில் எடுத்துச் சொன்னார்கள் என்பதைத் தொடர்ந்து அவரது உரையைக் கேட்டு வந்தவர்கள் புரிந்து கொள்ள முடியும்.

''அந்த வழியில்தான் இன்றைக்கு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள், உத்தமர் காந்தியடிகளின் திட்டங்களை - கிராமப்புற மக்கள் பயன் பெற வேண்டும் என்கிற திட்டங்களை - இந்த நாட்டினுடைய 'இதயம்' கிராமம்தான் என்பதைக் கூறும் அளவுக்குத் திட்டங்களைநிறைவேற்றிக் கொண்டு வருகிறவர்கள் என்பதை நமமாலே புரிந்து கொள்ள முடியும்.

''நாம் விவாதித்துக் கொண்ருக்கிற திட்டங்களை அதன் அடிப்படைகளை அமைத்துத் தந்தவர் உத்தமத் தலைவர் காந்தியடிகள். இன்றைக்குத் தொழிலோடு இணைந்த கல்வி வேண்டும் என்கிற முயற்சியிலே, நாம்

ஈடுபட்டிருக்கிறோம். அதைத் தான் காந்தியடிகள் விடுதலைப் போராட்டங்கள் நடத்திக் கொண்டிருந்த அந்தக் காலத்திலேயே 'நிர்மாணத் திட்டம்' என்கிற பெயராலே கல்விமுறை இந்த நாட்டு மக்களை வெறும் குமாஸ்தாக்களாக ஆக்கிவிடும் என்ற கல்வி முறையிலிருந்து மாற்றி தொழில் பெற்றவர்களாக தொழில் அறிவு பெற்றவர்களாக மாறவேண்டும் என்கிற அடிப்படையிலே நிர்மாணத் திட்டங்களை அமைத்தார்கள்.

''நம்முடைய தாய் தந்தைகளை வணங்குவதற்குக் கற்றுக் கொண்டாக வேண்டும், எழுத்தறிவித்தவன் இறைவனாவான் என்ற பழமொழி தமிழில் இருக்கிறது. ஆரம்பப் பள்ளியிலே 'அ' வைக் கற்றுத் தருகிறவர் ஆசிரியர்தான் பிறகு அந்த மாணவன் மிகச் சிறந்த பட்டதாரியாக விஞ்ஞானியாக - பல்வேறு துறையில் நிபுணனாக மாறினாலும் ஆரம்பத்தில் எழுத்தறிவு கற்றுத் தந்த அந்த ஆசிரியனை இறைவனாகப் போற்ற வேண்டும் என்கிற தத்துவத்தைக் கொண்ட தமிழ்நாட்டில் உத்தமர் காந்தியடிகள் இந்த நாட்டில் மக்கள் அறவழியிலே - அமைதி வழியிலே - சத்திய நெறியிலே - தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக ஒரு 70 ஆண்டுக்கு முன்பே திட்டங்களைத் தீட்டித் தந்திருக்கிறார்கள். அவைகள் காலத்திற்கேற்ற திட்டங்களாகச் சில இருந்திருக்கலாம். அதிலே சில வளர்ச்சி அடைகிற உணர்வுகளைப் பெற்றிருக்கலாம்.


''காந்தியடிகள் அறிமுகப்படுத்திய கதர்த் திட்டத்தைத் தமிழக அரசு பல்வேறு யுத்திகளைப் புகுத்தி தமிழகத்தில் கோடிக் கணக்கான ரூபாய்க்கு கதர் விற்பனையை அதிகப்படுத்தி கதரை மக்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்பதன் மூலம் கிராம மக்களுக்குப் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கிற உணர்வைத் தமிழக அரசு இன்றைக்கு நிலைநாட்டிக் கொண்டிருக்கிறது.

''இன்றைக்கும் உலகம் விஞ்ஞானத்தை நோக்கி வேகமாகப் போய்க் கொண்டிருக்கிற நேரத்தில், கிராமத் தொழில்களை விட்டு விட்டு நம்மாலே போக முடியவில்லை.

''போடுகிற திட்டங்கள் கிராமப் புறத்தை அடிப்படையாகக் கொண்டு போடப்படவேண்டுமே தவிர, எப்படியும் திட்டங்கள் போடலாம் என்ற உணர்வை இந்த நாட்டிலே இருக்கிறவர்கள் மறந்துவிட வேண்டும் என்ற உணர்வு மிகச் சிறந்தபொருளாதார மேதைக்கு வந்துள்ளது. அப்படிப்பட்ட அடிப்படை உணர்வுகளை உருவாக்கி சமுதாயச் சீர்திருத்தத்திலே யாரானாலும் சரி, பொருளாதார சமத்துவத்திலே யாரானாலும்சரி மதபேதங்களை ஒழிக்கவேண்டுமேயானாலும் சரி, சாதியற்ற சமுதாயத்தை உருவாக்கவேண்டுமானாலும் சரி, தீண்டாமை அறவே ஒழித்துக் கட்டுவதானாலும் சரி,, மனித இனம், மனித இனமாக வாழ வேண்டும் என்ற மகத்தான இலட்சியத்தை நம்முடைய உத்தமத் தலைவா காந்தியடிகள் விட்டுவிட்டுச் சென்று இருக்கிறார்கள்.

''அவரை என்றைக்கும் நினைக்கும் தலைவராக - இந்த நாட்டின் வழிகாட்டித் தந்தையாக அவர்களை ஏற்றுக் கொள்கிற உணர்வை, இந்த நாட்டிலே பிறந்திருக்கிற 68 கோடி மக்களும் பெற வேண்டும். அதற்கு நாம் அனைவரும் உறுதிமொழி எடுத்துக் கொள்ள வேண்டும். வேறுபாடுகள் கருத்துமாறுபாடுகள் உத்தமர் காந்தியடியடிகளைப் பொறுத்தவரை இந்த நாட்டிலே எழக்கூடாது. அவர்களைப் பற்றிய விவாதங்கள் முடிந்து போன ஒன்று. விவாதத்திற்கு அப்பாற்பட்டவராக மேலே உயர்ந்து நிற்கின்ற வழிகாட்டியாக இந்த நாடு உய்வுற வேண்டுமானால், ஏழை வாழ்வு பெற வேண்டுமானால், சாதி சமயங்கள் ஒழியவேண்டுமானால், சமத்துவம் நிலைக்க வேண்டுமானால், கிராமப்புற மக்கள் பேசுகின்ற மக்களாக அவர்கள் திகழவேண்டுமானால் காந்தியடிகளை வழிகாட்டியாக நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். அவர் காட்டுகின்ற முறையிலே நமது திட்டங்களை அமைத்துக் கொள்ள வேண்டும்.

''அந்த வழியிலே இன்றைக்கு இந்திய அரசு தனது திட்டங்களை நிறைவேற்றவும், இந்த நாட்டு மக்களுக்குக் காந்தியின் நினைவை ஆண்டிற்கு ஒரு தடவை மாத்திரம் கொண்டு வருவதோடு நின்றுவிடாமல், நாள் முழுவதும் தினசரி அவர்களைப் பற்றி நினைக்கின்ற உணர்வை, மத்திய அரசு ஏற்படுத்துவதற்குமுன்வரவேண்டும். அதைத் தமிழகம் முழுமையாக மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுடைய சீரிய தலைமையில் நிறைவேற்ற தயாராக இருக்கிறது என்பதை சொல்வதோடு, மேதகு ஆளுநர் அவர்கள் அக்கறையோடும் மிகுந்த உணர்வோடும் இந்த விழாவைநடத்தியதற்கு தமிழக மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவிக்கிறேன்''.



மாண்புமிகு தமிழகச் சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்கள் பேசுகையில் :

''ஆட்டன்பரோ அவர்கள் மகாத்மாவின் படத்தைப் பல கோடி ரூபாய் செலவில் வெளியிட்டு இருக்கின்றார் - அதில் எல்லாவற்றையும்காட்டவில்லை. பல வரலாற்று நிகழ்ச்சிகள் இடம் பெறவில்லை என்ற குறை இருக்கிறது. சுதந்திரப் போராட்டம் நிறவெறி போராட்டம் போன்றவைகள் எல்லாம் 3 மணி நேரத்தில் காட்டுவது என்பது முடியாத காரியம். ஆகவே காந்தியடிகளோடு தமிழ்நாட்டிற்கு— தமிழர்களுக்கு என்னென்ன தொடர்பு இருந்தது அது எப்படி எப்படி இருந்தது என்பதை எடுத்துக் காட்டுகிற வகையில் காந்தி வரலாற்றை ஒரு புதிய முறையில் நமது இளைய தலைமுறையினர் புரிந்து கொள்கிற முறையில் ஒரு செய்திப் படத்தை அல்லது ஒரு திரைப்படத்தை எடுப்பது சாலச் சிறந்தது.

காந்தியை முதன் முதலாக உலகத்திற்கு அறிமுகப்படுத்தியவர்கள் தமிழர்கள்தான். காந்தியடிகள் தென் ஆப்பிரிக்காவிலே தில்லையாடி வள்ளியம்மையை பற்றிப் பலமுறை குறிப்பிட்டிருக்கிறார்கள். மகாத்மா காந்தியின் நிறவெறி எதிர்ப்புப் போராட்டத்திற்குத் தமிழ் வியாபாரிகள்தான், உறுதுணையாக ஆக்கப்பூர்வமாக இருந்தவர்கள். இந்தச் சரித்திர விவரங்களை இளைய தலைமுறைக்குத் தெரிவிக்க வேண்டும். தமிழ்நாட்டுச் சுற்றுப் பயணத்திற்குப் பிறகு தான்-தமிழக விவசாய மக்கள் அரை ஆடை உடுத்தியிருப்பதைப் பார்த்துத் தான் தானும் அரை ஆடை அணிந்தார். காந்தியடிகள் அந்தக் கொள்கையைக் கடைசிவரை கடைப்பிடித்தவர்-இலண்டனில் நடந்த வட்ட மேஜை மாநாட்டில்கூட அரை ஆடையில்தான் கலந்து கொண்டார். இப்படிப்பட்ட வரலாற்றுத் துணுக்குகளை இளைய தலைமுறையினருக்குத் தெரிவிக்க வேண்டும். 1968-ஆம் ஆண்டு ஊதாண்ட் அவர்கள் சென்னையில் பேசுகையில், மகாத்மா காந்தியின் நல்ல பல கொள்கைதான் அட்லாண்டிக் சாசனத்தில் பொறிக்கப்பட்டு, இன்று ஐக்கிய நாடு சபையின் கொள்கையாக வரையறுக்கப்பட்டு இருக்கிறது என்று குறிப்பிட்டார். நான் இந்த விழா மூலம் கேட்டுக் கொள்வது, அக்டோபர் மாதம் இரண்டாம் தேதியாவது காந்தியடிகளின் நூலை எல்லா மொழிகளிலும் வெளியிட்டு நாட்டில் பரப்ப வேண்டும் என்பதுதான் '' என்று குறிப்பிட்டார்.

விழாவில் திரு க. அருணாசலம் எம். எல். சி. திரு. பொள்ளாச்சி நா.மகாலிங்கம், திருமதி சௌந்தராகைலாசம் ஆகியோர்கலந்து கொண்டு சிறப்பித்தனர். செய்தி மக்கள் தொடர்புத்துறைத் துணை இயக்குநர் திரு ஆர். கிருஷ்ணமூர்த்தி நன்றி கூறினார்.

## வளரும் நாடுகளின் கடமை

உள்நாட்டிலேயே தகுந்த எரிசக்தி வளங்களை உருவாக்க இந்தியா முயற்சிகளை எடுத்து வருகின்றது. என்ணெய் மற்றும் [illegible] கண்டுபிடிப்பு தீவிரப்படுத்தப்பட்டு, [illegible] உற்பத்தி குறிப்பிடத்தக்க [illegible] அடுத்த சில பத்தாண்டுகளில், [illegible] நாட்டின் முக்கிய எரிசக்தி வளமாக இருக்கும். நிலக்கரி மற்றும் நீர் வளங்களின் அடிப்படையில் மின்சக்தி உற்பத்திக்கு மாபெரும் திட்டமொன்றை நாடு மேற்கொண்டுள்ளது.

எரிசக்தி பற்றாக்குறை மூன்றாவது உலக நாடுகளை [illegible] சம்பந்தப்பட்டதல்ல. கடந்த சில [illegible]ளாக நிலவிவரும் மந்தப் போக்கே இதற்குத் தக்க உதாரணம்.

மனித சமுதாயம் கடந்த காலங்களில் பல சவால்களை எதிர்கொண்டு வெற்றி கண்டுள்ளது. [illegible] எரிசக்தி தேவை மற்றும் வழங்கு முறை மாற வேண்டும்.

எதிர்காலத்தில் புதுப்பிக்கக்கூடிய எரிசக்தி விஷயங்களையே மனித இனம் நம்பியிருக்கவேண்டிய அவசியம் உள்ளது. பொருளாதார மற்றும் அரசியல் அமைப்புக்குப் பங்கம் வராதவகையில் திட்டமிட்ட முறையில் இந்த மாற்றத்தைக் கொணரவேண்டியது செல்வச் செழிப்பு மிக்க மற்றும் வளரும் நாடுகளின் கடமை.

நம் காரியங்கள் எல்லாவற்றிலும்- சொந்த விஷயத்திலாகட்டும் அல்லது பொதுத் துறையிலாகட்டும்-நாணயத்திற்கு முதலிடம் அளிப்பதே நம் கலாசாரத்தின் சாரமாகும்.

வீணான நேரத்தை நன்கு பயன்படுத்தும்படி கிராம மக்களைத் தூண்டுவதே உருவான முன்னேற்ற வேலையாகும்.

பசியால் வாடி, வேலையின்றி இருக்கும் மக்களுக்கு வேலை அளிப்பது ஒன்றே ஆண்டவன் தரிசனம் அளிப்பதற்கு ஒப்பாகும்.

என்னைப் பொறுத்தவரையில் மனிதத் தன்மையும் நாட்டுப் பற்றும் ஒரே மாதிரியான கடமையாகவே கருதுகிறேன்.






# மீனவர் குடியிருப்புகள் திறப்புவிழா!

சென்னை தண்டையார்ப் பேட்டை நாகூரான் தோட்டப் பகுதியில் மீனவ சமுதாயத்தைச் சேர்ந்த குடிசைவாழ் மக்களுக் காகக் கட்டப்பட்ட 792 குடியிருப்புகளை, மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு ஜெயில் சிங் அவர்கள் 19.9.83 அன்று திறந்து வைத்தார். மேதகு ஆளுநர் திரு எஸ்.எல்.குரானா அவர்கள் விழாத் தலைமை ஏற்றார். ரூ. ஒரு கோடியே 30 இலட்சம் செலவில் கட்டப்பட்ட இந்தக் குடியிருப்புகளின் திறப்பு விழா நிகழ்ச்சிக்கு மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் முன்னிலை வகிக்க, மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு கே.கலைமணி அவர்கள் சிறப்புரை ஆற்றினார்.

விழாவிற்கு வருகை தந்தோரை வரவேற்றுப் பேசிய குடிசை மாற்று வாரியத் தலைவர் திருமதி ச.வெ.கி.சுலோசனா சம்பத் அவர்கள், "குடிசை மாற்று வாரிய வீடுகளில் வசிக்கும் மக்கள் சொந்தத்தில் தொழில் தொடங்க குறைந்த வட்டியில் ,,கடனுதவி செய்து தரப்படுகிறது" என்று கூறினார்.

விழாச் சிறப்புரை ஆற்றிய மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு கே. கலைமணி அவர்கள்,
குடியிருப்பைக் கட்டி அதில் பல்வேறு வசதிகளைச் செய்து தந்து உங்களிடம் ஒப்படைத்துள்ளதை தூய்மையாக வைத்திருந்து மற்ற பகுதிகளைவிடத் தூய்மையான பகுதி இது என்ற பெயரினைப் பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அரசின் ஆக்கப் பூர்வமான இந்தச் செயல்களுக்கு மீனவ சமுதாயம் தொடர்ந்து துணை நிற்க வேண்டும்'' என்று கூறினார்.

இவ்விழாவில் கலந்துகொண்டு முன்னிலை உரையாற்றிய மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் குறிப்பிட்டதாவது: "பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராயிருந்த போது இந்தியாவிலேயே முதன் முதலாகக் குடிசை வாழ் மக்களுக்குத் தீப்பிடிக்காத வீடுகள் கட்டித்தரும் திட்டத்தை அறிவித்தார்கள். தான் படத்தில் நடித்து உழைத்துச் சம்பாதித்த பணத்தில் ரூ. ஒரு இலட்சத்தை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இத்திட்டத்திற்காக அண்ணா அவர்களிடம் வழங்கியதை இன்று நினைவுகூர்வது பொருத்தமாயிருக்கும் என்று நினைக்கிறேன். மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்கள் ஆட்சிப்பொறுப்பிலிருக்கும் இந்த ஆறாண்டுக் காலத்தில் குடிசை வாழ் மக்களுக்காக ரூ. 1,724 இலட்சம் செலவில் 15,000 வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன".

மேதகு ஆளுநர் திரு எஸ்.எல். குரானா அவர்கள் தமது தலைமை உரையில்: "சீரிய தலைமையில் இந்த வாரியம் மக்களுக்குச் சிறப்பான சேவைகளைச் செய்துவருகிறது. குடிசைகளை அகற்றி ஏழை மக்களுக்கு நல்ல வீடுகளைக் கட்டித் தரும் பணிகளை மாநில அரசும் மத்திய அரசும் நல்லமுறையில்செய்து வருகின்றன".

புதுக்குடியிருப்பினைத் திறந்து வைத்து மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு ஜெயில்சிங் அவர்கள் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:

"மீனவர்களுக்காகக் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் கட்டப்பட்டுள்ள இந்த வீடுகளைத் திறந்து வைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். மக்களுக்கு உணவு உடை உறைவிட வசதிகளை ஒரு அரசு செய்து தரவில்லை என்றால் அவர்களுடைய நல்வாழ்வில் அக்கறை காட்டவில்லை என்று பொருள். மத்திய அரசின் 20 அம்சத் திட்டங்களில் ஒன்று ஏழைகளுக்கு வீட்டு வசதி அளிப்பதும் ஆகும். இந்தக் கண்ணோட்டத்துடன் தமிழக அரசும் சமுதாய மறுமலர்ச்சித் திட்டங்களில் கீழ்த்தட்டில் உள்ள மக்களுக்கு வீடுகட்டித் தரும் பணிக்கு முக்கியத்துவம் அளித்து வருவது குறித்து மகிழ்ச்சியடைகிறேன்.

இவ்விழாவில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச்.வி.ஹண்டே அவர்களும் கலந்து கொண்டார். மேதகு குடியரசுத் தலைவர் அவர்களுக்குக் குடிசை மாற்று வாரியத் தலைவர் திருமதி ச. வெ.கி.சுலோசனா சம்பத் அவர்கள் நினைவுப் பரிசு வழங்கினார். விழா இறுதியில் குடிசைமாற்று வாரிய உறுப்பினர் திரு ஈ.மதுசூதனன் நன்றி கூறினார். சமுதாயப் பணிகளில் அரசின் செயல் திட்டங்களை விளக்கும் வகையில் குலதெய்வம் இராஜகோபால் குழுவினரின் வில்லுப் பாட்டு நிகழ்ச்சி இரவு நடைபெற்றது.



# உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே!

ஜே. சி. டி. பிரபாகரன், எம்.எல்.ஏ.

புரட்சித் தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சென்ற ஆண்டிலிருந்து (1982) சத்துணவுத் திட்டத்தைத் தமிழகப் பள்ளிகளில் எல்லாம் அறிமுகம் செய்து, பசிப்பிணியைப் போக்கும் மாபெரும் தொண்டைச் செய்து வருகிறார்.

பசிப்பிணியைப் பாவி என்று கூறுகிறது மணிமேகலை. 'பசி என்று வந்தால் ஒரு பிடி சோறு புசி என்று தந்து பாரப்பா' என்று கூறினார் பாவேந்தர் பாரதிதாசன். இதுபோன்ற பல்வேறு அறிஞர்களின் நூல்களைப் படித்தும், தமது சொந்த அனுபவத்தைக் கொண்டும், பசித்தவர்களுக்கு இரங்க வேண்டும்என்னும் இலட்சியத்தைப் பல்லாண்டுகளாகக் கொண்டிருக்கிறார் புரட்சித் தலைவர்.

இன்று பள்ளிக் குழந்தைகளுக்கு இலவசச் சத்துணவு வழங்கும் புரட்சித் தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், பத்தாண்டுகளுக்கு முன்பே கல்லூரி மாணவர் சிலருக்கு மதிய உணவு வழங்கியிருக்கிறார். உணவு மையம் அமைத்து உணவு வழங்கவில்லை- ஆனால் உணவு வழங்குவதற்குத் தேவைப்படும் நிதியை வழங்கியிருக்கிறார்.

1973ஆம் ஆண்டு! அப்போது லயோலா கல்லூரியில் பி.ஏ., ஆங்கில இலக்கிய வகுப்பில் படித்துக்கொண்டிருந்த நான், மாணவப் பேரவையின் செயலாளனாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றிருந்தேன்.

கல்லூரி சம்பந்தப்பட்ட வகையில் ,தங்களது கோரிக்கைகளையும் தேவைகளையும் மாணவ நண்பர்கள் என்னிடம் வந்து தெரிவிப்பார்கள். நானும் உடனே அவர்களது பிரச்சினைக்காக-கல்லூரி நிருவாகிகளைச் சந்தித்து ஆவன செய்வதற்குரிய முயற்சியை மேற்கொள்வேன்.

ஒருநாள் இரண்டு மாணவர்கள் என்னிடம் வந்தனர். ஏதோ சொல்ல முனைந்தனர். சிறிது தயங்கினர்; பிறகு ,தொண்டையைச் சரிசெய்து கொண்டு துணிந்து சொல்ல முற்பட்டனர்.

"நாங்கள் வசதியற்றவர்கள்; எங்களுக்கு மதிய உணவு இலவசமாகக் கிடைத்தால் நலமாக இருக்கும், தயவுசெய்து ஏற்பாடு செய்து தாருங்கள்'' என்று கேட்டனர்.

அந்த மாணவர்கள், இவ்வாறு தைரியமாகக் கேட்டதை எண்ணிப் பாராட்டினேன். அவர்கள் அக்காலப் பள்ளிகளில் நடைமுறையில் இருந்த இலவச மதிய உணவு அருந்தியிருக்கிறார்கள் என்பதையும், கல்லூரியில் அந்த வசதி இல்லாததால் கஷ்டப்படுகிறார்கள் என்பதையும் உணர்ந்தேன். அத்துடன் இன்னொன்றும் எனக்குத் தோன்றியது. இந்த மாணவர்கள் துணிச்சல்காரர்கள்- அதனால் தங்களது தேவையைத் தெரிவித்துவிட்டனர். இன்னும் இவர்களைப் போல் எத்தனை பேர்-இலவச உணவு தேவைப்பட்டு, அதனை வெளியில் சொல்வதற்கு அஞ்சி-பேசாது இருக்கிறார்களோ என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது. அதனால் உடனே, "இலவச மதிய உணவு தேவைப்படும் மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்'' என்ற அறிவிப்பை எழுதி அறிவிப்புப் பலகையில் இடம் பெறச்செய்தோம். உடனே மாணவர்கள் மனுச் செய்தனர்.

அந்த மனுக்களை ஏந்திக் கொண்டு, கல்லூரி முதல்வர் அவர்களைச் சந்தித்தோம். பிரச்சனையை எடுத்துச்சொன்னோம். "கல்லூரி நிருவாகத்தால் இலவச உணவு கொடுக்க முடியாது" என்று சொல்லி விட்டார் அவர்.

அந்த நேரத்தில் எங்களுக்கு நினைவுக்கு வந்தவர் மக்கள் திலகம் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள்தான். பழுத்த மரத்தை நாடி வௌவால்கள் செல்வது போல, மாணவர்களாகிய நாங்கள் அவரை அணுகினோம்.

"கல்லூரி மாணவர்களுக்கு இலவச மதிய உணவு அளிக்க முயற்சி செய்கிறோம். அதற்கு நிதிதிரட்ட இருக்கிறோம். ஏதாவது ஒரு நிகழ்ச்சி நடத்த இருக்கிறோம். தாங்கள் அந்த நிகழ்ச்சிக்கு வரவேண்டும்'' என்று கேட்டுக்கொண்டோம்.

உடனே அவர், "வாழ்க! இது நல்ல திட்டம்! என்னுடைய பங்குக்கு 10 ஆயிரம் ரூபாய் தருகிறேன். நீங்கள் மற்ற வேலைகளைத் துவக்குங்கள்'' என்றார்.





நாங்கள் நட்சத்திரக் கலை விழாவாக நடத்த விரும்பினோம். அதன் தொடர்பாக தென்னிந்திய நடிகர் சங்க நிருவாகிகளைச் சந்தித்துப் பேசினோம்.

''நட்சத்திரங்கள் கலந்து கொள்வார்கள். ஆனால் நடிகர் சங்கக் கட்டட நிதிக்கு 1000 ரூபாய் தரவேண்டும்'' என்று எங்களுக்குச் சொல்லப்பட்டது.

இந்தத தகவலைப் புரட்சித் தலைவர் அவர்களிடம் சொன்னோம்.

''அதுக்கென்ன, கொடுத்துட்டா போச்சு'' என்று அவர் கூறினார். நடிகர் சங்க நிதிக்கு ரூபாய் தரவேண்டும் என்று அவரும் சொல்லிவிட்டார் என்று தான் நாங்கள் எண்ணிக்கொண்டோம்! ஆனால்....?

அக்டோபர் மாதம் 22ஆம் தேதி; நட்சத்திரக் கலைவிழா. நிகழ்ச்சி தொடங்குவதற்கு முன்னதாகவே -நடிகர் சங்க நிதிக்காக ஆயிரம் ரூபாயை, சம்பந்தப்பட்டவர்களிடம் கொடுத்துவிட்டோம். அன்று பல்கலைக் கழக நூற்றாண்டு மண்டபம் புதுப் பொலிவுடன் திகழ்ந்தது. நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக நட்சத்திரங்கள் வந்துவிட்டனர். பார்வையாளர்களின் கண்களும் எங்களது கண்களும் வாயிற்புறத்தையே நோக்கிக் கொண்டிருந்தன. சரியாக 6.30 மணி இருக்கும். புரட்சித் தலைவர் அவர்கள் மண்டபத்துக்குள் நுழைந்தார். அவரைக் கண்டதும் மாணவர்களும் பொதுமக்களும் எழுப்பிய கர ஒலி மண்டபத்தின் சுவர்களையே அசைத்துப் பார்த்தது. அத்தனை ஆர்வம்! அத்தனை வரவேற்பு!

கலைநிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. இடைவேளையில் புரட்சித் தலைவர் உரையாற்றினார்.

''தங்களுடன் படிக்கிற சக மாணவர்களுக்குப் பசி என்றறிந்தவுடன், அவர்களின் பசியைப் போக்குவதற்காக ஒரு திட்டத்தையே உருவாக்கி-அதற்காக நிதி திரட்ட வேண்டும் என்று எண்ணிய மாணவர்களை நான் பாராட்டுகிறேன். இந்த நேரத்திலே மற்றொன்றையும் நான் கூறவேண்டியவனாக இருக்கிறேன்.

''இந்த நட்சத்திர விழாவை நடத்தும் மாணவர்களிடம் நடிகர் சங்க நிர்வாகத்தினர், நடிகர் சங்க நிதியாக ஆயிரம் ரூபாய் தரவேண்டும் என்று கேட்டு, அவர்களும் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது.

''பணத்தை உருவாக்குபவன் மனிதன். மனிதனை ஒரு போதும் பணம் உருவாக்குவதில்லை. அப்படிப்பட்ட பணத்திற்கு மனிதன் அடிமையாகி விடக்கூடாது. பணத்திற்கு அடிமையாகி விட்டால் என்னென்ன நடக்கும் என்பதை யாவரும் அறிவர். இதை அனைவரும் உணர்ந்து ஆக்க வழியில் செயல்பட வேண்டும்!

''ஏழை மாணவர்களுக்குச்சோறு போடும் நல்ல பணிக்காக நிதி திரட்டப் படும்போது, அந்த நிதியிலிருந்து ஆயிர ரூபாய் நிதியை நடிகர் சங்கம் பெற்றுக் கொள்வது சரியான செயலாக எனக்குப் படவில்லை. எனவே மாணவர்கள் நடிகர் சங்கத்திற்குக் கொடுத்த 1000 ரூபாயை, ஏழை மாணவர் மதிய உணவுத் திட்டத்திற்காக அந்த மாணவர்களிடமே நான் திரும்ப அளித்துவிடுகிறேன்.''

—இவ்வாறு கூறியபடி ஆயிர ரூபாயை அந்த மேடையிலேயே என்னிடம் அளித்தார் புரட்சித் தலைவர். அந்த நிகழ்ச்சியைக் கண்ணுற்ற மக்கள் எழுப்பிய கர ஒலியால் வானம் அதிர்ந்தது என கூறலாம்.

நடிகர் சங்கத்திற்கு ஆயிரம் ரூபாய் வேண்டுமென்று கேட்கிறார்களே என்று நாங்கள் பொன்மனச்செம்மலிடம் தெரிவித்தபோது, ''கொடுத்துட்டாப் போச்சு'' என்று அவர் குறிப்பிட்டதன் பொருள் கலைநிகழ்ச்சி நடைபெற்ற அன்றுதான் எங்களுக்குப் புரிந்தது.

10 ஆயிரம் ரூபாய் தருகிறேன் என்று சொன்ன புரட்சித் தலைவர் அவர்கள் 11 ஆயிரம் ரூபாய் வழங்கிவிட்டார்கள். மாணவர் சமுதாயத்திற்கு அளவிட இயலாத மகிழ்ச்சி—கரை காண முடியாத களிப்பு! அந்த 11 ஆயிர ரூபாயையும், நாங்கள் நிதியாகத் திரட்டிய தொகையையும் சேர்த்து மொத்தம் 30 ஆயிரம் ரூபாயை எங்கள் கல்லூரி முதல்வர் அவர்களிடம் கொடுத்தோம். அந்தத் தொகை வங்கியில் நிலையான வைப்புத் தொகையாகப் போடப்பட்டுள்ளது. அதன் மூலம் வசதியற்ற அந்தப் பதின்மூன்று மாணவர்களுக்கு இலவச மதிய உணவு வழங்கப்பட்டது. இன்றும் மதிய உணவுத் திட்டம் லயோலா கல்லூரியில் இருந்து வருகிறது. இதன் மூலம் ஆண்டு தோறும் ஏறக்குறைய 15 மாணவர்கள் பயன் பெற்று வருகிறார்கள்.

இந்தக் கல்லூரி மாணவ சமுதாயத்தின் பசியைத் தீர்ப்பதில் பெரும் பங்கு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு உண்டு. அந்த வள்ளலின் உள்ளத்தில் பூத்த புதிய திட்டம்தான் இன்று 65 இலட்சம் பள்ளிக் குழந்தைகளுக்கு சத்துணவு வழங்கப்படும் சமுதாயப் புரட்சித் திட்டம்.

வரலாறு, புரட்சித் தலைவருக்கு வாழ்த்துப் பாடப் போவது உறுதி! பாரதப் போரில் இருபெரும் படைகளுக்கும் உணவளித்த பெருஞ்சோற்று உதியன் சேரலாதனின் பெயர் இலக்கிய வரலாற்றில் இணைந்திருக்கிறது அல்லவா? 65 இலட்சம் மழலைகளுக்குச் சத்துணவு வழங்கும் மக்கள் திலகம்-புரட்சித் தலைவர்-மாண்புமிகு முதல்வர் அவர்கள் நமது தாயகத்தில் மட்டுமல்ல வெளிமாநிலங்களிலும் - வெளிநாடுகளிலும் புகழ்க்கொடி நாட்டி வருகிறார் என்பது உலகறிந்த உண்மையாகும்.



**பே**ரறிஞர் அண்ணா பிறந்த நாள்-இந்த ஆண்டு பவள விழாவாகத் தொடங்கப்பட வேண்டிய நாள்-நூற்றாண்டு விழாபோல் கொண்டாடப்பட வேண்டிய நாள்-அவர் நம்மிடையே இன்று இல்லாமையாலும் - அண்மையில் இலங்கைத் தமிழர் தலைவர் திரு அமிர்தலிங்கம் நெஞ்சம் நெகிழ நினைவூட்டியது போல உலகத்துக் கடலெல்லாம் உப்புக் கரிக்கக் காரணம் அயல்நாட்டுத் தமிழர்-தமிழ்ப் பாட்டாளிகள்-கண்ணீர் தான் என்று பேரறிஞர் அண்ணா ஒரு முறை கருத்தோடும் கலையோடும் கூறியதற்கு ஏற்ப இலங்கைத் தமிழர் இழப்புகளும் இன்னல்களும் நம்மை இடியெனத் தாக்கியிருப்பதாலும் - எழுச்சியுடன் விழாக் கொண்டாட இயலாதவர்களாய் இருக்கிறோம்.

வான் ஒளியாய் - ஒலியாய் என்றும் விளங்கும் சான்றோர்களுள் ஒருவர் பேரறிஞர் அண்ணா. அதனால் அவரை வானொளியும் - வானொலியும்-போற்றல் இயற்கை; கடமை.

பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் செப்டம்பர்15, அவரை உருவாக்கிய தந்தை பெரியார் பிறந்த நாள் செப்டம்பர் 17. இந்தத் தேதிகளை நினைக்கும்போது செப்டம்பர் 11 தேசிய மகாகவி — சுப்பிரமணிய பாரதி மறைந்த நாள் என்பதையும் மறப்பதற்கு இல்லை. இதை இங்கு இவ்வாறு எண்ணக் காரணம் வெறும் தேதிகளை நினைவூட்ட மட்டும் அல்ல; சில சேதிகளையும் நினைவூட்டத்தான். முக்கியமாகத் தேசிய வெள்ளப்பெருக்கு என்ற காலகட்டம் முடிந்து அவ்வெள்ளம் சமவெளிகளில் - சரியான வயல்வெளிகளில் - பாயத் தொடங்கிய காலம் ஆரம்பமாகி விட்டது என்பதையே என் போன்ற ஆய்வாளர்கட்கு இத்தேதிகள் தரும் சேதிகள் நினைவூட்டுகின்றன.


பேரறிஞர் அண்ணா காஞ்சிபுரத்தில் பிறந்தவர். காஞ்சி



டாக்டர் ந. சஞ்சீவி

தமிழ் இலக்கியத் துறைத் தலைவர்

சென்னைப் பல்கலைக் கழகம்.


# ஏல் பல்கலைக் கழகத்தில் பேரறிஞர் அண்ணா





ஏல் பல்கலைக் கழகத்தின் வரலாற்றை ஆழ்ந்து படிக்கிறார் பேரறிஞர் அண்ணா (22-4-1968)

புரமே பழந்தமிழகத்தின் ஒரு பெரிய பல்கலைக் கழகம். இன்றும்கூட அது சிறப்புக் கலைகள் உள்ளிட்ட கோயிற்கலைகட்குச் சிறந்த பல்கலைக் கழகம். நாளந்தா முதலிய வடநாட்டுப் பல்கலைக் கழகங்கள் பலவற்றிற்கும் கொரியா, சீனா முதலிய கிழக்காசிய நாடுகட்கும் தத்துவப் பேரறிஞர்களை அனுப்பிவைத்த பழம் பெரும் நகரம் காஞ்சிபுரம். அந்த நினைவு வரலாற்று அறிவுடைய எவருக்கும் மாறாது. அதனால்தான் பெருங்கவிஞர் பாரதியாரும் 'காசிநகர்ப் புலவர் பேசுமுரைதான் காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி சமைப்போம்' என்று பாடினார். ஆம். காஞ்சிப் புலவர் கேட்டால்தான்-ஒப்பினால்தான் காசிப்புலவர்க்கும் பெருமை. ஆனால் அக்கருத்திற்கு மேலும் மாற்றுகள் ஏற்றி 'காஞ்சி நகர் அறிஞர் பேசுமுரைதான் காசியில் கேட்பதற்கோர் கருவி சமைப்போம்' என்று கருதச் செய்த வீறு-பேறு பேரறிஞர் அண்ணாவின் தனிப் பெருமை.



பேரறிஞர் அண்ணாவின் அறிவு வாழ்க்கைக்கே இமயச் சிகரமாக இருக்கும் செய்தி - அமெரிக்கப் பல்கலைக் கழகமாகிய 'ஏல்' பல்கலைக் கழகம் அவரைச் சிறப்பு விருந்தினராக அழைத்துப் பெருமை செய்ததே ஆகும். ஏல் பல்கலைக் கழகம் அமெரிக்காவில் 1701லேயே ஏற்பட்ட பல்கலைக் கழகம். இந்தியப் பல்கலைக் கழகங்களில் முதல் மூன்று பல்கலைக்கழகங்கள் ஆகிய சென்னை- பம்பாய் -கல்கத்தா பல்கலைக்கழகங்கள் தோன்றுவதற்கு ஒன்றரை நூற்றாண்டுகட்கு முன்பே தோன்றிய பல்கலைக்கழகம், ஏல் பல்கலைக் கழகம். அமெரிக்காவில் தோன்றிய மூத்த மூன்று பல்கலைக் கழகங்களுள் மூன்றாவது. இந்தப் பல்கலைக்கழகத்திற்கு என்று தனி செய்தி நிலையம்-வானொலி நிலையம் மாபெரும் கலையரங்கம் உண்டு. இன்னும்கூட நம் நாட்டில் எந்தப் பல்கலைக்கழகத்திலும் இந்த நிலை இல்லை! நூற்று அறுபத்தைந்து ஏக்கர் நிலத்தில் அமைந்துள்ள இந்தப் பல்கலைக் கழகத்தின் நூலகத்தில் மட்டும் எழுபத்து நாலு இலட்சத்து ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பத்து மூன்று (74,01,953) நூல்கள் உள்ளன. இவற்றில் பன்னிரண்டு இலட்சத்துத் தொண்ணூற்று ஐயாயிரத்து அறுநூற்று ஐம்பத்தாறு (12,95,656) நுண்பட ஒளி, ஒலிச்சுருள்கள் ( Audio-Visual ) உள்ளன; ஐம்பத்து ஏழாயிரத்து எண்ணூற்றுத் தொண்ணூற்று ஒரு (57,891) இதழ்கள் சந்தா செலுத்தி வரவழைக்கப்படுகின்றன. இப்பல்கலைக்கழகத்தில் கிடைத்தற்கரிய நூல்கள் சுவடிகள் தொகுப்பும் உள்ளன. உலகத்திலேயே மிக அதிகமாக நூல் தொகுப்புகள் உடைய பல்கலைக் கழகம் இதுவெனக் கருதப்படுகிறது. பல்கலைக்கழக வளாகத்தை அடுத்து 1½ மைல் தொலைவில் எழுநூற்று இருபது (720) ஏக்கர் நிலம் விளையாட்டுப் போட்டிகட்கும் பயிற்சிக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. அமெரிக்கப் பல்கலைக்கழகங்களின் வரலாற்றில் பல முதன்மை இடங்கள் பெற்ற பெருமை ஏல் பல்கலைக் கழகத்திற்கு உண்டு. இந்த ஒரு சில குறிப்புகளை மட்டுமேனும் இங்கே குறிப்பிடக் காரணம் ஏல் பல்கலைக்கழகம் ஏதோ பல்கலைக் கழகம் இல்லை. அதோர் ஒப்பற்ற பல்கலைக் கழகம்-என்பதை அறிய விரும்பாதவர்களும் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான். மேலும் இத்தகு பல்கலைக்கழகம் பேரறிஞர் அண்ணா அவர்கட்குச்செய்த பெருமையே பெருமை என்று உணர-உணர்த்தத்தான். இந்த இடத்தில் நம் சென்னையில் உள்ள அமெரிக்கத் தகவல் நிலையம் திரு வ. உ. சி. சுப்பிரமணியம் அவர்கள் உதவியோடு திரு சாவி அவர்களைக் கொண்டு எழுதி வெளியிட்டுள்ள 'அமெரிக்காவில் அண்ணாதுரை' என்ற அருமையான படங்கள் நிறைந்த புத்தகத்தில் உள்ள இரு இன்றியமையாக் குறிப்புகள்தான். அவை வருமாறு, 1. 'பழம்பெரும் அமெரிக்கப் பல்கலைக்கழகம் யேல். தமிழக முதல்வருக்குஅது 'சப் ஃபெல்லோஷிப்' வழங்கி, சிறப்புச் செய்தது. பல்கலைக் கழக மாணவர்களுடனும், ஆசிரியர்களுடனும் பெரிய தலைவர்கள் நேரடியாகத் தொடர்பு கொள்வதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள இத்தனிப் பெரும் சிறப்புப் பெற்ற முதல் இந்தியர் திரு அண்ணதுரை' (2) ஹெண்டன் சப் என்னும் முன்னாள் மாணவர் 1937-ல் ஏற்படுத்தியது இந்த ஃபெல்லோஷிப். உலகின் சிறந்த தலைவர்களைப். பல்கலைக்கழகத்திற்கு அழைத்துச் சிறப்புச் செய்வது இதன் நோக்கம்.

மேற்கண்ட இரு குறிப்புகளை மறவாமல் இங்குக் குறிப்பிடக் காரணம் 'பகை நட்பாக்கும்' பண்பாளர் பேரறிஞர் அண்ணா என்பதை அறியாச் சில சின்ன புத்தித் தமிழர்கள் - ஆம். தமிழர்கள் தான்! - அந்நாளில் அறிஞர் அண்ணா அவர்கட்குக் கொடுக்கப்பட்டது 'முழு ஃபெலோஷிப் கூட இல்லை. சின்ன ஃபெலோஷிப்' என்று நகையாடியமையை இப்போது நினைத்தாலும் எரிச்சலாகவும் இரக்கமாகவும் இருப்பதால்தான்! ஒருவர் பெயரின் சுருக்கம் 'சப்' என்று அறியாமை அவர்களைப் பற்றித் திரு. வி. க. நடையில் 'என்னே அகந்தை' 'என்னே அறியாமை' என்றே அறைய வேண்டியுள்ளது.


இனி ஏல் பல்கலைக்கழகத்துக்குப் பேர் கொடுத்த ஏல் பற்றியும் அறிந்து கொள்வது பொருத்தம்; ஆம். சென்னைக்கும் யேலுக்கும் உள்ள சிறந்த பொருத்தமே முதல் இந்தியத் தலைவராக அவரை அப் பல்கலைக்கழகம் அழைக்கக் காரணமாக அமைந்ததோ என எண்ணி மகிழ வேண்டியுள்ளது.

ஏல் பதினேழாம் நூற்றாண்டு வெள்ளையன். 1649 முதல் 1721 வரை வாழ்ந்தான்; பாஸ்டனில் பிறந்தான்; லண்டனில் தொடக்கக் கல்வி பெற்றான். 1671இல் கிழக்கிந்தியக் கம்பெனியின் எழுத்தராக ( Clerk ) நியமிக்கப்பட்டான்; சென்னைக்கு 1672 ஜூன் 23ஆம் நாள் வந்தான்; சத்திரங்களில் சென்னை மக்களின் வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்கும் குட்டி நீதிபதி ஆனான்; சென்னையில் அப்போது கைம்பெண்ணாகி ஆறு மாதமே ஆகியிருந்த காத்தரீன் என்ற ஒரு வெள்ளைச் செல்வச் சீமாட்டியை 1680 நவம்பர் நாலாம் நாள் மணந்தான். படிப்படியாகப் பதவி உயர்வுகள் பெற்று 1687 ஜூலை 25ஆம் நாள் செயின்ட்ஜார்ஜ் கோட்டையின் கவர்னராகவே ஆகிவிட்டான்! கிழக்கிந்தியக் கம்பெனியின் கழுகுக் கண்களில் அவன் இந்தியாவில் வெள்ளை ஆதிக்கத்தை வேர் பிடிக்கச் செய்வதில் வல்லாளனாகப்பட்டான். 1687-இல் இறந்து போன தன் மகன் டேவிட் நினைவாக கடலூரில் கோட்டை ஒன்றை எழுப்பினான். அப்புறம் அவன் செல்வாக்கு கிழக்கிந்தியக் கம்பெனி அதிகாரிகட்கு இடையே ஏற்பட்ட இகல்களால் இறங்குமுகம் ஆகியது. அதன் விளைவாக ஏல் இங்கிலாந்து திரும்பினான். ஏல் மேல் ஏற்பட்ட புகார்கள் விசாரிக்கப்பட்டன. தன் தமையன் பேராலும் தன் செல்வாக்காலும் அவன் அடித்த பெருங்கொள்ளைகள் _ அவலா. லேயே ஒப்புக்கொள்ளப்பட்டன. ஏழாண்டுக் காலம் கொள்ளை அடித்த குற்றத்துக்காக அவன் இங்கிலாந்துக்குப் பயணமாக முடியாதபடி சென்னையிலேயே தடுத்து வைக்கப்பட்டான். 1704 லிருந்து அவனுக்கு இங்கிலாந்தில் மறு வாழ்வு கிடைத்தது., வைர வியாபாரியும் ஆனான்; தம் மூன்று மகள்களும் செல்வக் குடும்பத்தில் மண உறவு கொள்வது கண்டு மகிழ்ந்தான்: மறு வாழ்வு பெற்ற ஏல் கொள்ளை வாழ்வுக்கு மாறாகக் கொடுக்கும் வாழ்வைத் தொடங்கினான். ஏலின் கொடையுள்ளம் அறிந்த அமெரிக்க அன்பர்கள் 1718-ல் அவனுக்குப் பொருளுதவிவேண்டி விண்ணப்பம் செய்தனர்; எகிப்திய பிரமிட்கள் காட்டிலும் அவன் பெரும்புகழ் நிலைக்கத் தங்கள் பல்கலைக்கழகத்திற்கு அவன் பெயரைச் சூட்டுவதாக அறிவித்தார்கள். ஒரு நூற்றாண்டு காலக் கூறில் ஏல் பல்கலைக்கழகம் மிக அதிகமான நன்கொடையை - பொருள்களாக புத்தகங்களாக - பணமாகப் பெற்றது. அதனால் அந்த முதல் பெருங் கொடையாளியின் பெயர் இன்றும் அப்பல்கலைக்கழகத்தை அணி செய்கிறது இன்று ஏல் பல்கலைக்கழகம் பெற்றிருக்கும் செல்வம் - செல்வாக்கு நோக்க அப்போது ஏல் கொடுத்தகொடை அதிகமில்லைதான். ஆனால் காலத்தினால் செய்த உதவியை அமெரிக்க மக்கள் போற்றும் பண்பு போற்றத்தக்கதே. அந்தோ! சகடக்கால் போல் மறுபடியும் ஏல் வாழ்க்கை ஏமாற்றங்களையும் நண்பர்கள் துரோகங்களையும் சந்தித்தது. அவன் மனமுடைந்து இறந்தான்; அவன் விட்டுச் சென்ற பொருள்கள் ஏலத்தில் விற்கப்பட்டன. சில பொருள்கள் ஏல் பல்கலைக் கழகத்தால் வாங்கப்பட்டு நன்றியுடன் இன்றும் பாதுகாக்கப்படுகின்றன! ஏல் இறந்தான்; அவன் கல்லறையை அணிசெய்யும் கையறுநிலைக் கவிதை வருமாறு:

Born in America,
in Europe bread
In Africa travelled,
and in Asia wed,
where long lived
and thrived; in London dead.

அமெரிக்காவில் பிறந்தான்;
ஐரோப்பாவில் வளர்ந்தான்
ஆப்பிரிக்காவில் அலைந்தான்;
ஆசியாவில் மணந்தான்
அங்கே அதிகநாள் வாழ்ந்தான்;
ஆக்கம் பெற்றான்;
இலண்டனில் இறந்தான்

இனி இப்படி மேடும் பள்ளமும் கண்ட ஏலின் கொடையால் அவன் பெயர் பெற்று இலங்கும் ஏல் பல்கலைக்கழகத்திற்கு 1937 இல் இப்பல்கலைக்கழகத்துப் பழைய மாணவர் ஒருவர் சிறந்த சிந்தனையோடு நிறுவிய அறக்கட்டளை ஒன்றால் தம் வாழ்விலும் மேடு பள்ளங்களைக் கண்ட பேரறிஞர் அண்ணா— பச்சையப்ப வள்ளல் அறத்தால் உருவாகிய பள்ளியிலும் கல்லூரியிலும் படித்த பழைய மாணவர் தனிப் பெருந்தலைவரான நிலையில் அழைக்கப்பட்டார் என்பதை எண்ணும்போது பேரறிஞர் அண்ணாவே ஏல் பல்கலைக் கழகத்தைப் பிரிந்தபோது கண் கலங்கியது போன்றே நாமும் கண்கலங்க வேண்டியுள்ளது.



ஏல் பல்கலைக் கழக மாணவர்களுக்குத் திருக்குறள் பாடம் சொல்கிறார் பேரறிஞர் அண்ணா.



தமிழ்நாட்டில் நான்கு நாட்கள் சுற்றுப்பயணம் செய்த மேதகு இந்தியக் குடியரசுத் தலைவர் திரு ஜெயில்சிங் அவர்கள் 17.9.'83 அன்று மாலை கோவையிலிருந்து சென்னைக்கு வந்து சேர்ந்தார். குடியரசுத்தலைவர் அவர் களை, சென்னை விமான நிலையத்தில் மேதகு ஆளுநர் திரு எஸ். எல். குரானா அவர்கள் மாலை அணிவித்து வரவேற்றார்.

இந்தியக் குடியரசுத் தலைவர் மேதகு திரு ஜெயில்சிங் அவர்கள் கல்பாக்கம் அணுமின் நிலையத்தை 19.9.'83 அன்று சுற்றிப் பார்த்தார். மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே அவர்கள் உடன் சென்றார்.





சென்னை இராஜபவனத்தில் 20.9.83 அன்று நடைபெற்ற மரம் நடும் விழாவில், மேதகு குடியரசுத் தலைவர் திரு ஜெயில்சிங் 1000 மரங்கள் நடும் திட்டத்தைத் துவக்கி வைத்தார். மேதகு ஆளுநர் திரு எஸ். எல். குரானா, மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு க. இராசாராம், மாண்புமிகு செய்தி - அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே முதலானோரும் கலந்துகொண்டனர்.


## படமும் செய்தியும்



பாரதீய வித்தியா பவன் சார்பில், 19.9.'83 அன்று நடந்த ராஜாஜி நூற்றாண்டு வித்யாஸ்ரமக் கட்டடத்தின் அடிக்கல் நாட்டு விழாவில், மாண்புமிகு முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் ராஜாஜி அவர்களின் திருவுருவப்படத்தைத் திறந்து வைத்தார்.



மகாகவி பாரதியார் நினைவு நாளையொட்டி சென்னை கடற்கரைச் சாலையிலுள்ள மகாகவி பாரதியார் சிலைக்கு 11.9.'83 அன்று மாண்புமிகு தமிழக மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் திரு ம. பொ. சிவஞானம் அவர்களும், மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சரும் மற்றும் அமைச்சர் பெருமக்களும் மாலை அணிவித்தனர்.



# சமுதாய மருத்துவர் பெரியார்

தமிழ்நாடு அரசின் சார்பில் தந்தை பெரியார் 105வது பிறந்த நாள் விழாவும், பெரியார் நூற்றாண்டு நினைவுத்தூண் திறப்பு விழாவும் கடலூர் நகர் மன்றத்தில் 18.9.'83 அன்று சிறப்பாக நடைபெற்றன.

துவக்கத்தில் சதாசிவம் - சாந்தா குழுவினரின் இன்னிசைக் கச்சேரி நடந்தது. விழாவிற்கு வந்திருந்தோரை தென்னார்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி சி.கே. கரியாலி, இ.ஆ.ப. வரவேற்றார்.

தந்தை பெரியார் புகைப்படக் கண்காட்சியினை மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் திரு. கே.கலைமணி அவர்கள் திறந்து வைத்தார். அப்போது அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''நம்மையெல்லாம் ஆளாக்கிய தந்தை பெரியார் பிறந்தநாள் விழாவில் கண்காட்சியினைத் திறந்துவைப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். சாதிமத வேறுபாடுகளைக் களையவும், மூடப்பழக்க வழக்கங்களை ஒழிக்கவும், தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேறவும் பேச்சு, எழுத்து மூலம் பணியாற்றினார் பெரியார். பாமர மக்கள் புரிந்து கொள்ளக்கூடிய அளவிற்குக் கருத்துக்களை எடுத்துச் சொல்லிப் பிரச்சாரம் செய்து வந்தார் பெரியார்.

பெரியார் வழியில் அவரது சீரிய கருத்துக்களைப் பின்பற்றி நடக்கவேண்டும்''

பின்னர் நடைபெற்ற கவியரங்கத்திற்கு உவமைக்கவிஞர் சுரதா தலைமை தாங்கினார். கவியரங்கை அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் திரு சை. வே. சிட்டிபாபு தொடங்கிவைத்துப் பேசுகையில்,

''எப்பேர்ப் பட்டவர்களாக இருந்தாலும் இசைக்கு மதிப்புக் கொடுப்பதுபோல் கவியரங்கத்தில் பாடப்படும் கவிதைகளையும் மக்களாகிய நீங்கள் ரசிப்பீர்கள். தந்தை பெரியார் ஆற்றிய பணிகள் பற்றி மணிக்கணக்கில் அல்ல, நாட்கணக்கில் பேசலாம். அவ்வளவு கருத்துக்களைத்தந்தை பெரியார் கூறியுள்ளார்கள். எனது சிந்தனையைச் சொல்கிறேன், ஏற்றுக் கொள்ளக் கூடியவைகளை ஏற்றுக் கொள்ளுங்கள். இல்லாவிடில் குப்பையில் போடுங்கள் என்றார் பெரியார். மக்களுக்கு தன்னுடைய கருத்துக்களை எளிய நடையில் விளக்கினார். வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல் தன்னுடைய கருத்துக்களைச் சொல்லிவந்தார் கஞ்சத்தனம் உள்ளவர் பெரியார் என்று கூறுவார்கள். ஆனால் அவர் சிக்கன குணமுடையவர். தந்தை பெரியார் போன்று எல்லாரும் சிந்தனை வளம் பெற வேண்டும் என்று விரும்புகிறேன்'' என்றார்.

கவிஞர் மணிமொழி கவிதையில், ''மனிதனில் புனிதன் சத்தியவார் காந்தி முன்னே சத்தியாகிரகம் செய்து வென்றவர் பெரியார். பரந்த இந்த உலகத்திலே படித்து அறிவு பெற்றவர் பெரியார். பூமியில் பிறந்த மனிதர்கள் சமம் என்றார் பெரியார். தென்னக வாயிலில் தோன்றிய ஞாயிறு தந்தை பெரியார்'' என்றார்.

திருமதி நிர்மலா சுரேஷ் கவிதையில், ''மூடபணியாகக் கிடந்த பெண்ணுரிமையைப் பாதுகாக்கப் பாடுபட்டவர். இன்று பெண்கள் வேலைக்குப் போகிறோம், மேடையில் பேசுகிறோம் என்றால் அதற்குக் காரணமானவர் பெரியார்தான்'' என்றார்.

கவிஞர் புதுவை செல்வம் கவிதையில், ''சொந்த அறிவாலே சிந்தித்துச் செயல்படு என்றார் பெரியார். கலப்புத் திருமணத்தைக் கட்டாயம் ஆக்க வேண்டும் என்று பாடுபட்டவர் பெரியார். செயல், தொண்டு மூலம் சமுதாயச் சீர்திருத்தம் செய்தவர் பெரியார்'' என்றார்.

கவியரங்கத்திற்குத் தலைமை தாங்கிய உவமைக் கவிஞர் சுரதா உரையாற்றுகையில், ''தந்தை பெரியார்போல் எதிர் வாதம் செய்வோர் யாரும் இல்லை. தமிழ்நாட்டில் ஏழரை மணி நேரம் பேசிய தலைவர் இவர் ஒருவரேயாகும். பெரியாருக்குப் பூமாலை போட்டால் அதில் உள்ள நூலை எடுத்து குறைந்த விலைக்கு விற்று விடுவார். பெரியார் தமிழ்நாட்டில் பிறக்கவில்லை என்றால் பகுத்தறிவு வெற்றி பெற்று இருக்க முடியாது. பெரியார் தமிழகத்தில் முதல்வர் ஆகாத முதல்வர். பெரியார் பேச்சில் கருத்தும் கண்டனமும் இருக்கும். பெரியாரிடம் சிக்கனத்தைக் கற்க வேண்டும். பெரியார் தோன்றவில்லை என்றால் இன்று நாம் கற்காலத்தினர் போல் இருந்திருப்போம். அய்யாவை ஒரு நாளைக்கு நூறு முறை நினைக்க வேண்டும், இல்லாவிடில் நீங்கள் நுரைபோல் ஆகிவிடுவீர்கள்'' என்று கூறினார்.

தந்தை பெரியார் நூற்றாண்டுக் குழு அலுவலர் திரு பா. செயப்பிரகாசம் நன்றி கூற, காலை நிகழ்ச்சிகள் முடிந்தன.

மாலையில் தந்தை பெரியார் நூற்றாண்டு நினைவுத் தூண் திறப்பு விழா நிகழ்ச்சி கடலூர் நகர் மன்றத்தில், நாயன இசையுடன் ஆரம்பமானது.

செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு சி.என். கிருஷ்ணபாரதி, இ.ஆ.ப. வரவேற்புரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது: ''தந்தை பெரியார் அவர்களின் தத்துவங்கள் கொள்கைகள், தற்பொழுது வாழும் மக்களுக்குப் பயன்படுவது மட்டுமல்லாது, வருங் காலத்து மக்கள் பயன் பெறவும் உதவுபவை. தந்தை பெரியாருக்குக் காணிக்கையாக தமிழக அரசு இதுபோன்ற நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றது.

நினைவுத் தூண் திறப்பு விழாவிற்கு மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு ச. இராமச்சந்திரன் அவர்கள் தலைமை தாங்கினார்.

குறிஞ்சிப்பாடி சட்டமன்ற உறுப்பினர் திரு ஏ.தங்கராசு பேசுகையில், ''சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வு அகல வேண்டும் என்று பாடுபட்டார் பெரியார். மூட நம்பிக்கையை ஒழித்த பெருமை தந்தை பெரியாருக்குத்தான் சேரும்'' என்றார்.

கள்ளக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் திரு எஸ். சிவராமன் பேசுகையில்:

''உழைத்து முன்னேற வேண்டும் என்று தந்தை பெரியார் கூறினார். இத்தூணில் பொறிக்கப்பட்டுள்ள பொன்மொழிகளைப் படிக்காதவன் படித்தவனிடம் கேட்டுத் தெரிந்து கொள்கின்றான். பொருத்தமான இடத்தில் இத்தூண் நிறுவப்பட்டிருப்பது கண்டு மகிழ்ச்சியடைகின்றேன்''



முன்னாள் நாடாளுமன்ற மேலவை உறுப்பினர் திருதில்லை வில்லாளன் பேசுகையில், ''உணர்ச்சி வடிவமாக, தத்துவமாக வாழ்ந்து மறைந்தவர் தந்தை பெரியார்! நாட்டு மக்களுக்குப் பெரியார் சொல்லிய கருத்துக்கள் நிலையாக இடம் பெற வேண்டும் என்ற நிலையில் கல்தூண் வடிவில் நிற்கிறது. திராவிட இயக்கத்திற்குப் பெரியாருக்குத் தளபதிகளாக இருந்தவர்களையும், இருக்கின்றவர்களையும் உருவாக்கியது அண்ணாமலைப் பல்கலைக் கழகம்தான்'' என்றார்.

தந்தை பெரியார் நூற்றாண்டு விழாக் குழு உறுப்பினர் திரு. இராசகோபாலன் பேசுகையில், ''தந்தை பெரியார் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பள்ளிக்கு 'இந்து' என்றபெயரை எடுத்துவிட்டார். ஏறத்தாழ 16 ஆண்டுகள் நிர்வாகப் பொறுப்பில் இருந்தார். அன்றைய ஆங்கிலேய மாவட்டக்கல்வி அலுவலர் பெரியாரது நிர்வாகத்திறமையைப் பாராட்டினார். மனிதன் தேவைக்கு மேல் எதுவும் வைத்து இருக்கக் கூடாது என்று விரும்பினார் பெரியார்'' என்றார்.

முன்னாள் நாடாளு மன்ற மேலவை உறுப்பினர் திரு. டார்பிடோ.ஏ.பி. சனார்த்தனம் பேசுகையில்:

''இன்றைய இளைஞர்களுக்குப் பெரியார் கருத்துக்களை மனத்தில் பதிய வைக்கும் அளவிற்கு பிரச்சாரம் செய்ய வேண்டும். தென்னார்க்காடு மாவட்டம் பெரியாரின் கருத்துக்களுக்குத் துணையாக இருந்த மாவட்டமாகும். அன்று அசோகர் கல் தூண்களில் கருத்துக்களை வெட்டியதுபோல இன்று தமிழக முதல்வர் அவர்கள் பெரியாரின் கருத்துக்களை கல்தூண் வடிவிலே பொறித்து வருகின்றார். பெரியார் பெருமை பற்றிப் பேசப் பேச நாம் வளர்வோம்.''

முன்னாள் அமைச்சர் திரு. என் இராசாங்கம் உரையாற்றுகையில் ''உலக நாடுகளில் மிகச் சிறந்த சிந்தனையாளர் தந்தை பெரியார் அவர்கள். பாமர மக்களைப் பகுத்தறிவாளர்களாக மாற்றியவர் தந்தை பெரியார் ஆவார். டாக்டர் அம்பேத்கார் பெரியாரின் சிறப்பான சேவைகளைப் பாராட்டியுள்ளார்கள். ஒரு தலைவனுக்குத் தன்னம்பிக்கையும், தைரியமும் வேண்டும். அது தந்தை பெரியாரிடம் இருந்தது. ஆகவே அவர் மிகச் சிறந்த தலைவராகத் திகழ்ந்தார். பெரியார் பெரியவர்கட்கும் சிறியவர்கட்கும் மரியாதை கொடுத்துப் பழகுவார்'' என்றார்.

திருவாரூர் திரு.கே.தங்கராசு பேசுகையில், ''வரலாற்றில் தந்தை பெரியார் நூற்றாண்டு விழாக்குழு பல சிறப்புக்களைச் செய்து வருகின்றது. கல்தூணில் உள்ள கருத்துக்களைப் பின்பற்றி நீங்கள் எல்லாம் செயல்பட வேண்டும் என்று விரும்புகின்றேன்'' என்றார்.

தமிழ்ப் பழங்கலை இயக்குநர் திருக்குறளார் வீ. முனிசாமி பேசுகையில், ''பெரியார் விழாவில் நீங்கள் சிந்திக்காமல் வேறு எந்த விழாவில் சிந்திக்கப் போகிறீர்கள்? ஆகவே நான் இன்று சொல்லக் கூடிய கருத்துக்களைச் சிந்தியுங்கள். பெரியாரின் ஒவ்வொரு சொட்டு இரத்தமும் தமிழர் நலனுக்குப் பாடுபட்டதாகும்.

தந்தை பெரியார் தோன்ற வில்லை என்றால் பேரறிஞர் அண்ணா நமக்குக் கிடைத்திருக்க மாட்டார்'' என்றார்.

மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு. கே.கலைமணி அவர்கள் சிறப்புரையாற்றுகை யில் குறிப்பிட்டதாவது:

''தாழ்ந்த தமிழகத்தைத் தலைநிமிரச் செய்ய அரும்பாடு பட்டார் தந்தை பெரியார். தந்தை பெரியாரின் ஒவ்வொரு போராட்டத்தின் போதும் ஏறத் தாழ 5 தடவைகள் அரசு சட் டத்தை மாற்றியுள்ளது. அம்பேத் வண்டிக்கு அரசு வரிவிலக்கு அளித்தது. அதற்கு தந்தை பெரி யார் தன் நன்றியினைத் தெரி வித்தார். ஆனால் மாண்புமிகு முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் கடந்த மூன்று ஆண்டுகளாக தந்தை பெரியாருக்கு அரசே விழா நடத்துவது குறித்து உயி ரோடு இருந்திருந்தால் மிகவும் மகிழ்ச்சி அடைந்திருப்பார். வீழ்ந்துகிடக்கும் சமுதாயம் ஒரே நாளில் மாறும் என்று பெரி யார் நம்பிக்கை கொண்டிருக்க வில்லை. ஆகையால் பகுத்தறிவு கொண்ட அரசுகளை ஆதரித்து வந்தார். சமுதாயத்தில் உள்ள மருத்துவர் போன்று விளங்கினார் தந்தை பெரியார்''

யில் இருக்கும். வஞ்சனையை, சூதை, மூடப் பழக்க வழக்கங் களை ஒழிக்கப் பாடுபட்டவர் பெரியார். மனிதன் மனிதனாக நடமாட வேண்டும் என்று பாடு பட்டவர் பெரியார். பெரியாரின் நடைமுறை-அண்ணாவின் செயல் முறைதான் என்னுடைய நடை முறை என்பது மாண்புமிகு முதல் வர் எம்.ஜி.ஆர். அவர்களின் கொள்கை.

இங்கு திறக்கப்படும் கல்தூண் 13வது கல்தூணாகும். அடுத்து நாகர்கோவிலில் 14-வது கல் தூண் திறக்கப்படும். இறுதியில் 15-வது கல்தூண் 95அடி உயரத்



கார் புத்தமதத்திற்கு மாறினார். ஆனால் பெரியார் ஒரு மதத்தில் ஒருவர் இருந்து கொண்டு அந்த மதத்தின் குறைபாடுகளைக் களைய முடியும் என்று கருதி னார். பெரியாரின் கருத்துக்களை நம்முடைய வாழ்க்கையில் கடைப் பிடித்தால் தான் நாம் அவருக்கு நன்றி செலுத்தியவர்கள் ஆவோம்''.

விழாவிற்குத் தலைமை தாங்கி யும், தந்தைபெரியார் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்தும் மாண்புமிகு மின்துறை அமைச் சர் திரு. ச.இராமச்சந்திரன் அவர்கள் ஆற்றிய உரையில் குறிப்பிட்டதாவது:

''பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்த தந்தை பெரியாரின் உந்து

பெரியார் நூற்றாண்டு நினை வுத் தூணைத் திறந்து வைத்து மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ் செழியன் அவர்கள் உரையாற்று கையில் குறிப்பிட்டதாவது:

''சில அறிஞர்களின் பிறந்த நாளான அக்டோபர் இரண்டு, செப்டம்பர் பதினைந்து, செப் டம்பர் பதினேழு போன்ற தேதி களில் அந்த அறிஞர்களினால் சிறப்புப் பெறுகின்றன. சிலரு டைய புகழ் நாட்டளவில், வீட் டளவில், தெரு அளவில், ஊர் அளவில், பதவி இருக்கும் வரை

நிகழ்ச்சித் தொகுப்பு—

அ. மருது

தில் சென்னையில் நிறுவப்படும். ஆராய்ந்து அறிந்து, நன்மை, தீமை அறிந்து, பகுத்தறிந்து செயல்பட வேண்டும் என்று விரும்பினார் பெரியார். படித்த வர்களாகிய நாங்கள் ஏன் 5-வது படித்த தந்தை பெரியாரைத் தலைவராக ஏற்றுக்கொண்டோம் என்றால் மக்களின் எண்ணங் களை நன்கு கண்டறிந்தவர் பெரியார் என்பதால்தான்.''

மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி சி.கே.கரியாலி, இ.ஆ.ப. நன்றி கூறினார்.

விழா இறுதியில் நடிப்பிசைப் புலவர் நாடக மன்றத்தார் நடித்த பேரறிஞர் அண்ணா அவர்களின் 'நீதி தேவன் மயக்கம்' நாடகம் நடைபெற்றது.

# அனைவருக்கும் எழுத்தறிவு!



அனைத்துலக எழுத்தறிவு நாள் விழா 8.9.83 அன்று சென்னை சீமாட்டி வெலிங்டன் கல்வி இயல் கல்லூரியில் நடை பெற்றது. விழாவிற்குப் பள்ளிக் கல்வி இயக்குநர் திரு ஜே.ஏ. இரயான் தலைமை தாங்கினார். பள்ளி சாரா மற் றும் வயது வந்தோர் கல்வி இயக்குநர் திரு ம. சாம்பசிவம் வரவேற்புரையாற்றினார்.

கல்லூரிக் கல்வி இயக்குநர் டாக்டர் பி. திருஞானசம்பந்தம் இயக்கக வெளியீடு களை வெளியிட்டார். இவ்விழா வில் தமிழ்நாடு மகளிர் நிறுவனம், பஞ்சாப் சங்கம், உழைப்போர் பலநோக்குக் கல்வி நிறுவனம், மாநில பள்ளி சாராக் கல்விக் கரு வூலம் ஆகியவை சார்பில் அமைக் கப்பட்டிருந்த கண்காட்சியினை, வேளாண்மைத்துறை இயக்குநர் திரு யு.எஸ்.நடராசன், இ.ஆ.ப. திறந்து வைத்து சிறப் புரை ஆற்றினார்.

மாநில வயதுவந்தோர் கல்வித் திட்டத்தின் கீழ் 5400 மையங் களையும், பள்ளி சாராக் கல்வித் திட்டத்தின் கீழ் 80 தொழிற் கல்வி மையங்களையும், மேல் நிலைப்பள்ளிகளில் நாட்டு நலப் பணித் திட்டத்தின் கீழ் 50 பள்ளி சாராக் கல்வி மையங்களையும், தமிழ்நாடு மகளிர் தொண்டு நிறு வனத்தின் சார்பில் 'பயிற்சி ஏட்டை' வெளியிட்டும், மூர்து சேவியா கல்வி கலாச்சார நிறு வனத்தின் சார்பில் உருது முதல் நூலை வெளியிட்டும், இளம் பெண்கள் கிறிஸ்துவச் சங்கம் சார்பாகச் 'செய்தி மடல்' வெளி யீட்டை வெளியிட்டும், பள்ளி சாராக் கல்வி கருவூல மையம் சார்பாகப் பெண்களுக்கான முதல் நூலை வெளியிட்டும் பஞ் சாப் சங்கம் சார்பில் வயதுவந் தோர் கல்வி மையங்களுக்குத் தையல் இயந்திரங்களை வழங்கி யும், மாண்புமிகு கல்வி அமைச் சர் திரு செ.அரங்கநாயகம் அவர்கள் சிறப்புரையாற்றினார். அவர் தமது உரையில்:

''பல்வேறு சேவா நிலையங் களும், இந்தத் துறையும் சேர்ந்து நல்ல முறையில் நடத்தி வரு கிறது. நாட்டிலே இருக்கின்ற எழுத்தறிவு இயக்கத்தை இந்திய அரசு 1968ல் துவக்கியது. ஆனால் நாம் 1967ல் துவக்கி உள்ளோம். எழுத்தறிவு இயக் கத்தை இதற்கு முன் ஏன் துவக்க வில்லை? படித்தவர்கள் படியாத வர்கள் என்று இரு சமுதாயத்தி னர் நாட்டிலே உள்ளனர். படித் தவர்கள் சக்தி, ஆற்றல் பெற்று



செங்கல்பட்டு மாவட்டத் தில் 70% தாழ்த்தப்பட்ட வர்கள் கல்வி அறிவு பெறு கிறார்கள்.

உள்ளனர். ஆனால் படியாதவர் களுக்கு நாட்டிலே நடப்பது பற்றித் தெரியவில்லை. சுதந்திரம் பெற்றது படித்தவர்களுக்குத் தான் பயன் பெறுகிறது. இது படிக்காதவர்களுக்கும் பயன்பெற வேண்டும்.

''பெண்கள் பெரும்பாலும் படிக்காமல் இருக்கின்றனர். அத னால் தான் பெண்கள் அடிமை கள் போல் நடத்தப்படுகின்றனர். ஆகையால் பெண்கள் படித்துத் தெளிவு பெற வேண்டும். பல் வேறு கஷ்டங்கள் படாமல் இருப் பதற்கு எல்லோரும் கல்வி அறிவு பெற வேண்டும். உங்களுக்கும், தமிழக மக்களுக்கும் சொல்லிக் கொள்வேன். வாழ்க்கைக்குப் பயன்படக் கூடிய அளவில் இந்தக் கல்வி முறை பயன்பட வேண்டும். அ ஆ இ ஈ அல்லது 1,2,3,4 படிப்பது மட்டுமல்ல கல்வி. நல்லமுறையில் அறிவு வளம் பெற கல்வி கற்றாக வேண்டும். வறுமையின் காரணமாகப் படிக் காமல் இருந்தவர்கட்கும் இந்தக் கல்வி முறை சமுதாயத்தில் மறு மலர்ச்சி ஏற்படுத்தும் என்று நம்புகிறேன்.

''படித்த ஒருவன் படிக்காத ஒருவனுக்கு கல்வி அறிவு பற்றிச் சொல்லித் தருவதன் மூலம் அவன் சமுதாயப் பணி செய்தவனாகக் கருதப்படுகின்றான்''.

''ரஷ்யாவில் நூற்றுக்கு நூறு பேர் படித்தவர்களாக உள்ளனர். முதியோர் கல்வித் திட்டம் சமு தாயத்தில் மாற்றம் ஏற்படுத்தும் திட்டமாகும். எல்லா மக்களும் சமுதாயத்தில் அந்தஸ்து பெற வேண்டும் என்று விரும்புகின் றேன்''

விழா இறுதியில் திருமதி வத் சலா நாராயணசாமி நன்றி கூறினார்.



பாங்காக், பர்மா ஆகிய இடங்களில் இருக்கும் ஆசிரியர்களும், மாணவர் களும் கோடைக் கால விடு முறையில் எழுதப் படிக்கத் தெரியாத மக்களுக்குச் சொந்த முயற்சியில் ஆர்வத்துடன் இலவசமாகக் கல்வி கற்பிக்கின்றனர்.

* தமிழ்நாட்டில் 10 ஆயிரம் முதியோர் கல்வி நிலையங் கள் உள்ளன.

* புதிதாக இந்த ஆண்டு 5,400 முதியோர் கல்வி நிலையங் கள் திறக்கத் திட்டமிடப் பட்டுள்ளது. இவை அக்டோபர் முதல் செயல் படும். இத்திட்டத்திற்காக ரூ. ஒரு கோடி ஒதுக்கப்பட் டுள்ளது.

— அ மருதவிநாயகம்

# நீட்டுக நேசக்கரம்!



"தனியொருவனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம்'' என்றார் தேசியக் கவிஞர் பாரதி. அவர் குறிப்பிடும் அந்தத் தனி ஒருவனின் மேம்பாட்டைக் குறிக்கோளாகக் கொண்டு செயல்படுவதுதான், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்.

வறுமையில் வாடும் மக்களை- குறிப்பாக ரூ.3,500க்குக் கீழே


**திரு எச். பி. என். ஷெட்டி, இ.ஆ.ப.**

**ஆணையாளர்-அரசுச் செயலாளர் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை.**


ஆண்டு வருவாய் பெறுவோரைத் தெரிந்தெடுத்து, அவரவர் நிலைமை, திறமை, சூழ்நிலைகளுக்கேற்ப உதவ வழி செய்கிறது இந்தத் திட்டம்.

சிறு-குறுநில உழவர்கள், கால்நடை வளர்ச்சியில் நாட்டம் செலுத்தி, அதனைத் துணைத் தொழிலாகக் கொண்டு தங்களுடைய வருவாயைப் பெருக்கிக் கொள்ளவும், போதிய முதலீடின்றி குன்றியிருக்கும் கைவினைஞர்களும், சிறுதொழில் செய்வோரும் வங்கிகள் மூலம் கடன் பெற்று அவரவர்களுடைய தொழில்களைப் பெருக்கிக்கொள்ளவும், வகை செய்யும் உன்னதத் திட்டமே ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்.

சிறுநில உழவர்கள் நீர்வளத்தையும், நில வளத்தையும் அதிகரித்துக் கொள்ளவும், மத்தியக் காலக்கடன் அளிக்கப்படுகிறது. கடனில் 25% மானியமும் தரப்படுகிறது.

வேலையேதுமின்றி அல்லல்படும் இளைஞர்கள், ஆர்வத்திற்கேற்றபடி தொழிலில் பயிற்சி பெற்று, தாமாகவே வேலைகளைத் தேடிக் கொள்ளவும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் பெருமளவில் உதவுகிறது.

சமுதாய சீர்கேட்டால் நலிந்திருக்கும் தாழ்த்தப்பட்ட ஆதி திராவிட ஆண்களும், பெண்களும் பொருளாதார அடிப்படையிலே முன்னேற இத்திட்டத்தின் கீழ் தனிக்கவனம் செலுத்தப்படுகிறது.

வேளாண்மக்கள், கைத்தறி நெசவாளர், தச்சு, கொல்லுத் தொழிலாளர்களிடையே கூட்டுறவுச் சிந்தனையை வளர்த்து, அவர்களுக்கு வேண்டிய ஆதரவையும் இத்திட்டம் அளிக்கிறது.

இவ்வாறாக, வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் பல திறப்பட்ட மக்களின் வாழ்விலே ஒளியேற்ற வந்ததுதான் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டமாகும். இது தமிழகத்திலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் திறமுடன். நிறைவேற்றப்பட்டு வருவதால் இலட்சக் கணக்கான குடும்பங்கள் எண்ணிறந்த வசதிகளைப் பெற்று தங்கள் பொருளாதார நிலையை வெகுவாக உயர்த்தி உள்ளார்கள் ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறாக, சேலம் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் அளித்த நன்மைகளை இனி காண்போம்.



சேலம் மாவட்டத்தில் வேளாண்மை, கால்நடை வளர்ச்சி, சிறு பாசனத்திட்டம், இளைஞர்களுக்கான சுய வேலை வாய்ப்புப் பயிற்சி போன்ற திட்ட வேலைகளில் இவ்வாண்டு மார்ச் திங்கள் முடிய ரூ. 831.08 இலட்சம் கடனாக அளிக்கப்பட்டுள்ளது. இப் பெருந்தொகையில் உதவியாகத் தரப்பட்ட தொகை மட்டும் ரூ. 309.09 இலட்சமாகும்.

சென்ற ஆண்டு ஏப்ரல் முதல் இவ்வாண்டு மார்ச் முடிய 37,373 பேர்கள் இம் மாவட்டத்தில் மட்டும் இத்திட்டத்தினால் பயனடைந்துள்ளனர் என்பதைக் காணும்போது, வரும் ஆண்டுகளில் இத்திட்டம் ஏழைகளின் வாழ்வில் எத்தகைய பூத்துக் குலுங்கும் வாழ்வினைத் தொடங்கவிருக்கிறது என்பதை யூகிக்க முடியுமல்லவா? இவர்களில் 10,042 பேர்கள் ஆதி திராவிட வகுப்பைச் சார்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்து, ஓர் எடுத்துக் காட்டாக, இதே மாவட்டத்திலுள்ள அயோத்தியா பட்டணம் ஒன்றியத்தில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் எத்தகையதொரு முன்னேற்றத்தைக்கண்டுள்ளது என்பதை அறிவோம்.

இவ்வொன்றியத்தில் மட்டும் கடந்த ஆண்டிலே 198 கறவை மாடுகளும், 422 வண்டி மாடுகளும், 352 மாட்டு வண்டிகளும், வறுமைக் கோட்டிற்குக் கீழே உழலும் ஏழை மக்களுக்கு உதவித் தொகையுடன் வங்கிக் கடனும் பெற்று அளிக்கப்பட்டுள்ளன. இவற்றில் மொத்த முதலீடு ரூ. 20.86 இலட்சமாகும். பயனடைந்தவர்களில் 371 பேர்கள் ஆதி திராவிட வகுப்பினைச் சார்ந்தவர்கள். 40 பெண்களுக்குத் தையல் பயிற்சியும், 8 பேர்களுக்கு உலோகங்களைப் பற்ற, பொருத்த வைத்தல் போன்ற தொழில்களிலும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள திருமதி லட்சுமியும், திரு. பழனிச்சாமியும் எவ்வாறு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தால் வாழ்க்கையில் வளங்கண்டுள்ளார்கள் என்பதனை நோக்குவோமா?

சேலம் மாவட்டத்திலுள்ள ஏரிக்காடு கிராமத்தில் திருமதி லட்சுமி வசிக்கிறார். இவருடைய கணவர் திரு. முத்து அவ்வப்போது கிடைக்கும் கூலி வேலைகளைச் செய்து அதன் மூலம் கிடைக்கும் வருவாயில் இவர்களின் குடும்பச் சக்கரம் சிரமத்துடன் சுழன்று கொண்டிருந்தது. இவர்களின் இன்னல் நிலையைக் களைய முன்வந்தது அயோத்தியாபட்டண ஊராட்சி ஒன்றியம். இந்த ஒன்றியத்தின் முயற்சியால் திருமதி லட்சுமிக்கு ரூ. 2,500- இந்திய வங்கியின் மூலம் கடன் கிடைத்தது. இதைக் கொண்டு ஒரு எருமையை வாங்கிய திருமதி லட்சுமி அதை நன்கு பராமரித்தார். நாளொன்றுக்கு 5 லிட்டர் பாலைத் தந்தது எருமை. வாங்கிய கடன் தொகையில் 50 சதவிகிதம் மானியம் போக எஞ்சிய தொகையான ரூ.1,250-ஐ இவர் மூன்று ஆண்டுகளில் திருப்பிச் செலுத்த வேண்டும்.

எருமை மாட்டின் மூலம் கிடைத்த' வருவாயைக் கொண்டு மாதம் ரூ. 75 வீதம் 4 மாதங்களில் ரூ. 300-கடன் தொகையைத் திருப்பிச் செலுத்திவிட்டார். எருமையின் பராமரிப்பு செலவு போக, பால் விற்பனை மூலம் திருமதி லட்சுமிக்கு மாதம் ரூ.200 கிடைக்கிறது. கூலி வேலையின் மூலம் கிடைக்கும் வருவாய் ரூ. 200 ஐயும் இத்துடன் கூட்டினால் லட்சுமி தம்பதியின் மொத்த மாத வருமானம் ரூ. 400 'மாடல்ல மற்றையவை' என்ற கூற்றுக்கு இலக்கணமாய்த் திகழ்கிறது லட்சுமி தம்பதிகளின் வெற்றி வரலாறு.



மேலும் ஒரு எடுத்துக் காட்டு. திரு.செங்கோடன் என்பவரின் புதல்வர் திரு. பழனிச்சாமி. சொந்தம் என்று சொல்லிக் கொள்ள இவருக்கு இருப்பது 2 ஏக்கர் வானம் பார்த்த பூமி மட்டுமே. இதில் கிழங்கு வகையைப் பயிரிடுவதால் ஆண்டுதோறும் கிடைக்கும் 2,500 ரூபாயில் தன் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டிய கஷ்டநிலை இவருடையது. இவரின் சிரமத்தைக் களைய அயோத்தியா பட்டண வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஒரு டயர் வண்டியும் மாடும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அளித்தனர். இதற்காக இந்தியன் வங்கி ரூ. 5,000 கடன் வழங்கியது. எதிர்பாராது கிடைத்த இந்த மகத்தான உதவியைக் கண்டு பேருவகை அடைந்தார் திரு. பழனிச்சாமி. இதில் அரசு அளித்த உதவித் தொகை ரூ. 1666 இவ்வாண்டு ஜனவரியில் கடன் பெற்ற இவர், இதுவரையில் ரூ. 600 திருப்பிச் செலுத்தி விட்டார்.

திரு.பழனிச்சாமி கூறுகிறார் : ...எனக்கு அரசாங்கத்தில் வாங்கி கொடுத்த டயர் வண்டியில் கழனிக்கு எரு ஏற்றிச் செல்கிறேன். இதனால் செலவு போக எனக்கு நாள்தோறும் ரூ. 20 கிடைக்கிறது. மாதத்தில் 20 நாட்களில் வேலை கிடைத்தால் ரூ. 400 வருமானம் கிடைக்கும். என் பிள்ளைகளைப் படிக்க வைத்திருக்கிறேன். நல்ல சாப்பாடும் துணியும் கிடைக்க வசதியேற்பட்டு விட்டது. என்னுடைய வயலுக்கு இதுவரை தலைச் சுமையாகத்தான் உரம் கொண்டு போவேன். இப்போது என்னிடமுள்ள வண்டி மாட்டைக் கொண்டு அதிக உரம் இடுவதால் விவசாயத்திலும் எனக்கு கூடுதலாக ரூ. 500 கிடைக்கிறது.

அவருடைய பேச்சிலே உண்மை புலப்படுகிறது. அவருடைய உடையிலே அவர் பெற்ற பொருளாதார வளர்ச்சி பளிச்சென்று தெரிகிறது.

திரு. பழனிச்சாமிக்கு மேலும் ஒரு சிறந்த வாய்ப்பு உள்ளது. மூன்றாண்டுகளில் கடனைத் திருப்பிச் செலுத்திய பிறகு வண்டியும் மாடும் அவருக்கே சொந்தமாகிவிடும்.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தினால் பயன்பெற்ற இன்னும் பலரை அயோத்தியா பட்டண ஒன்றியத்தில் சந்தித்த போது, தங்களுடைய வாழ்வின் கடந்தகால ஏழ்மை நிலையையும் தற்போது உதவித் தொகையுடன் கிடைத்த புதிய சொத்துக்களையும் இவை இரண்டிலும் அன்றாடம் கிடைக்கும் கூடுதல்



வருவாயையும் இவர்கள் வாயார கூறி மகிழ்ந்து நிற்கின்றனர். அவர்களைக் காணும்போது நமக்கும் மனநிறைவு ஏற்படுகிறது.



தற்போது தமக்கும் மனைவி. குழந்தைகளுக்கும் நல்ல உணவு கிடைக்கிறதென்றும் போதிய உடையும் வாங்கிக் கொள்ள வருவாய் கிடைத்து வருவதாகவும் பெற்றோர்களுக்கு உதவியாக வேலை செய்து ஏதோ கூலியைப் பெற்று வந்த சிறுவர், சிறுமியர் பள்ளிகளுக்குச் சென்று கற்க தொடங்கி விட்டனர் என்றும் அவர்கள் கூறக்கேட்டு உவகை அடைகிறோம். .

இந்த மகிழ்ச்சியான சூழ்நிலை இவ்வொன்றியத்தில் மட்டும் நிகழவில்லை. தமிழகத்தின் ஏழைகளின் வாழ்வில் ஒரு புது மலர்ச்சி ஏற்படுத்தி, புது வாழ்வைத் தொடங்கி வைத்துள்ளது. இத்திட்டத்தினால் கிடைக்கப் பெறும் நன்மைகள்.

நேசக்கரம் நீட்டும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தால் வாழ்வில் பொருளாதார அல்லல் இனி தலைதூக்கவே முடியாது என்ற நிலை உருவாகி உள்ளது.

# ஊறுகாய் கெடாமல் இருக்க...



செல்வி வெ. ராஜி

ஊறுகாய் தயாரிப்பது பண்டைக் காலந்தொட்டே பழக்கத்திலிருக்கும் சிறந்த உணவுப் பக்குவ முறையாகும். இதைப் பசியைத் தூண்டும் ஒருவகை உணவாகக் கொள்ளலாம்.

தற்காலத்தில் உணவு, விஞ்ஞான அறிவைக் கொண்டு புரதச் சத்து மிகுந்த இறைச்சி, மீன், இறால், கோழி இறைச்சி ஆகியவற்றிலும் பல மாதங்களுக்குக் கெடாமல் இருக்கும் ஊறுகாய் பதனிடு முறைகள் கண்டறியப் பட்டுள்ளன. உணவு விஞ்ஞான நுட்பத்தை மேற்கொண்டு ஊறுகாய்களைக் காய்கறிகள் விலை மலிவாகப் பருவ காலங்களில் கிடைக்கும்பொழுது பிற்காலத் தேவைக்கெனப் பதப்படுத்தி உபயோகிக்கலாம்.

இவ்வாறு தயாரித்த ஊறுகாய்கள் கெடுவதற்குப் பல காரங்கள் உள்ளன, அவை;



உதாரணமாக, வெள்ளரிக்காயை ஊறுகாய் தயாரிக்க, அதிக உப்பு கலந்த நீரில் ஊற வைத்தாலும்,அதிகக் காரச் சக்தி கொண்ட காடியில் ஊறவைத்தாலும், காயில் சுருக்கங்கள் ஏற்பட்டு, பார்ப்பதற்கு நன்றாக இராது. இதைத் தவிர்க்க, உப்பின் அளவைக் குறைத்து, நீரில் கலந்து வெள்ளரிக்காயை ஊறவிட வேண்டும்.

அதிகக் காரத் தன்மையுள்ள காடியை உபயோகித்தாலும், மசாலாப் பொருட்களைச் சேர்த்த பின்பு அதிக நேரம் வேக விடுவதாலும், அதிக மசாலாப் பொருட்கள் சேர்ப்பதாலும் ஊறுகாயில் கசப்புத் தன்மை ஏற்படுகிறது.

ஊறுகாயை வேகவிடும்போது, இரும்புப் பாத்திரத்தை உபயோகிப்பதாலும், கண்ணுக்குத் தெரியாத நுண்கிருமிகள் படர்வதாலும் கருமை நிறம் ஏற்படுகிறது.

காய்கறிகள் தரம் குறைந்து இருப்பதாலும், சரியான அளவு, உப்பு நீரில் ஊற விடப்படாததாலும், மங்கலாக நிறம் குறைந்து காணப்படுகிறது.

சாதாரணமாக, பாக்டீரியாக்களின் தாக்குதலினால் மென்மையாகவும், வழுவழுப்பாகவும் அடிக்கடி ஏற்படும். உப்பு நீரில் காய்கறிகள் சரியானபடி மூழ்கி இல்லாததாலும், தேவையான அளவு உப்பு சேர்க்காததாலும் இப்படி ஏற்படுகிறது.

காய்கறிகளை உப்பு நீரில் ஊறவிடும்போது வெண்மையான ஏடு படிகிறது. இது ஈஸ்ட் எனப்படும் நுண்கிருமிகளால் ஏற்படுவதாகும். இந்த ஈஸ்டுகள் ஊறுகாய் கெடாமல் இருக்க உதவும். லேக்டிக் அமிலம் உற்பத்தியைத் தடுக்கிறது. இவ்வாறு ஏடு படிந்து, லேக்டிக் அமில உற்பத்தி குறைவதால், ஊறுகாயைக் கெடுக்கக் கூடிய பாக்டீரியாக்கள் உற்பத்தியாகின்றன. இந்த ஈஸ்டுகளின் வளர்ச்சியைத் தடுக்க, தயாரித்த ஊறுகாயில் ஒரு சதம், அசிடிக் அமிலத்தைச் சேர்க்கலாம்.

ஊறுகாய் தயாரிப்பதற்கு, உபயோகிக்கும், உப்பு, காடி முதலியன தரம் குறைந்து காணப்படின் இவற்றிலுள்ள தாது உப்புக்கள், காடியுடன் சேர்ந்து இரசாயன மாற்றத்தை ஏற்படுத்தி ஊறுகாய் கெட ஏதுவாகிறது. கலங்கியிருத்தல் 'cloudiness' என்கிறோம்.



# ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்கள்

ஆறாம் ஐந்தாண்டுத் திட்டம் (1980-85) சிறியமற்றும் நடுத்தர நகர் வளர்ச்சியின் தவிர்க்க முடியாத தேவையினை உணர்த்தியது. இந்நகரங்களுக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்தி, இந்நகர்களைச் சார்ந்துள்ள கிராமப்புறங்களுக்கு, இவை வளர்ச்சி மற்றும் சேவை மையங்களாக விளங்க வேண்டும் என்பதே நகர்ப்புற வளர்ச்சிக் கொள்கையாக இருக்க வேண்டும் எனவும் ஆறாம் ஐந்தாண்டுத் திட்டம் வரையறுத்துள்ளது.

இதன் காரணமாக, ஆறாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ், சிறிய மற்றும் நடுத்தர நகரங்களின் வளர்ச்சிக்காக, மத்திய அரசு நிதியுதவி பெறும் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் அனைத்து மாநிலங்களிலும் தற்போது செயலாக்கப்பட்டு வருகிறது. இத்தகைய ஒவ்வொரு நகரமும் ரூ. 80 இலட்சம் கடனுதவி பெறத்தகுதி பெறும். இந்நிதியுதவியை மத்திய அரசும், மாநில அரசும் சம அளவிலே பகிர்ந்து கொள்ளும். இக்கடனுதவிக்கு ஆண்டுக்கு 6.5 விழுக்காடு வட்டியும், தடங்கலின்றி ஒழுங்காகத் திரும்பச் செலுத்தப்படும்போது ¼ விழுக்காடு தள்ளுபடியும் கிடைக்குமாறு வகை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு பெறப்படும் கடன்கள் 25 ஆண்டுகளுக்குள் திரும்பச் செலுத்தப்படவேண்டும். இக்கடன்களுக்கு முதல் ஐந்துஆண்டுகளில், முதல் தொகையைக் கட்ட வேண்டிய அவசியமில்லை.



இவ்வாறு கடனுதவி பெற, 1971 மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்படி ஒரு இலட்சம் அல்லது அதற்குக் குறைவான மக்கட்தொகையுள்ள நகரங்கள் தகுதி பெற்றதாகின்றன. மத்திய அரசால் தெரிவிக்கப்பட்டுள்ள விதி முறைகளின்படி, கீழ்க்கண்ட இனங்களுக்கு இக்கடனுதவி அளிக்கப்படும்.:

1. நில எடுப்பும் வளர்ச்சியும் (மேம்பாட்டு மனைத்திட்டம்)

2. போக்குவரத்து மற்றும் இதைச் சார்ந்த வசதிகள்:

3. மண்டிகள் மற்றும் அங்காடிகள் வளர்ச்சி.

4. குறைந்த செலவிலான அடிப்படை சுகாதார வசதிகள்.

மத்திய அரசு அளிக்கும் நிதியுதவியின்கீழ் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக, (இந்நாள்வரை) தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட 28 நகரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

1. உதகமண்டலம், 2. கரூர், 3. தர்மபுரி 4. புதுக்கோட்டை, 5. திருச்செங்கோடு, 6. பழனி, 7. கோபிச்செட்டிப் பாளையம், 8. மன்னார்குடி, 9. மேட்டுப் பாளையம், 10. செங்கல்பட்டு, 11. கூனூர், 12. தாராபுரம், 13. உடுமலைப்பேட்டை, 14. திருவண்ணாமலை, 15. ஆத்தூர், 16. நாமக்கல், 17. கோவில்பட்டி 18. இராணிப்பேட்டை-ஆற்காடு வாலாஜா நகர்த்தொகுதி. 19. பொள்ளாச்சி, 20. தேனி-அல்லி நகரம், 21. ஒசூர், 22. நாகப் பட்டினம், 23. காரைக்குடி, 24. கள்ளக்குறிச்சி, 25. பண்ருட்டி, 26. சிவகங்கை, 27. ஆரணி, 28. அரக்கோணம்.

மேற்கூறிய 28 நகரங்களுக்கும் சேர்த்து மொத்தம் 176 பல்வேறு வகையான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, மத்திய அரசால் ஒப்புதலளிக்கப்பட்டு, அவற்றில் 147 திட்டங்களுக்கு இதுவரை கடனுதவி அளிக்கப்பட்டுள்ளது. இவற்றில் 16 திட்டங்கள் ஏற்கெனவே முழுவதுமாக முடிக்கப்பட்டுவிட்டன. 86 திட்டங்கள் மார்ச் 1984-க்கு முன்னால் முடிக்கப்படும் எனவும் மீதமுள்ள திட்டங்கள் மார்ச் 1985-க்குள் முடிக்கப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. 1979-80-ல் ஒப்புதலளிக்கப்பட்ட நகர் வளர்ச்சித் திட்டங்களுக்கென செலவிடப்பட்ட தொகை ரூ. 122.69 இலட்சமாகும். இது மொத்தம் அளிக்கப்பட்ட கடனுதவியில் 63 விழுக்காடு எனக் கணக்கிடப்பட்டுள்ளது. 1980-81ல் ஒப்பப்பட்ட திட்டங்களுக்கு இதுவரை ரூ. 223.81 இலட்சம் செல்விடப்பட்டுள்ளது. இது மொத்தம் அளிக்கப்பட்ட கடனுதவியில் 48 விழுக்காடு ஆகும். இதே போல் 1981-82-ல் மொத்தம் அளிக்கப்பட்ட கடனுதவியில் 37 விழுக்காடு அல்லது ரூபாய் 129.05 இலட்சம் இதுவரை திட்டப்பணிகளுக்கெனச் செலவிடப்பட்டுள்ளது.

மத்திய அரசு நிதியுதவியின் கீழும், மாநில அரசு நிதியுதவியின் கீழும் செயலாக்கப்பட்டு வரும் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்கள் 1978-ல் ஆரம்பிக்கப்பட்டு, தற்போது மாநிலத்தின் நகர்ப்புற வசதிகளை மேம்படுத்துதலிலும், நகர்ப்புற உள்ளாட்சிகளின் நிதி நிலைமையைச் சீர்படுத்தி உயர்த்துதலிலும் முக்கிய அங்கம் வகிக்கின்றன. இத்திட்டங்களால் ஏற்பட்டுள்ள நேரடியான பயன்கள் பாராட்டும் வகையில் அமைந்துள்ளதோடு, இத்திட்டங்கள் செயற்படுவதால் ஏற்பட்டுள்ள பல்வேறு பயன்களான புதிய வேலை வாய்ப்பு, உள்ளாட்சி மன்றங்களுக்குக் கிடைத்துள்ள கூடுதல் நிதிவசதி மற்றும் நிரந்தரமான, பெருகிவரும் வருவாய் நிலைமை முதலியன, உள்ளாட்சிகளின் நிர்வாகத் திறமையை மேம்படுத்துவதிலும், இதுநாள் வரை சீர்குலைந்து வந்திருந்த நகர்ப்புற வளர்ச்சியினைச் சீரடையச்செய்வதிலும், மாநிலத்தின்கொள்கைகளுக்கு ஒரு புதிய கண்ணோட்டத்தினை ஏற்டுத்தியுள்ளன.

**மாநில உதவிபெறும் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்கள்:**

எல்லா சிறு நகரங்களுக்கும் மத்திய அரசின் நிதியுதவி பெற முடியாது என்ற காரணத்தினால் தமிழ்நாடு அரசு ஒவ்வொரு ஆண்டும் சில குறிப்பிட்ட நகரங்களைத் தேர்ந்தெடுத்து, அவற்றிக்குத் திட்டங்களை நிறைவேற்றக் கடனுதவி அளிக்க முன் வந்துள்ளது. இவ்வாறு மாநில அரசின் கடனுதவி பெறத் தேர்ந்தெடுக்கப்படும் திட்டங்கள் நல்ல வருவாய் தரக்கூடியனவாக அமையுமாறும் உள்ளாட்சிகளின் நிதிநிலைமையை உயர்த்தி உள்ளாட்சிகள் நகர் வாழ் ஏழை மக்களுக்கு அளிக்க வேண்டிய அடிப்படை வசதிகளை நிறைவேற்ற ஏதுவாய் அமையுமாறும் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. இக்கடனுதவி, நகர்களில் பல இடங்களில் கட்டணக்கழிப்பிடங்கள் திட்டங்களுக்கும் அளிக்கப்படுகின்றது. இதன் காரணமாக, நகர்களின் சுற்றுப்புறச் சூழ்நிலை தூய்மையாக இருப்பதோடு பொதுமக்களுக்கும் நகர்த் தூய்மை பற்றியதோர் கடமையுணர்வு ஏற்பட வாய்ப்பு ஏற்படுகிறது.

இவ்வாறு, கடந்த ஆறு ஆண்டுகளில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்களுக்கென முற்றிலும் மாநில அரசு மட்டுமே அளித்துள்ள கடனுதவிவருமாறு

| | | (ரூபாய் இலட்சம்) |
|---|---|---|
| 1978—79 | ... | 11.00 |
| 1979—80 | ... | 294.00 |
| 1980-81 | ... | [illegible] |
| 1981—82 | ... | 87.50 |
| 1982-83 | ... | 113.25 |
| 1983-84 | ... | 160.00 |

இந்நாள்வரை ரூ. 632.59 இலட்சம் மொத்த மதிப்பீட்டில் 159 திட்டங்கள் நகர்-ஊரமைப்பு வாரியக் குழுவினால் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளன. இவை 1983 ஆண்டு கடைசிக்குள் செயலாக்கப்பட வேண்டும். இந்நிதியுதவியில் உள்ளாட்சிகளுக்கு வேறு சில திட்டங்களுக்கென அரசால் நேரடியாக அளிக்கப்படும் கடனுதவியும் அடங்கும்.

ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மாநகர்களுக்கான மத்திய அரசு நிதியுதவியளிக்கும் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 1978-79 ஆம் ஆண்டில் மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாநகர்களில் நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றன.



## தமிழகத்தில் பதிவான புதிய நிறுவனங்கள்

1983-ஆம்ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் தமிழகத்தில் எட்டு பொது நிறுவனங்களும், 56 தனியார் நிறுவனங்களும் பதிவாகியுள்ளன. இவற்றின் அங்கீகரிக்கப்பட்ட முதலீடு முறையே ரூ. 1,87,20,000 மற்றும் ரு 4,61,50,000 ஆகும்.

ரூ. 42,97,087 முதலுடன் கூடிய இரண்டு நிறுவனங்கள் முழுகிப்போயின. எந்த நிறுவனமும் கலைக்கப்படவில்லை.

பரிசீலனைக்குரிய ஆகஸ்ட் மாதத்தில் 1956 நிறுவன சட்டத்தின் கீழ், நிறுவன அதிகாரிகள் மீது 77 வழக்குகள் தொடுக்கப்பட்டன. 109 வழக்குகளில் தீர்ப்பு வழங்கப்பட்டு, நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகளிடமிருந்து ரூ. 29,050 அபராதம் வசூலிக்கப்பட்டது.

## மனுநீதிநாள் முகாம்

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை வட்டத்தைச் சேர்ந்த குளத்தூர் நாயக்கர் பட்டி என்ற குக்கிராமததில் 13.9.83 அன்று மனு நீதிநாள் முகாம் நடைபெற்றது. இம்முகாமில் பெறப்பட்ட 300 மனுக்களில் 240 மனுக்கள்மீது வீட்டு மனைப் பட்டாக்களும், பட்டா மாற்றம் கோரியவர்களுக்கு அவர்களது மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு புதுப் பட்டாக்களையும் உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவர் திரு இரா. கற்பூரசுந்தரபாண்டியன் இ.ஆ.ப., வழங்கினார்.

பின்னர், குளத்தூர் நாயக்கர் பட்டி மற்றும் சேவியர் குடிகாடு ஆதிதிராவிடர் குடியிருப்பு ஆகிய கிராமங்களில் வீட்டுக்கு ஒரு மரம் வளர்க்கும் திட்டத்தின் கீழ் மரக்கன்றுகளை மாவட்ட ஆட்சித் தலைவர் நட்டார். சேவியர் குடிகாடு ஆதிதிராவிடர் குடியிருப்பைச்சேர்ந்த முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவு மையத்தினையும் மாவட்ட ஆட்சித்தலைவர் பார்வையிட்டார்.

# ஆசிரியர்களுக்குக் கோடைக்கால

# கல்வெட்டுப் பயிற்சி



நடன. காசிநாதன்
இயக்குநர் (பொறுப்பு)
தொல் பொருள் ஆய்வுத்துறை.

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை சென்ற பத்து ஆண்டுகளுக்கும் மேலாக பள்ளி, கல்லூரி ஆசிரியர்களுக்குக் கல்வெட்டுக்களைப் படித்தல் பற்றிய பயிற்சியை அளித்து வருகிறது. சென்ற ஆண்டுகளில் மே திங்களில் மூன்று வாரத்திற்கு ஆசிரியர்களுக்கு இப்பயிற்சி அளிக்கப்பட்டது. ஒவ்வொரு ஆசிரியருக்கும் பயிற்சிக் காலத்தின் போது உதவித் தொகையாக ரூ 50 (ரூபாய் ஐம்பது மட்டும்) கொடுக்கப்பட்டு வந்தது. சுமார் நாற்பது ஆசிரியர்களுக்கு மட்டும் தான் இப்பயிற்சி தரப்பட்டது.

மாண்புமிகு முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் இந்த ஆண்டு முதல் இப்பயிற்சி ஒவ்வொரு சமயமும் 250 ஆசிரியர்களுக்கு அளிக்கப்படுதல் வேண்டும் என்று ஆணை பிறப்பித்துள்ளார். முன்பெல்லாம் ஒரு இடத்தில்தான் இப்பயிற்சி நடைபெற்று வந்தது. இவ்வாண்டு முதல் ஐந்து மையங்களில், ஒவ்வொரு மையத்திற்கும் 50 ஆசிரியர்கள் என்ற விகிதத்தில் நடத்துதல் வேண்டும் என உத்தரவிட்டதற்கேற்ப முதற்கட்டமாக, இவ்வாண்டு ஜூன் திங்களில் இரண்டு மையங்களில் இப்பயிற்சி தொடங்கப்பெற்றது. தென்னார்க்காடு மாவட்டம், திருக்கோயிலூரிலும், திருநெல்வேலி மாவட்டம், பாபநாசத்திலும் ஜூன் திங்கள் 6 ஆம் நாள் தொடங்கி 25 ஆம் நாள் வரை நடத்தப்பெற்றது. இவ்வாசிரியர்கள் பள்ளி, கல்லூரிக் கல்வி இயக்குநர்களால் தேர்வு செய்து அனுப்பப்பட்டவர்கள் ஆவார்கள்.

இரு மையங்களிலும், தொல்பொருள் ஆய்வுத்துறையின் பணியாளர்களே கல்வெட்டுப் பயிலும் பயிற்சியை நூறு ஆசிரியர்களுக்கு கற்றுத் தந்தனர். அடுத்த கட்டமாக வரும் டிசம்பர் 1983 ஜனவரி 1984 மாதங்களில் காஞ்சிபுரம், மயிலாடுதுறை, உதகமண்டலம் ஆகிய இடங்களில் நடந்தப்பெறும். தமிழ் எழுத்தின் பண்டைய வடிவங்களான தமிழி, வட்டெழுத்து, சோழர் காலத்தமிழ் எழுத்து ஆகிய வடிவங்களைத் தாமாகப் படித்துப் புரிந்துகொள்ளும் அளவிற்குக் கற்றுத் தரப்பட்டன.

வகுப்புகளில் கல்வெட்டு படிவங்களை வைத்துக் கற்றுத் தந்ததோடு மட்டுமல்லாது இம்மையங்களின் அருகிலுள்ள ஆலயங்களுக்கு அழைத்துச் சென்று ஆசிரியர்கள் தாங்களாகவே கல்வெட்டைப் படியெடுப்பதற்கும் அவற்றைப் படிப்பதற்கும் பயிற்சி தரப்பட்டது. ஒவ்வொரு நாளும் பண்டையஎழுத்துக்களைக் கரும்பலகையில் எழுதிக் காட்டி பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சியின் இறுதிக் கட்டமாக ஆசிரியர்களைப் பேருந்தில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பல இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டது.

நேரிடையாகக் கல்வெட்டுக்களின் தன்மையையும், அவை ஆலயங்களில் எழுதப்பட்டுள்ள முறையையும், அவை மூலம் அக்கோயிலின் காலம், அன்று ஆட்சி செய்த மன்னன் அக்காலத்தில் மன்னனும், மற்றையோரும் அக்கோயிலுக்கு வழங்கியுள்ள தானங்கள் ஆகியவை பற்றியும் விரிவாகவும், விளக்கமாகவும் ஆசிரியர்களுக்கு எடுத்துக் கூறப்பட்டன. அவ்வாறு அழைத்துச் சென்றபோது திருக்கோயிலூர் மையத்தில் பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் திருக்கோயிலூரில் ஞானியார் மடம் என்ற பகுதியில் ஆற்றங்கரை ஓரம் செங்குத்தான பெரிய பாறையில் பாண்டியர் காலத்துக் கல்வெட்டு ஒன்றையும், அதே ஊரில் நரிப்பாறையில் நாயக்கர் காலத்து அளவுகோல் ஒன்றையும் கண்டுபிடித்தனர்.





இவ்வாண்டு ஆசிரியர்களுக்குப் பயிற்சிக் காலத்தின்போது தினப்படியும், தம் இடத்திலிருந்து மைய இடத்திற்கு வந்து திரும்ப பயணப் படியும் தரப்பட்டன.

தமிழ், கல்வெட்டு, வரலாறு ஆகிய துறைகளில் சிறந்தோரான சிலரை அழைத்து சிறப்புச் சொற்பொழிவுகளும் நிகழ்த்தப்பட்டன. மேலும் பன்னாட்டு நாகரிகங்களை விளக்கும் திரைப்படங்களும், கோயில் சிற்பங்கள், செப்புத் திருமேனிகள் அகியவைகளின் சிலைடுகளும் புரொஜக்டரின் உதவியால் காண்பிக்கப்பட்டன.





பயிற்சியின் இறுதி நாளான ஜூன் 25 ஆம் நாள் திருச்சி தில்லை நகரிலுள்ள குறிஞ்சி திருமண மண்டபத்தில் பயிற்சி நிறைவு விழா நடத்தப்பெற்று திருச்சி சட்டமன்ற உறுப்பினர் திருமிகு. திருச்சி கே. சௌந்தரராசன் எல்.எல்.ஏ. அவர்களால் ஆசிரியர்களுக்குக் கல்வெட்டுப் பயிற்சி சான்றிதழ்க[illegible]கப்பட்டன. முத[illegible]வர் [illegible] அரும் திட்ட[illegible] கல்வெ[illegible] பயிற்சி [illegible] ஆசிரியப் [illegible] மக்கள் பு[illegible] எழுத்தையும் புரிந்துகொ[illegible]டாம் என்ற மன நிறைவுடன் தம் பள்ளிகளுக்குத் திரும்பி[illegible] சென்றனர்.

85344



# கைப்பம்பு பாதுகாப்பு பயிற்சி முகாம்

மதுரை மாவட்டத்தில் கிராமப்புறங்களில் கைப்பம்புகளை நிறுவி அதன்மூலம் குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்கும் நோக்குடனும், கிராமப்புற இளைஞர்களுக்குக் கைப்பம்புகளைப் பழுது பார்க்கும் நோக்கத்துடனும் மாவட்டத்தில் முதன் முதலாகப் பெரியகுளம் ஊராட்சி ஒன்றியம் வடுகபட்டியில் கைப்பம்புகள் பாதுகாவலர் பயிற்சி முகாமை, மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கு. ஆளுடைய பிள்ளை இ.அ.ப. 10.8.83 அன்று துவக்கி வைத்தார்.

மதுரை மாவட்டத்தில் 6,000 பம்புகள் உள்ளன. இதில் 4,250 கைப்பம்புகள் கிராமப்புறங்களில் உள்ளன. 1,650 விசைப் பம்புகள் இம்மாவட்டத்தில் உள்ளன. விசைப் பம்புகளைப்பழுது பார்ப்பதற்கு ஆட்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். கைப்பம்புகளைப் பராமரிப்பதற்கு முதலில் குடிநீர் வடிகால் வாரியத்தினர் இருந்தனர். ஆனால் இப்பொழுது ஊராட்சி ஒன்றிய ஆணையர் மூலமாக நடமாடும் குழுக்கள் அமைக்கப்பட்டு பழுதுகள் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படுகின்றன.

இம் மாவட்டத்தில் 350 கைப்பம்புகளுக்காகப் பாதுகாவலர்கள் நியமிக்கப்பட உள்ளார்கள். இவ் ஊராட்சி ஒன்றியத்தில் 126 கைப்பம்புகள் உள்ளன. இம்முகாமில் 85 பேர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. கிராமங்களிலுள்ள இளைஞர்களை கைப்பம்புகளுக்குப் பாதுகாவலர்களாக நியமிப்பதற்குக் காரணம், கைப்பம்புகள் பழுதானால் கிராமங்களிலுள்ள மக்களுக்குத்தான் அதனால் கஷ்டங்கள் எவ்வளவு என்பது தெரியும். பழுது ஏற்பட்டால் அக்கிராம இளைஞர்கள் உடனுக்குடன் கவனிக்க ஏற்பாடு செய்வார்கள் என மாவட்ட ஆட்சியர்குறிப்பிட்டார்.

மிகச் சிறிய பழுது என்றால் இங்குப் பயிற்சி பெறும் இளைஞர்களே நிவர்த்தி செய்து விடலாம். பெரிய பழுது ஏற்பட்டால் இந்தப் பாதுகாவலர்கள் ஒவ்வொருவரிடமும் 10 கார்டுகள் ஊராட்சி ஒன்றியம் மூலமாகக் கொடுக்கப்படும். அந்தக் கார்டுகளில் என்ன பழுது ஏற்பட்டுள்ளது என்பதை ஊராட்சி ஒன்றியத்திற்குத் தெரியப்படுத்தினால் உடனடியாக நிவர்த்தி செய்ய ஏற்பாடு செய்யப்படுகிறது.

கிராமங்களில் குடிநீர் வசதி செய்து தருவதை இந்த அரசு முதன்மையாகக் கருதி வருகிறது.

இந்தக் காலகட்டத்தில் துரிதமாகவும், அறிவியல் நோக்குடனும் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இப்பயிற்சி முகாமில் பலதுறைகளைச் சேர்ந்த அலுவலர்கள் பயிற்சியாளர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்கள்.



**எம். அண்ணாமலை,**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்**
**மதுரை மாவட்டம்.**

தேனி சட்டமன்ற உறுப்பினர் திரு ஆர்.ஜெயராமன் தனது உரையில் சாதாரணக் கிணறுகளில் தண்ணீர் எடுத்துப் பழக்கப்பட்ட கிராம மக்கள் இந்தப் பம்புகளில் தண்ணீர் எடுக்கும் பொழுது அதைப் பயன்படுத்தத் தெரியாமல் பழுது ஏற்படலாம். இச்சமயத்தில் பாதுகாவலர்கள் மக்களோடு ஒத்துழைப்புத் தரவேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

விழா ஆரம்பத்தில் பெரியகுளம் கோட்ட வளர்ச்சி அலுவலர் திரு ராம்தாஸ் அனைவரையும் வரவேற்றார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களின் மாபெரும் சமுதாயப் புரட்சித் திட்டமான குழந்தைகள் இலவச சத்துணவுத் திட்டம் நீலகிரி மாவட்டத்தில் மிகச் சிறப்பாக நடைபோட்டு வருகின்றது. இம்மாவட்டத்தில் 703 மதிய உணவு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இதில் 281 குழந்தைகள் நல மையங்களும், 422 கல்வி நிலையங்களும் அடங்குகின்றன. இத்திட்டம் மூலம் 77,469 குழந்தைகள் பயன் பெறுகின்றனர். இதில் ஆதிதிராவிட குழந்தைகள் 26,366 பேரும், மலைசாதியினர் 1,417 பேரும் பின்னிலை வகுப்பினர் 37,047 பேரும் மற்றைய வகுப்பினர் 12,645 பேரும் பயன் பெற்று வருகின்றனர்.

# நீலகிரி மாவட்டத்தில் சத்துணவுத் திட்டம்



281 குழந்தைகள் நல மையங்களில் 658 ஏழை, ஆதரவற்ற மற்றும் விதவைப் பெண்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இதில் 218 ஆதிதிராவிட வகுப்பினரும், 20 மலைசாதிப் பெண்களும், 349 பின்னிலை வகுப்பினரும், 72 மற்றைய வகுப்பினரும், 87 விதவைகளும் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்.

422 கல்வி நிலையங்களில் மதிய உணவு அமைப்பாளர்கள், சமையல் செய்வோர், மதிய உணவு உதவியாளர்கள் ஆக 1,268 பேர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இதில் 342 ஆதிதிராவிட வகுப்பினரும், 9 மலைசாதியினரும், 624 பின்னிலை வகுப்பினரும், 294 மற்றைய வகுப்பினரும் 177 விதவைகளும், 53 கைவிடப்பட்டோரும் 4 ஊனமுற்றோர்களும் வேலைவாய்ப்பு பெற்று உள்ளனர்.

கட்டிடமில்லாத குழந்தைகள் காப்பகங்களுக்கு நடப்பு ஆண்டில் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் ரூ. 12 இலட்சம் செலவில் 37 கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டன. 51 புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. 1983-84-ஆம் ஆண்டிற்குள் அனைத்து குழந்தைகள் நல மையங்களுக்கும் சொந்தக் கட்டிடம் கட்ட மாவட்ட ஆடசியரால் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குழந்தைகளுக்கு இலவச சத்துணவு வழங்கப்படுவதோடு குழந்தைகளின் ஆரோக்கியத்தினைக் கருதி குழந்தைகள் நல மையங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு குழந்தைக்கும் நலக்குறிப்பேடு பராமரிக்கப்படுவதுடன் மருத்துவ அலுவலர்களால் குழந்தைகள் பரிசோதிக்கப்பட்டு நோய்த்தடுப்பு ஊசிகளும், இளம்பிள்ளை வாதத்தடுப்பு மருந்துகளும், உயிர்ச்சத்து மாத்திரைகளும் கொடுக்கப்பட்டு, குழந்தைகளின் எடை எடுக்கப்பட்டு அவர்களது ஆரோக்கியம் கண்காணிக்கப்படுவதோடு தேவையான மருத்துவ வசதிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. குழந்தைகள் நல அமைப்பாளர்களுக்கு சுகாதாரம், நோய்த்தடுப்பு பற்றி பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சியரால் மாதமிருமுறை ஆய்வுக்கூட்டங்கள் நடத்தப்பட்டு உணவுப் பொருட்கள் வழங்கும் முறை, சுகாதார வசதி மற்றும் மையங்களின் திட்டம் சீரிய முறையில் செயல்பட அறிவுரை வழங்கப்பட்டு வருகிறது.

**வி. கோவிந்தபிரசாத்,**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**நீலகிரி மாவட்டம்.**




# சிறுபாசனத் திட்டங்கள்

பொதுப்பணித்துறையின் கீழ் சிறுபாசனத்திட்டங்கள் கீழ்க்கண்ட தலைப்புகளின் கீழ் செய்யப்பட்டு வருகின்றன:

1. சிறப்பு சிறுபாசனம் மற்றும் தூர் வாரித் திட்டங்கள்
2. வறட்சிப்பகுதி திட்டங்கள்
3. பழங்குடியினர் முன்னேற்ற பாசனப் பணிகள்
4. மலைப்பகுதி முன்னேற்ற பாசனப் பணிகள்

இத்திட்டங்களின் கீழ் புதிய கண்மாய்கள் அமைத்தலும், அணைக்கட்டுகள் கட்டுதலும், கண்மாய்கள் தூர் வாருதலும், தடுப்பு அணைகளும், கசிவு நீர் குட்டைகளும் அமைத்தலும் நடைபெறுகின்றன.

1980 ஜூன் முதல் 1983 ஏப்ரல் வரை மூன்று ஆண்டுகளில் சிறப்பு சிறு பாசனம் மற்றும் தூர்வாரித் திட்டங்களின் கீழ் 88 திட்டங்கள் ரூ.733.80லட்சம் செலவில் முடிக்கப்பட்டு 6,168 ஹெக்டேர் நிலங்கள் பயனடைந்துள்ளன.

**வறட்சிப் பகுதி பாசனம்**

இத்தலைப்பின்கீழ் ஜூன் 1980 முதல் ஏப்ரல் 1983 வரை 15 வேலைகள் முடிக்கப்பட்டு 1104 ஹெக்டேர் நிலங்கள் பாசனம் பெறுகின்றன. இதற்கு ஆன செலவு ரூ. 108.38 லட்சமாகும். இத்திட்டங்கள் வறட்சிப்பகுதிகளான தர்மபுரி மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம், புதுக்கோட்டை மாவட்டம், ஆகிய மூன்று மாவட்டங்களிலும், பல ஊராட்சி ஒன்றியங்களில் செயல்பட்டு வருகின்றன.

**பழங்குடியினர் முன்னேற்றப் பாசனப் பணிகள்**

இத்திட்டத்தின்கீழ் கல்வராயன் மலை, ஜவ்வாது மலை, கொல்லி மலை, பச்சைமலை முதலிய மலைப்பகுதிகளில் சிறு தடுப்பு அணைகளும், கசிவுநீர் குட்டைகளும் அமைக்கப்படுகின்றன. இத்திட்டங்களால் பெரும்பாலும் மலைவாழ் மக்களே பயனடைகிறார்கள். மேலே குறிப்பிட்ட 3 ஆண்டுகளில் 15 வேலைகள் முடிக்கப்பட்டு 160 ஹெக்டேர் நிலங்கள் பாசனம் பெறுகின்றன. இதற்காக செலவிடப்பட்ட தொகை ரூ. 16.23 லட்சமாகும்.

**மலைப்பகுதி முன்னேற்றத் திட்டம்**

இத்திட்டம் நீலகிரி மாவட்டத்தில் மட்டும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பாசனத் துறையைப் பொறுத்தவரையில் இத்திட்டத்தின்கீழ் சிறு தடுப்பு அணைகள் கட்டுதலும் கசிவுநீர் குட்டைகள் ஏற்படுத்துதலும் செய்யப்பட்டு வருகின்றன. மேலே குறிப்பிட்ட 3 ஆண்டுகளில் 50 பணிகள் முடிக்கப்பட்டு 650 ஹெக்டேர் நிலங்கள் பாசனத்திற்கு தயாராக உள்ளன. இத்திட்டத்திற்கான செலவு கடந்த சுமார் மூன்று ஆண்டுகளில் ரூ. 19.95 லட்சமாகும்.

## சோயா மொச்சையின் சிறப்பு!

சோயா மொச்சை உலகிலேயே ஒப்பற்றதோர் மொச்சை. ஊன் வளர்க்கும் புரதச் சத்துமிக்கது. 'கொலஸ்ட்ரால்' கிடையாது. கொழுப்புச் சத்தும் கிடையாது. இது ஒரு பொன் கொழிக்கும், பொன் கொடுக்கும் மொச்சை!

'சோயாபீன்' என்ற இந்தப் பொன் மொச்சைக்கு விஞ்ஞானிகள் வைத்துள்ள பெயர்கள் பலப் பல. சுருக்கமாக, 'சூப்பர்' மொச்சை என்கிறார்கள். சோயா பருப்பில், இறைச்சி, மீன், முட்டை ஆகியவற்றிலுள்ளதைவிட மூன்று மடங்கு புரதப் பொருள் உண்டு. பாலிலுள்ளதைவிடப் பதினொரு மடங்கு கூடுதல்.

சோயா மொச்சையின் வயது 5,000 ஆண்டுகள். முதன் முதலாக 5,000 ஆண்டுகளுக்கு முன்பு சீனாவில் மருந்துச் செடியாகவும் பின்னர் உணவுப் பயிராகவும் விளங்கியது.

சீனாவிலிருந்து ஜப்பான் சென்று பின்பு கிழக்கு ஆசிய நாடுகளுக்குச் சோயாமொச்சை பரவியது.

1804-ல் முதன் முதலாகச் சீனாவிலிருந்து சோயா அமெரிக்காவுக்குச் சென்றது. ஒரு வணிகக் கப்பலில் முடை உணவாக அதைக் கொண்டு போனார்கள். பின்பு, 1854-ல் ஜப்பானிலிருந்து சில வகை சோயா மொச்சைகளைப் பயிரிடுவதற்கென்றே கொண்டு போனார்கள். இன்று நிலைமை என்ன தெரியுமா? அமெரிக்கா ஜப்பானுக்குஏராளமாகச் சோயா ஏற்றுமதி செய்கிறது.

அமெரிக்காவில் சோயா மொச்சை பணம் குவிக்கும் பயிராக விளங்கி வருகிறது.

சோயா மொச்சைச் செடி நாலடி உயரம் வரை வளரும். வெப்ப நாடுகள் முதல் தட்ப நாடுகள் வரை எங்கும் பயிரிடலாம். வறட்சியால் பாதிக்கப்படாது. நெல் பயிர் போலக் கண்ணும் கருத்துமாகப் பேணத் தேவையில்லை.

ஆதாரம் : 'கியூஸ் ::பியூட்சர்'





நாட்டின் சுகாதாரத் திட்டத்தில் உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ள தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டத்துக்கு மத்திய அரசு கூடுதலாக ரூ. 50 கோடி ஒதுக்கியுள்ளது. இத்துடன் ஆறாவது திட்டத்திற்கான மொத்த ஒதுக்கீடு ரூ. 90 கோடியாக அதிகரிக்கின்றது.

1982-83ல் ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்ட தொழுநோயாளிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். இதில் 4,86,000 பேருக்குச் சிகிச்சை துவங்கிவிட்டது.

தொழுநோய் ஆய்வு, கல்வி மற்றும் சிகிச்சை மையங்களை அமைப்பதில் 1980-83 இல் நூறு சதவிகித சாதனை புரியப்பட்டுள்ளது. 1980-85க்கான இலக்கு 200 மையங்கள் எனில், மேற்குறிப்பிட்ட மூன்றாண்டுக் காலத்தில் துவக்கப்பட்ட மையங்களின் எண்ணிக்கை 365 ஆகும்.

ஆறாவது திட்டத்தின் முதல் மூன்று ஆண்டுகளில் 177 நகர்ப்புறத் தொழுநோய் மையங்களும், 53 தற்காலிக மருத்துவமனை வார்டுகளும், 63 மாவட்டத் தொழுநோய் மையங்களும் துவக்கப்பட்டன. இவற்றுக்கான ஆறாவது திட்ட இலக்கு தலா 50 மையங்கள் ஆகும்.

நமது நாட்டில் உள்ள தொழுநோயாளிகள் எண்ணிக்கை 32 மிலியன். சுமார் 400 மிலியன் பேர் தொழுநோயால் அதிகமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வாழ்கின்றனர். இப்பகுதியில் ஆயிரத்துக்கு 5 பேர் தொழுநோயாளிகள்.

கி.பி. 2000த்தில் தொழுநோயை நாட்டிலிருந்து முற்றிலும் ஒழிக்க அரசு உறுதி பூண்டுள்ளது. இதனையொட்டி, தேசிய தொழுநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம், தேசிய தொழுநோய் ஒழிப்புத் திட்டமாக மாற்றியமைக்கப்பட்டது. மத்திய சுகாதார அமைச்சர் தலைமையில் தொழுநோய் ஒழிப்புக் குழு நிறுவப்பட்டது. தொழுநோயாளிகள் அதிகம் உள்ள தமிழ்நாடு, பீகார், ஒரிசா, மேற்கு வங்கம் ஆகிய மாநில முதல்வர்கள் இக்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.



# ஏழாவது நிதிக் குழுவின் பணிகள்

மத்திய அரசு ஏழாவது நிதி ஆணைக் குழுவின் (Seventh Finance Commission) பரிந்துரையின் கீழ் பழங்குடிமக்கள் மேம்பாட்டுத் திட்டப்பகுதிகளில் நிர்வாகத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன், அப்பகுதிகளில் இடமாற்றத்திற்குட்பட்டு (Transferable) பணியாற்றும் அரசு ஊழியர்களுக்குக் குடியிருப்புகள் கட்டிக் கொடுப்பது பற்றியதாகும்.

மத்திய அரசு ஏழாவது நிதி ஆணைக் குழு தமிழகத்திலுள்ள பழங்குடியினர் வாழும் பகுதிகளில் இடமாற்றத்திற்குட்பட்டு பணிபுரியும் அரசு ஊழியர்களுக்கு 1979-80-லிருந்து 1983-84-ஆம் ஆண்டு வரை 288 குடியிருப்புகள் கட்டிக் கொடுக்க ரூ. 72 இலட்சம் ஒதுக்கீடு செய்து உரிய நடவடிக்கை எடுக்கக்கோரியுள்ளது.

ஒரு குடியிருப்பு கட்டுவதற்காக மத்திய அரசு நிதி ஆணைக்குழு ஒதுக்கிய ரூபாய் 25,000-க்கும், இதற்கு மேல் ஆகும் செலவை மாநில அரசு ஏற்கவும் மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

மத்திய அரசு ஏழாவது நிதிக் குழுவின் பரிந்துரையின்படி 1979-80-லிருந்து 1982-83-ஆம் ஆண்டு வரை 151 குடியிருப்புகள் ரூ 49.69 இலட்சம் செலவில் கட்டிக் கொடுக்க ஆணையிடப் பட்டுள்ளது. ரூ. 72 இலட்சத்தில் மத்திய அரசு, இதுவரை வெளியிட்டுள்ள தொகையான ரூ. 54.75 இலட்சம் போக ரூ. 17.25 இலட்சம் வெளியிடவேண்டும். 288 குடியிருப்புகளில் கட்டுவதற்கு ஆணை வழங்கப்பட்டுள்ள 151 குடியிருப்புகள் போக மீதமுள்ள 137 குடியிருப்புகள் கட்டுவது சம்பந்தமாக இக் கோப்பினை நிதித்துறைக்கு அனுப்பியபோது, அத்துறை கட்டப்பட வேண்டிய 137 குடியிருப்புகளையும் இந்த நிதி ஆண்டிலேயே கட்டுவதற்கு ஆணை வழங்க நடவடிக்கை எடுக்கலாமென்றும், கட்டுமானச் செலவைக் குறைக்க தனிநபர் குடியிருப்புகள் மாதிரியில் குடியிருப்புகள் கட்டலாமென்றும், இத்திட்டத்தைப்புதிய திட்டமாக (New Service Scheme) கருதலாமென்றும் இத்திட்டம் ஏழாவது நிதி ஆணைக்குழுவின் பரிந்துரையின் கீழ் வருவதால், சுருங்கிய சுற்றோட்ட முறையைக் கடைப்பிடிக்கலாமென்று கருத்துத் தெரிவித்தது. அதன்படி குடியிருப்புக்கு ரூ. 30,000 வீதம் ரூ. 41.10 இலட்சம் மொத்தச் செலவில் 137 குடியிருப்புகள் கட்டுவதற்கும், தனி நபர் குடியிருப்புகள் மாதிரியில் கட்டடங்கள் கட்டும் பணியை தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி மற்றும் வளர்ச்சிக் கழகத்திடம் ஒப்படைக்கலாம் என்றும் அதே நேரத்தில் இவ்வகைக்கு இன்னும் வெளியிட வேண்டியுள்ள தொகையான ரூபாய் 17.25 இலட்சத்தை வெளியிடுமாறு மத்திய அரசு கேட்டுக் கொள்ளப்படலாம் என்று முடிவு செய்யப் பட்டது. இதற்காகச் சுருங்கிய சுற்றோட்ட முறையில் ஆதி திராவிடர் நல அமைச்சர், நிதித் துறை அமைச்சர் மற்றும் முதலமைச்சர் ஆகியோரின் ஆணை பெறப்பட்டது.

பழங்குடியினர் மேம்பாட்டுத் துணைத் திட்டப் பகுதிகளில் 423 குடியிருப்புகள் கட்டுவதற்காகத் துறைத் தலைவர்களிடமிருந்து கருத்துக்கள் பெறப் பட்டிருந்தன. இவற்றில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரிடமிருந்து பெறப்பட்ட செயற்குறிப்பின்



பேரில் 112 ஆசிரியர் குடியிருப்புக்களும், கால்நடைப் பராமரிப்புத் துறை இயக்குநர் அத்துறை ஊழியர்களுக்குக் குடியிருப்புகள் கட்டக் கோரியிருந்த செயற்குறிப்பின் பேரில் 25 குடியிருப்புகளும் ஆக மொத்தம் 137 குடியிருப்புகளை, குடியிருப்புக்கு ரூ. 30,000 வீதம் ரூ. 41.10 இலட்சம் செலவில் கட்டுவதற்கும், கட்டுமானப் பணியை ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் வளர்ச்சிக் கழகத்திடம் ஒப்படைப்பதற்கும் அரசு ஆணை வழங்கியுள்ளது.





# தருமபுரி மாவட்டம் தஞ்சை ஆகிறது

எம்.டி.ஸ்டாலின்
காவேரிப்பட்டணம்
தருமபுரி மாவட்டம்

"வரப்புயர நீர்உயரும்
நீர் உயர நெல் உயரும்
நெல் உயர குடிஉயரும்
குடி உயர கோன் உயரும்."

எனப்பாடினார் ஔவையார். ஔவைக்கு நெல்லிக்கனியைக் கொடுத்து அழியாப் புகழ் எய்தினான் அதியமான். அதியமான் தலைநகராகக் கொண்டு ஆண்ட தகடூர், தருமபுரியாக மருவியது. தருமபுரி மாவட்டம் 1965ஆம் ஆண்டு புதிய மாவட்டமாக உதயமானது.

தருமபுரி மாவட்டம் தமிழ்நாட்டில் பிற்பட்ட மாவட்டமாக கருதப்பட்டது. இந்நிலை மாறி, இன்று அது நல்லதோர் வளரும் மாவட்டமாக உருவாகி வருகிறது

ஒசூரில் கணக்கற்ற தொழிற்சாலைகள் தோன்றியதின் காரணமாகவும், மாவட்டத்தின் பிற இடங்களில் நிறுவப்பட்டுள்ள சிலபல 'தொழிற்சாலைகளினாலும், இம்மாவட்டம் தொழில் துறையில்வளரும் மாவட்டமாகத் திகழ்கிறது.

இதே போல் வேளாண்மையிலும் இது ஒரு வளரும் மாவட்டமாக, முன்னேறும் மாவட்டமாக திகழ இருக்கிறது.

கடல் மட்டத்திலிருந்து 3,000 மீட்டர் உயரத்திலுள்ள தருமபுரி மாவட்டத்தின் பரப்பளவு 9,629 சதுரகிலோ மீட்டராகும். மூன்றில் இரண்டுபகுதி, மலைகளும் காடுகளும் சூழ்ந்த மாவட்டமாக இது உள்ளது.

பல்லாண்டுக்காலமாக இந்த மாவட்டத்தில் புதியநீர்த்தேக்கத் திட்டங்கள் எதுவும் அமைக்கப் படவில்லை. 21 ஆண்டுகளுக்குப் பிறகு 1978ஆம் ஆண்டு பஞ்சப் பள்ளி அருகே சனத்குமார நதியின் குறுக்கே சின்னாறு நீர் தேக்கம் அமைக்கப்பட்டது. இதனால் 4,500 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இது தவிர, ஊத்தங்கரை வட்டத்தில் பாம்பாற்றின் குறுக்கே ஓர் அணை தற்போது கட்டி முடிக்கப்பட்டுள்ளது இதனால் 4,000 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்.

இவை தவிர இம்மாவட்டத்தில் ரூ 17 கோடி செலவில் 7 புதிய அணைகள் கட்ட அரசு அங்கீகாரம் வழங்கி, கட்டுமான வேலைகள் நடந்து வருகின்றன. அவற்றின் விவரங்கள் வருமாறு;

பாலக்கோடு வட்டத்தில் தும்பளஅள்ளி நீர்த்தேக்கத் திட்டம் மற்றும் கெசர்குளி அல்லா நீர்த்தேக்கத்திட்டம், தருமபுரி வட்டத்தில் நாகாவதி ஆறு நீர்த்தேக்கத்திட்டம் மற்றும் தொப்பையாறு நீர்த்தேக்கத் திட்டம், ஒசூர் வட்டத்தில் குளகிரி சின்னாறு நீர்த்தேக்கத்திட்டம், அரூர்வட்டத்தில் ஈச்சம்பாடி நீர்த்தேக்கத் திட்டம் மற்றும் வாணியாறு நீர்த்தேக்கத்திட்டம் ஆகிய 7 நீர்த்தேக்கத்திட்டங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மழையை நம்பியே புஞ்சை நிலங்களாக உள்ள தருமபுரி மாவட்டத்தில் இந்தப் புதிய நீர்த்தேக்கத்திட்டங்களால் 25 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெற்று நஞ்சை நிலங்களாக மாறும்

இவை தவிர ஒசூர் வட்டத்தில் ரூ. 550 இலட்சம் செலவில் கெலவரப்பள்ளி நீர்த்தேக்கத் திட்டமும் உள்ளது. இதன்வேலைகள் தலைமை நீதிமன்ற உத்தரவின்பேரில் நிறுத்தப்பட்டுள்ளது. தடைநீங்கி இந்த அணைத்திட்டம் நிறைவேற்றப்படும்போது 8,000 ஏக்கர் நிலம் பாசனவசதி பெறும்.

எனவே, இந்த நீர்த்தேக்கத் திட்டங்களால் தருமபுரி மாவட்டத்தில், பிற்காலத்தில் பல்லாயிரக் கணக்கான நிலங்கள் நீர்ப்பாசன வசதி பெற்று, நெல்லும் கரும்பும் உற்பத்தி பெருக உள்ளன.

தமிழ்நாட்டின்நெற்களஞ்சியம் தஞ்சை என்பார்கள். அந்தத் தஞ்சைக்கு நிகராக தருமபுரி உருவாகி வருகிறது என்றே சொல்லலாம்.

# எங்கள் இந்த ஊர்



"இந்தியாவின் இதயம் கிராமங்களில் உள்ளது'' என்றார் அண்ணல் காந்தியடிகள். ஏழு இலட்சத்திற்கும் மேற்பட்ட கிராமங்கள் வளர்ந்தால்-செழித்தால் நாடு உயரும் என்பதில் ஐயமில்லை. கிராமங்கள் தன்னிறைவு பெற மைய, மாநில அரசுகள் கொடுக்கும் உதவிகளை மக்கள் முழுமையாக அறிந்து பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

''உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ'' என்பதும் ''முயற்சி திருவினையாக்கும்'' என்பதும் இன்று எங்கள் ஊரில் கண்ட உண்மையாகும்.

எங்கள் ஊர் தென்னார்க்காடு மாவட்டத்தில் விழுப்புரம் வட்டத்திலுள்ள செ. குண்ணத்தூர். மலை வளம் மிக்க ஊர்; வளர்ச்சி இல்லாத ஊரில் இரண்டு ஆண்டுகளில் முயன்று இன்று தன்னிறைவு பெற்றுவிட்டோம்.

''நீரின்றமையாதுலகு'என்பது வள்ளுவர் வாய்மொழி.விடுதலை பெற்ற நாட்டில வறட்சித் துயர் துடைப்புத் திட்டத்தின்கீழ் இன்று மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி சி. கே. கரியாலி, இ.ஆ.ப. அவர்களாலும் பொதுப் பணித்துறை விழுப்புரம் கோட்டம் நிர்வாகச் செயற் பொறியாளர், உதவிசெயற் பொறியாளர் அவர்களாலும் திறந்த வெளிக் கிணறு அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது. 2000 மக்கள் தூய-பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் பெறுகின்றோம். குடிநீர் வாரியம் 2 ஆழ்துளைக் கிணறுகள் அமைத்துக் கொடுத்து உள்ளது.

தமிழக அரசின் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் 3 கிலோ மீட்டர் கருங்கல் சல்லியிடப்பட்ட சாலை அமைத்துக் கொடுத்துள்ளனர். இதனால் நாங்கள் எப்பருவத்துக்கும் பயன்படுத்தக்கூடிய சாலையைப் பெற்று விட்டோம்.

நல்ல சாலை அமைத்துக் கொடுத்தவுடன் எங்கள் ஊருக்குப் பேருந்து விடுமாறு தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக நிர்வாக மேலாளர் அவர்களைக் கேட்டுக் கொண்டோம்.

எங்கள் வேண்டுகோளை ஏற்று விழுப்புரத்திலிருந்து எங்கள் ஊருக்கு, நகர்ப்பேருந்து விட்டுள்ளனர். அதனால் எங்கள் பிள்ளைகள் உயர்நிலைப்பள்ளி, கல்லூரி சென்று பயில வசதி ஏற்பட்டுள்ளது.

உழவர் உற்பத்தி செய்த பொருளையும் குடிசைத்தொழில் (முட்டை, கூடை) மூலம் உற்பத்தி செய்த பொருளையும் உடனுக்குடன் விற்று வாழ்க்கையில் வளம் பெற்று வருகின்றனர்.

தொடக்கப்பள்ளி உண்டு. இளஞ்சிறார்களும், சிறுமியர்களும் இதில் கல்வி பெறுகின்றனர். இலவச மதிய உணவு திட்டத்தால் கற்பவர் - மாணவர் தொகை உயர்ந்துஉள்ளது.இன்று பள்ளியில் இடமில்லாத குறை ஏற்பட்டுள்ளது. இன்று தூய குடிநீர், சாலை வசதி, பேருந்து வசதி எல்லாம் இருக்கின்றது.

**இரா. இராசாராம்**
**செ. குண்ணத்தூர் அஞ்சல்,**
**விழுப்புரம் வட்டம்.**






தமிழகத்தில் மதுரைக்குத் தனியொரு இடமுண்டு. வரலாற்றுச் சிறப்புமிக்க இந்நகரில் 'மதுரை மாநகராட்சி' நிர்வாகப் பணிகள் சிறப்புற மேற்கொள்ளப்பட்டு மதுரையின் தேவைகள் நிறைவு செய்யப்பட்டு வருகின்றன.

மதுரை நகரின் 65வார்டுகளில், வார்டுக்கு ஒரு உறுப்பினர் வீதம் தேர்ந்தெடுக்கப்பட்ட 65 உறுப்பினர்களையும், அவர்கள் அடங்கிய மாமன்றத்தில் நியமிக்கப்பட்ட 9 உறுப்பினர்களையும் உள்ளடக்கி 74 உறுப்பினர்கள் எண்ணிக்கை கொண்ட மாமன்றம், தமிழ்நாட்டில் தனியொரு மாமன்றமாகத் திகழ்ந்து கொண்டிருக்கின்றது. மாநகராட்சியின் மன்றத்தினைத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இரண்டாண்டிற்கொரு முறை மேயர் மற்றும் துணைமேயர் ஆகியோரைத் தேர்வு செய்து, திட்டங்கள் முதலானவைகளை நிறைவேற்றி வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாநகராட்சியின் பலதரப்பட்ட பணிகளுள் இன்றியமையாதவைகள் நகரமைப்பு, சாலை வசதிகளை மேற்கொள்ளல், குடிநீர் வசதிகள், அடிப்படை மருத்துவ வசதிகள், மின் விளக்கு வசதிகள் அளித்தல் கல்வி வசதிகள், குழந்தைகள் நலம் மற்றும் சுகாதாரம் பேணல் ஆகியன இன்றியமையாத இடங்களை வகிக்கும் பணிகளாகும்.

**குடிநீர் விநியோகம்:**

பாதுகாக்கப்பட்ட குடிநீர், நகரின் அனைத்துப் பகுதிகளுக்கும் குழாய்களின் மூலமும் சில பகுதிகளுக்கு லாரிகளின் மூலமும் வழங்கப்பட்டு வருகிறது. மதுரை மாநகராட்சியில் மொத்தம் 665 கை பம்புடன் இணைக்கப்பட்ட ஆழ் குழாய்க்கிணறுகள் உள்ளன. இந்த ஆண்டில் மட்டும் வறட்சியின் காரணமாக 254 புதிய ஆழ் குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மாநகராட்சியில் மொத்தம் 35,980 இல்லங்களுக்குக் குடிநீர்க் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. 1982-83 நிதியாண்டில் மட்டும் 1714 இல்லங்களுக்குப் புதிய குடிநீர்க் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட 139 மேல் நிலைத் தொட்டிகள் குடிநீர் வழங்கப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. 280 பவர் பம்பு இணைக்கப்பட்ட ஆழ் குழாய்க் கிணறுகள் மூலமும் பொதுமக்களுக்குத் தண்ணீர் சீராக விநியோகிக்கப்படுகிறது. பொதுமக்களுக்கு தெருக்களில் சுமார் 3079 இடங்களில் குழாய்களின் மூலமும் பாதுகாக்கப்பட்ட குடிநீரும், சுமார் 3,482 இடங்களில் நிலத்தடி நீரும் வழங்கப்படுகிறது.

மதுரை மாநகராட்சியின் வட பகுதியில் குடிநீருக்காக ரூ. 99 இலட்சம் செலவில் பெரியதிட்டம் ஒன்று உருவாக்கப்பட்டு, தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத் திடம் ஒப்படைக்கப்பட்டு இப் பணி மும்முரமாக நடைபெற்று வருகிறது. மேலும் மாநகராட்சியில் குழாய் வசதி பெறாத மேடான பகுதிகளில் 7அடி x 4 அடி x 4 அடி என்ற அளவுள்ள சுமார் 130 இரும்புத் தொட்டிகளை நில மட்டத்திற்கு மேல் 2 அடி உயர்த்தி வைத்து குடிநீர் லாரிகளின் மூலம் இந்தத்தொட்டிகளில் நீரை ஊசல் இயந்திரப்

**மா. இராமு, இ.ஆ.ப.**
**ஆணையர்,**
**மதுரை மாநகராட்சி**

பம்ப்செட் கொண்டு நிரப்பி பின்னர் தொட்டியிலிருந்து பொதுமக்களுக்குக் குடிநீர் வழங்கப்பட்டும் வருகிறது. மதுரை நகரில், ஒரு நாளைக்குச் சுமார் 100 இலட்சம் காலன் பாதுகாக்கப்பட்ட குடிநீர் பொதுமக்களுக்குச் சீராக வழங்கப்பட்டு வருகிறது. இது தவிர சுமார் 65 இலட்சம் காலன் நிலத்தடி நீர் பொதுமக்களுக்கு குழாய்களின் மூலம் விநியோகிக்கப்படுகிறது.

**கழிவுநீர் அகற்றும் பணி:**

மதுரையிலுள்ள கழிவு நீரை அகற்றி சுகாதாரக் கேட்டினின்று பொதுமக்களைப் பாதுகாக்க மாநகராட்சி பாதாள சாக்கடைத் திட்டத்தை மேற்கொண்டு உள்ளது. மேற்படி திட்டத்தின் கீழ சந்தைப்பேட்டையில் மூன்றாவது கழிவு நீரேற்று நிலையம் அமைப்பதற்கு ரூ.7.97 இலட்சம் செலவிடத் திட்டமிடப்படும். அவனியாபுரத்தில் கழிவுநீர்த் தேக்கம் அமைக்க ரூ. 44.9 இலட்சம் செலவில் திட்டமிடப்பட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இஸ்மாயில்புரம் பகுதியில் கழிவுநீர் அகற்றும் பணிக்கு ரூ. 24.6 இலட்சம் செலவிட திட்டம் இடப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன. இப்பணிகள் அனைத்தும் குடிநீர் வடிகால் வாரியத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நாளொன்றுக்குச்சுமார்-82 இலட்சம் காலன் கழிவு நீர் நகரிலிருந்து அகற்றப்படுகிறது. கழிவுநீர் அகற்றும் இணைப்புக் குழாய்கள் இல்லங்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. இதுவரையில் சுமார் 46,137 இல்லங்களுக்கு கழிவுநீர் அகற்றும் இணைப்புகள் வழங்கப்பட்டுள்டுள்ளன. புதிதாக 127 இல்லங்களுக்கு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. மதுரை மாநகராட்சியின் வட பகுதியில் புதிதாக பாதாள சாக்கடைத் திட்டம் ரூ. 190 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு செயல்படத் துவங்கியுள்ளது. மதுரை மாநகராட்சி. யின் தென் பகுதியில் சேர்கின்ற கழிவுநீர் அவனியாபுரம் கினியா புல் பண்ணைக்குப் பம்பிங் செய்யப்படுகிறது. இப்புல் பண்ணையிலிருந்து கினியா புல் குறைந்த விலையில் கால்நடை தீவனமாக மதுரை நகர் மக்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. மேலும் இந்த அவனியாபுரம் கழிவுநீர்ப் பண்ணைக்கு பம்பிங் செய்தது போக மீதம் உள்ள உபரி கழிவு நீரை மதுரை வட பகுதியில் புதிதாகச் செயலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ள புதிய சாக்கடைத் திட்டத்துடன் சேர்க்கும் திட்டம் ரூ. 7.96. இலட்சம் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ளது.


மதுரை மாநகராட்சியில் பொதுமக்களின் உபயோகத்திற்கு நவீன கழிப்பறைகள், குளியல் அறைகள் ஆகியவைகள் கட்டப்பட்டு தற்போது உபயோகத்தில் இருந்து வருகிறது. இவையன்றி ஏராளமான பொது கழிப்பிடங்களும் கட்டப்பட்டு பொது மக்களின் உபயோகத்தில் இருந்து வருகின்றன.

**ஒருங்கிணைக்கப்பட்ட நகர வளர்ச்சித் திட்டம்**

நகர மேம்பாட்டில் தனி அக்



**மணலூரில் இருந்து மதுரை மாநகராட்சிக்குக் குடிநீர் கொண்டு வரும் குழாய் பதிக்கப்படுகிறது.**



கறை காட்டி குறைந்த மற்றும் மத்திய தர வகுப்பினர்க்கு வீட்டு வசதிகள் அளிக்க எல்லிஸ் நகர்ப் பகுதியில் 223.65 ஏக்கர் நிலத்தினைக் கையகப்படுத்தி, தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்தில் உதவிகொண்டு குடியிருப்புகள் அமைத்துக் கொடுக்கும் பணி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

மாநகராட்சியின் வருவாயைப் பெருக்கும் நோக்கோடும், அதே சமயத்தில் வர்த்தகத்தை மேம்படுத்தவும் வகை செய்யத் திட்டமிடப்பட்டு, நகரின் பெரியார் பேருந்து நிலையம் எதிர்ப்புறம் ரூ.55 இலட்சம் செலவில் கடைகள் அலுவலகக் கட்டடங்கள் ஆகியன கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு, அவைகளுள் ஒரு பகுதி தற்போது உபயோகத்திற்குள் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதே போன்று ஆர். எம். எஸ். சாலையில் ரூ. 18 இலட்சம் செல



**மதுரை மாநகராட்சி மேயர் அவர்களின் குறைகேட்டு முறை வழங்கும் நாளை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு ப. குழந்தைவேலு அவர்கள் துவக்கி வைத்து உரையாற்றுகிறார்.**

வில் கடைகளும், நவீனக் கழிப்பறையும், முதல் தளத்தில் அலுவலகக் கட்டடமும் கட்டிப் பயனுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கின்றது. இதுவன்றி அரசு இராசாஜி மருத்துவமனைக் கெதிர்ப்புறத்தில் கடைகள் கட்டும்பணி மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. பொதுமக்களின் நலனைக் கருத்திற் கொண்டு காய்கறிச் சந்தை மற்றும் பூ வியாபாரம் ஆகியவற்றிற்கும் காய்கறி மொத்த வியாபாரத்திற்கும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. வடக்கு ஆவண மூல வீதியில் அமைக்கப்பட்டுள்ள இந்த காய்கறி நாளங்காடியில் கடைகளும் பாதாள அறையும் கட்ட திட்டமிடப்பட்டு அதற்காக ரூ.10 இலட்சம் செலவிட மதிப்பிடப்பட்டுள்ளது.

**குடிநீர் வளர்ச்சி**

பாதுகாக்கப்பட்ட குடிநீர் நகரின் அனைத்துப் பகுதிகளுக்கும் குழாய்கள் மூலமும், சில பகுதிகளில் சரளமாக லாரிகள் மூலமும் வழங்கப்பட்டு வருகின்றது. மதுரையின் வடபகுதியின் குடிநீர் மேம்பாட்டுப் பணிகளுக்கு ரூ. 97 இலட்சம் செலவிட திட்டமிடப்பட்டு பணிகள் முற்றுப்பெறும் நிலையிலுள்ளன.

**கழிவுநீர் அகற்றும் பணி**

நகரிலுள்ள கழிவுநீரை அகற்றி சுகாதாரக் கேட்டினின்று பொது மக்களைப் பாதுகாக்கக் கீழச் சந்தைப்பேட்டையில் மூன்றாவது கழிவுநீரேற்று நிலையம் அமைப்பதற்கு ரூ. 7.97 இலட்சம் செலவிட திட்டமிடப்பட்டும், அவனியாபுரத்தில் கழிவுநீர்த் தேக்கம் அமைக்க ரூ. 44.9 இலட்சம் திட்டமிடப்பட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இஸ்மாயில்புரம் பகுதியில் கழிவுநீர் அகற்றும் பணிகளுக்கு ரூ. 24.61 இலட்சம் செலவிடத் திட்டமிடப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன. இப்பணிகள் அனைத்தும் தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மதுரை மாநகரில் பொது மக்களின் உபயோகத்திற்காக நவீன கழிப்பறைகள், குளியலறைகள் ஆகியவைகள் கட்டப்பட்டு தற்போது உபயோகத்தில் இருந்து வருகிறது. இக்கழிப்பறைகளில் போதுமான தண்ணீர் வசதிக்காக ஆங்காங்கே ஆழ்துளைக் கிணறுகள் போடப்பட்டு இவைகளின் மூலம் தாராளமான தண்ணீர் வசதி செய்யப்பட்டிருக்கிறது. இவையன்றி ஏராளமான பொதுக் கழிப்பிடங்களும் உபயோகத்தில் இருந்து வருகின்றன.

**திருமண மண்டபங்கள்**

மதுரை மாநகரின் பொது மக்களின் வசதிக்காக 12 இடங்களில் திருமண மண்டபங்கள் கட்ட திட்டமிடப்பட்டு அவைகளுக்கான பூர்வாங்க வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**கூடுதல் பேருந்து நிலையம்**

மதுரை மாநகரின் பெரியார் பேருந்து நிலையத்தில் ஏற்பட்டுள்ள நெரிசலை சரிகட்ட நகரின் வட பகுதியில் அறிஞர் அண்ணா பேருந்து நிலையம் அமைக்கப்பட்டு தற்போது உபயோகத்தில் கொண்டு வரப்பட்டிருக்கிறது. மாநகராட்சியின் பொறுப்பில் பூங்காக்கள் நகரில் பல இடங்களில் இருக்கின்றன. உலகத் தமிழ் மாநாடு மதுரையில் நடைபெற்ற சமயத்தில் மாண்புமிகு தமிழக முதல்வரின் ஆலோசனையின் பேரில் வண்டியூர் கண்மாய் பொழுதுபோக்கு மையமாக அமைக்க மேம்பாடுகள் தயாரிக்கப்பட்டு ஆரம்பக் கட்ட வேலைகள் நடைபெற்று முடிக்கப்பட்டுள்ளது. நகரில் மாநகராட்சி நீச்சல் குளத்தை 10 இலட்சம் ரூபாய் செலவில் நவீனப்படுத்தி வேலைகள் நடைபெற்று வருகின்றது. இக்கண்மாயில் சிறுவர்களுக்கான பொழுதுபோக்கு மையங்கள் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**சாலைகள்**

மதுரை நகரின் பராமரிப்பில்

## புதிய தொலைபேசி தொடர்பகங்கள்

**ந**டப்பு (1983-84) ஆண்டில் கூடுதலாக 3.8 இலட்சம் தொலைபேசிகளையும், 700 புதிய தொலைபேசித் தொடர்பகங்களையும் நிறுவ ஆண்டுத் திட்டமொன்றை தபால்-தந்தித்துறை முடிவு செய்துள்ளது 1,500 நீண்ட தூரப் பொது தொலைபேசிகள் துவக்கப்படும். நடப்பு ஆண்டில் 31.7.83 வரை கூடுதலாக 50,000 லைன்களும், 50 புதிய தொடர்பகங்களும் 90 நீண்டதூரப் பொது தொலை பேசிகளும் துவக்கப்பட்டன.



காமராஜர் சாலை காய்கறி நாளங்காடியை மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் டாக்டர் கா.காளிமுத்து அவர்கள் திறந்து வைக்கிறார்.

மொத்தம் 474.635 கிலோ மீட்டர் தொலைவு சாலையும் மற்றும் நடைபாதைகளும் பராமரிப்பில் இருந்து வருகின்றன. கூடுதலாக இவ்வாண்டில் மொத்தம் 20 கிலோ மீட்டர் சாலைகள் பராமரிப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மதுரை நகரில்போக்குவரத்துநெரிசலைத் தவிர்க்க சுற்றுச் சாலை அமைக்கவும் திட்டமிடப்பட்டு நெடுஞ்சாலைத் துறை பார்வைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. விமான நிலையத்திற்குச் செல்லும் வழியில் ரயில்வே லைனில் குறுக்கே மேம்பாலம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. திருப்புவனம் சாலை மற்றும் அருப்புக்கோட்டை சாலையுடன் இணைப்புச்சாலை அமைக்க ஏற்கெனவே அனுமதி பெறப்பட்டுவிட்டது. நெடுஞ்சாலைத் துறையிடம் வேலை ஒப்படைக்கப்பட்டுள்ளது. சாலைகள் பராமரிப்புப் பணிகளுக்காக இவ்வாண்டு வரை 42.7 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

மாநகராட்சி மேயர் மற்றும் துணை மேயர் ஆகியவர்களுக்காகக் குடியிருப்புகள் கட்டுவதற்காகவும் அரசின் அனுமதிபெற்று மேயரின் குடியிருப்பு கட்டி முடிக்கப்பட்டுவிட்டது. துணை மேயருக்கான குடியிருப்பு கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாநகராட்சி முக்கிய பணிகளுள் சுகாதாரம் இன்றியமையாத இடத்தை வகிக்கிறது. சுகாதாரம் பேணுவதற்காக மதுரை நகரில் 38 வட்டகள் உள்ளன. இதன் மூலம் தற்போது பணிகள் பணியாளர்களை வைத்து மேற்பார்வை இடப்பட்டு வருகிறது. நகரின் பெரும்பான்மையான இடங்களில் பாதாள சாக்கடைகள் இருப்பதால் தற்போது பணிகள் தடங்கல் இன்றி நிறைவேற்றப்பட்டு வருகின்றது. தெருக்களில்சேரும் கழிவுப் பொருள்கள் முதலானவைகளை பணியாளர்கள் மற்றும் வண்டிகள் ஆகியவைகள் வைத்து அகற்றி குப்பைக் கிடங்குகளில் சேர்க்கப்படுகிறது. மாநகராட்சியால் தனியாக நிர்ணயிக்கப்பட்டுள்ள உரக் கிடங்குகளில் குப்பைகள் பண்படுத்தப்பட்டு வருகின்றன.

நகரில் கொசுத் தொல்லைகளை ஒழிப்பதற்காகத் திட்டங்கள் தீட்டப்பட்டு இவைகளுக்காக பணியாளர்கள். கொசு ஒழிப்புக் கருவிகள் உயர்ந்த கொசு ஒழிப்பு மருந்துகள் ஆகியவைகள் பயன்படுத்தப்பட்டுவெற்றியும் காணப்பட்டு இருக்கிறது. நகரில் காலரா, அம்மை போன்ற கொடிய நோய்கள்பரவாமல்தடுப்பதற்குத் தடுப்பு ஊசி முதலானவைகள் மாநகராட்சி நிர்வாகத்தால் இலவசமாகப் போடப்பட்டு பொது மக்கள் இக்கொடிய நோய்களிலிருந்து காப்பாற்றப்பட்டு வருகின்றனர். அநேகமாக கடந்த ஆண்டுகளில் இந்நோய்களுக்கு இலக்கானவர்கள் இல்லை என்றே கூறலாம். இளம்பிள்ளை வாதம் குழந்தைகளுக்கு ஏற்படுவதைத் தடுக்க மாநகராட்சியின் மருத்துவ மனைகளில் தடுப்புமருந்துகள் இலவசமாக அளிக்கப்பட்டு வருகின்றன. இம்முறையால் பிறக்கும் குழந்தைகள் இந்நோயில் இருந்து காப்பாற்றப்படுகின்றனர்.




**மின்சாரம்**

மாநகராட்சியின் முக்கியப் பணிகளில் இடம் வகிப்பது மின்சார வசதியாகும். தமிழ்நாடு மின்வாரியத்தில் இருந்து மின்சாரத்தைப் பெற்று பொது மக்களுக்கு மாநகராட்சி மூலம் மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. தெரு விளக்குகள்அமைத்து மதுரையில் உள்ள எல்லா இடங்களும் ஒளிமயமாக்கப்பட்டு இருக்கின்றன. தமிழகத்தில் மிகக் குறிப்பிடத்தக்க வகையில் மதுரை நகரின் முக்கியத் தெருக்களில் சோடியம் ஆவி விளக்குகளால் பிரகாசப்படுத்தப்பட்டு உள்ளன. ஆங்காங்கே டிரான்ஸ்பார்மர்கள் அமைக்கப்பட்டு தடங்கல் இன்றி மின்வினியோகம் எல்லாப் பகுதிகளுக்கும் அளிக்கப்பட்டு வருகின்றது.


**கல்வி**

ஏழை எளிய குழந்தைகளுக்கும் ஏனைய வசதியற்ற குழந்தைகளுக்கும் இலவசக் கல்வி அளிக்கும் முகமாக மாநகராட்சியில் அறுபது ஆரம்ப பள்ளிகளும் 12 நடுநிலைப் பள்ளிகளும் 12 உயர்நிலைப் பள்ளிகளும் மற்றும் 8 மேல்நிலைப் பள்ளிகளும் இயக்கப்பட்டு வருகின்றன. ஏறத்தாழ 32 ஆயிரம் மாணவர்கள் இதனால் பயன் பெறுகின்றனர். இத்துடனல்லாது தேவைகளுக்கெற்ப புதிய பள்ளிகளும், அவ்வப்போது துவங்கப்பட்டு வருகிறது. தற்போது 2 பள்ளிகள் புதிதாக அமைக்கப்பட்டு ஒன்று உபயோகப்பட்டு வருகிறது. மற்றது உபயோகத்திற்கு விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. மாநகராட்சிப் பள்ளிகளில் அனைவரின் தேவைக்கேற்பக் கூடுதல் கட்டடங்கள், விளையாட்டுத் திடல்கள் போன்றவை அமைக்கும் முனைப்பான திட்டங்கள் செயல்பட்டுவருகின்றன.

**தமிழக முதல்வரின் சத்துணவுத் திட்டம்**

மாண்புமிகு தமிழக முதல்வரின் சத்துணவுத் திட்டத்தின்படி மாநகராட்சியின் அனைத்து ஆரம்ப, நடுநிலைப் பள்ளிகளிலும் சத்துணவு வழங்கும் திட்டம் சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஏறத்தாழ 25,000 குழந்தைகள் இதனால் பயன் பெறுகின்றனர். இத்திட்டம் சிறப்பாக இயங்கி வருகிறது.





# மாட மதுரையில் பேரறிஞர் அண்ணாவின் பவள விழா

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மதுரையில் பேரறிஞர் அண்ணாவின் 75-வது பிறந்த நாள் விழா 15-9-83ல், மிகச் சிறப்பாக — அரசின் சார்பில் கொண்டாடப்பட்டது.

அண்ணாவின் பிறந்த நாளை முன்னிட்டு மதுரை நகரமே விழாக் கோலம் கொண்டிருந்தது. மக்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் நீந்திக் கொண்டிருந்தார்கள்.

தமுக்கம் மைதானத்தில் — சங்கரதாஸ் சுவாமிகள் கலை அரங்கத்தில் இசைக் கல்லூரி மாணவ - மாணவியரின் இசை நிகழ்ச்சியுடன் விழா தொடக்கம் ஆகியது.

விழாவுக்கு வந்திருந்த பெருமக்கள் அனைவரையும் செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு பி. என். கிருஷ்ண பாரதி இ. ஆ. ப. வரவேற்றார். அப்போது அவர் தெரிவித்தார்:

"நாட்டுப் பற்று என்று சொல்லப்படுவது நாட்டு விடுதலை மாத்திரமன்று. அதில் மொழி, இனம், சமூக நலம் ஆகியவற்றை அடிப்படையாகவைத்துமாபெரும் மக்கள் இயக்கத்தைத் தொடங்கி நமக்கு உற்சாகத்தை - ஊக்கத்தைக் கொடுத்தவர் அண்ணா அவர்கள்.

"அவரது கொள்கைகளின் அடிப்படையில்தான் பலவிதமான திட்டங்களை மக்களுக்கு, இந்தஅரசு அறிமுகப்படுத்தி வருகிறது. அவற்றையெல்லாம் அவர், அமரராக இருந்து வாழ்த்துகிறார்; வழி நடத்துகிறார் என்றுதான் சொல்ல வேண்டும்."

பேரறிஞர் அண்ணா அவர்களின் வரலாற்றுப் புகைப்படக் கண்காட்சியை மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் திறந்துவைத்து, விழாத் தொடக்க உரை ஆற்றினார் - தமது உரையில் அவர் குறிப்பிட்டார்:

"ரோம்நாட்டில், மற்ற எழுத்தாளர்களின் எழுத்தில் ரோமானிய எழுத்துத்தான் இருந்தது; ரோமானியர்களைப் பற்றி எதுவும் இல்லை; ஆனால் சிசரோவின் எழுத்தில் தான் ரோமானியர்கள் இருந்தார்கள்' என்று ரோமானிய நாட்டு எழுத்தாளரான சிசரோவைப் பற்றிக் குறிப்பிடுவதுண்டு. அதேபோல் தமிழ்நாட்டில் பல எழுத்தாளர்களின் கட்டுரைகளில் தமிழ் எழுத்துத்தான் இருந்தது. அண்ணாவின் எழுத்தில்தான் தமிழனைப் பார்க்க முடிந்தது என்று சொல்லலாம்.

"அவரது பேச்சு இனிமையானது; இசையைப் போன்றது. அண்ணாவின் பேச்சைக் கண்ணை மூடிக்கொண்டு கேட்டால்இசைக் கச்சேரி கேட்பதுபோலத் தோன்றும் என்று ரா. பி. சேதுப்பிள்ளை குறிப்பிட்டார். பேச்சுக்கலைக்குப் புதிய பெருமையை ஏற்படுத்தித் தந்தவர் அண்ணா".

திரு சிலம்பொலி சு. செல்லப்பன் தலைமையில் 'பேரறிஞர் அண்ணா-பன்மணித் திரள்' என்னும் கருத்தரங்கம் நடைபெற்றது. அப்போது, அவர் தெரிவித்ததாவது:

"அண்ணா அவர்களைத் தெய்வம் எனக் கூறுகிறேன். பக்தர்கள் கூறும் முறையில் அல்ல; திருவள்ளுவர் கூறும் முறையில்.

வையத்துள் வாழ்வாங்கு
வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"

என்று வள்ளுவர் குறிப்பிட்டாரே அந்த முறையில்தான் அண்ணா தெய்வமாகத் திகழ்கிறார்."

நிகழ்ச்சித் தொகுப்பு:
**தமிழ்ப்பித்தன்**

திருமதி இரா. காந்திமதி 'துணிப்பண்பாடு' என்ற பொருளில் உரையாற்றினார். அவர் குறிப்பிட்டார்:

''எளிமை, அடக்கம், மாற்றாரை மதிக்கும் மாண்பு ஆகிய அனைத்துப் பண்புகளும் கொண்டவர் அண்ணா. அடக்கம் அமரருள் உய்க்கும் என்று இலக்கணம் வகுத்த திருக்குறளுக்கு இலக்கியமாக விளங்கியவர் அண்ணா.''

'சிந்தனைச் செல்வம்' என்னும் பொருளில் உரையாற்றிய திரு வலம்புரிஜான், எம். எல். சி. குறிப்பிட்டார்:

''ஏழ்மை கண்டு இரங்க வேண்டும்; சிறுமை கண்டு பொங்க வேண்டும்! அவன்தான் சிந்தனையாளன், அண்ணா இந்த வகையில் பெருஞ் சிந்தனையாளராக விளங்கினார். அவர் பிறருக்காக-



நாட்டுக்காக- சிந்தித்து- உலக வரலாற்றில் இடம் பெற்றுவிட்டார்.''

'கலை வளம்' என்ற பொருளில் உரையாற்றிய திருமதி அரசு மணிமேகலை தெரிவித்தார்:

''குள்ளமான அறிஞர் அண்ணாவின் கரங்கள் தம்பிகளுக்கு உயர்ந்த வரலாற்றை எடுத்துச் சொல்லியிருக்கின்றன. நயத்தோடும், நுட்பத்தோடும், மாற்றார் மனம் புண்படா வகையிலும் அவர் பேசுவார்-எழுதுவார்.''

'வாழ்வியல்' என்ற பொருளில் பேசிய திரு சொ. சொ. மீ. சுந்தரம், ''சிலரைக் காலம் தலைவராக உருவாக்குகிறது; சிலர் காலத்தை உருவாக்குகிறார்கள். காலத்தை உருவாக்கிய தலைவர் அண்ணா. சிலர் இருக்கும் போதே இறந்து போவார்கள். சிலர் இறந்த பின்னும் இருப்பார்கள். அப்படி இறந்த பின்னும் இருப்பவர் அண்ணா'' என்று கூறினார்.

'மொழிநலம்' என்ற பொருளில் உரையாற்றிய டாக்டர் அவ்வை நடராசன் குறிப்பிட்டார்.

''உரைவளத்தை எடுத்துக் காட்டவும் பாடம் சொல்லிக் கொடுப்பதற்காகவும் தான் மொழி இருக்கிறது என்று பல புலவர்கள் நினைத்து வந்தனர். மொழியின் மூலம் நாட்டு மக்களின் உணர்ச்சிகளைத் தட்டி எழுப்ப முடியும் என்பதை அண்ணா எடுத்துக் காட்டினார்''

'பொருளியல் மேம்பாடு' என்ற தலைப்பில் உரையாற்றிய திரு ஆலடி அருணா, எம்.பி. தெரிவித்தார்:

''அண்ணா பணக்காரர்களுக்குப் பல்லவி பாடிக்கொண்டிருக்கவில்லை. ஏழை எளிய மக்களின் வாழ்க்கை வளம் பெறுவதற்குரிய வாசகங்களை - இலட்சியங்களை எடுத்துச் சொன்னார்''.

மதுரை மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு. ப.சாமிநாதன் நன்றி கூற, முற்பகல் நிகழ்ச்சி முடிவுற்றது

பிற்பகல் நிகழ்ச்சி, அரசவைக் கலைஞர்கள் திரு எம்.பி.என். சேதுராமன், திரு எம்.பி.என். பொன்னுசாமி ஆகியோரின் நாயன இசையுடன் துவங்கியது.

மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கு.ஆளுடைய பிள்ளை, இ.ஆ.ப. அனைவரையும் வரவேற்றார். அப்போது அவர் தெரிவித்தார்.

''பேரறிஞர் அண்ணாவின் சேவை-பணி-வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகும். அவர் எந்த உணர்வோடு செயல்பட்டாரோ, அந்த உணர்வுகள் நிறைவேறும் வகையில் பல்வேறு திட்டங்களைத் தீட்டி அரசு செயல்பட்டு வருகிறது.''

அடுத்து, பேரறிஞர் அண்ணா அவர்களின் உருவப்படத்தை மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் டாக்டர் சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்கள் திறந்து வைத்தார்.

கலப்பு மணத் தம்பதியருக்கு மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் ஊக்க நிதி அளித்தார்.

சலவைத் தொழிலாளர், சவரத் தொழிலாளர், கட்டடத் தொழிலாளர் ஆகியோருக்குத் தொழில் கருவிகளைச் சிலம்புச் செல்வர் வழங்கினார்.

குடும்ப நலத் திட்டத்திற்குரிய உதவித் தொகைகளை மாண்புமிகு சத்துணவுத் திட்ட அமைச்சர் திரு ஆர்.சௌந்தரராசன் அவர்கள் வழங்கினார்.

அடுத்து, வணக்கத்திற்குரிய மதுரை நகரத் தந்தை திரு பட்டுராசன் உரையாற்றினார். அப்போது அவர் தெரிவித்தார்:

''மிகச் சாதாரண குடும்பத்தில் பிறந்து, மிகச் சாதாரண முறையில் வளர்க்கப்பட்ட அண்ணா பெருஞ்சாதனையை 1967ல் நிகழ்த்தினார். அவரது சாதனையை - அகில இந்தியா மட்டுமல்ல-உலகமே ஒப்புக் கொண்டது. கலையின் மூலம் எதையும் சாதிக்க முடியும் என்ற தத்துவத்தை எடுத்துக் காட்டியவர் அண்ணா''

1983-ஆம் ஆண்டுக்குரிய பாவேந்தர் விருதுக் கவிஞராகத் தேர்ந்தெடுக்கப்பெற்ற கவிஞர் திரு கே. எம்.ஏ. வகாப் கடந்த ஜூலைத் திங்களில் மறைவு





கவிஞர் வகாப் அவர்களின் மக
ளிடம் விருது வழங்கப் பெறுகிறது.

எய்தி விட்டார். ஆதனால் விருதுக்குரிய ரூ. 10 ஆயிரம்- அத்துடன் மாண்புமிகு முதல்வரின திட்டப்படி இந்த ஆண்டிலிருந்து வழங்கப்படும் 4பவுன் தங்கப் பதக்கம் ஆகியவற்றை வகாப் அவர்களின் மகளாரிடம் மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்கள் வழங்கினார். அத்துடன், ஏற்கனவே விருதுபெற்ற 5 கவிஞர்களுக்கும் 4 பவுன் எடையுள்ள தங்கப் பதக்கத்தை வழங்கினார். இந்த ஆண்டு, மாண்புமிகு முதல்வர் அவர்களின் கருத்துப்படி உருவாக்கப்பட்டுள்ள முதிய கவிஞர்க்கு நிதி உதவி வழங்கும் திட்டத்தின்படி 65 வயதுள்ள புதுவை சிவப்பிரகாசம் அவர்களுக்கு திங்களுக்கு ரூ. 500 உதவித் தொகை -மற்றும் 4 பவுன் எடையுள்ள பொற் பதக்கம் ஆகியவற்றையும், தமிழ் இலக்கியங்களை வெளியிட்டுத் தொண்டுபுரிந்த சக்தி காரியாலயம் வை. கோவிந்தன் அவர்களின் துணைவியாருக்கு- மாத ஊதியத் தொகை ரூ 250ம் வழங்கினார் மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர்.

அடுத்து, தவத்திரு ஊரன் அடிகள் உரையாற்றும்போது கூறினார்:

''காந்தியடிகளுக்கு நேரு வாரிசாக அமைந்தது போல, பெரியாருக்கு அண்ணா வாரிசாக அமைந்தார். சமயத்துறையில் உதாரணம் காட்ட வேண்டுமென்றால் ராமகிருஷ்ண பரமஹம்சருக்கு விவேகானந்தர் வாய்த்ததுபோல - அண்ணா - பெரியாருக்குக் கிடைத்தார்.

''திருமூலரின் திருமந்திரமான 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்பதை அண்ணா எடுத்துச் சொல்லிய பிறகுதான் அது மக்கள் மன்றத்துக்கு எட்டியது.''

''நான் கண்ட அண்ணா'' என்ற பொருளில் உரையாற்றிய முத்தமிழ்க் காவலர் திரு கி.ஆ.பெ. விசுவநாதம் தெரிவித்ததாவது:

''அண்ணா பட்டம் பெற்றார்; பதவி பெற்றார்; எழுத்தாளரானார்; பேச்சாளரானார்; செயற்கரிய செயல் செய்தார்; வெற்றியும் பெற்றார்; கோடையிடி இடித்துக் குளம் நிறைந்துவிடாது; மழை பெய்ய வேண்டும். அதுபோல, செயல் ஆற்றிப் பயன் இல்லை; வெற்றியும் கிட்ட வேண்டும்.''

அடுத்து உரையாற்றிய மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம் அவர்கள் தமது உரையில் தெரிவித்தார்:

''நாட்டு மக்களுக்குள் ஜாதி வேறுபாடு இருக்கக் கூடாது. ஜாதி என்பது ஒருவகைச் சுரண்டல் என்று கூறி, அதை எதிர்க்கும் போராட்டத்தில் லட்சக்கணக்கான வீரர்களை ஈடுபடுத்திய பெருமை பேரறிஞர் அண்ணாவைச் சேரும்

''அமெரிக்காவுக்குச் சென்ற அண்ணா ,ஜப்பான் நாட்டின் வழியாகச் சென்றார். அமெரிக்காவின் முன்னேற்றம் என்னைக் கவரவில்லை, ஜப்பானின் முன்னேற்றம்தான் என்னைக் கவர்ந்தது என்று கூறினார். ஜப்பானில் எரிமலைகள் -பூகம்பங்கள் உள்ளன. நல்ல நிலமும் கிடையாது. என்றாலும் மிகப் பெரிய வளர்ச்சி பெற்றிருக்கிறது. நாமும் ஏன் அதுபோல வளரக் கூடாது என்று நினைத்தார். அவ்வாறே தமிழகத்தை வளர்ச்சி பெறச் செய்ய விரும்பினார்.''

மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் தமது உரையில் குறிப்பிட்டார்:

''1935ஆம் ஆண்டு முதல் அண்ணாவுக்கும் எனக்கும் தொடர்பு உண்டு. நான் வேறு கட்சியைச் சேர்ந்தவன். என்றாலும் அவர் பகையாக இருக்கவில்லை. தொழிற்சங்கம் தான் நாங்கள் சந்தித்த முதல் இடம். தமிழைக் காப்பதில் எங்கள் உறவு வளர்ந்தது. வலுப்பட்டது. தட்சிணப் பிரதேசப் பிரச்சினை ஏற்பட்டபோது என்னுடன் ஒத்துழைத்தார். பிரச்சாரம் செய்யச் சென்றபோது தோள் கொடுத்த தோழர் அவர்.

''தமது தம்பிகள் எல்லாம் தலைவர்களாக - மேலவை உறுப்பினர்களாக -சட்டமன்ற உறுப்பினர்களாக -அமைச்சர்களாக வளர்வதற்கு வழிகொடுத்த நாகரிகப் பண்பாளர் அவர். மனிதாபிமானம் உள்ளவர்; பிற உயிர் எதற்கும் தீங்கு செய்யக்கூடாது என்ற கொள்கை உடையவர்.''

மாண்புமிகு சத்துணவுத்திட்ட அமைச்சர் திரு ஆர்.சௌந்தரராசன் அவர்கள் தமது உரையில் தெரிவித்தார்;

''அண்ணாவின் பேனா வீரத்தை எழுதிற்று; அன்பை எழுதிற்று; பண்பை எழுதிற்று; அவரது பேனா மொழியில் என்



றும மாற்றம் ஏற்பட்டுவிட வில்லை. கோடு தாழ்ந்தது: குன்றம் உயர்ந்தது என்று அவர் அரசியல் விமர்சனம் செய்த தைப் படித்தபோது-எதிரிகளுக் குக் கூட கோபமோ, காழ்ப் புணர்ச்சியோ வந்தது கிடை யாது.

''இன்று தமிழ்நாட்டில் அண் ணாவின் கருத்தின் அடிப்படை யில்தான் சத்துணவுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. நடத்த முடியுமா? கொண்டு செலுத்த முடியுமா? என்றெல்லாம் பலர் கேட்கின்றனர். அந்தக் கேள்வி களுக்குப் பதில்வடிவமாகப் புரட் சித் தலைவர் முதல்வர் திகழ் கிறார். பேரறிஞர் அண்ணாவின் மறுபதிப்பாக விளங்குகிறார்''.

விழாவுக்குத் தலைமை ஏற்றி ருந்த மாண்புமிகு செய்தி அற நிலையத்துறை அமைச்சர் திரு இராம.வீரப்பன் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்:

''பேரறிஞர் அண்ணா நம் மோடு பிறந்தார்; வளர்ந்தார்; வாழ்ந்தார். அவர் வாழ்ந்த காலத்திலேயே நாமும் வாழ்ந் தோம்-அவரது அருமைத் தம்பி களாக வாழும் வாய்ப்புப் பெற் றோம் என்ற பெருமை நமக்கு உண்டு. இயற்கை அவரைப் பறித்துக் கொண்டதே தவிர, அவர் இன்று பல லட்சக்கணக் கான மக்களாக மாறியிருக்கிறார்.

''மனிதாபிமான மிக்க தலை வராக வடஇந்தியாவில் காந்தி யடிகள் விளங்கினார். அவரைப் போல தெற்குப் பகுதியில் அண்ணா விளங்கியதால்தான் அவரைத் தென்னாட்டுக் காந்தி என்று அழைக்கிறோம்.

''மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்று பேரறிஞர் அண்ணா குறிப் பிட்டார். அது அடுக்கு மொழி அல்ல-மனிதாபிமான மொழி. மனிதன் பெற வேண்டிய பண் பாடு. அதனை இன்று புரட்சித் தலைவர் காட்சியாக்கிக் கொண் டிருக்கிறார், நல்லவர்களை-வல்லவர்களை-வரவேற்க வேண் டும் என்று மாண்புமிகு முதல்வர் கொண்டிருக்கும் கொள்கை-அண்ணா கற்றுக் கொடுத்த பாடம் ஆகும்.

''ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசித் திட்டத்தை அண்ணா கொண்டு வந்தார். எங்கே போயிற்று அந்தத் திட்டம்? பின் னர் ஆட்சிக்கு வந்தவர்களால் கைவிடப்பட்டது. பின்பு இந்த





1983ன்
பாவேந்தர் வருதக்கவிஞர்
(மறைந்த)
கே.எம்.ஏ. வஉறாப்

ஆட்சி பொறுப்பேற்ற பின் ஏழைகளுக்கு 1 லிட்டர் 3 ரூபாய்க்குக் கிடைக்க வேண்டும் என்று ஆணை பிறப்பித்தது.''

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு.க. இராசாராம் தமது உரையில் சொல்லியதாவது:

''முன்பு இராமநாதபுர மாவட் டத்தில் வெள்ளப்பெருக்கின் காரணமாகப் பெருஞ்சேதம் ஏற் பட்டது. அப்போது பெருந்தலை வர் காமராஜர் அவர்கள், வேட் டியை வரிந்து கட்டிக் கொண்டு, வெள்ளப் பகுதிக்குச் சென்று தொண்டு புரிந்தார். அவரது தொண்டைப் பாராட்டும் வகை யில் அண்ணா பத்திரிகையில் காமராஜரது புகைப்படத்தைப் பிரசுரித்துப் பாராட்டி எழுதி யிருந்தார்.

''ஆட்சிக்கு வந்த பின்னர், காஞ்சிபுரத்தில் உள்ள பச்சை யப்பன் பள்ளியில் காமராஜரின் உருவப் படத்தைத் திறந்து வைத்து காமராஜருக்குப் புகழா ரம் சூட்டினார், அண்ணா.

''யேல் பல்கலைக் கழகத்திற்குச் சென்றபோது திருக்குறள் தவிர வேறொரு நூலை அவர் கொண்டு செல்லவில்லை.

''நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த காலத்தில் 'நடைபாதை வாசிகளின்' பிரதிநிதியாக நான் பேசுகிறேன் என்று குறிப் பிட்டார். அவரது உரையைக் கேட்ட நேரு அவர்கள், அண்ணா வைக் கூர்ந்து பார்க்க வேண்டும் என்று குறிப்பிட்டார்''.

செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு சி.என். கிருஷ்ணபாரதி நன்றி கூற, சிறப்புக் கூட்டம் சிறப்புற முடிந்தது.

அதன்பின் நடிப்பிசைப்புலவர் நாடக மன்றத்தார் வழங்கிய பேரறிஞர் அண்ணாவின் இலக் கிய நாடகமான 'நீதிதேவன் மயக்கம்' பார்வையாளருக்குக் கலைவிருந்தையும் அறிவு விருந் தையும் வழங்கியது. மொத்தத் தில் பேரறிஞர் அண்ணாவின் பவளவிழா-பைந்தமிழின் சிறப்பு விழாவாகத் திகழ்ந்தது.





# தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சி

எஸ்.டி. காசிராஜன், ஐ.ஏ.எஸ்., இயக்குநர், சுற்றுலாத்துறை.

சுற்றுலா - இந்தச் சொல்-தமிழகத்தின் பெருநகரங்களில் மட்டுமல்ல - பட்டி தொட்டிக ளில் ஓரளவு படித்தவர்கள் மத்தி யில் கூட இன்று பரவலாகப் பேசப்படுகிறது.

முன்பு தீர்த்த யாத்திரை என்றார்கள். க்ஷேத்திராடனம் என்றார்கள். சிலர் நாகரிகம் என்று நினைத்து ''டூர்'' என் றார்கள்.

ஆனால் இன்று அவை அனைத் தையும் உள்ளடக்கி ஒரே சொல் லால் - அழகு தமிழில் - சுற்றுலா என்று அழைக்கிறோம்.

''உலா'' என்ற சொல் காலங் காலமாகத் தமிழில் உள்ள ஒரே சொல்தான், ஓர் இலக்கியச் சொல்தான். இன்று பற்பல ஊர் களைப் பார்ப்பதைப் பகர வேண் டும் என்பதால் சுற்றுலா என்ற சொல் பிறந்து புழக்கத்தில் பல ஆண்டுகளாக இருந்து வருகிறது. ஆனால் அந்தச் சொல்லைப் பற் றிய - அது எதைக் குறிக்கிறது என்பதைப் பற்றியோ மக்களுக்கு இன்று தெரிகிற அளவுக்கு இதற்கு முன்பு தெரியவில்லை.

சுற்றுலாத்துறை என்று ஒரு துறை ஆரம் பிக்கப்பட்டு பத்து ஆண்டுகள் ஆகியிருந்த போதிலும், அப்படி ஒரு துறை இருப்பதே கடந்த நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்பு தான் மக்களுக்குத் தெரிந்தது.

காரணம் —

தமிழக அரசு சுற்றுலா வளர்ச் சிக்காகக் கடந்த நான்கைந்து ஆண்டுகளில் மேற்கொண்டுள்ள அரிய பல பணிகளாலேயாகும்.

இயற்கைச் செல்வம், தொன் மைச் சிறப்பு, பண்பாட்டு முதிர்ச்சி, கலை வளம், மொழி வளம் ஆகிய யாவும் ஒருங்கே அமையப்பெற்ற தமிழகம் சுற்று லாச் சிறப்புகள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டு விளங்கு கிறது. உலகில் உள்ள சுற்றுலாச் சிறப்புமிக்க இடங்களில் ஒருசில தமிழகத்தில் உள்ளன.

எனவே, தமிழ்நாட்டின் பல் வேறு சுற்றுலாச் சிறப்புகளையும் பிற மாநிலத்தவரும், அயல்நாட் டவரும் கண்டு களிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு அண்மைக் காலமாகச் சுற்றுலா வளர்ச்சியில் தனிக்கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

எழில் கொஞ்சும் மலைநகர் கள், வனங்கள், வனவிலங்குகள், பறவைகள், பசுமை நிறைந்த சமவெளிகள், வளம் பெருக்கும் ஆறுகள், அருவிகள், நீண்ட வெண்மணற் கடற்கரைகள், உப் பங்கழிகள், கால்வாய்கள் எனப் பல்வேறுபட்ட புவியியற் கூறுக ளோடு மட்டும் தமிழகம் திகழ வில்லை. இங்கே கட்டடக் கலை யழகு மிளிரும் வானுயர்ந்த கோபுரங்களைக் கொண்ட கோயில்கள், அற்புதக் கைவி னைப் பொருள்கள், பார்க்கப் பார்க்கப் பரவசமூட்டும் பரதம், கேட்கக் கேட்கத் தெவிட்டாத இசை, நமது பாரம்பரியப் பழக்க வழக்கங்களைப் பிரதிபலிக்கும் கிராமியக் கலைகள் என எண் ணற்ற மாட்சிகள் உண்டு. வர லாற்றுச் சிறப்புமிக்க இடங்களும் யாத்திரைத் தலங்களும் தமிழக மெங்கணுமுள்ளன.

சுருக்கமாகச் சொல்லவேண்டு மானால் பாட்டுக்கொரு புலவன் தேசியக் கவிஞன் பாரதி கூறி யது போல், ''செல்வம் எத்தனை யுண்டு புவிமீதே அவை யாவும்

படைத்த தமிழ்நாடு'' என்று தான் சொல்லவேண்டும்.

அவ்வளவு சிறப்புகளுக்கும் சொந்தக்காரர்கள் நாம். அந்தப் பெருமைமிகு தமிழ் மண்ணுக்கு உரியவர்கள் நாம். நமது முன்னோர்கள், ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற பரந்த மனப் பான்மையோடு சுற்றுலாவை, அதன் சிறப்பினையும், அதனால் கிட்டும் நன்மைகளையும், மனத்திற் கொண்டு இதை ஒரு கலையாகவே போற்றி வளர்த்து வந்துள்ளனர். அந்த மரபு இன்றும் தொடர்ந்து வருகிறது.

ஆனால் ஒரு வேற்றுமை. நமது முன்னோர்கள் சுற்றுலாவை ஒரு கலையாக மட்டுமே கருதினார்கள். நாம் இதனை ஒரு தொழிலாகவும் கருதி. நமது தாய்த் திருநாட்டுக்கு அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் வகையாய் விஞ்ஞான ரீதியாகத் திட்டமிட்டுச் செயலாற்றி வருகிறோம்.

சற்றேறக்குறைய பத்தாண்டுகளுக்கு முன்பு வரையில் சுற்றுலா வளர்ச்சிக்கெனத் தனியாக அரசு மட்டத்தில் அமைப்பு எதுமில்லை என்றாலும், அப்போது செய்தி விளம்பரத்துறை வாயிலாகச் சுற்றுலாத் துறையில் ஓரளவு கவனம் செலுத்தப்பட்டு வந்தது.

உலக அரங்கில் விரைந்து வளர்ந்துவரும் சுற்றுலாவினால் கிட்டும் பல்வேறு நன்மைகளை உன்னிப்பாகக் கவனித்து வந்த தமிழக அரசு, தமிழ்நாட்டின் சுற்றுலா வளர்ச்சியில் தனிக் கவனம் செலுத்த முற்பட்டது. அதன் பயனாக 1972ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் அரசு மட்டத்தில் சுற்றுலாத்துறையும், அதே ஆண்டு ஜூன் திங்களில் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகளைக் கவனிக்க தொழில் கண்ணோட்டத்தில் வர்த்தக ரீதியாக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமும் நிறுவப்பட்டன.

அன்று முதல் சுற்றுலாத்துறை சுற்றுலா வளர்ச்சிக் கான மேம்பாட்டுப் பணிகளில் தனிக் கவனம் செலுத்தி வருகிறது. அன்று ஒரே ஒரு அலுவலரையும் ஒரு பிரிவையும் மட்டும் கொண்டு துவக்கப்பட்ட சுற்றுலாத் துறை இன்று பன்மடங்கு பெருகி, திட்டமிட்ட முறையில் சுற்றுலா வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டு செயலாற்றி வருகிறது.

சுற்றுலாத்துறை ஏற்பட்ட பின்னர்தான் உலகப்புகழ்வாய்ந்த சுற்றுலா இடங்களான மாமல்லபுரம், கன்னியாகுமரி, உதகமண்டலம், கொடைக்கானல், இராமேசுவரம் ஆகிய சுற்றுலா மையங்களின் வளர்ச்சிக்கு ஒருங்கிணைந்த முறையில் பணிகள் மேற்கொள்ள, வல்லுநர்களைக் கொண்டு பெருந்திட்டங்கள் தீட்டப்பட்டு அவை படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன. மற்ற இடங்களின் மேம்பாட்டிலும் போதுமான கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக சுற்றுலாச் சிறப்புக்கள் இருந்தும் குடத்துவிட்ட விளக்காக இருக்கும் பிச்சாவரம், ஒகேனக்கல், ஏர்க்காடு, ஏலகிரி போன்ற இடங்களின் மேம்பாட்டில் அரசு தனிக்கவனம் செலுத்தி வருகிறது.


சுற்றுலா வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளும் அதே நேரத்தில் மேலும் மேலும் அதிகப்படியான சுற்றுலாப்பயணிகளைத் தமிழகத்தின்பால் ஈர்க்க வேண்டிய அவசியத்தையும் அரசு நன்கு உணர்ந்துள்ளது. எனவே சுற்றுலா இடங்கள், அவற்றின் சிறப்புகள் அங்கு கிடைக்கும் வசதிகள் ஆகிய விவரங்கள் அடங்கிய வெளியீடுகள் ஆண்டுதோறும் கொண்டுவரப்பட்டு அவை அயல்நாடுகளிலும், பிற மாநிலங்களிலும் வழங்கப் படுகின்றன. செய்தித் தாள்களில் விளம்பரங்கள் கொடுக்கப்படுகின்றன. புகைப்படங்கள், வண்ணப்படங்கள், ''ஸ்லைடுகள்'' ஆகியவை மற்றும் வண்ணச் சுவரொட்டிகள் விளம்பரத்திற்காக பயன்படுத்தப்படுகின்றன. சுற்றுலா பற்றிய திரைப்படங்களும் உபயோகப்படுத்தப் படுகின்றன. இந்திய அரசு சுற்றுலாத்துறை ஒத்துழைப்புடன் அயல்நாட்டு நிபுணர்கள் ஆகியோர்களை வரவழைத்து ''தென்னகம்நோக்கி'' என்னும் திட்டத்தின் கீழ் தமிழகத்தையும் பிற தென் மாநிலங்களையும் சுற்றிக்காட்டி அனுப்பினோம்.

இதனாலெல்லாம் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை ஆண்டுக்காண்டு கணிசமாக உயர்ந்துள்ளது.

ஐந்தாண்டுகளுக்கு முன் ஐந்து நட்சத்திர ஓட்டல் ஒன்று கூட தமிழகத்தில் இல்லை. ஆனால் இன்று சென்னையில் அத்தகைய ஓட்டல்கள் இரண்டு உள்ளன. அன்று சென்னையிலேயே சுற்றுலாப் பயணிக்கேற்ற ஓட்டல்கள் ஒன்று அல்லது இரண்டுதான் இருந்தன. ஆனால் இன்றோ ஒன்று முதல் ஐந்து நட்சத்திரம் வரை பல்வேறு வகை ஓட்டல்கள் சென்னையில் ஏற்பட்டுள்ளன. இதைப்போலவே பத்தாண்டுகளுக்கு முன் தமிழகத்தில் மற்ற முக்கிய நகரங்களில் சுற்றுலாப் பயணிகளுக்கேற்ற ஓட்டல்கள் இல்லை என்றே கூறலாம். ஆனால் இன்று எல்லா இடங்களிலும் சுற்றுலாப் பயணிகளுக்



கடற்கரை வளாகக் குடில்கள், மாமல்லபுரம்




தொலை நோக்காடி, ஏர்க்காடு

கேற்ற தரமான ஓட்டல், உணவு விடுதிகள் ஏற்பட்டுள்ளன.

போக்குவரத்துத் துறையில் சற்றேறக் குறைய பதினைந்தாண்டுகளுக்கு முன் அரசு விரைவுப் பயணம் செய்ய ''சொகுசு'' விரைவுப் பேருந்துகள் விட ஏற்பாடு செய்யப்பட்டதிலிருந்து ஒரு புரட்சியே ஏற்பட்டுள்ளது எனலாம். சில ஆண்டுகளுக்கு முன்பு வரை தமிழகத்தில் குளிர்ப்பதன (Air-conditioned) வசதியுள்ள சிருந்துகளோ, பேருந்துகளோ இல்லை. ஆனால் இப்போது இந்த வசதி தாராளமாகக் கிடைக்கிறது.

விமானப் போக்குவரத்திலும் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு வரை ஏர் இந்தியா மற்றும் இந்தியன் ஏர்லைன்ஸ் இந்த இரண்டு நிறுவனங்களின் விமானங்கள் தான் சென்னை வந்து சென்றன. இன்று இவற்றோடு மலேசியா (மாஸ்) சிங்கப்பூர், ஏர்லங்கா ஆகிய நிறுவனங்களின் விமானங்களும் சென்னை வந்து செல்கின்றன. அடுத்து, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சுற்றுலாப் பயணங்களுக்கென்றே சொகுசுப் பேருந்துகள் வாங்கி சென்னை நகர் காட்சி சுற்றுப் பயணம் முதல் தென்னகம் தழுவிய பல்வேறு சுற்றுலாப் பயணங்களை நடத்தி வருகிறது. இந்தச் சுற்றுலாப் பயணங்கள் தமிழகத்தின் சுற்றுலா வளர்ச்சியில் ஒரு பெரிய மாறுதலை உண்டாக்கி இருக்கின்றன என்றால் அது மிகையாகாது.

இளைஞர் விடுதி மற்றும் குடில்கள்—மாமல்லபுரம்



பயண முகவர்கள் பலர் இன்று சென்னையிலும் பிற இடங்களிலும் செயல்படுகின்றனர். சுற்றுலா சிருந்து வாடகைக்கு விடும் நிறுவனங்களும், இன்று பன்மடங்கு அதிகரித்துள்ளன.

வர்த்தக ரீதியில் இயங்கிவரும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஆரம்பிக்கப்பட்டபோது அதனிடம் இரண்டு சொகுசுப் பேருந்துகள்தான் இருந்தன. ஆனால் இன்று 18 சொகுசுப் பேருந்துகள் உள்ளன. இதில் 3 குளிர் சாதனப்பேருந்துகள். அதே போல் 253 படுக்கைகள் கொண்ட 5 சுற்றுலா மாளிகைகள் அதனிடம் ஒப்படைக்கப்பட்டன. தற்போது இக்கழகம் தமிழகத்தின் எல்லா முக்கிய இடங்களிலும் ''ஓட்டல் தமிழ்நாடு'' எனும் தொடர் ஓட்டல்கள் 20 நடத்தி வருகின்றன. இவற்றில் உள்ள மொத்த படுக்கைகளின் எண்ணிக்கை 1334 ஆகும். இதில் பெருவழி ஓய்வு விடுதிகள், மூன்று நட்சத்திர ஓட்டல்கள் இரண்டு, கடற்கரை வளாகம் ஒன்று ஆகியவை அடங்கும்.

தமிழ்நாட்டின் சுற்றுலா வளர்ச்சியில் முக்கியமாகக் குறிப்பிடப் படவேண்டியவை:

1. மாமல்லையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் நடத்தி வரும் ''பெட்ரோல் கிடங்கு''.



அருள்மிகு மீனாட்சி அம்மன் கோயில் கோபுரம்

2. இராமேசுவரம், திருச்செந்தூர், ஒகேனக்கல், ஏர்க்காடு போன்ற இடங்களில் கட்டப்பட்ட ஓட்டல்கள்.

3. உளுந்தூர்ப்பேட்டை, இராணிப்பேட்டை, கிருஷ்ணகிரி ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ள பெருவழி ஓய்வு விடுதிகள்.

4. ஆண்டுதோறும் சென்னையில் நடத்தப்பட்டு வரும் அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி.

5. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தி வரும் பல்வேறு சுற்றுலாப் பயணங்கள்.

6. சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களிலெல்லாம் இளைஞர் விடுதி கட்டப்பட்டு, குறைந்த வருமானமுள்ள சுற்றுலாப் பயணிகளுக்கும், மாணவர்களுக்கும் தங்கும் வசதி ஏற்பாடுகள் செய்திருப்பது.

7. மாமல்லையில் முகாம் மற்றும் குடில்கள் அமைத்துள்ளது,

8. மதுரையில் திருமலை நாயக்கர் மாளிகையில் ஒலி, ஒளிக் காட்சி அமைத்திருப்பது.

9. கோடை, உதகை, ஏர்க்காடு ஆகிய இடங்களில் தொலை நோக்காடிகள் அமைத்திருப்பது.

இப்படிப் பல்வேறு துறைகளில் சுற்றுலா வளர்ச்சி அடைந்து வந்துள்ளது.


நாளும் பெருகிவரும் சுற்றுலாப் பணிகளுக்குத் தேவையான தகவல்கள் கொடுத்து வழிகாட்டி உதவி புரிவது மிகமிக இன்றியமையாத ஒரு பணியாகும். பத்தாண்டுகளுக்கு முன் சென்னை நகருக்கும் மற்றும் தமிழகத்தின் பிறமாவட்டங்களுக்கும் சேர்ந்து மூன்று சுற்றுலா அலுவலகங்கள் தான் இருந்தன. இன்று ஒன்பது சுற்றுலா அலுவலகங்களும் ஒன்பது சுற்றுலாத் தகவல் நிலையங்களும் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான உதவிகளைப் புரிந்து வருகின்றன. இவற்றுள் ஒன்று இந்தியத் தலைநகராம் தில்லியில் உள்ளது.

இவற்றிற்கெல்லாம் மேலாக, தமிழக மக்களிடையே சுற்றுலா உணர்வை வளர்க்க வேண்டும் என்ற நோக்கத்தோடு மாவட்டத்திற்கு இரு மையங்கள் என்ற அடிப்படையில் எல்லா மாவட்டங்களிலும், மாவட்ட உலாத் தலங்கள் வளர்ச்சித் திட்டப்பணிகள் மேற்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்க ஒரு வளர்ச்சிப் பணியாகும்.

இப்படி கடந்த ஐந்தாறு ஆண்டுகளாக நாம் பின் நோக்கிப் பார்க்கும்போது, சுற்றுலாத்துறையில் ஏற்பட்டுள்ள மாபெரும் வளர்ச்சியை நம்மால் அறுதியிட்டுக் கூறமுடியும். ஆனால் நமது பணிகள் இத்துடன் முடிந்துவிடவில்லை. செய்ய வேண்டிய பணிகள், செய்து முடித்த பணிகளைவிட பன்மடங்கு அதிகமானவை, கடினமானவை, கடிதில் முடிக்கப்பட வேண்டியவை.

எனவே, மேலும் புதிய வேகத்தோடு செயலாற்ற வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம்.

செயலாற்றுவோம்! சுற்றுலாவின் சிறப்பை மேலும் உயர்த்துவோம்!



உதகை

படகு தழாம்



# கீழைநாட்டு மொழிகளுக்கு மொழிவழித் தொடர்புக் கருத்தரங்கு



கீழைநாட்டு மொழிகளுள் மொழிவழித் தொடர்பு பற்றிய கருத்தரங்கு பல்கலைக்கழக நூற்றாண்டு வெள்ளி விழாவை ஒட்டிச் சென்னைப் பல்கலைக்கழகத்தில் 22.9.'83 அன்று நடைபெற்றது.

இந்தக் கருத்தரங்கத் தொடக்கவிழாவிற்கு மாண்புமிகு மேலவைத் துணைத்தலைவர் புலவர் திரு புலமைப்பித்தன் அவர்கள் தலைமை ஏற்றார். மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள் தொடக்கவுரையாற்றினார். சென்னைப் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் டாக்டர் நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் திறப்புச் சிறப்புரையாற்றினார்.

முதல் அமர்வில் பேராசிரியர் கே. குசலப்ப கௌடா தலைமையில், டாக்டர் ந.சஞ்சீவி 'தமிழ் சிங்களத் தொடர்பு' குறித்தும், டாக்டர் சி.பாலசுப்பிரமணியம் 'சங்க இலக்கியங்களில் இந்தியப் பகுதிகள்' குறித்தும், டாக்டர் கே.எம்.பிரபாகர வாரியார் 'தமிழிலக்கியங்களின் மலையாள மொழிபெயர்ப்பு' குறித்தும் ஆய்வுரைகள் செய்தனர்.

இரண்டாம் அமர்வில் டாக்டர் எஸ்.என். கணேசன் தலைமையில் டாக்டர் டி.எஸ். குப்புசாமி 'இந்திய இலக்கியம்-இந்தியப் பண்பாட்டுக் கண்ணாடி' என்ற தலைப்பிலும், டாக்டர் எஸ்.ஆக்ஞி ரெட்டி 'திருமணமும் மொழியும்' என்பது குறித்தும், ஸையத் சஃபியுல்லா 'உருது - தமிழ்ச்சொல் வழித் தொடர்பு' குறித்தும் திரு பி.நிசார் அஹமத் 'அரபுத் தமிழ்' குறித்தும் ஆய்வுரைகள் நடத்தினர்.

மூன்றாவது அமர்வில், டாக்டர் ஜி.அப்பாராவ் தலைமையில், டாக்டர் வீழிநாதன் 'மகாபாரதமும் திருக்குறளும்' என்னும் பொருளிலும், டாக்டர் எஸ்.டபுள்யூ ஆஷ்ராஃப் 'பர்சிய மொழியும் இந்திய மொழிகளும்' என்பது குறித்தும், டாக்டர் கே. குசலப்ப கௌடா 'கன்னடமும் கீழைநாட்டு மொழிகளும்' என்னும் பொருளிலும் ஆய்வுரை நடத்தினர்.

# சென்னையில் மேற்கு ஜெர்மனி அமைச்சர்



மாண்புமிகு மேற்கு ஜெர்மனி பொருளாதாரக் கூட்டுறவுத் துறை அமைச்சர் டாக்டர் வார்ன்கி அவர்கள் 13.9.83 அன்று சென்னைக்கு வருகை தந்தார்.

அவரை விமான நிலையத்தில் மாண்புமிகு தொழில் அமைச்சர் திரு எஸ். திருநாவுக்கரசு அவர்களும், உயர் அலுவலர்களும் மாலை அணிவித்து வரவேற்றனர்.

மாண்புமிகு மேற்கு ஜெர்மனி அமைச்சர் டாக்டர் வார்ன்கி நிருபர்களிடம் தெரிவித்த கருத்துகள்:

"இந்தியா மேற்கு ஜெர்மனி நாட்டின் முக்கிய கூட்டுறவு நாடாக உள்ளது. இந்தியாவிற்கு 3ஆயிரத்து 200 கோடி ரூபாய் மேற்கு ஜெர்மனி உதவி அளித்துள்ளது. இரண்டு நாடுகளுக்கு இடையேயான வர்த்தக உறவில் பல மடங்கு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

சிறு தொழில் வளர்ச்சி, கிராமப்புற வளர்ச்சி ஆகியவற்றிற்கு உதவுவதுடன் கலாச்சார ஆன்மீகத் தொடர்புகளை வளர்த்துக் கொள்ளவும் மேற்கு ஜெர்மனி விரும்புகிறது.

சென்னை, "ஐ.ஐ.டி."யிலுள்ள கடல் துறைப் பொறியியல் மையத்தின் விரிவுபடுத்தும் திட்டத்திற்கு, மேற்கு ஜெர்மனி அரசு பொருளாதார ஒத்துழைப்பை அளிக்கும்- மிகவும் நவீனமான தொழில் நுட்ப அறிவை இந்தியாவிலுள்ள சிறு தொழில் அதிபர்களுக்கு மேற்கு ஜெர்மனி வழங்கத் தயாராக இருக்கிறது. தொழில் நுட்ப உதவி அளிப்பதற்குச் செலவாகும் தொகையில் 75 சதவிகிதத்தைக் கடனாக மேற்கு ஜெர்மனி வழங்கும்."



# பாவேந்தர் பாரதிதாசன் விருது


சுரதா — முத்துலிங்கம் — புத்தனேரி சுப்பிரமணியம் — சிவப்பிரகாசம்

தமிழ்நாடு அரசால் 1978-ஆம் ஆண்டு தொடங்கப்பெற்றது இத்திட்டம். ஆண்டு தோறும் சிறந்த கவிஞர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவருக்குப் பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள் விழாவன்று ரூ. 10,000/- ரொக்கப் பரிசு விருதாக வழங்கப்பட்டு வந்துள்ளது.

இவ்வாண்டு முதல் ரொக்கப் பரிசு விருது 10,000/- ரூபாயுடன் 4 பவுன் எடையுள்ள பொற்பதக்கம் ஒன்றும் வழங்கப்பெற அரசு ஆணையிட்டுள்ளது.

மேலும் 65 வயதைக் கடந்த சிறந்த புலவர் ஒருவரைத் தேர்ந்தெடுத்து அவருக்குப் பாவேந்தர் பிறந்த நாளிலிருந்து திங்கள்தோறும் ரூ. 500/-(ரூபாய் ஐந்நூறு மட்டும்) நிதியுதவியாக வழங்கவும், 4 பவுன் எடையுள்ள பொற்பதக்கம் ஒன்று அளிக்கவும் அரசு வகை செய்துள்ளது

முந்திய ஆண்டுகளில் பாவேந்தர் பாரதிதாசன் விருது பெற்ற கவிஞர்களுக்கும் தற்போது பொற்பதக்கங்களை வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. இதுவரை பாவேந்தர் விருது பெற்ற கவிஞர்களின் பெயர்கள் வருமாறு:

| | |
|---|---|
| கவிஞர் சுரதா | 1978 |
| மறைந்த கவிஞர் வாணிதாசன் | 1979 |
| மறைந்த கவிஞர் எஸ். டி. சுந்தரம் | 1979 |
| கவிஞர் முத்துலிங்கம் | 1980 |
| மறைந்த கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் | 1981 |
| கவிஞர் புத்தனேரி ரா. சுப்பிரமணியம் | 1982 |
| மறைந்த கவிஞர் கே. எம். ஏ. வகாப் | 1983 |
| கவிஞர் ச. சிவப்பிரகாசம் (உதவி நிதி விருது) | |

## திருவாரூரில் வருவாய் வட்ட அலுவலகக் கால்கோள் விழா

திருவாரூர் வருவாய் வட்ட அலுவலகக் கட்டடக் கால்கோள் விழா, 16-9-1983ஆம் நாள் வெள்ளிக்கிழமையன்று வருவாய் வட்ட அலுவலக வளாகத்தில் நடைபெற்றது. மாண்புமிகு சுற்றுப்புறச் சுகாதாரத் துறை அமைச்சர் திரு எஸ். ஆர், இராதா அவர்கள் விழாவிற்குத் தலைமை தாங்கினார். தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு இரா. சத்பதி இ. ஆ. ப. வரவேற்புரையாற்றினார்.


விழாவில் மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு. எம். ஆர். கோவேந்தன் அவர்கள், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் திரு கே. கலைமணி அவர்கள் ஆகியோர் முன்னிலையில் ரூபாய் 2.17 இலட்சம் செலவில் கட்டப்படவிருக்கும் 3 மாடிக் கட்டடத்திற்கு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு. எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் கால்கோளிட்டு சிறப்புரையாற்றினார்.

அப்போது அவர் பேசுகையில ''விவசாயத் தொழிலை நம்பியிருக்கும் தஞ்சை மாவட்ட விவசாயத் தொழிலாளர்களுக்கு வேறு தொழில் நடத்தும்படியான வாய்ப்பை அளிக்கும் வகையில் வேறு தொழில் கூடங்களைத் தொடங்க அரசு சில திட்டங்களைத் தயாரித்துக்கொண்டு இருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறிய கருத்தின் அடிப்படையில் ஏழ்மையைப் போக்க இந்த அரசு பலவித முயற்சிகளில் ஈடுபடும். தஞ்சை மாவட்டத்தில் நெல் பயிர் செய்வதுடன் பணப் பயிர் செய்ய வேண்டும். நில உடைமை மேம்பாட்டுப் பணியை 2 ஆண்டுக்குள் முடிப்பதற்காக மேலும் அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த ஆண்டு ஒரு இலட்சத்து 23 ஆயிரம் பேருக்கு வீட்டு மனைப் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது'' என்று கூறினார்.

விழாவில் 8425 பேருக்கு ரூபாய் 12 இலட்சத்து 10 ஆயிரம் மதிப்புள்ள அரசு நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. விழாவில் சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் திரு. அ. பத்மநாபன், நாகை நர்டாளுமன்ற உறுப்பினர் திரு தாழை மு. கருணாநிதி, திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் திரு செல்லமுத்து, கரும்புப் பண்ணைக் கழகத் தலைவர் திரு சு. தென்கோவன், மக்கள் குழு உறுப்பினர் திரு கோவி. நாராயணசாமி ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். மாவட்ட வருவாய் அலுவலர் திரு சோணைமுத்துக்கோன் நன்றி கூறினார்.

**வை. புண்ணியமூர்த்தி**
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,
தஞ்சாவூர் மாவட்டம்.






## பல்கலைக் கழக நூலகப் பவள விழா!

''நூலக அறிவியல்'' என்ற பாடத்திற்கான தேசிய பேரா சிரியர் என்ற பதவி சென்னைப் பல்கலைக் கழகத்தின் முன்னாள் நூலகர் எஸ். ஆர். ரங்கநாதன் ஒருவருக்குத்தான் கொடுக்கப் பட்டதென்றும், இந்தச் சிறப்பு மிகவும் அபூர்வமானதென்றும் சென்னைப் பல்கலைக் கழகத் தின் துணைவேந்தர் டாக்டர் எம். சாந்தப்பா கூறினார்:

சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு வெள்ளிவிழாவுடன் இணைந்து, சென்னைப் பல்கலைக் கழக நூலகப் பவளவிழா ஆண் டும் 22-9-83 அன்று கொண்டா டப்பட்டது. இந்த விழாவைச் சிறப்பிக்கும் வகையில் சென்னைப் பல்கலைக் கழக நூலகத்தின், முதல் நூலகரான திரு எஸ். ஆர். ரங்கநாதனின் திருஉருவப் படத் தைத் திறந்து வைத்துப் பேசு கையில் துணைவேந்தர் டாக்டர் சாந்தப்பா எஸ். ஆர். ரங்க நாதனைப் பாராட்டிப் பேசினார்.

திரு சாந்தப்பா சிறப்பு மலர் ஒன்றையும் வெளியிட்டார். சிறப்புரையாற்றிய மாண்புமிகு மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம. பொ. சிவ ஞானம் அவர்கள் பேசுகையில், 'பள்ளி சென்று முறையான கல்வி கற்க முடியாதவர்களுக்கு நூல கங்கள் பெரிதும் உதவ முடியும்' என்று கூறினார்.

'சென்னைப் பல்கலைக் கழக நூலகத்தின் வளர்ச்சி' என்ற நூலை சென்னைப் பல்கலைக் கழகத்தின் பதிவாளர் திரு. சி. கே குமாரசாமி வெளியிட்டு உரை யாற்றினார்.

பல்கலைக்கழக நூலகர் டாக் டர் பி.ஏ. மோகன்ராஜ் வர வேற்றார். திரு. எம். எஸ். அப்துல்காதர் தலைமை வகித்துப் பேசுகையில், மாணவர்கள் நூல கத்தைப் பயன்படுத்தி, தங்களது அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொண் டார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் (1) பல் பரிசோதனை (2) காது, மூக்கு, தொண்டை பரிசோதனை (3) எலும்பு முறிவு பரிசோதனை, (4) கண் பரிசோதனை ஆகிய புதிய மருத்துவ சிகிச்சைக்கான பிரிவுகளை மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே அவர்கள் (23-9-83) அன்று துவக்கி வைத்தார்.

இந்த விழாவில் நல்வாழ்வுத்துறை ஆணையாளர் மற்றும் செயலாளர் திரு ஆர். சண்முகம், மருத்துவக்கல்வி இயக்குநர் டாக்டர் லலிதாகாமேசுவரன், சென்னை மருத்துவக் கல்லூரித் தலைவர் டாக்டர் எஸ். ஆறுமுகம், பல் மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் பி.பி. ராஜன், எலும்பு முறிவுக்கான டாக்டர் சவுந்திர பாண்டியன், மூக்கு, கண், தொண்டைக்கான டாக்டர்கள் டி. எம். பரமேஸ்வரன், சுவாமிநாதன், கண் மருத்துவத்திற்கான டாக்டர்கள் நாகிரெட்டி, எம். ராதா கிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர். அனைவரையும், தலைமைச் செயலக மருந்தகத்தைச் சேர்ந்த ஒருங்கிணைப்பாளர் டாக்டர் எல். ஜெயச்சந்திரன் வரவேற்றார்.

தலைமைச் செயலகத்தில், இதுபோன்ற மருத்துவ வசதிகளைச் செய்து கொடுத்ததற்காக அமைச்சர் அவர்களுக்கு, தலைமைச் செயலக அலுவலர் சங்கத் தலைவர் திரு. ரெங்கராஜன், மாநில கடைநிலை ஊழியர் சங்கத் தலைவர் திரு. துளசிங்கம், திரு நமச்சிவாயம், செயலாளர், தலைமைச் செயலக ஊழியர் சங்கம் ஆகியோர் நன்றி தெரிவித்தனர்.



## தேசிய புற்றுநோய்த் தடுப்புத் திட்டம்

இந்தியாவில் ஆண்டுதோறும் 12 இலட்சம் பேர் புற்று நோயால் பாதிக்கப்படுகின்றனர். எனவே, புற்றுநோய் கண்டுபிடிப்பு மையங்கள் மூலம் விஞ்ஞான ரீதியான புள்ளி விவர சேகரிப்பை விரிவுப்படுத்த வேண்டியது அவசியம்.

மன இயல் மற்றும் மருத்துவ ரீதியான சிகிச்சைக்கு முக்கியத்துவம் அளித்து உத்தி வரையப்படவேண்டும். நாட்டில் கதிரியக்கச் சிகிச்சை வசதிகள் குறித்து பரிசீலனை செய்ய டெலிதெரபிப் பிரிவுக்கான நிரந்தரக் குழு நிறுவப்பட்டது,

கோபால்ட் சிகிச்சைப் பிரிவுகள், புற்று நோய்க் கண்டுபிடிப்பு மையங்கள் மற்றும் ஆறு புற்று நோய் பதிவகங்களைத் துவக்க மத்திய அரசு இவ்வாண்டு, (1983) மார்ச் மாதம் வரை ரூ. 1132·36 இலட்சம் வழங்கியுள்ளது. புற்றுநோய் ஆராய்ச்சி மற்றும் சிகிச்சைத் திட்டம் 1974-75இல் துவக்கப்பட்டது.

4-வது அட்டையில் :

## முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டக் கோலு பொம்மைகள்

சென்னை அண்ணாசாலையில் உள்ள காதிகிராமோத்யோக் பவனில் இவ்வாண்டும் (1983) வழக்கம் போல் நவராத்திரி கொலு பொம்மைக் காட்சியும், விற்பனையும் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இவ்வாண்டு கொலுவின் சிறப்பு, முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தினை விளக்கும் பொம்மைக் காட்சியாகும்.

கண்ணைக் கவரும் வகையில் வண்ணத்தில் உருவான இந்தப் பொம்மைகள், குழந்தைகளையும் பெரியவர்களையும் ஒருங்கே கவர்ந்தன.

சத்துணவுக் கூடம் ஒன்று காட்சியளிக்கிறது.

குழந்தைகள் வரிசையாக உட்கார்ந்து கொண்டிருக்கின்றனர்.

ஒரு தாய், அமுதுடன் குழந்தைகளுக்குப் பரிமாறத் தயாராய் நின்று கொண்டிருக்கிறார்.

பள்ளி ஆசிரியர் ஒருவர், குழந்தைகள் உணவு பரிமாறப்படுவதை மேற்பார்வையிடுகிறார்.

இந்த அழகிய காட்சியை அருமையாகக் களி மண்ணைக் கொண்டு உருவாக்கியுள்ளார் கைவினைக் கலைஞர்.

இந்தப் பொம்மைகள், பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த காஞ்சிபுரத்தில் தயாராகி வருகின்றன. காஞ்சிபுரத்திலுள்ள கைவினைஞர்களுக்கான கூட்டுறவுச் சங்கத்தில் இந்தப் பொம்மைகள் உருவாக்கப்படுகின்றன. இந்தக் கூட்டுறவுச் சங்கத்தில், இளைஞர்களுக்குப் பொம்மை செய்யக் கற்றுத் தரப்படுகிறது. பொம்மைகள் செய்யும் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தமிழக அரசும், காதிகமிஷனும் கடனுதவி வழங்கி ஊக்கப்படுத்துகின்றன.

இந்தச் சத்துணவு பொம்மைத் தொகுதியின் விலை எவ்வளவு தெரியுமா? ரூ. 23.40 தான்!

விற்பனை செய்யும் பகுதியில் விசாரித்ததில், "இந்த முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டப் பொம்மைகள் அனைத்தும் விற்றுத் தீர்ந்துவிட்டன. மறுபடியும் கேட்டு 'ஆர்டர்' கொடுத்திருக்கிறோம்" என்று சொன்னார்கள்.

இந்தப் பொம்மைகள் காதி கிராமோத்யோக் பவனிலும், குறளகத்திலும் விற்பனைக்குக் கிடைக்கின்றன.

— பி. வி. ஜி

## அரசு அலுவலருக்கு அகவிலைப் படி உயர்வு

தமிழக அரசு அலுவலர்களுக்கு மூன்று தவணை அகவிலைப்படி உயர்வு அளித்து அரசு 4.10.83ந் தேதி உத்தரவிட்டுள்ளது. 1983 ஜூலை 1, செப்டம்பர் 1, நவம்பர் 1 ஆகிய மூன்று தேதிகளிலிருந்து இந்த அகவிலைப்படி உயர்வு அமலுக்கு வருகிறது.

மூன்று தவணை அகவிலைப் படியை ஒன்றாகக் கொடுத்திருப்பதால், குறைந்தபட்ச ஊதியம் பெறுவோர் மாதம் ஒன்றுக்கு 19 ரூபாயும், அதிகபட்ச சம்பளம் வாங்குவோர் 90 ரூபாயும் கூடுதலாகப் பெறுவார்கள்.

இந்த மூன்று அகவிலைப் படி உயர்வு கொடுப்பதால் அரசுக்கு ஒரு முழு ஆண்டுக்குக் கூடுதலாக 36 கோடி ரூபாயும், நடப்பு நிதியாண்டுக்கு 18 கோடி ரூபாயும் கூடுதல் செலவாகும்.

இதன் பயனாக, தமிழக அரசு அலுவலர்கள் பெறும் குறைந்தபட்ச அகவிலைப்படி 119 ரூபாயிலிருந்து 138 ரூபாயாகவும், அதிகபட்ச அகவிலைப் படி 570 ரூபாயிலிருந்து 660 ரூபாயாகவும் உயரும்.

அரசு அலுவலர்கள், உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் அரசு மானிய உதவி பெறும் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள், ஆசிரியரல்லாத பணியாளர்கள் ஆகிய எட்டு இலட்சத்துக்கும் அதிகமானோர் பயன்பெறுவர்.

அனைத்திந்திய நுகர்வோர் விலைக் குறியீட்டெண் முறையே 480, 488, 496 புள்ளிகளை ஒட்டி தமிழக அரசு இந்த 20, 21, 22-ஆவது தவணை அகவிலைப்படி உயர்வினை அறிவித்துள்ளது.

இந்த அறிவிப்பை அரசு அலுவலர்கள் அகமும் முகமும் மலர வரவேற்றுள்ளனர்.

முன்பக்க அட்டையில்...

அண்ணல் காந்தியடிகளின் சிலைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் (2.10.83) மாலை அணிவித்து மரியாதை செய்தல்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002.

8534-4



